வள்ளுவர் காட்டும் வாழ்வியலும்

இன்றைய சமுதாயமும்

ஆய்வாளர்

சி. மணமல்லி

பதிவு எண் : 11393

தமிழ்

மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழக முனைவர் (பிஎச்.டி.)

பட்டத்திற்காக அளிக்கப்படும் ஆய்வேடு

மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்,

திருநெல்வேலி - 627012.

மார்ச் - 2019

மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்,

திருநெல்வேலி - 627012.

சான்றிதழ்

"வள்ளுவர் காட்டும் வாழ்வியலும் இன்றைய சமுதாயமும்" என்னும் தலைப்பில் ஆய்வாளர் **சி. மணமல்லி** அவர்கள் மேற்கொண்ட இவ்வாய்வு மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழக முனைவர் பட்டத்திற்காக (தமிழ்), ஸ்காட் கிறிஸ்தவக் கல்லூரி (தன்னாட்சி), தமிழ் ஆய்வு மையத்தில் அவர் பயின்ற காலத்தில் தன்னியலாகச் செய்யப்பெற்றது என்றும், இவ்வாய்விற்காக ஆய்வாளருக்கு வேறு எந்தப்பட்டமும் இதுவரை அளிக்கப்படவில்லை என்றும் சான்றளிக்கின்றேன்.

சி. மணமல்லி
ஆய்வாளர்

நெறியாளர்
முனைவர் ஆர்.எஸ். ராஜஸ்ரீ,
உதவிப் பேராசிரியர்,
ஸ்காட் கிறிஸ்தவக் கல்லூரி (தன்னாட்சி),
நாகர்கோவில் - 629 003.

நன்றியுரை

"வள்ளுவர் காட்டும் வாழ்வியலும் இன்றைய சமுதாயமும்" என்னும் பொருளில் திருநெல்வேலி மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழக முனைவர் பட்டத்திற்காக ஆய்வினை மேற்கொள்ள வாய்ப்பை அருளிய இறைவனுக்கு முதலில் என் நன்றியை உரித்தாக்குகின்றேன். ஆய்விற்கு நெறியாளராய் இருந்து ஆய்வு நெறிமுறைகளை வகுத்துக் கொடுத்து இடையறாது ஊக்குவித்து சிறந்த முறையில் வடிவமைக்கத் துணை நின்ற நெறியாளர் **முனைவர் ஆர்.எஸ். ராஜஸ்ரீ** அவர்களுக்கும் நன்றி கூற கடமைப்பட்டிருக்கிறேன்.

இவ்வாய்வினை மேற்கொள்வதற்கு அனுமதி வழங்கிய மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்திற்கும், ஸ்காட் கிறிஸ்தவக் கல்லூரி நிர்வாகத்திற்கும், ஸ்காட் கிறிஸ்தவக் கல்லூரி முதல்வர் **முனைவர் ஜெ.இராபர்ட் விக்டர் எட்வர்டு** அவர்களுக்கும், தமிழ்த்துறைத் தலைவர் **முனைவர் செ. இராஜப்பா** அவர்களுக்கும், தமிழ்த்துறைப் பேராசிரியர்கள் அனைவருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

என்னுடைய ஆய்வுப் பணியில் தோளோடு தோள் கொடுத்த என் வாழ்க்கைத் துணைவர் **ஆர்.ஜெஸ்டின் சுந்தர்** அவர்களுக்கும், எனது மாமா **முனைவர் என். இராஜப்பன்** அவர்களுக்கும், எனது அப்பா **ற்றி.செல்லத்துரை**, அம்மா **ஏ.அமலா**-விற்கும் மற்றும் எனது குழந்தைகள் **ஜெ.எட்கர் ஆலன்**, **ஜெ.டியோன்ரா ஜெய்சு, ஜெ.டியோனா ஜென்ஸி** ஆகியோருக்கும் நன்றியை உரித்தாக்கிக் கொள்கிறேன்.

ஆய்வுக்கு தேவையான நூல்களைத் தந்துதவிய ஸ்காட் கிறிஸ்தவக் கல்லூரி தமிழ்த்துறை நூலகத்தாருக்கும், மாவட்ட மைய நூலகத்தாருக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த ஆய்வேட்டைச் சிறந்த முறையில் உருவாக்கிக் கொடுத்த மீனாட்சிபுரம் கண்ணன் கணினி நிறுவன உரிமையாளர் **திரு. அ.சுகுமாரன்,** மற்றும் அவரது நிறுவனப் பணியாளர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சி.மணமல்லி
ஆய்வாளர்

சுருக்கக்குறியீட்டு விளக்கம்

அகம்.	-	அகநானூறு
அத்.	-	அத்தியாயம்
ஆ.கோ.	-	ஆசாரக்கோவை
ஆத்தி.	-	ஆத்திச்சூடி
இன்.	-	இன்னா நாற்பது
கம்ப.	-	கம்பராமாயணம்
கலி.	-	கலித்தொகை
குறள்.	-	திருக்குறள்
குறுந்.	-	குறுந்தொகை
கொன்றை.	-	கொன்றைவேந்தன்
திரி.	-	திரிகடுகம்
தொ.ஆ.	-	தொகுப்பாசிரியர்
தொல்.	-	தொல்காப்பியம்
நற்.	-	நற்றிணை
நன்.	-	நன்னூல்
நாலடி.	-	நாலடியார்
நான்மணி.	-	நான்மணிக்கடிகை
நூ.	-	நூற்பா
ப.	-	பக்கம்
பக்.	-	பக்கங்கள்

பட்டினப்.	-	பட்டினப்பாலை
பதிற்.	-	பதிற்றுப்பத்து
பா.	-	பாடல்
புறம்.	-	புறநானூறு
பெரும்.	-	பெரும்பாணாற்றுப்படை
பொருள்.	-	பொருளதிகாரம்
மணிமே.	-	மணிமேகலை
மது.கா.	-	மதுரைக்காஞ்சி
மலைபடு.	-	மலைபடுகடாம்
மு.தொ.	-	முத்தொள்ளாயிரம்
மேலது.	-	மேலேக்குறிப்பிட்ட நூல்
வெற்றி.	-	வெற்றிவேற்கை

பொருளடக்கம்

ஆய்வு அறிமுகம்

முன்னுரை

பண்டைய தமிழிலக்கியங்கள் வாழ்விற்கு மதிப்புமிக்க வாழ்வியல் கூறுகளை அளித்திருக்கிறது. வாழ்வியல் கூறுகளென்பது தனிமனிதன், தனிமனிதர்கள் கூடி உருவாக்கும் சமுதாயம் என்று அமையும் இரு கூறுபாடுகளின் பிறப்பு முதல் இறப்பு வரையிலான அனைத்து நடவடிக்கைகளும் ஆகும். சமுதாயம் என்பது ஒன்றிற்கு மேற்பட்ட மக்கள் தொகுதியாக கூடி வாழ்வதனை சமுதாயம் எனலாம். இது 'சமூகம்' என்ற பெயராலும் கூறப்படுகிறது. உலக மக்களால் போற்றப்பெறும் திருக்குறளும் சிறப்பான வாழ்வியல் கூறுகளை சமுதாயத்திற்கு கூறியிருக்கிறது. திருக்குறளில் எடுத்தாளப்பட்டுள்ள வாழ்வியல் நெறிகள் வாழ்வினைச் செம்மைப்படுத்துவதற்கு உதவியாக அமைவதோடு விஞ்ஞான வளர்ச்சிபெற்ற இன்றைய சமுதாய மக்களிடம் எத்தகைய முறைகளில் பின்பற்றப்படுகிறது என்பது குறித்து ஆய்வதாக இவ்வாய்வேடு அமைகிறது.

ஆய்வுத் தலைப்பு

வள்ளுவர் கால வாழ்வியலையும், இக்கால சமுதாய மக்களின் வாழ்வியலையும் அறியும் விதமாக **"வள்ளுவர் காட்டும் வாழ்வியலும் இன்றைய சமுதாயமும்"** என்னும் தலைப்பு ஆய்வுக்காக எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது.

ஆய்வின் சிக்கல்

வள்ளுவர் கூறும் வாழ்வியல் சிந்தனைகளின் வழி இன்றைய சமுதாயத்தை மீட்டுருவாக்கம் செய்ய இயலும் என்பது ஆய்வு சிக்கலாக அமைகிறது.

ஆய்வின் கருதுகோள்

வள்ளுவர் கூறுகின்ற வாழ்வியல் கூறுகள் இன்றைய சமுதாயத்தால் கடைபிடிக்கப்பட்டு வருவதோடு அவை காலத்திற்கேற்ப மாற்றமும் வளர்ச்சியும் அடைந்து வருகிறது. இவ்வாழ்வியல் சிந்தனைகள் வழி இன்றைய சமுதாயத்தில் மறுமலர்ச்சி ஏற்படுகிறது என்பதே ஆய்வின் கருதுகோளாக அமைகிறது.

ஆய்வின் நோக்கம்

காலத்திற்கேற்ப சமுதாய மக்களின் வாழ்வியலில் மாற்றங்கள் ஏற்படுகின்றன. வள்ளுவர் கால மக்களின் வாழ்வியலை இக்கால மக்களின் வாழ்வியலோடு ஒன்றுபடுத்தி ஆய்வதோடு, இலக்கியங்களும் ஊடகங்களும் வாழ்வியல் நெறிகளை எவ்வாறு முதன்மைப்படுத்தி நிற்கின்றது என்பதை வெளி உலகிற்கு கொண்டு வருவதே ஆய்வின் நோக்கமாகும்.

ஆய்வின் எல்லை

திருவள்ளுவரின் திருக்குறளும் இன்றைய வாழ்வியலை வெளிப்படுத்தும் ஊடகங்களும், இலக்கியங்களும், அறிஞர்களின் கருத்துக்களும் இவ்வாய்விற்கு எல்லையாக அமைந்துள்ளன.

ஆதாரங்கள்

ஆய்வுத்தொடர்பான ஆய்வுக்கு உதவும் செய்திகள் அனைத்தும் ஆதாரங்களாகும். இவை முதன்மை ஆதாரங்கள், துணைமை ஆதாரங்கள் என இருவகைப்படும்.

முதன்மை ஆதாரம்

திருவள்ளுவர் இயற்றிய திருக்குறள் முதன்மை ஆதாரமாகும்.

துணைமை ஆதாரங்கள்

ஆய்வுத் தலைப்போடு தொடர்புடைய நூற்கள், ஆராய்ச்சி நூற்கள், இலக்கியங்கள், நாளேடுகள், இதழ்கள், இணையதளங்கள், புள்ளி விவரங்கள், அகராதிகள், களஆய்வு போன்றன துணைமை ஆதாரங்களாகும்.

ஆய்வேட்டின் மொழிநடை

ஆய்வேடு இயன்றமட்டும் தூயத் தமிழ்நடையில் எழுதப்பட்டுள்ளது. தேவைப்படுகின்ற இடத்தில் ஆங்கிலச் சொற்களும் புரிதலுக்காக எழுதப்பட்டுள்ளது. நாளேடுகள் மற்றும் இதழ்களில் காணப்படும் மேற்கோள்கள் சுருக்கி கூறப்பட்டுள்ளன. நூல்களில் காட்டப்பட்டுள்ள மேற்கோள்கள் அப்படியே கையாளப்பட்டுள்ளன.

ஆய்வேட்டின் அணுகுமுறை

ஆய்விற்கு உட்படுத்தப்பட்ட திருக்குறளில் காணலாகும் வாழ்வியல் முறைமைகளை சமுதாயவியல் அணுகுமுறை, விளக்கமுறை அணுகுமுறையிலும், சில இடங்களில் தனித்தன்மைகளைக் கண்டறிய ஒப்பாய்வு முறைகளின் அடிப்படையிலும் ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ஆய்வேட்டின் அமைப்பு

“வள்ளுவர் காட்டும் வாழ்வியலும் இன்றைய சமுதாயமும்” என்னும் இவ்வாய்வேடு ஆய்வு அறிமுகம், ஆய்வு நிறைவுரை நீங்கலாக ஐந்து இயல்களைக் கொண்டு அமைகிறது.

ஆய்வுத் தலைப்பு, ஆய்வின் கருதுகோள், ஆய்வின் நோக்கம், ஆய்வின் எல்லை, ஆதாரங்கள், மொழிநடை, அணுகுமுறை, ஆய்வேட்டின் அமைப்பு ஆகியவை ஆய்வு அறிமுகத்தில் இடம்பெறுகின்றன.

'குறளில் கல்வியறிவும் தற்காலக் கல்விச்சூழலும்' எனும் முதல் இயலில் கல்வியின் பொருள், அறிஞர்களின் சிந்தனைகள் மற்றும் முற்கால கல்விமுறை பற்றியும், அறிவின் வகைகள், ஆசிரியரின் நிலை, மாணவரின் நிலை, கல்லாதவர் எதிர்நோக்கும் பிரச்சினைகளையும் அவர்களின் பண்பினையும், கல்விக்கான சட்டங்கள், கல்விச்சூழலின் மாற்றங்கள், மாணவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்தும், மத்திய மாநில கல்வி அமைப்புகள் குறித்தச் செய்திகளும் ஆராயப்பட்டுள்ளன.

'குறளில் கள்ளுண்ணாமையும் மதுவின் இன்றைய அவலமும்' எனும் இரண்டாம் இயலில் கள் மற்றும் மதுவின் வகைகள், அறிஞர்கள் மற்றும் மதங்களின் கருத்துக்கள், மருத்துவ நோக்கில் மது, மதுவும் மூளையும் மற்றும் மதுவுண்போரின் மனநிலையையும் மதுவுண்போரால் ஏற்படுகின்ற குற்றச் செயல்கள் குறித்தும் அதற்கான விழிப்புணர்வையும், அரசின் போக்கு, மதுவிலக்குக்கு எதிரான போராட்டங்கள் குறித்தும் கூறப்பட்டுள்ளன.

'குறளில் மன்னராட்சியும் இன்றைய மக்களாட்சியும்' எனும் மூன்றாம் இயலில் முடியாட்சி, அரசு, மக்களாட்சி, அரசனின் இயல்புகள் மற்றும் தகுதிகள் பற்றியும், மக்கள், நாடு மற்றும் அரண்களின் வகைகள் குறித்தும், படைகள் மற்றும் போர்நெறி குறித்தும், அமைச்சர், தூதுவர்கள், ஒற்றர்களின் பண்புகள், பணிகள் பற்றியும், இந்திய அரசியலமைப்பு, குடிமகனின் அடிப்படைக் கடமைகள், குடியரசுத் தலைவர், பிரதமர் மற்றும் முதலமைச்சர் ஆகியோரின் அதிகார வரம்புகள் குறித்தும் இவ்வியலில் விளக்கப்பட்டுள்ளன.

‘குறளில் மனித வாழ்வுமுறைகளும் இன்றைய நிலையும்’ எனும் நான்காம் இயலில் திருமணம், காதலின் இயல்புகள், தனிமனித ஒழுக்கம், இல்லறக்கடமைகள், சங்ககால பெண்கள், பெண்களுக்கு எதிராக நடக்கும் குற்றங்கள், ஆடை, அணிகலன்கள், பழக்கவழக்கங்கள், உணவு, உறைவிடம், புழங்குப்பொருட்கள், தொழிற்சார்ந்த செய்திகள், துறவறத்தின் பொருள், இலக்கியத்தில் துறவறம், துறவிகளின் பண்புகள், போலித்துறவிகள், துறவிகள் பின்பற்ற வேண்டிய பண்பு, இக்கால துறவு ஆகியன குறித்தும் இவ்வியலில் தெரிவிக்கப்பட்டுள்ளன.

‘குறள்காட்டும் இயற்கையும் இக்காலச் சுற்றுச்சூழல் மாசுபாடுகளும்’ எனும் ஐந்தாம் இயலில் சுற்றுச்சூழல், ஐம்பெரும்பூதங்களான, நிலம் அவற்றில் காணப்படும் உயிரினங்களான பறப்பன, நீந்துவன, ஊர்வன, நடப்பன, ஓருயிர் உயிரியான மரஞ்செடி கொடிகள் மற்றும் மலர்கள், காடுகளின் அழிவு, மலைகள் குன்றுகள், நீர், மழை, மழையில்லாமை, கடல், நிலத்தடிநீர் பற்றாக்குறை மற்றும் மாசுபாடுகள், காற்று, ஆகாயம் மற்றும் நெருப்பு, இவற்றில் ஏற்பட்டுள்ள மாசுபாடுகள் ஆகியன குறித்தும் ஆய்வதாக இவ்வியல் அமைகிறது.

ஆய்வு நிறைவுரையில் ஆய்வாளர் ஆராய்ந்து கண்ட உண்மைகளும் முடிவுகளும் தொகுத்துத் தரப்பட்டுள்ளன.

பிறசெய்திகள்

ஆய்வேட்டில் மேற்கோளுக்கான அடிக்குறிப்புகள் ஒவ்வொரு இயலின் முடிவிலும் இடம் பெற்றுள்ளன. ஆய்வு நிறைவுரையைத் தொடர்ந்து ஆய்விற்குத் துணைநின்ற **துணைநூற்பட்டியல்** இடம்பெற்றுள்ளது. அதனைத் தொடர்ந்து **பின்னிணைப்புகளாக** அட்டவணைகள், நிழற்படங்கள் மற்றும் ஆய்வாளர் கட்டுரைகள் போன்றவை நல்கப்பட்டுள்ளன.

இயல் ஒன்று

குறளில் கல்வியறிவும் தற்காலக் கல்விச்சூழலும்

முன்னுரை

கடல்சூழ் உலகில் வாழும் மனிதனை மாக்களிலிருந்து முற்றிலும் வேறுபடுத்திக் காட்டுவது கல்வி. மனிதன் மனிதனாக வாழவும், மாமனிதனாகத் திகழவும், தெய்வமாக விளங்குவதற்கும் ஏற்ற நற்சூழலுக்கு வழிகாட்டுவதும் கல்வியாகும். இத்தகைய கல்வியைப் பற்றிய கல்வியாளர்களின் கருத்துக்கள், முற்காலத்தில் கல்வியின் நிலை, கற்றவருக்கும் சமுதாயத்திற்குமுரிய தொடர்பு, வள்ளுவர் கூறுகின்ற அறிவு பற்றிய பல்வகைச் செய்திகள், ஆசிரியர் பெற்றோர் மற்றும் மாணவரின் மனநிலை கல்லாதவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தற்போதைய கல்விச்சூழல், அவற்றில் காணப்படுகிற பிரச்சினைகள், கல்வித் தொடர்பாக அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் போன்றன குறித்து ஆய்வதாக இவ்வியல் அமைகின்றது.

கல்வியின் பொருள்

மனிதன் வளமான வாழ்க்கை வாழவும், வாழ்க்கையில் எழும் சிக்கல்களுக்குத் தீர்வு காணவும், உடல், உளநலத்துடன் வாழ்ந்து தம் அடிப்படைத் தேவைகளை நிறைவாக்கவும், குடும்பத்தில் தமக்குரிய பொறுப்புகளை உணர்ந்து ஏற்கவும், சமுதாய வாழ்க்கையில் பிறருடன் பொருந்தி வாழவும், தமது ஆன்மீகத்தேவைகளை உணரவும் அதில் வல்லவராகவும் பயிற்சியளிப்பதையே கல்வி எனலாம்.

கல்வி வேர்ச்சொல்லான ‘கல்லுதல்’ தோண்டுதல் எனும் பொருளை அளிப்பதாக உள்ளது. மனிதனிடம் புதைந்துக் கிடைக்கும் ஆற்றல்களையும், திறன்களையும் மலர்ந்திடச் செய்யும் செயலே கல்வி எனப்படுகிறது. கல்வி என்பது “கற்பித்தல் கேட்டல், கற்றல், அறிதல், ஆய்தல், மெய்ப்பொருள் காணல் முதலியவற்றையும், அவை தொடர்பான நெறிமுறைகளையும் உள்ளடக்கியது.”[1]

கல்வியின் நோக்கங்கள்

கல்வி என்பது தனிப்பட்டவருடனும் சமுதாயத்துடனும் தொடர்புடையது. சிக்கல் மிகுந்த சமுதாயத்தோடு இயைந்து வாழப்பழக்குவதே கல்வியின் முதன்மையான நோக்கமாகும். இலக்குகளை அடைவதற்கான வழிமுறைகளைச் சுட்டிக்காட்டுவதும் கல்வியின் நோக்கமாகும். கல்வியின் நோக்கங்களை கல்வியலாளர்கள்.

1. பொது நோக்கங்கள்
2. குறிப்பான நோக்கங்கள்

என வகைப்படுத்துகின்றனர். பொதுவான நோக்கத்தினை தனிமனித நோக்கங்கள், சமுதாய நோக்கங்கள் எனவும், குறிப்பான நோக்கத்தினை அறிவுடைமை நோக்கம், தொழில் நோக்கம், நல்லொழுக்க நோக்கம், முழுமையான வாழ்க்கைக்கான நோக்கம், இசைவான ஆளுமை வளர்ச்சி நோக்கம், ஓய்வு நேரத்தை கழித்தலுக்கான நோக்கம் என பலவகைகளாக வகைப்படுத்துகின்றனர்.

கல்விச்செயலின் அடிப்படை நோக்கம் நாம் வாழும் உலகினைப் பற்றிய அறிவினை வளர்த்திடுதலே ஆகும்.

அறிஞர்களின் சிந்தனைகள்

அறிஞர்களும், நவீனக்கல்வியாளர்களும் கல்வி மனிதனில் புதைந்து கிடக்கும் ஆற்றல் (மரபுக்கூறுகள்), சூழ்நிலையில் ஏற்படும் இடைவினையாகும் என்கின்றனர். கல்வியினைக் குறித்து இந்திய அறிஞர்களும் மேலே நாட்டு அறிஞர்களும் பலதரப்பட்ட கருத்துக்களை கூறுகின்றனர்.

சுவாமி விவேகானந்தர்

"கல்வி என்பது மனிதனிடம் இயற்கையாக உறைந்துள்ள தெய்வீகமான முழுமைத்தன்மையை வெளிப்படுத்துவது"[2] என்று கூறுகிறார்.

மகாத்மா காந்தியடிகள்

"கல்வி என்பது குழந்தை மற்றும் மனிதனின் உடல், மனம், ஆத்மா ஆகிய மூன்றின் சிறப்பானவற்றையெல்லாம் முழுமையாக வெளிக் கொணர்வதாகும்"[3] என்கிறார்.

ஜாண் லாக்

"செடிகள் வளர நிலத்தைப் பண்படுத்துவது போல மனிதர்களை பண்படுத்தப்பயன்படுவதே கல்வி"[4] என்கிறார்.

ஆதம்ஸ்

"முதிர்ச்சியுற்ற ஒருவர் முதிர்ச்சியடையா இன்னொருவரோடு உறவாடி அவரது அறிவு, மனப்பான்மை, மதிப்புகள், பழக்கவழக்கங்கள், ஆகியவற்றை மாற்றியமைத்து முன்னேற்றமடையச் செய்யும் முறையான செயல்முறை"[5] என்று கூறுகிறார். கல்வியானது மனிதனின் உள்ளார்ந்த திறன்களை வெளிக்கொணர்வது என கல்வி அறிஞர்கள் எடுத்துரைக்கின்றனர்.

முற்கால கல்விமுறை

"முற்காலத்தில் கல்வி என்பது வேதங்களை மையமாக கொண்டிருந்தன. வேதங்களை 'ஸ்ருதி' என்றும் கூறுவர். 'வேதம்' என்ற சொல்லுக்கு அறிவு அல்லது ஞானம் என்று பொருள்படும்."[6]

அடிப்படை வேதங்கள் நான்கு. ரிக்வேதம் மிகவும் பழமையானது, 10,552 துதிப்பாடல்களைக் கொண்டது. யஜுர் வேதம் யாகம், சடங்குகள், பலியிடுதல் தொடர்பான சூத்திரங்களின் தொகுப்பினைக் கொண்டது. சாமவேதம் இசைக்குறிப்புகளுடன் கூடிய புனிதப்பாடல்களைக் கொண்டது. அதர்வண வேதம் வரலாற்றுக்கதைகளையும் ஆயுதங்கள், மாந்தீரிகம் தொடர்பான குறிப்புகளைக் கொண்டதாக காணப்படுகிறது.

வேதத்தின் உட்பிரிவுகள்

ஒவ்வொரு வேதமும் (i) மந்திரங்களின் தொகுப்பு (ii) பிரமாணங்கள் (iii)ஆரண்யங்கள் (iv) உபநிடதங்கள் என்னும் நான்கு பகுதிகளைக் கொண்டது.

மந்திரங்கள் என்பவை தெய்வங்களுக்கு என்று அமைக்கப்பட்ட துதிப்பாடல்களாகும். பிரமாணங்கள் என்பவை யாகங்களைச் செய்வதற்கு மேற்கொள்ளப்படுகின்ற சடங்குகளைப்பற்றி கூறுகின்ற உதவிநூல்கள் ஆகும். ஆரண்யங்கள் மதச்சடங்குகள் பற்றிய தத்துவங்களை உருவக்கதைகளாக கூறுகின்றன.

உபநிடதம் என்னும் சொல் “அருகில் அமர்தல்”[7] என்று பொருள் கொள்ளப்படுகிறது. இதனை ‘ஆசிரியர் அருகிலிருந்து கற்றல்’ எனவும் பொருள் கொள்ளலாம்.

கற்குமிடங்கள்

முற்காலத்தில் பெற்றோர்கள் பிள்ளைகளைப் பள்ளிக்கூடம் அனுப்புவதை பெரிய விழாவாக அவரவர் குடும்ப நிலைக்குத் தக்கதாக கொண்டாடினர். இந்த எழுத்தறிவிக்கும் விழாவை (அகூஷராப்பியாசத்தை) என்று அழைத்தனர்.

"பண்டையக்காலத்தில் பெற்றோர்கள் தம் பிள்ளைகளைத் தம் வீட்டிலேயே வைத்துக் கொண்டிருப்பதில்லை. ஆசிரியர் வீட்டில் விட்டுக் கல்விகற்கச் செய்வது வழக்கம். இதற்கு 'குருகுலவாசம்' என்பது பெயர்."[8]

குருகுலக் கல்வி முறையையே முற்கால மக்கள் பின்பற்றியிருந்தனர் என்பதை இக்கூற்றின்வழி அறிந்து கொள்ள முடிகிறது. பெரும்பாலும் குருகுலங்கள் நகரங்களுக்கு வெளியே இருந்தன. மாணவன் அவனது கல்விவாழ்வை குருகுலத்தின் இல்லத்தில் கழிக்கவேண்டும். இந்த காலகட்டத்தினை 'பிரம்மசர்யம்' என அழைத்தனர். மாணவனின் ஏழாவது வயதில் 'உபநயனம்' எனும் சடங்கு நடத்தப்பட்டபின் மாணவன் ஆசிரமங்களில் வாழ்ந்த ரிஷி முனிவர்களிடம் சேர்க்கப்பட்டனர். அங்கு மாணவர்கள் தொடர்ந்து கல்வி கற்றனர்.

இதற்கு பிந்தைய காலங்களில் மரத்தடிகள், திண்ணைகள், மடங்கள், ஆலயங்கள் போன்ற இடங்களில் கல்வி கற்றுக்கொடுக்கப்பட்டது.

"கி.பி 9முதல் 13 நூற்றாண்டு வரையுள்ள சோழர் ஆட்சிக்காலத்தில் பெரும்பாலும் ஆலயங்களிலும், திண்ணைகளிலும் கற்குமிடங்கள் அமையப் பெற்றிருந்தன"[9] என இராணி பிரகாஷ் கூறுகின்றார்.

முற்காலக் கல்வியின் குறிக்கோள் பாரம்பரியத்தையும், கலாச்சாரத்தையும் காப்பாற்றி வருங்கால சந்ததியினருக்குத் தருதல், ஒருங்கிணைந்த ஆளுமையை உருவாக்குதல், சமுதாயப் பொறுப்புகளை மாணவர்கள் மனதில் ஊன்றச் செய்வதாகக் காணப்பட்டன.

உயர்கல்வி நிலையங்கள் 'சாலை', 'கடிகை' என்ற பெயர்களில் அக்காலங்களில் இயங்கியுள்ளதை வரலாற்று வழி கல்வெட்டுகள் மூலம்

அறியமுடிகிறது. கடிகைகளில் வேதம் பிரதானமாகக் கற்றுக்கொடுக்கப்பட்டது. கடிகைகள் மன்னர்களின் நேரடிக் கட்டுப்பாட்டில் இயங்கியுள்ளன.

திருவண்ணாமலை மாவட்டம் போளூருக்கு அருகில் அன்றைய காமப்புல்லூர் எனும் இடத்தில் வேதபாடசாலை இருந்ததாக கல்வெட்டு குறிப்புகள் காணப்படுகின்றன. இவ்விடம் 'காப்பளூர்' என்று இக்காலத்தில் குறிப்பிடப்படுகிறது. காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள திருமுக்கூடல், செங்கல் பட்டுக்கருகில் உள்ள ஆனூர், வேலூர் மாவட்டத்திலுள்ள வேலூர் பாளையம், புதுச்சேரிக்கருகில் திருப்புவனி போன்ற இடங்களில் செயல்பட்ட கல்லூரிகளைப்பற்றியும் சிறு சிறு குறிப்புகள் கல்வெட்டுகளில் காணப்படுகிறது.

"கடந்த நூற்றாண்டுகளில் எவ்விதம் கல்வி நிலையங்கள் செயல்பட்டன என்றறிய போதுமான ஆதாரங்கள் இல்லை."[10] இன்றைய காலத்திலும் ஆரம்பக் கல்விப் பயிலும் இடத்தை 'பள்ளி' என்று கூறுகிறோம். "பள்ளி என்னும் சொல் 'அறச்சாலை, அறை, ஊர், கல்லூரி, சிற்றூர், கோவில், பள்ளிக்கூடம், மக்கட்படுக்கை, முனிவர்வாசம் மற்றும் இடைச்சேரி' என பலவகைகளில் பொருள் கொள்ளப்படுகிறது. தொல்காப்பியத்தில் 'சொல்லிய பள்ளி' எனும் தொடர் இடம்பெற்றுள்ளது."[11] திருவள்ளுவர் பள்ளி எனும் சொல்லை,

"கழா அக்கால பள்ளியுள் வைத்தற்றால் சான்றோர்
குழாஅத்துப் பேதை புகல்" (குறள். 840)

படுக்கை என்னும் பொருளில் பயன்படுத்துகிறார். இதனை ஆசாரக்கோவை,

"காலின் நீர் நீங்காமை உண்டிடுக பள்ளியுள்"[12]

என்கிறது. திரிகடுகம்,

". . . . . .சீறிக்

கறுவி வெகுண்டுரைப்பான் பள்ளி"[13]

பள்ளி என்னும் சொல் மாணவர் கல்வி பயிலும் இடம் என்று பள்ளிக்கு விளக்கமளிக்கிறது.

திருதக்கதேவர் படைக்கலப் பயிற்சி அளிக்கும் இடத்தினை 'கல்லூரி' என வழங்கியமைக்கு, "காலத்திற் காலங் கல்லூரி நற்கொட்டியார்"[14] எனும் பாடலடி சான்றாக அமைகிறது.

பயன்படுத்துவதை இங்கு அறியமுடிகிறது.

மாணவர்கள் கற்குமிடங்களை பள்ளி, கல்லூரி எனும் சொற்களின் மூலமாகவே நம்முன்னோர்கள் வழங்கியுள்ளதை இதன்வழி அறியமுடிகிறது.

கல்வியும் சமுதாயமும்

மனிதனைச் சமுதாயத்திற்கேற்ற இயல்புடையவனாக உருவாக்குவதே கல்வியறிவின் முதிர்ந்த நோக்கம் என்று கல்வி மற்றும் சமூகவியலாளர்கள் கருதுகின்றனர். இதனை வள்ளுவர்,

"எவ்வ துறைவது உலகம் உலகத்தொடு

அவ்வ துறைவது அறிவு" (குறள். 426)

என்கிறார். பொதுமக்களுக்கு தம் வாழ்க்கையைப் பயன்படும்படி அமைத்துக் கொள்வது அறிவின் செயல் என்று கூறுகிறார். இங்கு பொதுமக்கள் என்ற சொல்லை சமுதாயமென்றும் பொருள்கொள்ளலாம்.

அறிவானது உலகம் தழுவியதாக இருக்க வேண்டும் என்றும், அது எப்போதும் மாறாது இருக்க வேண்டுமென்றும் வள்ளுவர் குறிப்பிடுகிறார்.

“உலகம் தழீஇயது ஒட்பம் மலர்தலும்

கூம்பலும் இல்லது அறிவு” (குறள். 425)

இதனை பாரதிதாசன்,

“அறிவை விரிவுசெய்!அகண்டமாக்கு!

விசாலப் பார்வையால் விழுங்கு மக்களை

அணைத்துக் கொள் உன்னை சங்கமமாக்கு”[15]

என்பதன் மூலம் அறிவைப் பெருக்கிக்கொண்டால் மக்களை, அவர்களின் எண்ணங்களை விசாலமான கண்ணோட்டத்தோடு கண்ணோக்கும் நிலை காணப்படும் என்பதை அறியமுடிகிறது.

சமுதாயத்தோடு ஒன்றி வாழும் அறிவுடையவன் தன்னைச்சுற்றி வாழும் உயிர்களின் துன்பம் கண்டு துன்பப்படுவான். அடுத்த உயிரின் துன்பத்தை தன் துன்பமாகக் கொள்வான் எனவும் வள்ளுவர் கூறுகிறார்.

“அறிவினால் ஆகுவது உண்டோ பிறிதின்நோய்

தன்நோய்போல் போற்றாக் கடை” (குறள்.315)

ஒருவன் பிறரின் துன்பத்தைக் கண்டு துன்பம் கொள்ளவில்லையெனில் அவன் பெற்ற அறிவினால் ஒருபயனும் இல்லை என இக்குறள் விளக்குகிறது.

கற்றவரும் அறிவுடையவரும்

வள்ளுவர் காட்டுகின்ற கற்றவருக்கும் நாம் காண்கின்ற இக்காலக் கற்றவருக்கும் அதிகமான வேறுபாடுகள் காணப்படுகின்றன. வள்ளுவர் கூறுகின்ற கற்றவர் எல்லாம் அறிவுடையவர்கள் அல்லர். அறிவுடையவர்கள் எல்லாம் கற்றவர் அல்லர் என்கிறார்.

"கற்க கசடுஅறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக" (குறள்.391)

நல்ல நூல்களை சந்தேகமின்றி நல்லமுறையில் கற்க வேண்டும். கற்றதை கற்றபடி நடப்பவனையே கற்றவர்கள் என்றும்,

"அரம்போலும் கூர்மைய ரேனும் மரம்போல்வர்
மக்கள்பண்பு இல்லா தவர்" (குறள்.997)

அரத்தை போன்ற கூர்மையான அறிவுடையவர்கள் ஆனாலும் மக்கள் பண்பு உடையவனையே அறிவுடையவன் என்றும் கூறுகிறார்.

அறிவு

அறிவு என்பது 'அறிதல்' என்றும், 'உணர்வு, கல்வி, புத்தி, போதனை' என்ற பொருள்களில் பொருள் கொள்ளப்படுகிறது. அறிவினைப்பற்றி வள்ளுவர் பல குறள்களில் எடுத்தியம்புகிறார்.

நுண்ணறிவு

யார் ஒருவர், எந்தச் செயலையும் சரியாகச் செய்து, அறிவுக்கேற்புடையதையே சிந்தித்து எந்தச் சூழ்நிலையையும் சமாளிக்கும் திறன் பெற்றவர்களாக இருக்கிறார்களோ அவர்களை நுண்ணறிவு உடையவர்கள் எனக்கூறலாம். திரிகடுகம் இதனை, "நுண்ணூற்"[16] நுட்பமான சிந்தனை என பொருள் கூறுகிறது.

நுண்ணறிவு ஆளுக்கு ஆள் வேறுபடுகிறது. வயதுகூட கூட நுண்ணறிவில் மாற்றம் ஏற்படுகிறது. இனம் மற்றும் பண்பாட்டு அடிப்படையில் நுண்ணறிவு வேறுபடுகிறது. நுண்ணறிவை பாலினம் தீர்மானிப்பதில்லை

நுண்ணறிவினைப்பற்றி கல்வி உளவியலாளர் வெஸ்லர் (Whechsler) கூறுகையில், "நுண்ணறிவு என்பது ஒருவர் நோக்கத்தோடு செயல்படல், பகுத்தறிவோடு சிந்தித்தல் சூழ்நிலையைத் திறமாக சமாளித்தல் போன்றவைகள் சேர்ந்த கூட்டு செயலாற்றல்"[17] எனக் கூறுகிறார். வள்ளுவர் நுண்ணறிவினைப் பற்றி,

"எண்பொருள வாகச் செலசொல்லித் தான்பிறர்வாய்

நுண்பொருள் காண்ப தறிவு" (குறள்.424)

என்கிறார். பிறர் கூறுகின்ற சொற்களில் உள்ள நுட்பமான உண்மைப் பொருளை மட்டும் அறிவது அறிவாகும் என்று ஆணித்தரமாக கூறுகிறார். மேலும்,

"அரம் போலும் கூர்மைய ரேனும்" (குறள்.997)

என்பதன் மூலம் அரத்தின் கூர்மையைப் போன்றதே கூர்மையான அறிவு என்பதை உணர்ந்து கொள்ள முடிகிறது.

"நுண்ணியம் என்பார்" (குறள்.710)

கூர்மையான அறிவுடையவர் என்று கூறுவதிலிருந்து நுண்ணிய அறிவு எனவும் பொருள் கொள்ளலாம்.

நுண்ணறிவு இடையூறுகளிலிருந்து காக்கும் தன்மையுடையது என்பதை

"மதிநுட்பம் நூலோடு உடையார்க்கு அதிநுட்பம்

யாஉள முன் நிற்பவை" (குறள்.636)

என்று கூறுகிறார். இக்குறள் மூலம் மதிநுட்பம் உடையவனின் செயலை யாராலும் தடுத்துவிட முடியாது என்றும் நுண்ணறிவானது அனைத்து

இடையூறுகளையும் கடக்க வழிவகுத்துக் கொடுக்கும் என்பதை அறிந்துகொள்ள முடிகிறது. இதனை நாலடியார்,

> "முறிபுரை மேனியர் உள்ளம் போன்
> அறிதற் கரிய பொருள்"[18]

என்கிறது.

நூல்களில் ஆழ்ந்து நுண்பொருள்களை அறிந்து கொள்ள யாவருக்கும் அரியதாக இருக்கும் எனக்கூறுவதிலிருந்து உலகில் பிறந்த மனிதர் யாரும், நுண்ணறிவைப் பெற்றவர் இல்லை எனவும், குறிப்பிடத்தக்கவரே நுண்ணறிவைப் பெற்றிருக்கின்றனர் என்பதை அறிய முடிகிறது.

நுண்ணறிவு என்பது பிறர் சொல்லின் நுட்பமாக உண்மைப் பொருளை அறிய உதவும், அரத்தினைப் போன்று கூர்மைத்தன்மைக் கொண்டது. நுண்ணறிவு உடையவனின் செயலை யாராலும் தடுத்துவிட முடியாது. உலகில் குறிப்பிடத்தக்கவரே நுண்ணறிவுத் திறனைப் பெற்றிருக்கின்றனர் என்பதை இதன் வழி உணரமுடிகிறது.

மெய்யறிவு

மெய்யறிவு என்பதற்கு "மெய்ப்பொருளைப் பற்றிய அறிவு, "உண்மையான அறிவு"[19] என க்ரியாவின் தற்காலத் தமிழகராதி விளக்கம் அளிக்கிறது.

யார் என்ன பொருளைச் சொன்னாலும் செய்தாலும் அதன் மெய்ம்மைத் தன்மையை உணர்ந்துக் கொள்வது சிறந்த குணமாகும். இதனைப் பெரியோர்கள் பேச்சு வழக்கில் 'கண்ணால் காண்பதும் பொய் காதால் கேட்பதும் பொய் தீரவிசாரிப்பதே மெய்' என்று கூறுவர். இதனை,

"எப்பொருள் யார்யார் வாய்க்கேட்பினும் அப்பொருள்

மெய்ப்பொருள் காண்பது அறிவு" (குறள்.423)

எனும் குறள் மூலம் வள்ளுவர் மெய்ப்பிக்கிறார்.

உயர்ந்தோர் தாழ்ந்த பொருளினைக் கூறினாலும் நட்பும் உயர்வும் கருதி ஏற்ககூடாது. தாழ்ந்தோர், பகைவர் உயர்ந்த பொருளைக் கூறினும் அவர்களிடம் கொண்ட வெறுப்பால் அப்பொருளினைத் தள்ளிவிடாது ஏற்க வேண்டும். உண்மைத் தன்மையை ஆராய்ந்து அறிவதே மெய்யறிவு என்கிறார். மேலும்,

"எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்

மெய்ப்பொருள் காண்பது அறிவு" (குறள்.355)

என்ற குறளின் மூலம் எந்தப்பொருள் எத்தன்மையில் காணப்படினும் கேட்கப்படினும், அந்த பொருளினது முதன்மையான உண்மைத்தன்மையை காண்பதே மெய்யறிவு ஆகும் என்கிறார். மெய்யறிவு என்பதன் முழு விளக்கத்தை,

"பிறப்பென்னும் பேதைமை நீங்கச் சிறப்பென்னும்

செம்பொருள் காண்பது அறிவு" (குறள்.358)

எனும் குறளில் உள்ளடக்குகிறார். அறியாமை என்பது எல்லா உயிர்களுக்கும் பொதுவானது. பிறப்புகளுக்குக் காரணமாகிய அறியாமை நீங்கிப் பிறவாச் சிறப்புக்குக் காரணமாகிய செம்பொருளைக் காண்கின்ற நல்லறிவே மெய்யறிவு என்பதிலிருந்து மெய்யறிவு என்பது உண்மைத்தன்மையை ஆராய்வதற்கும், அறியாமையை நீக்குகின்ற நல்லறிவே மெய்யறிவு என்பதும் புலனாகிறது.

நூலறிவு

'ஏட்டுச் சுரைக்காய் கறிக்கு உதவாது' என்பது பழமொழி ஆகும். நூலறிவை 'ஏட்டுக்கல்வி' என்றும் கூறுவர். கற்கின்ற ஏட்டுக்கல்வியை முழுமையாக பெற்றால் மட்டும் போதாது. அதனை வாழ்வில் கடைபிடிக்க வேண்டும்.

"கற்க கசடற கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக" (குறள்.391)

என்பதை "கல்விக்கு அழகு கசடற மொழிதல்"[20] என்று வெற்றிவேற்கையும் கூறுகிறது.

கற்க வேண்டியவற்றை ஐயமுற கற்க வேண்டும். கற்றவற்றை வாழ்வில் பயன்படுத்தினால் மட்டுமே நூலறிவு வாழ்விற்கு பயனுள்ளதாகக் காணப்படும் என்பதனை இக்குறள் வழி உணரமுடிகிறது.

நூலறிவு பலவழிகளில் மனிதனுக்கு பயன்படும். இன்றைய கல்விச்சூழலில் மாணவர்கள் பெரும்பாலான படிப்புகளை நூல்களின் மூலமாகவே பெறுகின்றனர். ஆனால் நூல்களில் மூலம் பெற்ற அறிவினை இன்றைய மாணவர்கள் வாழ்வில் பெரும்பாலும் கடைப்பிடிப்பதில்லை என்பது கவலைக்குரிய செயலாகவே காணப்படுகிறது. நூலறிவைப் பெற்றவர்களுக்கும் பெறாதவர்களுக்கும் உரிய வேறுபாட்டினை

"விலங்கொடு மக்கள் அனையர் இலங்கு நூல்
கற்றாரோடு ஏனை யவர்" (குறள்.410)

எனும் குறளில் வள்ளுவர் குறிப்பிடுகிறார். நூலறிவு பெற்றவர்களுக்கும், பெறாதவர்களுக்கும் வேறுபாடு உண்டு. ஒருவருடைய சிந்தனைகள் வளர்ச்சி பெற நூலறிவு மிக முக்கியமானது. மனிதனை விலங்கிலிருந்து வேறுபடுத்துவது நூலறிவு என்பதை இக்குறள் சுட்டிக்காட்டுகிறது.

அவையில் கற்றறிந்தோர் முன் பேசுவதற்கு நூலறிவு மிகமிக அவசியமென்பதை,

"அரங்கின்றி வட்டாடி அற்றே நிரம்பிய
நூலின்றிக் கோட்டிக் கொளல்" (குறள். 401)

என்ற குறளில் வள்ளுவர் குறிப்பிடுகிறார். அறிவு நிரம்புவதற்குரிய நூலறிவைப் பெறாதவன் அறிவுடையோர் அவையில் பேசமுடியாது என இக்குறள் வழி எடுத்துரைக்கிறார்.

நூலறிவு என்பது செயற்கையானது என்பதை வள்ளுவர், கீழ்வரும் குறளில் எடுத்துரைக்கிறார்.

"மதிநுட்பம் நூலோடு உடையார்க்கு" (குறள்.636)

இயற்கையாகிய நுண்ணறிவு செயற்கையாகிய நூலறிவு என வள்ளுவர் குறிப்பிடுவதிலிருந்து நுண்ணறிவானது மனிதனுக்கு இயற்கையிலே காணப்படுகிறது. நூலறிவானது செயற்கையானது, நூலறிவை ஒருவரது முயற்சினால் நூலினைக் கற்று பெற்றுவிடலாம் என்பதை இக்குறள் வெளிப்படுத்துகிறது. நாட்டை ஆளுகின்ற அரசனுக்கு நூலறிவுத் தேவையென்பதை,

"உரைசான்ற நூலும்" (குறள்.581)

எனும் குறளடி வெளிப்படுத்துகிறது. அரசன் தன் கண்ணாக உரைசான்ற நூலினைக் கொள்ள வேண்டுமென்று வள்ளுவர் கூறுகிறார்.

தூது செல்லும் தூதுவனுக்கு இன்றியமையாததைப் பற்றி கூறும் போது,

"நூலாருள் நூல்வல்லவன் ஆகுதல்" (குறள்.683)

என்கிறார். அரசிற்குரிய நூல்கள் பலவற்றையும் பயின்று தேறிய பண்புடையவனாக இருக்க வேண்டுமென்று நூலறிவின் பெருமையைக் கூறுகிறார்.

ஒருவரின் பேச்சின் அளவு, பேசும் போது எடுத்தாளப்படும் கருத்துக்கள், அவரது புதிய சிந்தனைகளை வெளிப்படுத்தும் ஆற்றலை நூலறிவே கொடுக்கிறது என்பதனை இதன் வழி அறியமுடிகிறது.

இன்றைய கல்விச்சூழலில் அனைத்து அரசு தனியார் மற்றும் அரசு உதவிபெறும் பள்ளி மற்றும் பலவகையான கல்லூரிகளிலும் அடிப்படைத் திறனான வாசித்தலை வளர்ப்பதற்காக நூலகங்கள் கட்டாயமாக்கப்பட்டுள்ளது. இதன் வாயிலாக சிறந்த நூல்களையும், செய்தித்தாள்கள், வார மாத மற்றும் ஆண்டு இதழ்கள், கையேடுகள், ஆராய்ச்சிக் கட்டுரைகள், கருத்தரங்குகள் தொடர்பான ஆய்வுக்கோவைகள் போன்றவற்றை மாணவர்கள் வாசித்து அறிவினைப் பெருக்க முடிகிறது. மேலும் மாணவர்களுக்கான அகமதிப்பீட்டுத்தேர்வில் நூல்களை வாசித்துக் காட்டுவதற்காக மதிப்பெண்கள் வழங்கப்படுகிறது. நூல்களை அதிக அளவில் படிப்பதால் மாணவர்கள் நூலறிவினைப் பெருக்க முடிகிறது.

நூல்களை அதிக அளவில் படிப்பதால் மாணவர்களால் நூலின் கருத்துக்களை ஐயமின்றி கற்கவும், கற்றவர் கல்லாதவரை வேறுப்படுத்திப் பார்க்கவும், அவையில் பேசுகின்ற தகுதியினைப் பெறவும், நுண்ணறிவினை வளர்த்துக்கொள்ளவும், குறுகிய சிந்தனையிலிருந்து பரந்துபட்ட நிலையில் சிந்தனைச் செய்ய நூலறிவின் மூலம் இயலும் என்பதை தெளிவுற அறிந்து கொள்ள முடிகிறது.

கேள்வியறிவு

ஒருவரால் நூல்களைக் கற்று நூலறிவைப் பெருக்கிக்கொள்ள முடியவில்லையென்றாலும், இயற்கையாக நுண்ணறிவைப் பெறாதவராக காணப்பட்டாலும், உண்மையறிவாகிய மெய்யறிவை பெறாதவராக காணப்பட்டாலும், பிறர் கூறுவதைக் கேட்பதன் மூலமாக அறிவினை வளர்த்துக் கொள்ள வள்ளுவர் ஆலோசனைத் தருகிறார்.

"செல்வத்துள் செல்வம் செவிச்செல்வம்" (குறள்.411)

"செவிக்கு உணவு" (குறள்.412)

"கற்றிலன் ஆயினும் கேட்க" (குறள்.414)

"எனைத்தானும் நல்லவை கேட்க; அனைத்தானும்
ஆன்ற பெருமை தரும்" (குறள்.416)

செல்வங்களில் மிகப்பெரிய செல்வம் காதினால் கேட்டுப்பெறுகின்ற அறிவு ஆகும். அறிவு வளர்ச்சிக்குரிய சொற்களே காதிற்கு உணவு என்றும், நூல்களைப் படிக்காமல் போனாலும் கற்றறிந்தோர் கூறுகின்றவைகளைக் கேட்டாவது அறிவை வளர்த்துக் கொள்ள வேண்டுமென்றும் கூறுகிறார்.

ஒருவன் சிறிதளவாகிலும் பிறர் கூறுகின்ற நல்லவற்றை கேட்கவேண்டும் என்றும், கேள்வியறிவால் கிடைக்கின்ற தீமையானச் சொற்களை விட்டுவிட வேண்டும் என்றும் கூறுகிறார்.

நூலறிவு, நுண்ணறிவு மற்றும் மெய்யறிவு இல்லாதவர் கேள்வியறிவையும் பெறாவிட்டால் ஏற்படுகின்ற தீயவிளைவுகளை பின் வரும் குறள்கள் எடுத்துரைக்கிறது.

"கேட்பினும் கேளாத் தகையவே கேள்வியால்
தோட்கப் படாத செவி" (குறள்.418)

"நுணங்கிய கேள்வியர் அல்லார் வணங்கிய
வாயினர் ஆதல் அரிது" (குறள்.419)

"செவியின் சுவையுணரா வாய்உணர்வின் மாக்கள்
அவியினும் வாழினும் என்" (குறள்.420)

அறிவுரைகளைக் கேட்டுத் தெரிந்து கொள்ளும் தன்மையில்லாத காதினைக் கேட்கும் திறனற்ற செவிட்டுக்காதினை கேட்கும் திறனற்ற செவிட்டுக் காது என்கிறார். மேலும் நுட்பமான கேள்வி ஞானம் இல்லாதவர் பணிவான நல்ல சொற்களை கூறமுடியாது. செவியினால் பெறும்படியான அறிவைப்பெறாமல் நாவினால் அறுசுவையை மாத்திரம் சுவைக்கும் தன்மை கொண்டவர்கள் இருந்தாலும் பயனில்லை என வள்ளுவர் கூறுகிறார். கேள்வியறிவினைப் பற்றி ஔவையாரும் "கேள்வி முயல்"[21] எனக்கூறுகின்றார்.

புல்லறிவு

குறைந்த அளவு அறிவினைப் பெற்றிருந்தும் நிறைந்த அறிவுடையவர்களாக பிறரிடம் காட்டிக் கொள்பவர்களையே புல்லறிவு கொண்டவர்கள் என்கிறோம். இவர்களைக் குறித்தும், இவர்களின் செயல்பாடுகளைக் குறித்தும், 'நிறைகுடம் தளும்பாது குறைகுடம் கூத்தாடும்' எனும் பழமொழி வாயிலாக பெரியவர்கள் குறிப்பிடுவார்கள். இப்பழமொழியை அடியொற்றி

"வெண்மை எனப்படுவது யாதெனின் ஒண்மை
உடையம்யாம் என்னும் செருக்கு" (குறள்.844)

எனும் குறள் அமைகிறது. தானே ஒரு பொருளைப் புரிந்து கொள்ளாமல் பிறரைத் தெளிவிக்கும் ஆற்றலுடையவனாகக் கருதுவதை புல்லறிவு என்று கூறுகிறார். மேலும்,

"அறிவு இன்மை இன்மையுள் இன்மை" (குறள்.841)

என்கிறார். அறிவு குறைவுதான் வறுமையில் தலையாயது எனும் கருத்தினை வள்ளுவர் வலியுறுத்துகிறார். இதனை நாலடியார்.

"நுண்ணுர்வின்மை வறுமை அஃதுடைமை
பண்ணப் பணைத்த பெருஞ்செல்வம்"[22]

என்று கூறுகிறது. புல்லறிவு உடையவரின் தன்மையை வள்ளுவர்,

"அறிவிலர் தாம்தம்மைப் பீழிக்கும் பீழை" (குறள்.843)

"அருமறை சோரும் அறிவிலான் செய்யும்
பெருமிறை தானே தனக்கு" (குறள்.847)

"ஏவவும் செய்கலான் தான்தேறான்" (குறள்.848)

"உலத்தார் உண்டென்பது இல் என்பான்" (குறள்.850)

எனும் குறள்கள் மூலம் விளக்குகிறார்.

ஆசிரியரின் நிலை

சமுதாயத்தில் பெற்றோருக்கு அடுத்தபடியாக மதிக்கப்படுபவர்கள் ஆசிரியர்கள் ஆவார்கள். ஆசிரியர் ஒரு தலைமுறையிலிருந்து மற்றொரு தலைமுறைக்குக் கல்வி முறைகளில் அறிவு வளர்ச்சியில் மாற்றத்தை ஏற்படுத்துவதால் ஆசிரியர் சமுதாயத்தில் முக்கிய இடத்தைப் பெறுகிறார். அமைதியான முறையில் சமுதாயத்தில் மாற்றங்கள் ஏற்பட ஆசிரியர்கள் தங்கள் கடமைகளைச் செய்கின்றனர். கற்பிப்பது மட்டும் அவர்கள் கடமையல்ல.

மாணவர்களை சமுதாயத்தில் பயனுள்ள வகையில் மாற்றுவதே ஆசிரியரின் முக்கிய பணியாகும். வெற்றிவேற்கை

"எழுத்தறிவித்தவ னிறைவ னாகும்"[23]

என்று கூறுகிறது.

தற்காலத்தில் கல்வியறிவினைப் போதிப்பவரை ஆசிரியர் என்று அழைக்கிறோம். ஆசு + இரியர் = ஆசிரியர். ஆசிரியர் என்பதற்கு குற்றங்களைக் களைபவர் எனவும் பொருள் கொள்ளலாம்.

முற்காலத்தில் கல்வி கற்பிப்பவரை குரு, கணக்காயர், ஆசான், உபாத்தியார், வாத்தியார் என்ற சொற்களைக் கொண்டே அழைத்தனர். என்பதனை,

"கணக்காயர் இல்லாத ஊரும்"[24]

"அரசன் உபாத்தியான் தாய்தந்தை தம்முன்"[25]

எனும் வரிகளின் வழி அறிய முடிகிறது. நல்ல ஆசிரியருக்கு இலக்கணம் கூறுகையில்,

"குலன் அருள் தெய்வம் கொள்கை மேன்மை
கலைபயில் தெளிவு கட்டுரை வன்மை
நிலம் மலை நிறைகோல் மலர்நிகர் மாட்சியும்
உலகியல் அறிவோடு உயர்குணம் இணையவும்
அமைபவன் நூலுரை யாசிரி யன்னே"[26]

என நன்னூல் எடுத்தியம்புகிறது. நல்லாசிரியன் அல்லாதவனின் குணத்தை நன்னூல் கீழ்வருமாறு எடுத்தியம்புகிறது.

"மொழிகுணம் இன்மையும் இழிகுண இயல்பும்
அழுக்காறு அவாவஞ்சம் அச்சம் ஆடலும்

கடற்குடம் மடற்பினை பருத்திக் குண்டிகை

முடத்தெங்கு ஒப்பென முரண் கொள் சிந்தையும்

உடையோர் இலர் ஆசிரியர் ஆகுதலே”[27]

கல்வி உளவியலாளர் ஜெரிமி ஹ்யூ வால் ஆசிரியரைப்பற்றி கூறுகையில்,

“குழந்தைகளைக் கறுப்பு அல்லது வெளுப்பு அல்லது சிவப்பு என்ற அளவிலே மட்டும் கருதுவோர் கோடிக்கணக்கான பேர். ஆனால் இவர்களையெல்லாம் ஈடு செய்யக்கூடிய ஒருவன் உண்டு. அவன்தான் குழந்தையின் இயற்கையை நன்குணர்ந்த மானிட இயல்புடைய நல்லாசிரியன்.”[28]

“ஒன்றைக் கற்றுத்தெளிந்து அதை எளிமைப்படுத்தி பிறருக்கு உரைக்கும் திறன் கொண்டவரே ஆசிரியர்.”[29]

பேராசிரியர் ஹீமாயூன் கபீர் (Humayun Kabir) என்பாரின் கருத்துப்படி, “ஆசிரியர்கள் என்பவர்கள் நாட்டின் தலைஎழுத்தை நிர்ணயிக்கக் கூடியவர்கள்”[30] ஆவார்கள்.

வள்ளுவர் ஆசிரியர் எனும் பெயரைக் குறிப்பிட்டு எவ்விடத்திலும் கூறவில்லை. ஆயினும் தற்காலக் கல்விச்சூழலில் ஆசிரியருக்கு இருக்க வேண்டிய தகுதிகள் மற்றும் குணங்களைப் பற்றி பல குறள்களில் கூறியுள்ளார். சான்றோர் அறிவர் என்ற பெயரில் வள்ளுவர் ஆசிரியர்களைக் குறிப்பிடுகிறார்.

நடுவுநிலைமை உடையவர்

பொதுவாக நடுவுநிலைமை என்பது தம்மவர் என்ற சார்போ, பகைவர் என்ற வெறுப்போ, அயலார் என்ற உதாசீனமோ இன்றி தகுதியோடு நிற்றலாகும். ஆசிரியர் பார்வையில் நடுவுநிலைமைத் தன்மைப்பற்றி,

"சமன்செய்து சீர்தூக்கும் கோல்போல் அமைந்தொருபால்
கோடாமை சான்றோர்க்கு அணி" (குறள்.118)

எனும் குறள் குறிப்பிடுகிறது. தன்னைச் சார்ந்த பொருள்களைச் சமமாக நடுநின்று, அதன் நிறையினைத் தூக்கித் நிறுத்துக்காட்டும் தூக்குகோல் போல் மனத்தால் நிறைவுடையவராய் பாரபட்சமின்றி நடுநிற்றலே அறிவால் நிறைந்த சான்றோர்க்கு அழகாகும் என்கிறார் வள்ளுவர்.

மாணவனின் குலம், வசதி வாய்ப்பு, நிறம், கற்றல், திறமை போன்றவைகளில் ஆசிரியர் நடுவுநிலைமையோடு நடந்து கொள்ள வேண்டும். மறைந்த முன்னாள் விஞ்ஞானியும் முன்னாள் இந்திய ஜனாதிபதியுமான ஏ.பி.ஜே அப்துல்கலாம் அவர்கள் தன் ஆசிரியரான கே. ஏ.வி. மண்டல் அவர்களைப் பற்றி கூறுகையில் "நன்றாக படிப்பவன், சொன்னதைச் செய்பவன், புத்திமான் என்ற வேறுபாடு காட்டாமல் அனைவரும் என்னுடைய மாணவர்கள் என்ற உணர்வுடன் காணப்படுவார்"[31] என்கிறார்.

நடுவுநிலைமை குணமுடைய ஆசிரியர்களால் வழிநடத்தப்படும் குழந்தைகள் பிறர்மேல் விருப்பு வெறுப்பில்லாமல் சிறந்த மனநலம் கொண்ட பிள்ளைகளாக காணப்படுவார்கள் என்பதற்கு ஏ.பி.ஜே அப்துல்கலாம் அவர்களையே சிறந்த முன்னுதாரணமாகக் கொள்ளலாம்.

தன்னம்பிக்கையும் முயற்சியும்

'யானையின் தும்பிக்கையை விட மனிதனின் தன்னம்பிக்கை வலிமையானது' ஆகும். தன்னம்பிக்கை ஒரு மனிதனுக்கு முதுகெலும்பு போன்றது. ஆசிரியர் கற்பித்தல் சூழலிலும், வகுப்பறைச் சூழலிலும் தளர்ச்சியடையும் போதும் கற்றலில் மாணவர்கள் தளர்ச்சியடையும் போதும்

ஆசிரியர் தன்னம்பிக்கையும் முயற்சியையும் உடையவர்களாக காணப்பட வேண்டும்.

"அருமை உடைத்தென்று அசவாமை வேண்டும்
பெருமை முயற்சி தரும்" (குறள்.611)

ஒரு செயலை செய்வதற்கு முன்னர் அச்செயலில் வெற்றி காணவேண்டும் என்ற திடமான எண்ணம் வேண்டும். முயற்சியே அச்செயலினை முடித்து பெருமையைக் கொடுக்கும் எனும் கருத்து இக்குறளில் பதிவாகிறது.

ஆசிரியர் மாணவர்களுக்கு கற்றுக்கொடுக்கும் செயலில் அதிக முயற்சியோடும் தன்னம்பிக்கையோடும் ஊக்கத்தோடும் காணப்படவேண்டும். மாணவர்களுக்கு வழிகாட்டும் போதும், மெல்லக்கற்கும் குழந்தைகளுக்கு கற்பிக்கும் போதும் பல இடர்களைச் சந்திக்க நேரிடும். அச்சூழலில் அம்மாணவர்களுக்கு சரியான முறையில் கற்பிக்க முடியும் என்ற தன்னம்பிக்கையோடும் முயற்சியோடும் அவர்களுக்கு ஏற்ற பயிற்சிகளைக் கொடுக்க வேண்டியது ஒவ்வொரு ஆசிரியரின் கடமையாகும். அவ்வாறு பயிற்சியையும், கல்வியறிவையும் அளிப்பது ஆசிரியருக்கு பெருமையும் வெற்றியையும் அளிக்கும்.

மாதிரியாக இருத்தல்

ஆசிரியர்கள் மாணவர்களுக்கு மாதிரியாக இருக்க வேண்டும். புற அழகால் மட்டுமின்றி அகஒழுக்கத்தாலும் மாதிரியாக காணப்பட வேண்டும். ஆசிரியர்கள் செம்மையான வாழ்க்கை முறையை அமைத்துக்கொள்ள வேண்டுமென்பதற்கு கீழ்வரும் குறள் சான்றாக அமைகிறது.

"உலகம் தழீஇயது ஒட்பம், மலர்தலும்

கூம்பலும் இல்லது அறிவு" (குறள்.425)

மாணவர்களுக்கு பெரியோர் ஆசிரியரே ஆவர். ஆகவே ஆசிரியரே மாணவனுக்கு மாதிரி என்பதை இக்குறள் வழி புலப்படுத்துகிறார்.

உலகத்தினர் அஞ்சக்கூடிய செயல்களைக் கண்டு அஞ்சி அச்செயல்களைச் செய்யாமல் வாழ வேண்டுமென்றும் ஆலோசனை கூறுகிறார்.

"அஞ்சுவது அஞ்சல் அறிவார் செயல்" (குறள்.428)

ஆசிரியர்கள் உலகம் குற்றம் என்று கருதுகின்ற கொலை, திருடல், பெற்றோரை பாதுகாக்காமை, பெண்களை மதியாமை, பெண்களையும் குழந்தைகளையும் தவறாக பயன்படுத்துதல், மது அருந்துதல், புகைபிடித்தல், கடமையை சரிவரச் செய்யாமை போன்ற செயல்களைச் செய்யக்கூடாது. ஆனால் இன்றைய கல்விச்சூழலில் மாணவர்களுக்கு மாதிரியாய் இருக்க வேண்டிய ஆசிரியர்கள் சிலர் கற்றுக் கொடுக்கின்ற மாணவர்களிடம் பாலியல் தொடர்பான குற்றச்செயல்களில் ஈடுபட்டு சமுதாயத்தில் ஆசிரியர் குலத்திற்கே இழுக்கை ஏற்படுத்துகின்றனர்.

குழந்தைகளைக் கிழித்து காயப்படுத்தி, தண்டித்து, கண்டித்து பயமுறுத்தி அழச்செய்கின்றது நமது கல்வி என்பதற்கு கீழ்வரும் கவிதை வரிகள் சான்றாக அமைகிறது.

"புத்தகங்களே சமத்தாய் இருங்கள்

குழந்தைகளைக்

கிழித்து விடாதீர்கள்"[32]

கற்றுக்கொடுக்கின்ற ஆசிரியர்களைப் புத்தகமாக உருவகம் செய்து குழந்தைகளைக் கிழித்து விடாதீர்கள் என்று அறிவுரைக் கூறுவதாக இப்புதுக்கவிதை அமைகிறது.

அகங்காரம், கோபம், ஆசை ஆகிய மூன்று குணங்களும் இல்லாதவரே சிறந்த வளர்ச்சி பெற முடியும்.

“செருக்கும் சினமும் சிறுமையும் இல்லார்

பெருக்கம் பெருமித நீர்த்து” (குறள்.431)

என்ற குறள் கூறுகிறது. ஆசிரியரும் இத்தகைய குணங்களை விலக்கி மாணவர்களுக்கு மாதிரியாய் வாழ வேண்டும்.

மாணவர்கள் தவறு செய்தால் குற்றத்திற்கு சிறிய தண்டனைகள் வழங்குவது கல்விச்சூழலில் இயல்பாக நிகழும் நிகழ்வாகும். ஆனால் வள்ளுவர்,

“தன்குற்றம் நீக்கிப் பிறர்குற்றம் காண்கிற்” (குறள்.436)

என்கிறார்.

தன்குற்றத்தை முன்னர் நீக்கிக் கொண்டு பின்னர் பிறர்குற்றத்தை ஆராய வேண்டும் என்று அறிவுரை கூறுகிறார். சான்றாக, ஆசிரியர் புகைபிடித்தல், மதுவுண்ணுதல், தன் கடமைகளை சரிவரசெய்யாமை, பெரியோரை மதியாமை மற்றும் புறங்கூறல் போன்ற குற்றங்களைச் செய்யும் போது மாணவர்களைத் தண்டிக்க இயலாது. ஆகவே ஆசிரியர் தன்னிடம் காணப்படுகிற குற்றங்களைத் திருத்திக் கொள்ள வேண்டும். பிறகே மாணவர்கள் செய்கின்ற குற்றத்திற்குத் தண்டனையும் அறிவுரையும் வழங்க முடியும் என்பது இதன் மூலம் புலனாகிறது.

கல்வியறிவு

ஆசிரியர் என்பவர் புறத்தோற்றத்தால் செம்மையுற மாணவர்களுக்கு மாதிரியாய் இருந்து கொண்டு போதிய பாடஅறிவு இல்லாதவராய் இருக்க கூடாதென்பதை,

"நுண்மாண் நுழைபுலம் இல்லான் எழில்நலம்
மண்மாண் புனைபாவை அற்று" (குறள்.407)

"கற்றாருள் கற்றார் எனப்படுவார் கற்றார் முன்
கற்ற செலச்சொல்லு வார்" (குறள்.722)

"கல்லாத மேற்கொண் டொழுகல் கசடற
வல்லதூஉம் ஐயம் தரும்" (குறள்.845)

எனும் குறள்களின் மூலம் தெளிவுபட விளக்குகிறார்.

நுட்பமான மாட்சிமைப்பட்ட எல்லா நூல்களைக் கற்றும் அவற்றைப் பிறருக்குப் பயன்பட எடுத்துச் சொல்லக் கூடிய அறிவு இல்லையெனில் அவன் மண்ணினால் செய்யப்பட்ட பொம்மையின் அழகும் தோற்றமும் கொண்டவன் என்கிறார். மேலும் நன்றாக படித்த நூலறிவுடையோரும் படித்ததை அழகுபடச் சொல்வோர் படித்தவர்களிலேயே சிறப்பாக படித்தவர் எனக் கூறப்படுவார் என்றும், தான் கற்றறியாத நூலைக் கற்றவனாகக் கருதி கற்பிக்க முன்வரக் கூடாது என்றும் கூறுகிறார்.

ஒருவர் கற்றுக்கொடுக்கும் நிலையில் ஆசிரியர் எனக் கூறப்பட்டாலும் அவரிடம் துறைத் தொடர்பான நூலறிவு இருந்தும் அதை மாணவருக்கு கற்றுக்கொடுக்கத் தெரியவில்லையெனில் அவரை ஆசிரியர் என்று கூற இயலாது. ஆசிரியர்களாக இருப்பவர்கள் நாம் கற்றுத் தெளிந்தனவற்றை மட்டுமே பிறர்க்கு கற்பிக்கும் மனப்பாங்கு உடையவர்களாக விளங்க வேண்டும். கல்லாதனவற்றையும் கற்று தெளிவு பெறாதவனவற்றையும் கற்பிக்கவே கூடாது என்று அழகுபட எடுத்துரைக்கிறார்.

தொடர்ந்து கற்கும் ஆர்வம்

'கற்றது கைம்மண்ணளவு கல்லாதது உலகளவு' என்பர். ஆசிரியர் என்பவர் என்றும் மாணவராக கற்றுக்கொண்டே இருக்க வேண்டும். ஆசிரியர்கள் தன்துறைச் சார்ந்த அறிவோடு பொது அறிவு, நாட்டுநடப்பு, அறிவியல் கண்டுபிடிப்புகள், கணினி பற்றிய அறிவு, ஆய்வுமுடிவுகள் போன்றவற்றை அறிந்து வைத்திருக்க வேண்டும். வள்ளுவர்,

"யாதானும் நாடாமல் ஊராமால் என ஒருவன்
சாந்துணையும் கல்லாத வாறு" (குறள்.397)

என்கிறார். அதாவது கற்றவனுக்கு எந்தநாடும் தன் சொந்த நாடாகும். அப்படியிருக்க ஒருவன் இறக்கும்வரை கல்வியைக் கல்லாது கழிக்கிறான் என்று கூறுகிறார். ஔவையார் "ஓதுவது ஒழியேல்"[33] என்றும், நாலடியார்,

"கல்வி கரையில கற்பவர் நாள் சில"[34]

என்றும் கூறுகிறது. யுனெஸ்கோ (UNESCO) "கல்வியும் கற்றலும் வாழ்க்கை முழுவதும் தொடர வேண்டும். இதனை 'கற்றலுக்கான கற்றல்' (Learning to learn)"[35] என்று தொடர்ந்து கற்பதன் முக்கியத்துவத்தைக் கூறுகிறது.

"இரவென்றும் பகலென்றும் பாராமல் ஓடிக்கொண்டே இருக்கும் வற்றாத ஆற்றைப் போல ஒவ்வொருவரும் இடைவிடாமல் படித்துக்கொண்டே இருக்க வேண்டும்."[36]

ஆசிரியர் தனக்குத் தெரியாதவற்றை அறிஞர்களிடம் கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டுமென்பதற்கு கீழ்வரும் குறள் சான்றாக அமைகிறது.

"கற்றார்முன் கற்ற செலச்சொல்லித் தாம்கற்ற
மிக்காருள் மிக்க கொளல்" (குறள்.724)

தான் கற்றவற்றை அறிஞர்கள் முன்னிலையில் சொல்லி, தனக்குத் தெரியாத நுண்ணியப் பொருளைத் தெரிந்து கொள்ள வேண்டுமென்று வள்ளுவர் கூறுகின்றார்.

மனிதன் நல்ல நூல்களைப் படிக்க படிக்க அவனது அறிவானது வளரும் என்பதை

"தொட்டனைத்து ஊறும் மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறும் அறிவு" (குறள்.396)

எனும் குறள் வழி வெளிப்படுத்துகிறார்.

தொடர்ந்து கற்றல் ஒருவருக்கு நடத்தை மாற்றம் மற்றும் சிந்தனை மாற்றங்களை ஏற்படுத்துகிறது. தொடர்ந்து கற்கும் ஆசிரியரால் மாணாக்கர்களின் கற்றலுக்கானத் தேவையை உணர்ந்து கொள்ள முடியும். கற்பவர்களின் கற்கும் தன்மையறிந்து பாடப்பொருளை உணரச் செய்ய முடியும் இதனால்தான் அரசும் பிற கல்வி நிறுவனங்களும் ஆசிரியர்களுக்குப் புத்தாக்கப்பயிற்சி, பணியிடைப் பயிற்சி, கருத்தரங்குகள், மாநாடுகள், பணிப்பட்டறைகள் போன்ற நிகழ்ச்சிகளை ஏற்படுத்தி கருத்தாளர்கள், கல்வியறிஞர்கள், உளவியலாளர்கள் மற்றும் அறிஞர்கள் மூலம் ஆசிரியர்களின் கருத்துச்செறிவினை ஏற்படுத்த முயலுகின்றன.

ஆசிரியர்கள் படித்த பட்டதாரிகள் என்றாலும், மாறிவரும் கல்விச்சூழலுக்கேற்றவாறு பாடத்திட்டத்தாலும் கற்பிக்கும் முறையாலும் மாற்றங்கள் பெறுவதால் புதியனவற்றைத் தொடர்ந்து கற்றுக்கொண்டே இருக்க வேண்டும்.

எளிய முறையில் கற்பித்தல்

அனைத்து மாணவர்களும் ஆசிரியர் கற்பிப்பதை எளிதில் புரிந்து கொள்ளும் ஆற்றலுடையவர்கள் அல்லர்.

"எண் பொருள வாகச் செலச்சொல்லி" (குறள்.424)

சொல்லுகின்ற பொருள் கடினமாக பிறர் உடனடியாக புரிந்து கொள்ளும் வகையில் இல்லாதிருந்தாலும் கேட்போர் எளிதாகப் புரிந்து கொள்ளும் வகையில் கூறும் ஆற்றல் அறிவுடையோருக்கு உண்டு என்று இக்குறள் சுட்டுகிறது.

ஆசிரியர் கடினமான பாடங்களை மாணவர்களுக்கு எளிதாகக் கற்று கொடுக்கும் ஆற்றலுடையவர்களாக காணப்பட வேண்டும்.

"இணரூழ்த்தும் நாறா மலரனையர் கற்றது
உணர விரித்துரையா தவர்" (குறள்.650)

கற்றுணர்ந்த அரிய பொருளைத் தெளிவாக எடுத்துக்கூற இயலாதவர் வாசமில்லா பூவுக்கு ஒப்பாவார் என்கிறது. இதன் மூலம் தான் பெற்றக் கல்வியை விரித்துரைக்கத் தெரியாதவரின் கல்வியினால் பயன் ஒன்றும் இல்லை என்பதை அறிந்து கொள்ள முடிகிறது.

நல்லாசிரியரின் தனி இயல்பு பற்றி "ஆசிரிய பெருமக்கள், தான் பெற்ற கல்வியை மாணவ உலகத்தில் மலர்ந்து மணம் வீசச் செய்வதில் ஓர் மலர்ந்த பூக்காடு"[37] என்று கூறுகிறார்.

வகுப்பறையில் ஆசிரியர் கற்பிப்பதை கவனிக்காத மாணவனும் ஆசிரியர் கவனிக்கும் வண்ணம் பாடப்பொருளைக் கற்றுக் கொடுத்தலே அவ்வாசிரியரின் தனித்திறனாகும். இதனை,

“கேட்டார்ப் பிணிக்கும் தகையவாய்க் கேளாரும்

வேட்ப மொழிவதாம் சொல்” (குறள்.643)

என்கிறார் வள்ளுவர். தான் பேசும் போது கேட்டுக் கொண்டிருப்பாரை தன்பால் இழுக்கும் தன்மையதாய், கேளாத பலரும் கேட்க வேண்டும் என்று ஆசை கொள்ளக்கூடியதாய் இருக்க வேண்டும் என்று கூறுகிறது. இதனை ஔவையார் “சொல் சோர்வு படேல்”[38] என்று கூறுகிறார்.

இம்முறையிலான கற்பித்தல் ஆசிரியர் மாணவர் இடையே உள்ள இடைவெளியைக் குறைக்கவும், பாடப்பொருளை நன்கு புரிந்து கொள்ளவும் சோர்வின்றி கவனிப்பதற்கும் வழிவகுக்கின்றது.

ஒழுக்கமுடைமை

மாணவர்கள் என்பவர்கள் சீரற்றக் கல்லினைப் போன்றவர்கள். அவர்களை பயனுள்ள சிற்பமாய் மாற்றுவது ஆசிரியரின் கடமையாகும். கற்றுணர்ந்த ஆசிரியரின் தலையாய கடமை மாணவர்களுக்கு அறிவுரை கூறி தீயவழிச் செல்லாமல் தடுத்தல் ஆகும். இதனை,

“பிழைத்துணர்ந்தும் பேதைமை சொல்லார் இழைத்துணர்ந்து

ஈண்டியை கேள்வி யவர்” (குறள்.417)

எனும் குறள் மெய்ப்பிக்கிறது. நுட்பமான ஆராய்ந்து தெளிந்த அறிவுடையார் மாறுபட்ட கருத்துக்களைக் கூறி தீயவழியில் செலுத்த மாட்டார்கள் என்று வள்ளுவர் எடுத்தியம்புகிறார்.

ஆசிரியர் என்பவர் சமுதாய வரைமுறைகளுக்கு ஏற்றவாறு நன்மை, தீமைகளை மாணவர்களுக்குப் புரிய செய்து நடத்த வேண்டுமென்று நயமுற எடுத்துரைக்கிறார்.

கல்விக் கற்றலுக்கு மாணவரின் முயற்சி மட்டும் போதாது. ஆசிரியர்கள் போதிய முயற்சியுடனும் ஊக்கத்துடனும் செயல்பட வேண்டும். இடை, கடை மாணவர்கள் மீது வெறுப்பின்றி எந்த மாணவரை எம்முறையில் கற்பித்தால் உணர்ந்து கற்றுக்கொள்வார்களோ அம்முறையில் தன் முழுத்திறமையையும் பயன்படுத்தி பொறுமையுடனும், புரியும் படியும் கற்பிக்க வேண்டும். மாணவர்களுக்கு முன்மாதிரியாக செயல்பட்டு அவர்களை நடத்துவதும், சமுதாய வரைமுறைகளுக்கேற்ப அவர்களுக்கு வழிகாட்டுவதும் ஆசிரியரின் தலையாய கடமையாகும்.

கல்வித்தகுதிகள்

முற்காலத்தில் பிராமணர்கள் மட்டுமே கல்வியைக் கற்றுக்கொடுத்தனர். ஆனால் இக்காலக் கல்விச்சூழலில் எந்த இனத்தவரும் கல்வியைக் கற்றுக்கொடுக்கலாம். ஆசிரியருக்கான கல்வித் தகுதியாக ஆசிரியர் பயிற்சி (T.T.C) மாண்டிச்சோரி, கல்வியியல் இளைஞர் (B.Ed.), கல்வியியல் நிறைஞர் (M.Ed.), இளம் முனைவர் (M.Phil.), முனைவர் (Ph.D.) போன்ற படிப்புகளும் மத்திய அரசுகள் நடத்துகின்ற போட்டித் தேர்வுகளான ஆசிரியர் தகுதித் தேர்வுகளும், பேராசிரியர்களுக்கான போட்டித் தேர்வுகளான SELT, NET போன்ற தேர்வுகளில் தேர்வானவர்கள் ஆசிரியருக்கான தகுதியுடையவர்கள் ஆவர். மேலும் ஓவியம், தையல், விளையாட்டு, கணினி, நூலகம் மற்றும் கைவினைப் பொருட்கள் தயாரித்தல் போன்றவைகளுக்கும் கல்வித்தகுதிகள் வரையறுக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

ஆசிரியர் தினம் செப்டம்பர் ஐந்தாம் நாள் கொண்டாடப்படுகிறது. அன்று சிறப்பாக பணிபுரியும் ஆசிரியர்களுக்கு அரசு நல்லாசிரியர் விருதுகளை வழங்கி சிறப்பிக்கிறது.

மாணவர்களின் நிலை

ஆசிரியரின் முயற்சியாலும் கற்பிக்கும் திறனாலும் மாணவன் கல்வியும் அறிவுத்திறனும் பெறமுடியாது. மாணவன் கற்றலில் ஆர்வமும் நன்னடத்தையில் சிறந்தவனாக காணப்பட்டால் மட்டுமே நாட்டின் சிறந்த குடிமகனாக உருவாக முடியும்.

“பெரும் செயலை மேற்கொள்ளுவதற்கு ஆற்றலும் அறிவுத்திறனும் நிறைந்தவர்கள் தான் இந்தியாவுக்கு தேவையே ஒழிய பிறருடைய உழைப்பைக்கொண்டு வாழ்பவர்கள் அல்ல. தங்களை முன்னேற்றிக்கொள்ள மாணவர்கள் கற்றுக்கொள்ள வேண்டும். படிப்பு, விளையாட்டு ஆகிய இரண்டிலிருந்தும் நிறைய கற்றுக்கொள்ள வேண்டும்”[39] என முன்னாள் பாரதப்பிரதமர் ஜவஹர்லால் நேரு கூறுகின்றார். மாணவனாக யாரெல்லாம் ஆக முடியுமென்பதை நன்னூல்,

“தன்மகன் ஆசான் மகனே மன்மகன்
பொருள்நனி கொடுப்போன் வழிபடுவோனே
உரைகோ ளாளற்கு உரைப்பது நூலே”[40]

மேலும் மாணவர்களின் வகையாக மூன்று வகையினைக் கூறுகிறது.


“அன்னம் ஆவே மண்ணொடு கிளியே
இல்லிக் குடம் ஆடு எருமை நெய்யரி
அன்னர் தலை இடை கடை மாணாக்கர்”[41]

முதல் வகை மாணவர்கள் குணத்தையும் குற்றத்தையும் வேறுபிரித்துக் குணத்தை மட்டும் கொள்வர். மிகுந்த கல்வியுடைய ஆசிரியர் கற்றதைக் கேட்டுப்பின் ஓரிடத்தில் தங்கிச் சிறிது சிறிதாக நினைவுக்குக் கொண்டு வந்து சிந்திப்பர். இடைவகை மாணவர்கள் ஆசிரியர் வருந்தி

கற்பிக்கும் முயற்சியின் அளவிற்கு ஏற்ப கல்வியறிவு பெறுவர். ஆசிரியர் கற்பித்த கருத்துக்களையே திருப்பிச் சொல்வர். கடைவகை மாணவர்கள் ஆசிரியர் கற்பிக்கும் தோறும் மறந்து விடுவர். ஓராசிரியரிடம் கல்வி கற்காமல் பலரிடம் சென்று கற்பர். ஆசிரியரை வருத்தி பாடம் கேட்பர், தமக்கு கற்பிக்கப்படும் நற்கருத்துகளை மறந்து விட்டுத் தீய கருத்துக்களையே சிந்தித்து கொண்டிருப்பர் எனக்கூறுகிறது.

நுண்ணறிவு வரைபடம்

இன்றைய கல்விச்சூழலில் மாணவனின் நுண்ணறிவைக் கொண்டே மாணவனை வகைப்படுத்துகின்றனர். கல்வி உளவியலின் படி கீழ்வருமாறு மாணவர்களின் நுண்ணறிவு வகைப்படுத்தப்படுகிறது.



அட்டவணை

வகைகள்	நுண்ணறிவு ஈவு	சதவீதம்
மேதை (Genious)	140க்குமேல்	0.25%
மிகத் திறனுடையோர் (Very Superiour)	130-139	0.75%
திறனுடையோர் (Superiour)	120-129	6.00%
சராசரிக்கும் மேல் (Above Average)	110-119	13.00%
சாதாரண அல்லது சராசரி நுண்ணறிவு உடையோர் (Normal Average)	90-109	60.00%
சராசரிக்கும் கீழ்நிலையிலுள்ளோர் (அ) பின்தங்கியவர்கள் (Below average)	80-89	13.00%
மந்தமாணவர்கள் (Border line)	70-79	6.00%
பேதையர் (Moron)	50-69	0.75%
மூடர் (Imbecile)	25-49	0.25%
முட்டாள் (Idiot)	24க்கு கீழ் கற்றல் மற்றும் மனிதவளர்ச்சி உளவியல்	

மேதை, மிகத்திறனுடையோர், திறனுடையோர், சராசரிக்கும் மேல், சாதாரண அல்லது கீழ்நிலையிலுள்ளோர், மந்தமானவர்கள், பேதையர்கள், மூடர், முட்டாள் என மேற்கண்ட அட்டவணையின் நுண்ணறிவு ஈவின் அடிப்படையில் மாணவர்களை வகைப்படுத்துகின்றனர்.[42]

மாணாக்கர் ஆகாதவர் யாரென நன்னூல் கூறுகையில்,

"களிமடி மானி காமி கள்வன்

பிணியன் ஏழை பிணக்கன் சினத்தன்

துயில்வோன் மந்தன் தொண்ணூற்கு அஞ்சித்

தடுமாறு உளத்தன் தறுகணன் பாவி

படிறன் இன்னோர்க்குப் பகரார் நூலே”[43]

எனக் கூறுகிறது.

வள்ளுவர் மாணவனின் நிலையினைப் பற்றியும் மாணவன் கற்றலில் எந்த வகையில் காணப்பட வேண்டுமென்று குறிப்பாக குறிப்பிடவில்லை. ஆனால் ஆசிரியர் முன்னின்று கற்கும் முறையை

“உடையார்முன் இல்லார்போல் ஏக்கற்றும் கற்றார்

கடையரே கல்லா தவர்” (குறள்.395)

என்கிறார். அழியாத கல்வியைப் பெற ஆசிரியர் முன் பொருளினை வைத்திருப்பவரிடம் பொருளில்லாதவர் இரங்கி நின்று பொருள் பெறுவதனைப் போன்று மாணவர் வணக்கத்தோடு பணிந்து நின்று கல்வியைப் பெற வேண்டும் எனக் குறிப்பிடுவதிலிருந்து மாணவர்கள் பணிவுடன் ஆசிரியர் முன் காணப்பட வேண்டுமென்பது இதன்வழி புலனாகிறது.

முயற்சி

‘முயற்சியுடையார் இகழ்ச்சியடையார்’ என்பது பழமொழி. மாணவர்கள் முயற்சி செய்தால் மட்டுமே கல்வியறிவு பெறுவதில் வெற்றி பெற முடியும். உயர்ந்த கல்வியைப்பெற முயற்சி வேண்டும் என்பதை,

“முயற்சி திருவினை யாக்கும்” (குறள்.616)

எனும் குறளடி கூறுகிறது. மாணவர்கள் மனம் தளராது முயற்சி செய்து கற்பது அவசியமாகும்.

தோல்விகளைக் கண்டு மாணவர்கள் மனம் துவண்டு போகாமல் முயற்சியுடன் கற்க வேண்டும்.

"வினைக்கண் வினைகெடல் ஓம்பல், வினைக்குறை

தீர்ந்தாரின் தீர்ந்தன்று உலகு" (குறள்.612)

செயலை மேற்கொண்டு பாதியில் விட்டவரை உலகத்தார் விட்டு விலகுவார். எனவே ஒரு செயலை பாதியில் முடித்து விடாமல் முயற்சியுடன் முழுமையாக செய்து விட வேண்டும் என குறள் ஆலோசனை நல்குகிறது.

தற்காலக் கல்விச்சூழலை நோக்கும் போது கல்வி கற்றலின் அளவுகோலாக தேர்வுகள் நடத்தப்படுகின்றன. குறிப்பிட்ட மதிப்பெண்களைப் பெற்றவர்களே வெற்றியாளர்களாக கருதப்படுகின்றனர். ஆனால் குறிப்பிட்ட மதிப்பெண்களைப் பெற்று வெற்றியடையாத மாணவர்கள் முயற்சி செய்து கற்றலைத் தொடர்ந்தால் வெற்றியடைய முடியும். ஆனால் வெற்றியடையாத மாணவர்கள் முயற்சியின்மை மற்றும் தன்னம்பிக்கை இல்லாத காரணத்தால் தற்கொலை போன்ற செயல்களில் ஈடுபடுவதைக் காணமுடிகிறது. இதனைக் குறித்து இந்திய நிர்வாக சேவை அதிகாரி ம. ரவிக்குமார் (IAS) "தோல்வியைத் தாங்கிநிற்பவர்கள் தான் வாழ்க்கையில் முன்னேறுவார்கள்"[44] என்று மாணவர்களுக்கு அறிவுரை கூறுகிறார். மேலும்,

"மாணவர்களின் தோல்வி என்பது முயற்சிகளுக்கான முற்றுப்புள்ளி அல்ல"[45] என்று முதன்மைக் கல்வி அதிகாரி இராதாகிருஷ்ணன் கூறுகிறார்.

மாணவர்கள் தோல்வியைக் கண்டு துவண்டு விடாமல் கற்றல் செயலைப் பாதியில் விட்டுவிடாமல் கற்றல் செயலை முழுமை செய்ய வேண்டும்.

குறிக்கோளை அடைதல்

இளைஞர்களிடம் 'கனவு காணுங்கள்' என்று ஏ.பி.ஜே. அப்துல்கலாம் அவர்கள் கூறினார். மாணவன் எய்ய வேண்டிய குறிக்கோளை

அடைய அவனது மனமும் உடலும் சிந்திக்கும் மனப்பான்மையைக் கொண்டிருக்க வேண்டும்.

ஒருவன் தான் எண்ணிய செயலை இடைவிடாது சிந்திக்கும் ஆற்றலைப் பெற்று விட்டால் எண்ணிய செயலை வெற்றியாய் முடிக்க முடியும் என்பதை

"எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியார்

திண்ணிய ராகப் பெறின்" (குறள்.845)

எனும் குறளில் வலியுறுத்துகிறார்.

மாணவன் வாழ்வில் முன்னேறிச் செல்ல நான்கு வகையான குணங்களைக் கொண்டிருக்க வேண்டும் என்பதை,

"நெடுநீர் மறவி மடிதுயில் நான்கும்

கெடுநீரார் காமக் கலன்" (குறள்.605)

எனும் குறளில் கூறுகிறார். செய்ய வேண்டிய செயலை காலந்தாழ்த்தி செய்தல், மறத்தல், சோம்பல், தூங்குதல் ஆகிய குணங்களைக் கொண்டிருந்தால் வாழ்வில் முன்னேற முடியாது. இக்குறள் இக்காலக் கல்விச்சூழலுக்கு முற்றிலும் ஏற்புடையதாகவே காணப்படுகிறது.

சோம்பல்

'மடி குடியைக் கெடுக்கும்' என்பது பேச்சுவழக்கில் காணப்படும் பழமொழியாகும். சோம்பலானது மாணவனைப் பிறரால் இழிவாகப் பேசுகின்ற நிலைக்குத் தள்ளிவிடும் என்பதை

"இடிபுரிந்து எள்ளும்சொல் கேட்பர்

மாண்ட உஞற்றி லவர்" (குறள்.607)

எனும் குறளின் மூலம் உணரலாம்.

ஒருவர் தன்னுடைய கடமையை சோம்பலின் நிமித்தமாக செய்யவில்லையெனில் பிறரால் இழிச்சொல்லை கேட்க நேரிடும். மாணவப்பருவத்தின் கடமையே கல்வியினைக் கசடறக் கற்பதாகும். அக்கடமையை சோம்பலின் காரணமாக செய்யாமல் நல்ல மதிப்பெண்களைப் பெற முடியவில்லையெனில் சமுதாயத்தினரால் ஏளனப்படும் நிலையினை இக்காலக் கல்விச்சூழலிலும் காணமுடிகிறது. மேலும் பெற்றோர், நண்பர்கள், ஆசிரியர்கள் போன்றோர் மாணவர்களுக்குக் கல்வி கற்பதற்கு ஏற்ற உதவிகளைச் செய்தாலும் மாணவன் சோம்பல் உடையவனாக காணப்பட்டால் அதனால் பயன் ஒன்றும் இல்லை என்பதற்கு கீழ்வரும் குறள் சான்றாக அமைகிறது.

> “படிஉடையார் பற்றமைந்த கண்ணும் மடிஉடையார்
> மாண்பயன் எய்தல் அரிது” (குறள்.606)

சோம்பல் இருக்குமானால் பிறருடைய ஆதரவினாலும் அன்பினாலும் அவனது இலட்சியத்தை அடைவது கடினமான செயல் என்கிறார் வள்ளுவர்.

மாணவனின் தேர்வுகாலங்களில் பெற்றோர், ஆசிரியர்கள், உறவினர்கள், அவன் மீது அளவுக்கடந்த கரிசனைக் கொண்டு உதவிகள் செய்தாலும் அவனிடம் சோம்பல் காணப்படுமாயின் அவனால் கல்வியில் உயர்ந்த நிலையை அடைவது கடினம் என்பதை இக்குறள் மூலம் அறிந்து கொள்ள முடிகிறது.

ஊக்கம்

மாணவனுக்கு கற்கின்ற காலத்தில் ஏற்படுகின்ற தடைகளைத் தாண்டி வெற்றிபெறுவதற்கு ஊக்கம் இன்றியமையாததாகும்.

அறிவுடையவன் தன்னுடைய ஊக்கத்தினால் செயலினைச் செய்யும் போது அவனது துன்பங்கள் காணாமல் போய்விடும் என்பதை,

"வெள்ளத் தனைய இடும்பை அறிவுடையான்

உள்ளத்தின் உள்ளக் கெடும்" (குறள்.622)

எனும் குறள் வழி அறியமுடிகிறது. ஔவையார்,

"ஊக்கமது கைவிடேல்"[46]

என்று கூறுகிறார்.

மாணவர்கள் கல்வி கற்பதற்கு பொருளாதார நிலை, வறுமை, குடும்பம் மற்றும் சமுதாயப்பின்னணி, பெற்றோரின் கல்வியற்ற நிலை மற்றும் கற்பதற்கு சாதகமற்ற நிலை போன்றவை தடைக்கற்களாக அமைகின்றன. இந்நிலைகளிலும் தன்னால் கற்க முடியும் என்ற ஊக்கத்தோடு கற்றால் தான் தடைகளைத் தாண்டி குறிக்கோளை அடைய முடியும் என்பதை வள்ளுவர் தெளிவாக்குகிறார்.

இக்காலக் கல்விச்சூழலிலும் ஏழை மற்றும் நடுத்தரக் குடும்ப நிலையைக் சார்ந்தவர்கள், கல்வியறிவில்லாத குடும்பப் பின்னணியைச் சேர்ந்தவர்கள் ஊக்கத்துடன் உயர்கல்வி, போட்டி மற்றும் தகுதித்தேர்வில் வெற்றி பெற்று அதிகாரிகளாகவும், நாட்டின் உயர்பொறுப்புகளிலும் காணப்படுகின்றனர். "தேனி மாவட்டத்தில் ஏழ்மையான குடும்பத்தில் விவசாய கூலியாட்களின் மகன் அரசு மருத்துவரானார்"[47] எனும் செய்தி ஊக்கத்துடன் பயின்றால் உயர்நிலையை அடையலாம் என்பதற்கு சான்றாக அமைகின்றது.

பெற்றோரின் நிலை

பெற்றோர்கள் குழந்தைகளின் கல்வித்தேவையை உணர்ந்து தம் குழந்தைகளை கட்டாயம் படிக்க வைக்க வேண்டும். ஏழைப் பெற்றோர்கள்

வறுமையின் காரணமாகவும், பொருளாதாரத் தேவைகளை ஈடுசெய்யவும், இளம் வயதிலேயே மாடுமேய்த்தல், பயிர் வேலை செய்தல், நெசவு, கட்டிடவேலை, தையல் கடைகளில் உதவியாளராக சேர்த்து விடுதல் போன்ற கைத்தொழில்களில் ஈடுபடுத்தி விடுகின்றனர். சிறு குழந்தைகளின் கல்வி பெற்றோர் கைகளில் தான் காணப்படுகிறது. எச்சூழலிலும் மனந்தளராது குழந்தைகளுக்கு கல்வியளிப்பது ஒவ்வொரு பெற்றோரின் தலையாய கடமையாகும்.

கல்வியினால் குழந்தைகளுக்கு கிடைக்கின்ற பெருமை பெற்றோருக்கு மிகுந்த மகிழ்ச்சியைத் தரும். ஒரு பெண்ணானவள் தன் வாழ்நாளில் பலகட்டங்களைக் கடந்து வருகிறாள். ஆனால் அவள் வாழ்வில் இன்பமான நினைவுகளைக் கொடுப்பது குழந்தைப்பேறு ஆகும். அதைவிட இன்பத்தைக் கொடுப்பது என்ன என்பதை,

“ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன்மகனைச்
சான்றோன் எனக்கேட்ட தாய்” (குறள்.69)

எனும் குறளில் வள்ளுவர் புலப்படுத்துகிறார். இதனை,

“சான்றோன் என்கை ஈன்றோட்கு அழகு”[48]

என கொன்றை வேந்தனும் கூறுகிறது. இராமன் மிதிநிலையில் பரசு இராமனின் செருக்கடக்கி அவனை வென்று வீரனாக நின்றதைக் கண்டபோது தசரதன் அவனை ஈன்ற பொழுதைவிட அதிக இன்பம் அடைந்தான் என்பதற்கு கீழ்வரும் பாடலடிகள் சான்றாக அமைகிறது.

“பரிவுஅறு சிந்தை அப்பரசு ராமன்கை
வரிசிலை வாங்கி ஓர்வசையை நல்கிய

ஒருவனைத் தழுவிநின்று உச்சிமோந் துதன்

அருவியம் கண்டுணனும் கலசம் ஆடினான்”[49]

தந்தை மகனுக்கு ஆற்ற வேண்டிய உதவி என்பது நிறைந்த செல்வம் தேடி வைத்து, திருமணமும் செய்து வைப்பது அல்ல. மாறாக, பலர் கூடியுள்ள அவையில் தன் பிள்ளை பிறரைக்காட்டிலும் முன்னணியில் நிற்கும்படியாகக் கல்வியறிவைப் புகட்டுவது தான் என்பதை,

“தந்தை மகற்கு ஆற்றும் நன்றி அவையத்து

முந்தி இருப்பச் செயல்” (குறள்.67)

என வள்ளுவர் எடுத்துரைக்கிறார். இக்கருத்திற்கிணங்க,

“பெற்றோ ரெல்லாம் பிள்ளைக ளல்லர்”[50]

எனும் பாடலடியும் அமைகிறது.

செயற்கரும் செயலால் தன்னைப் பெற்றோருக்கும், சுற்றத்தாருக்கும், ஆசானுக்கும் பெருமை தரும் செயலைச் செய்பவர்களே பிள்ளைகளாக கருதப்படுவார்கள் என வெற்றிவேற்கை சுட்டுகிறது. நாலடியார்.

“உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும்

பிற்றைநிலை முனியாது கற்றல் நன்றே”[51]

எனக்கூறுகிறது.

என்னைவிட எனது மகன் அறிவுடையவனாக அனைவருக்கும் உதவி செய்ய வேண்டும் என எண்ணும் தந்தையின் நிலையினை

“தம்மில் தம்மக்கள் அறிவுடைமை மாநிலத்து

மன்னுயிர்க் கெல்லாம் இனிது” (குறள்.68)

வள்ளுவர் அழகுற எடுத்தியம்புகிறார்.

பெற்றோர் பிறர்தன் குழந்தையை அறிவு மிகுந்தவன் எனக்கூறும் போது பெருமையுறுகின்றனர். கல்வியை தம் குழந்தைகளுக்கு வழங்குவது ஒவ்வொரு பெற்றோரின் கடமை என்பதை இக்குறள்கள் வழி வலியுறுத்துகிறார்.

கல்லாதவர் எதிர்நோக்கும் பிரச்சினைகள்

கல்வியறிவைப் பெறாதவரையே கல்லாதவர் என்று கூறுகிறோம். மனிதன் தன் வாழ்க்கையில் கல்வியறிவைப் பெறுவது அவசியமாகும். அவசியமான கல்வியறிவைப் பெறாதவர் தம் வாழ்வில் அதிகமான பிரச்சினைகளை எதிர்கொள்கின்றனர் என்பதற்கு கீழ்வருகின்ற குறட்பாக்கள் சான்றாக அமைகிறது.

“நூலின்றிக் கோட்டிக் கொளல்” (குறள்.401)

“கல்லாதான் சொற்காமுறுதல்” (குறள்.402)

“கல்லாதவரும் நனிநல்லர் கற்றாமுன்” (குறள்.403)

“கல்லாதான் ஒட்பம் கழியநன்று ஆயினும்
கொள்ளார் அறிவுடையார்” (குறள்.404)

“உளர்என்னும் மாத்திரையர் அல்லால் பயவாக்
களர்அனையர் கல்லா தவர்” (குறள்.406)

“கல்லார்கண் பட்ட திரு” (குறள்.408)

அறிவுடையோர் அவையில் நூலறிவைப் பெறாதவரால் பேசமுடியாது. நூலறிவு பெறாதவன் அவையில் பேச ஆசைப்படக் கூடாது. கற்றறிந்தோர் கூடியுள்ள அவையில் கல்வியறிவில்லாதவன் நுண்ணறிவு உடையவனாய் காணப்படினும் அறிவுடையோர் அவனது அறிவுநுட்பத்தை ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். கல்வியறிவு இல்லாதவர்கள் யாருக்கும் பயன்

படாத களர் நிலத்தைப் போன்றவர், கல்லாதவனிடம் உள்ள செல்வம் அவனுக்கு துன்பத்தைக் கொடுக்கும் என்பது மேற்கூறப்பட்ட குறள்களின் கருத்தாக அமைகிறது.

நவீனக் காலக் கல்விச்சூழலில் கல்லாதவர்கள் கல்வியறிவைப் பெறும் நோக்கில் அனைவருக்கும் கல்வி, கரும்பலகைத்திட்டம், முதியோர் கல்வி, எண்ணும் எழுத்தும் இயக்கம் மற்றும் அறிவொளி இயக்கம் போன்ற பலதரப்பட்டத் திட்டங்களை அரசு செயல்படுத்தி உள்ளது.

கல்லாதவரின் பண்புகள்

கல்வி அறிவுடையோருக்கும் கல்வியறிவில்லாத கல்லாதவருக்கும் அதிகமான வேறுபாடுகள் காணப்படுகிறது. கல்லாதவரின் பண்புகளைக் கீழ்வரும் குறள்கள் பட்டியலிடுகிறது.

"அறிவுடையார் ஆவதுதறிவார் அறிவிலார்
அஃதறி கல்லா தவர்" (குறள்.427)

"அஞ்சுவது அஞ்சாமை பேதைமை " (குறள்.428)

"அறிவுடையார் எல்லாம் உடையார் அறிவிலார்
என்னுடைய ரேனும் இலர்" (குறள்.430)

"கண்ணுடையர் என்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையவர் கல்லா தவர்" (குறள்.393)

"விலங்கொடு மக்கள் அனையர்" (குறள்.410)

"உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பலகற்றும்
கல்லார் அறிவிலா தார்" (குறள்.410)

அறிவில்லாதவர்கள் எதிர்காலத்தில் நிகழும் செயல்களை அறிந்து கொள்ளும் ஆற்றல் இல்லாதவர்கள், உலகம் அஞ்சும் காரியங்களை துணிவாக செய்பவர்கள், அறிவற்றவர்கள் எல்லா செல்வத்தையும் பெற்றிருந்தாலும் வறியரைப் போன்று துன்பத்தையே அடைவார்கள், கல்வியறிவு இல்லாதவரது கண்கள் புண்களாகக் கருதப்படும். அறிவு வளர்ச்சியற்ற விலங்கின் தன்மை உடையவர்கள் நூல்களைக் கற்றிருப்பினும் உயர்ந்தவரோடு இணைந்து நடக்க மாட்டார்கள் என்று குறள்கள் வழி வெளிப்படுத்துகின்றார். ஆத்திச்சூடி,

"தேசத்தோ டொத்து வாழ்"[52]

என்று கூறுகிறது.

இன்றைய காலத்திலும் கல்லாதவர்களும், ஒருசில கல்வியறிவு உடையவர்களும் கல்லாதவரின் தன்மைகளைக் கொண்டவர்களாகவே காணப்படுகின்றனர்.

தொழிற்கல்வி

உலக வாழ்விற்கு பொருளே முதன்மையானது ஆகும். பொருளில்லாதவருக்கு இவ்வுலகம் இல்லையென்று கூறுகிறார். பொருளீட்டுவதற்கு தொழிலே வழியாக இருக்கிறது. முற்காலத்தில் ஆண்களே பொருளீட்டும் பணியினைக் கொண்டிருந்தனர். இதனை,

"வினையே ஆடவர்க் குயிரே"[53]

எனக் குறுந்தொகை கூறுகிறது.

மக்கள் கல்விக்கும் அறிவுக்கும் திறமைக்கும், உடல் வலிமைக்கும் ஏற்றவாறு பலதரப்பட்ட பணிகளைச் செய்கின்றனர். தொழில்களில் செம்மையுறப் பணிபுரியவும் தொழிலினைச் செய்வதற்கும் தொழிலைக் கற்பது

மிகமிக முக்கியமாகும். அரசியலில் ஈடுபடுகின்ற அரசனும், அமைச்சனும் தூதுவனும் கூட கல்வியறிவைப் பெற வேண்டும் என்று வள்ளுவர் கூறுகிறார். நாட்டை ஆளுகின்ற அரசன் கல்வியறிவைப் பெற்றிருக்க வேண்டுமென்பதை,

"தூங்காமை கல்வி துணிவுடைமை இம்மூன்றும்
நீங்கா நிலன்ஆள் பவதற்கு" (குறள்.383)

"ஒற்றும்உரை சான்ற நூலும் இவையிரண்டும்
தெற்றென்க மன்னவன் கண்" (குறள்.581)

எனும் குறள்கள் சுட்டுகிறது.

நிலவுலகை ஆளுகின்ற அரசன் நல்ல கல்வியறிவு பெற்றவனாக காணப்பட வேண்டுமென்பதை ஒற்றன் வெளியே நிகழ்கின்ற நிகழ்வுகளை வந்து கூறுகின்ற போது அவற்றைத் தெளிவுபடுத்திப் பார்ப்பதற்கு உதவுவது நீதி நூல்களாகும். எனவே அரசன் கல்வியறிவோடு நீதிநூல்களைக் கற்றவனாக காணப்பட வேண்டும் என்பது புலனாகிறது.

அரசர்க்குரிய கல்வி பற்றி பத்துப்பாட்டு நூல்களான மதுரைக்காஞ்சியும் பட்டினப் பாலையும்,

"நன்பல பல்வேறு குழூஉக்கொடி"[54]

"பல்கேள்வித் துறைபோகிய
தொல்லாணை நல்லாசிரியர்
உறழ்குறித்தெடுத்த உருகெழுகொடி"[55]

என்று கூறுகின்றது.

அரசன் சிறப்புற வேண்டுமெனில் அமைச்சன் சிறந்தவனாக இருக்க வேண்டும். ஒருநாடும் மன்னவனும் புகழோடு காணப்பட நல்ல அமைச்சன் தேவை. அமைச்சன் ஆன்ற குடியில் பிறந்து நல்லொழுக்கமும் நுண்ணறிவும்

மெய்யறிவு எனும் இயற்கையறிவோடும் செயற்கை அறிவாகிய நூலறிவையும் உடையவராக இருப்பின் அவனுடைய சூழ்ச்சிக்கு முன்னர் மாற்றானின் சூழ்ச்சிகள் வலிமையானதாக இருக்க முடியாது என்பதை,

> "மதிநுட்ப நூலே டுடையார்க் கதிநுட்பம்
> யாவுள முன்னிற் பவை" (குறள்.636)

என்று கூறுகிறது. நாட்டின் ஆட்சிக்கு உதவி செய்யும் அமைச்சன் நுண்ணறிவையும் நூலறிவையும் பெற்றிருக்க வேண்டுமென்பது இக்குறள் வழி புலனாகிறது.

தூதிற்கு பெருமை பெற்றவர் ஔவையார் ஆவார். பகைமையுற்ற அதியமான் தொண்டைமான் எனும் இருநாட்டு அரசர்களுக்கும் அறநெறியிலும் நுண்ணறிவோடும் அறிவுரை வழங்கி அவர்கள் போருள்ளத்தை மாற்றி பகைமையுணர்வை மறக்கச் செய்தவர். தூதுவனின் முக்கியப்பணி இருநாட்டினரையும் சமாதானம் செய்து வைப்பதாகும். தூதுவனின் குணங்களைக் கீழ்வரும் குறள்கள் வழி அறியமுடிகிறது.

> "அன்பறிவு ஆராய்ந்த சொல்வண்மை" (குறள்.682)
> "நூலாருள் நூல்வல்லவன் ஆகுதல்" (குறள்.683)
> "அறிவரு ஆராய்ந்த கல்வி" (குறள்.684)
> "கற்றுக்கண் அஞ்சாம்" (குறள்.686)

நல்லது தீயது எது என்று அறியும் பகுத்தறிவும், சொல்வன்மையும், அரசியலுக்குரிய நூல்கள் பலவற்றையும் பயின்று, தேறிய பண்புடைய-வனாகவும், பல நூல்களைக் கற்றுணர்ந்த நூலறிவும் இயல்பான நுண்ணறிவினை உடையவனாகவும் காணப்பட வேண்டுமென்று வள்ளுவர் திறம்பட எடுத்துரைக்கிறார்.

மருத்துவக்கல்வி

உலகில் தோன்றிய உயிர்களனைத்தும் நலமுடன் உயிர்வாழ வேண்டும் என்னும் உயரிய நோக்கமுடையவர் வள்ளுவர். மருத்துவர் நோயினைத் தடுத்தல், நோயினைக் குணப்படுத்தல், நோயாளிகளுக்கு ஆலோசனை வழங்குதல், உணவுத் தொடர்பான ஆலோசனையளித்தல், நோய் வருவதற்கான காரணங்களை விளக்குதல், நோயாளியினைப் பரிசோதித்தல் போன்ற பணிகளைச் செய்கின்றனர். மருத்துவர் தவறான சிகிட்சைகளை அளிப்பதால் நோயாளிகள் உயிரிழக்கும் சூழ்நிலையும் ஏற்படுகின்றது.

தேரையர் என்பவர் மருத்துவம் சார்ந்த நூல்களை எழுதியுள்ளதாகவும் அந்நூலில் “அறுவை மருத்துவத்திலும் நோய் தடைமுறைகளிலும், நோய் நாடும் முறைகளிலும் ஆற்றல் படைத்தவர்”[56] என்றும் குறிப்பிட்டுள்ளார்.

வள்ளுவர் மருத்துவர் கற்க வேண்டிய மருத்துவக் கல்வியைப் பற்றி, கீழ்வருமாறு கூறுகிறார்.

“மிகினும் குறையினும் நோய்செய்யும் நூலோர்
வளிமுதலா எண்ணிய மூன்று” (குறள்.941)

“உற்றான் அளவும் பிணியளவும் காலமும்
கற்றான் கருதிச் செயல்” (குறள்.949)

மருத்துவ நூல் கூறுகின்றவைகளின் படி மருத்துவன் நோயினைக் காணவேண்டுமென்றும், நோயின் அளவையும், நோய் பீடித்திருக்கிற காலத்தையும் அறிந்து மருத்துவ நூலறிந்த வைத்தியன் தன் அனுபவங்களை-யொட்டி மருந்து கொடுக்க வேண்டுமென்றும் கூறுகிறார். இக்குறள்கள் வழி

'நூலோன், கற்றோன்' எனும் சொற்கள் மூலம் மருத்துவம் சார்ந்த நூல்களும், மருத்துவ நூல்களைக் கற்றவர்களும் இருந்திருக்கின்றனர் என்பதை அறிய முடிகிறது.

தற்போதைய சூழலில் 'அலோபதி' எனப்படுகிற ஆங்கில வழி மருந்து முறை, சித்தா, ஹோமியோபதி, ஆயுர்வேதம், யுனானி போன்ற மருத்துவ முறைகளும் பின்பற்றப்படுகின்றன. இம்முறைகளுக்கு ஏற்ப மருத்துவ மாணவர்கள் பயிலுகின்றனர். ஆங்கில வழி மருத்துவமுறையையே பெரும்பான்மையான மக்கள் நாடுகின்றனர். ஆங்கில வழி மருத்துவக் கல்வியைப் பெற நடுவண் இடைநிலைக் கல்வி வாரியம் நடத்தும் அகில இந்திய மருத்துவ நுழைவுத்தேர்வில் (All India medical Test (AIPMT) தேர்வில் வெற்றிப்பெற்றவர்கள் அரசின் மானியத்தொகையில் கீழ் கல்வி பயின்று வந்தனர். தற்போது மருத்துவக்கல்வியைப் பெற இதற்கு மாற்றாக மத்திய அரசும் இந்திய மருத்துவக் கவுன்சிலும் இணைந்து அகில இந்திய மருத்துவ நுழைவுத்தேர்வினை (National elgibility and entrance Test (NEET) நடத்தி இதன் வழியே மாணவர்களை மருத்துவக் கல்விக்கு தேர்வு செய்கின்றது. மேலும் இக்கல்வி இளங்கலைப் பட்டமாக இளங்கலை மருத்துவம் மற்றும் அறுவைச் சிகிட்சை (Bachelor of medicine and bachelor of surgery (MBBS) வழங்கப்படுகிறது. பட்ட மேற்படிப்புகள் துறைகளின் அடிப்படையில் அளிக்கப்படுகிறது. அரசின் சார்பில் ஆயுர்வேத மருத்துவக் கல்லூரிகளும் செயல்படுகின்றன.

அனுபவக்கல்வி

வள்ளுவர் காட்டுகின்ற வாழ்வியலில் பலதரப்பட்ட புழங்குப் பொருட்கள், வேளாண்மை போன்ற பல்வேறுபட்ட தொழில் சார்ந்த கருவிகளும்

காணப்படுகிறது. இப்பொருட்களை ஒரு தலைமுறையிடமிருந்து அடுத்த தலைமுறையின் அனுபவத்தின் மூலமாக கற்றுக்கொண்டே செய்திருக்கலாம். இம்முறையினை அனுபவக் கல்வி மூலம் கற்றல் எனவும் பொருள் கொள்ளலாம்.

இம்முறையிலான அனுபவக் கல்வி இக்காலத்திலும் காணப்படுகிறது. முறையாக கல்வியைப் பெறாமல் கட்டிட வேலைகள், கல் வேலைகள், வாகனம் பழுதுபார்த்தல், தையல் வேலைகள், பொன் வெள்ளி போன்ற உலோகங்களால் செய்யப்படும் ஆபரண வேலைகள் மற்றும் மரவேலைகள் போன்ற தொழில்கள் அனுபவக்கல்வி மூலமாக கற்கப்படுகிறது. அனுபவக்கல்வியினைப் பற்றி மு. இராஜேந்திரன் கூறுகையில் “ஏராளமான தொழில்கள், கலைகள், பழக்கப்படுவது அனுபவத்தின் மூலம் தான். கைவைத்தியம் முதல் தங்கநகை செய்தல், போக்குவரத்துச் சாதனங்களை சரிசெய்தல் போன்ற கைத்தொழில்கள் பல கல்வியறிவின்றி அனுபவ அறிவுபெற்று தொழில்களைச் செய்கின்றனர். பெரும்பாலும் இத்தகைய தொழில்களுக்கு கல்வியறிவு தேவைப்படுவதில்லை என்ற நிலையே வளர்ச்சி பெற்ற இக்காலத்திலும் காணப்படுகிறது.[57]

அறிவியல் முன்னேற்றமடைந்த காலத்திலும் வள்ளுவர் கால அனுபவக்கல்வி முறையை இன்றைய சமுதாயத்தினரும் பின்பற்றுகின்றனர் என்பதில் ஐயமில்லை.

அனைவருக்கும் கல்வி

முற்காலத்தில் உயர்குலத்தைச் சார்ந்தவர்கள் மட்டுமே கல்வியினைக் கற்கும் நிலை காணப்பட்டது. தாழ்ந்த குலத்தைச் சார்ந்தவர்களுக்கு இடைக்காலத்தில் கல்வி மறுக்கப்பட்டதை வரலாறுகள் மூலம்

அறிய முடிகிறது. சங்ககால பாடல்களின் ஆசிரியர்களான இடையன், சேந்தங்கொற்றனார், இடையன் நெடுங்கீரனார், கழார்க்கீரன், எயிற்றியார், குறமகன் இளவெயினி போன்றோர் பாடல்களைப் பாடியுள்ளனர். இவர்களின் மூலம் பலகுலத்தைச் சார்ந்தவர்களும் கல்வியினைக் கற்றுள்ளனர் என்பதை அறியமுடிகிறது.

திருக்குறளில் ‘கல்வி’ எனும் அதிகாரம் அரசியல் பகுதியில் காணப்படுகிறது. கல்வி அரசர்க்கு மட்டும் உரியதா எனும் ஐயத்திற்கு பரிமேலழகர் தம்முரையில் “முதலில் அரசர்க்குரிய கல்வியைக் கூறி பின் கல்வி யாவர்க்கும் உறுதிபயக்க வல்லதே எனவும், யாவர்க்கும் பொதுவாக கூறப்பட்ட தெனவும்”[58] விடையளிக்கிறார்.

கல்வி என்னும் அதிகாரத்தில் கல்வி அனைவருக்கும் உரியதே என்பதை

“வாழும் உயிர்க்கு” (குறள்.392)

“மாந்தர்க்கு” (குறள்.396)

“ஒருவன்” (குறள்.397)

“ஒருவற்கு” (குறள்.398)

எனும் இச்சொற்கள் நமக்கு காட்டுகின்றன. மேலும்,

“மேற்பிறந்தா ராயினும் கல்லாதார்கீழ்ப்பிறந்தும்
கற்றார் அனைத்திலர் பாடு” (குறள்.409)

எனும் குறளில் தாழ்ந்த குலமாகக் கருதப்படும் குலங்களில் பிறந்தோரும் கல்வி கற்க முடியும். கல்வியால் தாழ்ந்த குலத்தவரும் மேன்மை அடைய முடியும் எனும் கருத்தினை வள்ளுவர் நயம்பட எடுத்துரைக்கிறார்.

கல்விக்கு சிறியவர் பெரியவர் என்ற வயது வேற்றுமையின்றி அனைவரும் கல்வி கற்கலாம். கல்லாத முதியோரைக்காட்டிலும் கற்றறிந்த சிறியோனே சிறப்புடையவன் ஆவான் என்று புறநானூறு உரைக்கிறது.

"ஒருகுடிப் பிறந்த பல்லோ ருள்ளும்

மூத்தோன் வருக வென்னாது அவருள

அறிவுடையோன் ஆறு அரசும் சொல்லும்"[59]

வெற்றிவேற்கை,

"எக்குடிப் பிறப்பினும் யாவரே யாயினும்

அக்குடியிற் கற்றோரை மேல்வரு கென்பர்"[60]

கூறுகிறது.

தற்காலக் கல்விச்சூழலிலும் மேல்சாதி, கீழ்சாதி, உயர்ந்தவர், தாழ்ந்தவர், ஏழை, பணக்காரன், ஆண், பெண், என்ற வேறுபாடின்றி அனைவருக்கும் கல்வி வழங்குவதற்காக தேசிய மற்றும் மாநில அளவிலும் பல கல்வித்திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. குழந்தைத் தொழிலாளர்-களுக்கு எதிராக சட்டங்களை இயற்றி அனைத்து பதினான்கு வயதுக்குட்பட்ட குழந்தைகள் கல்வி பெற அரசால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அரசும் பல்வேறு சட்டங்கள் மூலமாக குழந்தைத் தொழிலாளர் முறையை ஒழிக்க தீவிர முயற்சிகளை மேற்கொள்கிறது. "குழந்தைத் தொழிலாளர் முறை முற்றிலும் ஒழிக்கப்படும்"[61] என்றும் ஐக்கிய நாடுகளுக்கான இந்திய தூதரகப் பணியின் முதன்மைச் செயலாளர் மயான்க் ஜோஷி குறிப்பிட்டுள்ளார்.

'அனைவருக்கும் கல்வித்திட்டம்' மிகவும் சிறப்பான திட்டமாகும். "பள்ளிவயது (3, 4, 5) குழந்தைகள் அனைவரையும் 2008 ஆம் ஆண்டிற்குள்

பள்ளியில் சேர்க்க வேண்டும் என்பது அனைவருக்கும் கல்வி இயக்கத்தின் குறிக்கோளாகும்."[62]

அனைவருக்கும் கல்வி வழங்கும் நோக்கில் அரசு இலவச கட்டாயக்கல்வியுடன் மாணவர்களுக்குத் தேவையான கற்றல் பொருட்களான பாடநூல், குறிப்பேடுகள், பை, சீருடைகள், உணவு, மருத்துவ வசதி, மடிக்கணினி, மிதிவண்டி மற்றும் இலவசப் பயணச்சீட்டு போன்றவைகளை அரசு வழங்குகிறது.

முதியோர் கல்வி

முதியோரும் கல்வியறிவு பெறவேண்டும் எனும் நோக்கில் கல்வி போன்றவைகளை அரசு செயல்படுத்துகிறது. அதோடு, இவர்களுக்காக மாலை நேரக்கல்வி போன்ற முறைசாராக் கல்வியினை அரசு செயல்படுத்துகிறது.

அனைவரும் உயர்கல்விப் பெற வேண்டும் எனும் உயர்நோக்கில் அரசு அடிப்படைக் கல்வி இல்லாதவர்களும் திறந்தவெளிப் பல்கலைக்கழகங்கள் மூலம் பட்டப்படிப்புகளைக் கற்கவும் வழிவகைகளைச் செய்து கொடுத்துள்ளது. இக்கல்விகளைக் கற்பதற்கு வயது வரம்பில் தளர்வு நிலையையும் அளித்துள்ளது.

சிறப்புக்கல்வி

மாணவர்கள் கல்விச்சூழலில் மீத்திறன் மிக்க குழந்தைகள், சாதாரண குழந்தைகள், சிறப்புத் தேவையுடைய குழந்தைகள் என வகைப்படுத்தப்படுகின்றனர். பார்வை குறைபாடு, காதுகேளாத குறைபாடு, பேச இயலாமை, உடல் குறைபாடு, உள்ளவர்களும், மனம் நலம் குன்றியோர் போன்ற கற்றலில் இன்னல் உடைய மாணவர்களுக்கு சிறப்புக்கல்வி அளிக்கப்படுகிறது.

"நலிவுற்ற குழந்தைகள் கல்வியை நோக்கி வர இயலவில்லை எனில் கல்விதான் அவர்களை நோக்கி வர வேண்டும்"[63] என்று விவேகானந்தர் கூறுகிறார்.

பேராசிரியர் ஜாங்கிரா

"சிறப்புக் குழந்தைகளின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் கல்விமுறையே சிறப்புக்கல்வி ஆகும். சாதாரண பொதுப்பள்ளிகளில் காணப்படும் பாடத்திட்டங்களால் சிறப்பு தேவையுடைய குழந்தைகளுக்கு முழுமையான கல்வியை அளிக்க முடியாது"[64] என்கிறார்.

அரசு இவர்களுக்கு முறையான கல்வியினையும் முறைசாரா கல்விக்கான அறிவொளி இயக்கம், வயதுவந்தோர் கல்வி, தொடர்கல்வி இயக்கம், வளர்கல்வி இயக்கம், போன்றவைகளில் சேர்த்து சிறப்புக்கல்வி மாணவர்களை ஊக்கப்படுத்துகிறது. மேலும் இவர்களுக்குத் தேவையான கல்வி உபகரணங்கள் புத்தகம், பயிற்சி ஏடுகள், தேவையான சிறப்பு சக்கர நாற்காலிகள், மூன்று சக்கர வானகம் போன்றவைகளைச் சிறப்புக் கல்விக்கான மாணவர்களுக்கு வழங்குகிறது.

சட்டங்கள்

இந்திய அரசியல் சாசனத்தில் முன்னுரை (preamble) 22 பாகங்கள் (Shedules) 12பின் இணைப்புகள் (Appendiecs) 395 ஷரத்துகள் (Article)அடங்கியுள்ளன. இதில் ஏழாவது பாகம் மத்தியமாநில அரசுகளின் கல்விப் பொறுப்புகளையும் கடமைகளையும் பட்டியலிடுகிறது. பட்டியல் ஒன்று மத்திய அரசின் கல்விப் பொறுப்புகளையும், பட்டியல் இரண்டு மாநில அரசின்

கல்விப் பொறுப்புகளையும் பட்டியல் 3 பொதுப்பட்டியல் மைய, மாநில அரசுகளின் கூட்டுப்பொறுப்புகளையும் குறிப்பிடுகின்றன.

45-வது பிரிவு

அனைவருக்கும் இலவச கட்டாய கல்வி.

46வது பிரிவு

சமுதாயத்தில் நலிந்த பிரிவினரின் கல்வி மற்றும் பொருளாதார முன்னேற்றம்

28-வது பிரிவு

கல்வி நிறுவனங்களில் சமயபோதனை அல்லது வழிபாட்டில் பங்கேற்பது தொடர்பான சுதந்திரம்

இது போன்ற சட்டங்களை இயற்றி மாணவர்களுக்கான கல்விபெறும் உரிமையினை பாதுகாக்கிறது.

கல்விச்சூழலின் மாற்றங்கள்

தற்போதைய கல்விச்சூழல் மாறிவரும் சமுதாய, பொருளாதார மற்றும் அறிவியல் முன்னேற்றத்திற்கு ஏற்றவகையில் பல்வேறு மாற்றங்களை அடைந்துள்ளது. வகுப்பறைச் சூழல் மகிழ்ச்சியுள்ளதாயும், கற்றல் கற்பித்தலில் அனைத்து குழந்தைகளும் பங்கு பெறுவதாகவும் இருக்க வேண்டும்.

கற்றலின் ஆரம்ப காலங்களில் “தொடக்கக்கல்வி மாணவர்களுக்குப் பாடச்சுமை, ஆசிரியரின் வேகத்திற்கு ஈடுகொடுக்க முடியாமை, கட்டுப்பாடுகளுடன் கூடிய வகுப்பறைகள், தேர்வுபயம், திறனடைவில் ஏற்றத் தாழ்வுகள் போன்றவற்றை மாற்றவல்ல வலிமையானக் கல்வியே செயல்வழிக் கல்வி முறையாகும்”[65] என்று கூறுகிறார்.

இன்றைய கற்பித்தல் சூழலுக்கேற்ற கல்வி செய்து பார்த்து படித்துக் கொள்கின்ற செயல்வழி கற்பித்தல் முறை என்பது இக்கூற்றின் வழி அறியமுடிகிறது.

கல்வியும் ஓய்வும்

'ஓடி விளையாடு பாப்பா, மாலை முழுவதும் விளையாட்டு, காலையெழுந்தவுடன் படிப்பு' என்று பாரதியார் கூறுகிறார். கல்வியும் வேண்டும் அதேநேரம் கல்வி கற்பதிலிருந்து ஓய்வும் விளையாட்டும் வேண்டுமென்பது பாரதியாரின் உள்ளக்கருத்தாகும்.

"விளையாட வேண்டிய நேரத்தில் விளையாடியே தீர வேண்டும். படிக்க வேண்டிய நேரத்தில் படிக்க வேண்டும். ஆகவே வெறும் படிப்பு மட்டும் போதாது, இடையிடையே ஓய்வும் வேண்டும். இவ்விரண்டும் இருந்தால் தான் பிள்ளைகள் மேலும் படிப்பதற்குரிய உணர்ச்சியும் ஊக்கமும் ஏற்படும்"[66] என்கிறார்.

பள்ளிகளிலும் இதரக் கல்விக் கூடங்களிலும் மாணவர்களுக்கு கல்வியைத் தவிர உடற்பயிற்சிக் கல்வி, தையல், கைவினைப் பொருட்கள் செய்தல், ஓவியம் வரைதல், யோகா, நீச்சல் திறன்களை வளர்க்க உதவும் பேச்சுபயிற்சி, நடனம், பாடல் போன்ற கலைத்திட்டம் சாராத பிற செயல்பாடுகளும் காணப்படுகிறது. மேலும் இலக்கிய விழாக்கள், பட்டிமண்டபம் போன்ற நிகழ்ச்சிகள் மாணவர்களின் பருவத்திற்கேற்றபடி நடத்தப்படுகிறது. பெரும்பாலும் தொழில்நுட்ப உயர்நிலைக்கல்வி கூடங்களில் இத்தகைய செயல்பாடுகள் அதிக அளவில் காணப்படவில்லை.

மாணவர்கள் ஓய்வின்றி படிப்பதாலும், கண்டிப்புடன் நடத்தப்படுவதாலும் மனஅழுத்தத்திற்கு உட்படும் நிலை இக்காலக் கல்விச் சூழலில் ஏற்பட்டுள்ளது. மாணவர்களுக்கு ஓய்வு மிக அவசியமானதாகும்.

கல்வியின் அளவு கருவிகள்

உணர்ந்து கற்றவர் என்பதனையும் உணராது கற்றவர் என்பதையும் அறிந்து கொள்ளும் அளவு கருவிகளாக வள்ளுவர் புலமைத்திறனையும் ஒழுக்கத்தினையும் சுட்டுகிறார். ஆனால் இன்றைய கல்விச்சூழலில் துறைசார்ந்த புலமைத்திறனை வளர்ப்பதற்கான சொல்லாடல், வழக்காடுமன்றம், கருத்தரங்கங்கள், இலக்கிய மன்றங்கள், சொற்பொழிவுகள், பணிப்பட்டறைகள் போன்ற வாய்ப்புகள் காணப்படினும் மாணவர்கள் பெரும்பாலும் ஏட்டுக்கல்வியை மட்டுமே பெறுகின்றனர். மாணவர்களின் பாடம் சார்ந்த தேர்வுகளில் எடுக்கப்படும் மதிப்பெண்கள் அடிப்படையில் கல்வி அளவிடப்படுகிறது. ஆதலால் மாணவர்கள் பல்வகைத் திறன்களிலும் புலமைக் குறைந்தவர்களாகவே காணப்படுகின்றனர். புலமைத்திறன் மிக்கவர்களால் மட்டுமே சிறப்புடன் செயல்பட முடியும்.

தேர்வுகள் பள்ளிகளில் பெரும்பாலும் முப்பருவ முறையில் நடத்தப்படுகிறது. பத்தாம் வகுப்பு, பதினோராம் வகுப்பு, பன்னிரெண்டாம் வகுப்புத் தேர்வுகள் அரசுத் தேர்வாக அரசே நடத்துகிறது. மாணவர்களின் பல்வகைத்திறன்களை சோதிக்கும் வகையில் அகவயத் தேர்வுகள் நடத்தப்படுகிறது. கல்லூரிகள் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரிகள் இருபருவ முறையின் அடிப்படையில் தங்களுடைய பல்கலைக்கழகங்களில் விதிமுறைகளுக்குட்பட்டு தேர்வுகளை நடத்துகின்றன.

எதிர்நோக்கும் பிரச்சினைகள்

அரசும் கல்வி சார்ந்த அமைப்புகளும் மாணவர்களும் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்காக பல்வேறுபட்ட முன்னேற்பாடுகளை செயல்படுத்து-கின்றனர். ஆயினும் மாணவர்கள் சிறு பிரச்சினையைக் கூட எதிர்கொள்ளும் மனநிலையில் முதிர்ச்சிப் பெறாதவர்களாகவே காணப்படுகின்றனர். மாணவர்கள் ஆசிரியர்கள் கண்டித்தல், மதிப்பெண் குறைதல், தேர்வுகளில் தேர்ச்சி பெறாமை, பிற மாணவர்களால் ஏற்படும் சிறு சிறு சீண்டல்கள் போன்றவைகளுக்காக தற்கொலைச் செய்தல், வன்முறைச் செயல்களில் ஈடுபடுதல் போன்ற செயல்களை செய்கின்றனர். இதுவே இன்றைய கல்வித்துறையினர் எதிர்நோக்கும் பெரும்பிரச்சினையாக காணப்படுகிறது.

“மனஅழுத்தம், தாழ்வுமனப்பான்மை, காதல் தோல்வி, போன்றவைகளால் அதிகரித்து வரும் மாணவர் தற்கொலைகள். ஒரு இலட்சம் தற்கொலைகளில் 11,200 பேர் கல்லூரி மாணவர்கள்”[67] என்று தற்கொலை குறித்து ஆய்வு நடத்தி வரும் ‘சூசைட் ஆர்க்’ நிறுவனம் தகவல் வெளியிட்டுள்ளது.

பள்ளி மாணவ மாணவிகளின் மனஉளைச்சல், பதற்றம், கற்றலின் குறைபாடு, தேர்வுபயம், ஆசிரியர் பெற்றோர்களிடையே ஏற்படும் உறவுவிரிசல் போன்ற பல்வேறு பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் வகையில் “தமிழகத்தை பத்து மண்டலங்களாகப் பிரித்து மண்டலத்திற்கு ஒரு உளவியல் ஆலோசகர், உதவியாளர்கள் மூலம் நடமாடும் ஆலோசனை மையங்களை கடந்த 2013ஆம் ஆண்டிலிருந்து அரசு செயல்படுத்தி வருகிறது.”[68]

மேலும் மாணவர்களின் பெற்றோர்கள், ஆசிரியர்கள், கல்வியாளர்கள் மற்றும் கல்வி உளவியலாளர்கள் மாணவர்களுக்கு அறிவுரை

பகர்தல் வழிகாட்டுதல் போன்ற செயல்பாடுகள் மூலம் இத்தகைய பிரச்சினைகளுக்குத் தீர்வினைப் பெற முடியும்.

நல்லொழுக்கக்கல்வி

நல்லொழுக்கம் என்பது மாணவர்கள் மத்தியில் குறைந்து வருகிறது. மாணவர்களுக்குப் பாடம் சார்ந்த அறிவே அதிக அளவில் கற்றுக்கொடுக்கப்படுகிறது. ஒழுக்கம் சார்ந்த அறிவினை மாணவர்களுக்கு கற்பிப்பதற்கு சரியான பாடத்திட்டங்கள் ஏற்படுத்தப்பட வேண்டும்.

"ரூ. 1500 கடனைத் திருப்பிச் செலுத்துவதற்காக மாணவியின் கொலுசை திருட ஆறாம் வகுப்பு மாணவி கொலை. 10ஆம் வகுப்பு மாணவர்கள் மீது காவல்துறை விசாரணை."[69]

"மாணவர்களிடையே ஏற்பட்ட மோதலில் வகுப்பறையில் பிளஸ்-1 மாணவர் அடித்து கொலை."[70] இத்தகைய செயல்பாட்டினைக் குறித்து,

"மாவட்டக் கல்வி அலுவலர் சுபாஷினி அவர்கள் முன்பெல்லாம் பள்ளித் தொடங்கியதும், காலையில் நல்லொழுக்க வகுப்புகள் நடைபெறும். தற்போது இந்த வகுப்புகள் இல்லாததால் விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை, நட்புணர்வு இல்லாமை, ஒழுங்கீனம் அதிகரித்துள்ளது"[71] என்று கூறுகிறார்.

கல்லூரி மாணவர்களுக்கும் நல்லொழுக்கக் கல்வியைக் கற்பிக்கும் நோக்கில் "அனைத்து இளநிலை பட்டப்படிப்பில் சமூக ஒழுக்கம் குறித்த பாடம் மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம் அறிமுகம் செய்துள்ளது."[72]

கல்வி மனிதனை மனிதனாக்கும். ஆனால் நல்லொழுக்கம் நிறைந்த கல்வியால் தான் ஒரு மனிதனை இந்த சமுதாயத்தில் மாமனிதனாக ஒளிவீசச் செய்யமுடியும்.

கல்வி அமைப்புகள்

சமுதாயத்தின் கல்வித் தேவையில் முன்னேற்றத்தினை ஏற்படுத்திட அரசு பலவித முயற்சிகளை மேற்கொள்கிறது. கல்வி நிலையங்களின் செயல்பாட்டைத் தொடர்ந்து கண்காணிக்கவும் கல்விநிலையங்களின் தரத்தை உறுதிசெய்யவும் தேவையான வழிகாட்டுதலையும் உதவிகளையும் அளிக்க தேசிய மாநில அளவிலான கல்வி அமைப்புகள் செயல்படுகின்றன.

தேசிய மாநில அளவிலான கல்வி அமைப்புகள்

1. மனிதவள மேம்பாட்டுத்துறை (Ministry of human resource development) MHRD
2. பல்கலைக்கழக மானியக்குழு (University Grant Commission) UGC
3. தேசிய கல்வி திட்டமிடல் மற்றும் நிர்வாகக்கழகம் (National Institute of Educational planning and administration) NIEPA
4. தேசிய கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் (National council of educational research and training) NCERT
5. தேசிய ஆசிரியர் கல்வி நிறுவனம் (National council for teacher education) NCTE
6. தேசிய தரச்சான்றளிக்கும் கழகம் (National Assessment and accreditation council) NAAC
7. இந்திய மருத்துவ கவுன்சில் (Medical council of India) (MCI)
8. அனைவருக்கும் கல்வித் திட்டம் (Sarva siksha abiyan) S.S.A
9. இந்திய தொழில்நுட்பக் கழகங்கள் (Indian Institutes of technology)
10. இந்திய மேலாண்மைக் கழகங்கள் (Indian Institutes of Management)

11. இந்திய அறிவியல் கழகங்கள் (Indian Institutes of science)
12. அனைத்திந்திய மருத்துவக் கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்கள் (All India Institutes of medical science and research)
13. மத்திய பல்கலைக்கழகங்கள்(Central universities)
14. தேசிய பொறியியல் மற்றும் தொழில் நுட்ப நிறுவனங்கள் (National Institute of engineering and technology formerly known as regional engineering college
15. இந்திய சமூக அறிவியல் மற்றும் ஆராய்ச்சிக் கழகம் (Indian Council of social science and research)
16. தேசிய பாதுகாப்புக் கழகம்(National Deffence Association)

மாநில அளவிலான கல்வி அமைப்புகள்

1. தமிழக மாநில உயர்கல்விக்குழு (Tamil Nadu state council tar higher education) TSCHE
2. கல்லூரி கல்வி இயக்ககம் (DCE)
3. மாநில பள்ளிக்கல்வி இயக்ககம் (State Directorate of School Education)
4. தொடக்க கல்வி இயக்ககம்(Directorate of Elementary Education)
5. ஆசிரியர் கல்வி, ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்ககம் (Director of teacher education Research and Training (DTERT)
6. மாவட்ட ஆசிரியர் பயிற்சி நிறுவனம்
7. அனைவருக்கும் கல்வித் திட்டம்

தமிழக அரசு மத்திய அரசோடு இணைந்து இத்திட்டத்தை செயல்படுத்துகிறது. இந்திய ஆட்சிப்பணி அலுவலர் தலைமையில்

செயல்படுகிறது. தமிழக அரசும் அனைத்து நிலைகளுக்கான கல்வியை மேம்படுத்தவும், திறம்பட நிர்வகிக்கவும் கல்வி நிலையங்களை கண்காணிக்கவும், தேவையான வழிகாட்டுதலையும், ஆலோசனைகளையும் உதவிகளையும் அளித்திடவும், கல்வியின் தரத்தை உயர்த்தவும் இது போன்ற பல்வேறு கல்வி அமைப்புகளை ஏற்படுத்தியுள்ளது.

முடிவுரை

கல்வி என்பது மனிதனின் உள்ளார்ந்த அறிவுத்திறனை வெளிக்கொணர்வதே ஆகும். முற்காலத்தில் வேதங்களை கல்வியாக பயின்றனர். வள்ளுவர் காட்டுகின்ற அறிவுடையவர்கள் எல்லாம் கற்றவர்கள் அல்லர். கற்றவர்கள் எல்லாம் அறிவுடையவர்கள் அல்லர். கற்றதை கற்றபடி நடப்பவர்களே அறிவுடையவர்கள் என்கிறார். அறிவினைப் பல்வகையான நுண்ணறிவு, மெய்யறிவு, நூலறிவு, கேள்வியறிவு, புல்லறிவு வகைப்படுத்துகின்றார். ஆசிரியர் ஒழுக்கம் மற்றும் கல்வியறிவு கொண்டவராக காணப்பட வேண்டும். கல்லாதவர் கண்ணற்றவர் எனவும் விலங்கின் தன்மை உடையவர் என்று குறிப்பிடுகிறார். வள்ளுவரின் இக்கூற்றுப்படி மாணவர்களுக்குத் தற்போதைய கல்விச் சூழலுக்கேற்ற நல்லொழுக்கக் கல்வி அவசியமானதாகும். இன்றைய கல்விச் சூழலில் மாணவர்கள் பெரும்பாலும் மனஅழுத்தத்துடன் காணப்படுகின்றனர். அவற்றிலிருந்து விடுபட அரசும் பெற்றோரும் ஆசிரியர்களும் வழிகாட்டுதல், அறிவுரை பகர்தல் போன்ற பல முயற்சிகளை செய்து வருகின்றனர். எக்காலத்திலும் கல்வி ஒருவனை மனிதனாக மட்டுமல்ல மாமனிதனாக உருவாக்கும் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

இயல் குறிப்புகள்

1. மோகனராசு, கு., 'கன்பூசியசும் திருவள்ளுவரும்', ப.42.
2. நாகராஜன், கி., 'வளர்ந்து வரும் இந்திய சமுதாயத்தில் கல்வி', ப.6.
3. மேலது, ப.6.
4. மேலது, ப.7.
5. மேலது, ப.7.
6. மேலது, ப.22.
7. மேலது, ப.25.
8. சுந்தர சண்முகனார், 'தமிழர்கண்டகல்வி', ப.72.
9. இராணி பிரகாஷ் (தொ.ஆ.), 'திருக்குறள் பன்முகப்பார்வை பன்னாட்டு கருத்தரங்கம்', ப.377.
10. இராஜேந்திரன், மு., 'உயிர்எழுத்து', ப.38.
11. இராணி பிரகாஷ் (தொ.ஆ.), 'திருக்குறள் பன்முகப்பார்வை பன்னாட்டு கருத்தரங்கம்', ப.375.
12. ஆ.கோ.19:1.
13. திரி. 46:2-3.
14. இராணி பிரகாஷ் (தொ.ஆ.), 'திருக்குறள் பன்முகப்பார்வை பன்னாட்டு கருத்தரங்கம்', ப.176.
15. பாரதிதாசன், 'பாரதிதாசன் கவிதைகள்', ப.108.
16. திரி. 35:2.
17. மீனாட்சி சுந்தரம், அ., 'கல்வி உளவியல்', ப.162.
18. நாலடி. 317.
19. க்ரியாவின் தற்கால தமிழ் அகராதி, ப.1159.

20. வெற்றி., பா.2.

21. ஆத்தி. 39.

22. நாலடி. 251:2.

23. வெற்றி., பா.1.

24. திரி. 10:1.

25. ஆ.கோ.16:1.

26. நன். 26.

27. நன். 31.

28. ஹீயூஸ், ஏ.ஜி., 'கற்றலும் கற்பித்தலும்', ப.1.

29. முத்தப்பன், பழ., 'வள்ளுவம் பன்முகப்பார்வை', ப.50.

30. மீனாட்சி சுந்தரம், அ., 'ஆசிரியர் கல்வி', ப.1.

31. மேலது, ப.16.

32. சுதீர் செந்தில், (தொ.ஆ.), 'உயிர்எழுத்து', ப.6.

33. ஆத்தி.11.

34. நாலடி. 135.

35. மீனாட்சி சுந்தரம், அ., 'ஆசிரியர் கல்வி', ப.17.

36. மோகனராசு, கு., 'கன்பியூசியசும் திருவள்ளுவரும்', ப.30.

37. பாலாஜி லோகநாதன், 'ஆசிரியர் கல்வி', ப.22.

38. ஆத்தி. 53.

39. சுப்பிரமணியம், சி., 'பயன்தரும் கல்வி', ப.1.

40. நன். பொதுப்பாயிரம், நூ.37.

41. மேலது, 38.

42. மீனாட்சி சுந்தரம், அ., 'கற்றல் மற்றும் மனித வளர்ச்சி', பக். 164, 165.

43. நன். பொதுப்பாயிரம், நூ. 39.
44. தி. இந்து., 9.02.2015, ப.3.
45. தி.இந்து., 6.01.2015, ப.5.
46. ஆத்தி. 6.
47. தி. இந்து., 11.05.2015, ப.7.
48. கொன்றை., பா. 27.
49. கம்ப., பா.1305.
50. வெற்றி., பா.20.
51. நாலடி. 316.
52. ஆத்தி.61.
53. குறுந். 135.
54. மது.கா.373.
55. பட்டினப். 161-163.
56. கனகசபாபதிபிள்ளை, 'தமிழக வரலாறு மக்களும் பண்பாடும்', ப.429.
57. செந்தில் குமார், ஆர்., (தொ.ஆ.), 'உயிர்எழுத்து', ப.37.
58. காமாட்சி ஸ்ரீனிவாசன், 'குறள் கூறும் சமுதாயம்', ப.226.
59. புறம். 183: 5-7.
60. வெற்றி., பா. 38.
61. தி. இந்து., 16.10.2014, ப.11.
62. ஊற்றுக்கண், ஏ., 'திட்ட செயல்பாடுகள் வழிகாட்டுதல் கையேடு', பக்.6, 7.
63. நாகராஜன், வி., 'சிறப்புக்கல்வி', ப.1.
64. மேலது, ப. 4.
65. கோகிலா கந்தசாமி, ஆர்., 'நவீன இந்தியாவில் கல்வி', பக்.37, 38.

66. சுந்தர சண்முகனார், ‘தமிழர் கண்ட கல்வி’, ப.83.

67. தி.இந்து,11.11.2014, ப.16.

68. தி.இந்து., 25.03.2015, ப.2.

69. தி.இந்து, 17.12.2014, ப.7.

70. தி.இந்து, 13.11.2014, ப.8.

71. தி.இந்து, 14.2.2015, ப. 9.

72. தினமணி, 27.08.2014, ப.1.

இயல் இரண்டு

குறளில் கள்ளுண்ணாமையும்

மதுவின்

இன்றைய அவலமும்

முன்னுரை

மனித நாகரிகத்தின் தொடக்கம் முதலே குடிப்பழக்கம் இருந்து வருகிறது. ‘குடி குடியைக் கெடுக்கும்’ என்பது பழமொழி. மதுவருந்துதல் குடும்பத்தையும் சமூகத்தையும் அழிக்கும் என்பது நாம் அறிந்த உண்மையே. இயற்கையாகக் கிடைக்கும் குடிவகைகள் முதல் ஆலைகளில் தாயாரிக்கப்படும் மது மற்றும் கள்ளத்தனமாகத் தயாரிக்கப்படும் அனைத்துவகையான மதுபானங்களும் குடிப்பவர்களை மனரீதியில் மகிழ்ச்சியின் உச்சத்திற்கே அழைத்துச் செல்கின்றன என்பதில் ஐயமில்லை. ஆனால் இவர்களைச் சார்ந்திருப்பவர்களுக்கு கண்ணீரும் மனதில் ஆறாத இரணங்களுமே கிடைக்கிறது. அதுமட்டுமின்றி சமூகப் பொருளாதார ரீதியாக தாய், மனைவி மற்றும் குழந்தைகளின் உணவு, உடை, உறைவிடம், கல்வி போன்ற அடிப்படை வசதிகளை மதுவருந்துபவரால் அளிக்க முடிவதில்லை. மதுவருந்துபவர் பெற்றிருக்கும் குணங்களை குறள் வழியும், மதுவருந்துபவரால் இன்றைய சமுதாயம் பெற்றிருக்கும் அவலங்களையும் இவற்றிலிருந்து விடுபடுவதற்கான வழிகளையும் ஆய்வதாக இவ்வியல் அமைகிறது.

கள் மற்றும் மதுவின் பொருள் - விளக்கம்

மதுரை பேரகராதி,

“கள்ளு என்பது நீரிடாத பனைநீர், மது, நறவு, வெறி எனவும்,

கள்ளு சாராயம் என்பது பனஞ்சாறு முதலியவற்றினின்று காய்ச்சி வடிக்கப்படும் மதுபானம் எனவும் விளக்கமளிக்கிறது”.[1]

லிப்கோவின் தமிழகராதி “தேன், சாராய பானம் (Alcoholic Drink) இனிமை, மகரந்தம், அமுதம், பால், நீர், அசோக மரம், இளவேனில், அதிமதுரம், விஷ்ணுவினால் கொல்லப்பட்ட ஓர் அரசன் எனவும்,[2] கள் என்பதற்கு “மதுபான வகை, தேன், வண்டு, களவு எனவும் பொருளினை வழங்குகிறது.[3]

மதுவின் வேதியியல் குறியீடு

மதுவைக் குறிக்கும் ஆங்கிலச் சொல் ‘ஆல்கஹால்’ (Alcohal). இது ‘அல்கால்’ என்ற அரேபிய வார்த்தையிலிருந்து எடுக்கப்பட்டது. இதன் வேதியியல் குறியீடு C_2 H_2O என்பதாகும்.

ஆல்கஹால் உருவாகும் முறை

“தண்ணீரில் தாவரங்களிலுள்ள சர்க்கரைப் பொருள்களைக் கலந்து வைத்தால் ஒரிரு நாட்களில் போதையை உருவாக்கும். ஈதைல் ஆல்கஹால் அல்லது எத்தனால் எனும் பொருள் உருவாகின்றது.”[4]

சொல் பயன்பாடு

கள் என்பது பொதுவாக மதுவின் வகையாக அகராதிகள் பொருளினை உணர்த்துகின்றன. வள்ளுவர் ‘கள்’ என்ற சொல்லினையே குறளில் பயன்படுத்துகிறார். கள் என்பது போதையூட்டும் ஒரு பானமே ஆகும். தற்கால சமுதாயத்தினரால் கள் என்ற சொல் பெரும்பான்மையாக பயன்படுத்தப்-படவில்லை. மாறாக ‘மது’ என்ற சொல் பெரும்பாலும் பயன்படுத்தப்படுகிறது.

சூடாமணி நிகண்டு

கள் என்ற சொல்லிற்கு நாற்பத்திஎட்டு பெயர்களைக் கூறுகிறது. “அரியல், பாடலி, தேன், மட்டு, அரிட்டம், சுண்டை, தொண்டி, முருகு, சாயனம், கௌவை, முண்டகம், சாதி, சாலி, பிரசம், மாதவம், மேதை, பிழி, சேறு, தணியல், மாரி, சுரை, மது, சுமாலி, மாலி, சுலோகி, சொல்விளம்பி, நறவு, ஆசவம், தொப்பி, நனை, இக்கு, ஞாளி, குந்திவெறி, வெடி, சாறு, பானம், விகுணி, கோபம், வேரி, மறவி, தேம், கவிதை, தேறல், மகரந்தம், மதிரை, ஆம்பல் படு”[5] என விளக்கம் அளிக்கிறது.

கள்ளின் வகைகள்

கள் பொதுச்சொல் போல தோன்றினாலும் பெரும் வேறுபாடுகளைக் கொண்டது. 'தேறல்' என்பது தெளிந்த கள் என்றும் 'மட்டு' என்பது ஊக்கமும் தெளிவும் தரும் இன்னீர் வகையைச் சேர்ந்ததென்றும், கள் எடுக்கின்ற பொருளை அடிப்படையாகக் கொண்டு தனிக்கள், தோப்பி, நெல்லின் அரியல், நுங்கின் கள் எனவும், முதிர்ச்சி நிலையை அடிப்படையாகக் கொண்டு இளங்கள், நாட்கள், மதுகள் எனவும், சுவையின் தரத்தைக் கொண்டு இடுங்கள், வெங்கள் எனவும் நிலையை அடிப்படையாகக் கொண்டு கலங்கள், தேறல் எனவும் பிரித்து வழங்கப்பட்டன. அழுங்காப்பால் எனப்படும் சாராயம், தேங்கந்தாரம் எனப்படும் வேற்றுப்புலத்து மது என கள் பல வகைகளாக காணப்பட்டன.

"மது என்பது மயக்கம் தரும் கள் வகையைச் சார்ந்தது"[6] என கே.நமச்சிவாயம் அவர்கள் கூறுகின்றார்.

மதுவின் வகைகள்

மதுவில் காணப்படும் ஆல்கஹால் சதவீதம் மற்றும் அதனை தயாரிக்கும் முறைகளால் இருவகைப்படுகிறது.

1. நொதித்தல் முறையில் தயாராகுபவை.
2. காய்ச்சி வடித்தல் முறையில் தயாராகுபவை.

நொதித்தல் முறையில் தயாரிக்கப்படும் மதுவகைகள் 1.பீர் (Beer) 2. ஒயின் (Wine) 3. கள் முதலியனவாகும்.

கள் தயாரிக்கும் முறை

பெரும்பாலும் தென்னை, பனை, பேரிச்சம்மரம், ஈச்சமரம் ஆகியவற்றிலிருந்து கள் தயாரிக்கப்பட்டன. தென்னை, பனை, பேரிச்ச மரங்களிலிருந்து எடுக்கும் சாற்றில் பெரும்பகுதி நீர், சர்க்கரை முதலிய கரிமப் பொருள்களும் சிறிதளவு தாதுப் பொருள்களும் இதில் காணப்படுகிறது. பொதுவாக கள்ளில் மூன்றிலிருந்து ஐந்து சதவீதம் ஆல்கஹால் காணப்படுகிறது.

பானங்கள்

பண்டைய காலங்களில் தென்னை மற்றும் பனை மரங்களிலிருந்து கள்ளினை தயாரித்தனர். பனைமரம் பூக்கும் தருணத்தில் பனைமரத்தின் உச்சியில் பனையோலைகளுக்கு இடையே உருவாகும் 'குருத்து' என்ற விழுதை சரியான முறையில் சீவி, அதனை சிறிய மண் பானையில் கழுத்துப்பகுதியில் கயிற்றால் கட்டி பின் மரத்துடன் கட்டுவர். மண்பானையில் குருத்திலிருந்து சொட்டுசொட்டாக வடியும் நீரினை பனங்கள்ளு என்கின்றனர். இதனை அதிகமாக பருகினால் போதை உண்டாகும்.

காய்ச்சி வடித்தல் முறையில் தயாரிக்கப்படும் மதுவகைகள் விஸ்க்கி, பிராந்தி, ஜின், ரம் போன்றவைகள் ஆகும்.

அறிஞர்கள் கருத்துக்கள்

மதுவானது மக்களின் வாழ்வியலைச் சிதைத்து மாக்களாக வாழ வைக்கிறது. இக்கூறினையுடைய மதுவைக்குறித்து பலவிதமான கருத்துக்களை அறிஞர்கள் எடுத்துரைக்கின்றனர்.

காந்தியடிகள்

"ஒருமணி நேரத்திற்கு இந்தியா முழுமைக்கும் என்னை சர்வாதியாக நியமித்தால் முதல் காரியமாக நஷ்டஈடு கொடுக்காமல் எல்லா கள்ளுக்கடைகளையும் மூடிவிடுவேன். எங்கெல்லாம் கள் இறக்க உதவும் பனை, தென்னை ஈச்சை மரங்கள் இருந்தாலும் அவைகளை வெட்டிவிட செய்வேன்"[7] என்று யங் இந்தியா பத்திரிகையில் எழுதியுள்ளார்.

கௌடில்யர்

"ஒரு தொழிலை செய்கின்றவன் குடித்தால் அதில் கவனமில்லாமல் இருப்பான். குடி சான்றோர்களுக்கு நெறிபிறழ்ச்சியை உண்டாக்கி விடும். வீரர்கள் குடித்தால் ஆயுதங்களைத் தேவையில்லாத இடங்களில் பயன்படுத்த வேண்டி வரும்"[8] என்கிறார்

மு. வரதராசன்

"கள்ளினை உண்டு மகிழ்ந்தவன் நாளடைவில் உணவை மறந்தாலும் தொழிலை மறந்தாலும் மறக்கமுடியாத வேட்கை அக்கள்ளின் மேல் ஏற்படுகிறது"[9] என தன் கருத்தினை பதிவு செய்கிறார்.

கே.கே. பிள்ளை

"வரையற்ற சிற்றினமும் கட்குடியும் ஒருநாட்டின் மக்களை இழிந்த நிலைக்கு ஈர்த்து விடும் என்பது வரலாற்று உண்மையாகும்."[10]

கள்ளினை உண்பவர் எதனை மறந்தாலும் கள்ளுண்பதை மறக்க மாட்டார்கள். சான்றோர்களுக்கு நெறிபிறழ்ச்சியை உண்டு பண்ணும் வருவாய் ஈட்டுவதற்கான தொழிலைச் செய்ய கவனமின்றி காணப்படுவர் என்பது அறிஞர்களின் கருத்துக்களின் முடிபாகும்.

மதங்களின் கருத்துக்கள்

மதம் மனிதனை நல்வழிப்படுத்துவதாகும். மனிதனை அறம் சார்ந்த வழியில் ஈடுபடச் செய்து மனிதனை மனிதத்தன்மை உடையவனாய் சமுதாயத்தில் வாழ மதங்கள் முக்கிய பணியாற்றுகின்றன.

கிறிஸ்தவம்

கிறிஸ்தவ மதமானது தனது மதம் சார்ந்த நெறிமுறைகளை திருவிவிலியம் வழியாக மக்களுக்கு கூறுகின்றது.

“மதுபானம் இரத்த வருணமாயிருந்து பாத்திரத்தில் பளபளப்பாய் தோன்றும். நீ அதைப்பாராதே, அது மெதுவாய் இரங்கும் முடிவிலே அது பாம்மைப் போல் கடிக்கும் விரியனைப் போல் தீண்டும்.”[11]

“உன் கண்கள் பரஸ்தீரிகளை நோக்கும் உன் உள்ளம் தாறுமாறனவைகளைப் பேசும் நீ நடுகடலிலே சயனித்திருக்கிறவனைப் போலும், பாய்மரத்தட்டிலே படுத்திருக்கிறவனைப் போலும் இருப்பாய். என்னை அடித்தார்கள் எனக்கு நோகவில்லை. என்னை அறைந்தார்கள் எனக்குச் சுரணயில்லை”[12] என்று கூறுகிறது.

இஸ்லாம் மதம்

முஸ்லீம்களின் உலகியல் மற்றும் மறுமை வாழ்வுக்கான வழிகாட்டும் மறையாக திருக்குர்ஆன் விளங்குகின்றது.

“மது அருந்தியவனுக்கு இவ்வுலகில் தண்டனை நாற்பது கசையடிகளாகும். மறுமையில் தீனத்துல் ஷபாலை அல்லாஹ் குடிக்க வைப்பார்.

(தீனத்துல் ஷபால் என்பதன் பொருள் நகரவாசிகள் எரியும் போது அவர்கள் உடலிலிருந்து வெளியேறும் சீல் ஆகும்.)"[13]

பௌத்த சமண மதம்

சமணமும் பௌத்த மதமும் கடவுளை ஏற்காததால் செய்யும் தவறுகளுக்கும் பாவங்களுக்கும் மன்னிப்பையோ, பரிகாரத்தையோ தேட இயலாது. அறம் செய்யத் தவறினால் தண்டணையை உயிர் அனுபவித்தே தீர வேண்டும்.

பௌத்த மதத்தின் அறக் கொள்கைகள்

"கொல்லாமை, களவு செய்யாமை, பிறனில் விழையாமை, பொய்யாமை, கள்ளுண்ணாமை"[14] ஆகியவை ஆகும்.

சமண மதம்

"கொல்லாமை கள்ளாமை. காமத்தை ஒவ்வாமை, பொய்யாமை பொருள் வரைதல்"[15] என்கிறது.

இந்துமதம்

இந்து சமயத்தின் புனித நூலான பகவத்கீதை மதுபானத்தை ஸோமபானம் எனக் குறிப்பிடுகிறது.

"த்ரைவித்யா மாம் ஸோமபா: பூதபாபா:
யக்ஞைரிஷிட்வா ஸ்வர்க்கதிம் ப்ராத்தயந்தே
தே புண்ய மாஸாத்ய ஸ்ரேந்தரலோக
மசுசந்தி த்வயான் திவி தேவபோகான்"[16]

"உருக், யசூர், சாம மாகிய மூன்று வேதங்கள் கூறும் கடமைகளைச் செய்து வேள்வி வளர்க்கும் போது சோமபானத்தை அருந்தி, பாவம் நீங்கி தூய்மையடைய என்னை வேள்வியில் வணங்கி சுவர்க்கத்தை வேண்டுகின்றனர். அவர்கள் புண்ணிய வடிவம் ஆன அமரர் உலகை அடைந்து, தெய்வீக தேவதைகள் அனுபவிக்கும் இன்பங்களைப் பெறுகின்றனர்."[17]

மதுவினை அருந்தினால் இயல்பான குணங்கள் பலவகையில் மாறுபாடு அடைவதையும், அறமல்லாத பல செயல்களைச் செய்ய நேரிடுவதையும் மதுவுண்பவருக்குத் தண்டனை நிச்சயம் என்றும், கள்ளுண்ணாமையை பின்பற்ற வேண்டுமென்றும் கிறிஸ்தவ, இசுலாமிய, பௌத்த சமண மதங்கள் கூறுகின்றன. ஆனால் பகவத்கீதை மதுவருந்துவது சரியெனக் கூறும் வகையில் தன் கருத்தினை முன் வைக்கிறது.

இலக்கியத்தில் கள்

பழந்தமிழகத்தில் மது உண்ணும் வழக்கம் பற்றி இலக்கியத்தில் ஏராளமான சான்றுகள் கிடைக்கின்றன. எல்லா நிலையிலுள்ள மக்களும் மதுவினை அருந்தினர். தலைசிறந்த வேந்தர்களும், குறுநிலத் தலைவர்களும், புலவர்களும், போர்வீரர்களும், குறவரும், பாணரும், ஆண்களும், பெண்களும் ஏழைப் பணக்காரன் பாகுபாடின்றி மதுவருந்தி மகிழ்ந்தனர். தெய்வங்களுக்குச் செலுத்தப்பட்ட படையலிலும் மதுவகைகள் படைக்கப்பட்டன.

சங்க இலக்கியங்கள்

சங்க இலக்கியங்களில் கள் தயாரிக்கப்பட்ட முறைகள் அவை பதப்படுத்தப்பட்ட முறைகள் பற்றிய செய்திகள் அதிக அளவில் காணப்படுகின்றன.

நெல், திணை முதலிய தானியங்களிலிருந்து மது தயாரிக்கப்பட்டது. இதனை ‘தோப்பிக்கள்’ என்று கூறினார்கள்.

“இல்லடு கள்இன் தோப்பி”[18]

சாடிகளில் கள் தயாரிக்கப்பட்டது என்பதற்கு,

“வல்வாய்ச் சாடியின் வழைச்சற விளைந்த

வெந்நீரரியல் விரலை நறும்பிழி”[19]

எனும் பாடலடிகள் சான்றாக அமைகிறது.

சிங்கம் போன்ற வலிமையுடைய கானவன் உயரமாக போடப்பட்ட காவற்பரணிலே கள்ளுண்டு களிந்திருந்த செய்தியினை,

“கானவன் பிழி மகிழ்ந்து வதித்தென”[20]

எனும் பாடலடி சுட்டுகிறது.

போரில் வெற்றி பெற்றபின் வீரர்கள் மணற்குன்றின் மேலுள்ள நடுகல் தெய்வத்தை வழிபட்டனர். அத்தெய்வத்திற்கு துடியை முழக்கி நெல்லால் ஆக்கிய கள்ளொடு செம்மறியாட்டினைப் பலியாக கொடுத்தனர் என்பதற்கு,

“தோப்பிக் கள்ளொடு துருஉப் பலிகொடுக்கும்”[21]

எனும் பாடலடி சான்றாக அமைகிறது.

நடுகல் தெய்வத்திற்கு கள் படைக்கப்பட்டதை இச்செய்தியினின்று உணர முடிகிறது.

கம்பராமாயணம்

கும்பகர்ணன் கள்ளின்றி தவித்ததற்கு கீழ்வரும் பாடலடிகள் சான்றாக அமைகிறது.

“உறக்க மவ்வழிநீங்கி யுணத் தகும்

வறைக்க மைந்தன வூனோடு வரக்கிய

நறைக்கு டங்கள் பெறான்கடை நக்குவான்

இறக்க நின்ற முகத்தினை பெய்துவான்”[22]

உறக்கம் நீங்கியவுடனே உண்ணுவதற்குரிய வறுத்தல் பொருந்திய மாமிசத்துடனே வார்த்த கள்ளைக்கொண்ட குடங்களையும் பெறாதவனாய் கடைவாயை நக்கிக்கொண்டு இறத்தற்குப் பொருந்தின முகத்தை அடைபவனானான் எனப் பொருள் உணரலாம். அவ்வையார் அதியமான் அஞ்சியிடம்,

“சிறியகள் பெறினே எமக்கீயும் மன்னே

பெரிய கள் பெறினே

யாம்பாட தான் மகிழ்ந்து உண்ணும் மன்னே”[23]

என கூறுகிறார். இதன் மூலம் முந்தைய காலத்தில் ஆண்கள் பெண்கள் என்ற வேறுபாடின்றி கள்ளுண்ட செய்தியை அறிய முடிகிறது.

புறப்பொருள் வெண்பாமாலை

பசுவினைக் கவர்ந்து வந்த வெற்றியினை கொண்டாடும் வீரர்கள் கள்ளினை உண்டு மகிழ்ந்தனர்.

“தொட்டிமிழுங் கமன் மறவர்

மட்டுண்டு மகிழ்தூங்கின்று”[24]

பசுக்களை கவர்ந்து வந்த வெட்சி மறவர் அவ்வெற்றி காரணமாக கள்ளுண்டு களித்தாடியதுபற்றி மேற்கண்ட பாடல் விளக்குகின்றது. இதனை உண்டாட்டுப்படலம் என்று அழைத்தனர்.

பாரதியார் பாடல்கள்

பாரதியார் மதுவினைப் பற்றி தமது கவிதையில்,

“பச்சை முந்திரி தேம்பழங் கொன்று
பாட்டுப் பாடிநற் சாறு பிழிந்தே
இச்சை தீர மதுவடித் துண்போம்”[25]

என்கிறார்.

காமராசன்

‘குடிகாரன்’ எனும் கவிதையில் காமராசன் அவர்கள்,

“இந்தியாவில்
கங்கை வற்றிப்போனாலும்
மதுவெள்ளம் பாய்ந்து
கொண்டுத்தான் இருக்கும்”[26]

என்கிறார்.

மருத்துவ நோக்கில் மது

இந்தியாவில் பலவகைப்பட்ட மருத்துவ முறைகள் பின்பற்றப்படுகின்றன. உதாரணமாக ஆயுர்வேதம், அலோபதி, யுனானி, சித்த மருத்துவம் போன்றவைகளைக் கூறலாம். அனைத்து வகையான மருத்துவமும் மதுவினை அளவுக்கதிகமாக உண்டால் நோய்கள் ஏற்படும் என்றே கூறுகின்றன.

‘அளவுக்கு மீறினால் அமிர்தமும் நஞ்சாகும்’ என்பது பழமொழியாகும். “கள்ளானது அளவோடு அருந்துவோர்க்கு நன்மையும் மட்டுமீறிக் குடிப்போர்க்குத் தீமையும் விளைவிக்கின்றது”[27] என சித்த மருத்துவர் த.இராசேந்திரன் கூறுகிறார்.

பனங்கள்ளின் குணம்

இடைப்பட்ட காலத்தில் பனங்கள்ளினையும், தென்னங்-கள்ளிளையும் சாதாரண மக்கள் அதிக அளவில் பயன்படுத்தி வந்தனர். பனங்கள்ளில் காணப்படும் நன்மை தீமைகளைக் கீழ்வரும் பாடலடிகள் எடுத்தியம்புகிறது.

"விந்து திரழுறுமதி வெப்புடனே தாகம்போம்
பந்த மாந்ததுவுமோ வாரிக்கும் - முந்து பித்தந்
தோன்றும் பாசணங்கள் சுத்தியுமாச்சு தோகைமின்னே
யேன்ற பனை மதுவிற்கே"[28]

பனங்கள்ளை அருந்தினால் விந்து ஊறும், அதிக உடல் சூடு தணியும், தாகம் தீரும், பித்தம் அதிகரிக்கும். மேலும் மருந்துகளுக்குப் பயன்படும் பாசணங்களின் நச்சுத்தன்மையைச் சுத்தமாகும் போன்ற நன்மைகளைக் கொடுக்கிறது. இதனை அளவுக்கதிகமாக குடிக்கும் போது போதை தலைக்கேறி தேவையற்ற செயல்களைச் செய்ய நேரிடும்.

அலோதிபதி எனப்படும் ஆங்கில முறையில் நோக்கினால் உடல் மற்றும் மனரீதியில் பலவகையான நோய்களை மது ஏற்படுத்துகின்றது. மதுவினை அதிக அளவில் உண்ணும் போது கல்லீரலில் குறைபாடு, மூளை இயல்பு நிலைக்கு மாறாக செயல்படுதல் செரிமான உறுப்புகளில் பாதிப்புகள், இதில் இரப்பை, கணையம் போன்றவையும் பாதிப்புக்குள்ளாகிறது. மேலும் இரத்தம், இதய பாதிப்புகள், சிறுநீரக பாதிப்புகள், இனப்பெருக்க உறுப்புகளில் பாதிப்புகள், மூச்சு உறுப்புகளில் பாதிப்புகள் ஹார்மோன்கள் மற்றும் நரம்பு மண்டலங்களிலும் அதிக அளவில் பாதிப்புகள் ஏற்படுகின்றன. அதிகபடியான

மதுவுண்ணும் பழக்கம் மனரீதியில் பல வித மாற்றங்களை உருவாக்குகிறது. இம்மன நோய்கள்.

1. ஆடிட்டரி ஷாலுசினேஷன்
2. விஷீவல் ஷாலுசினேஷன்
3. இருதுருவ மனநிலைக்கோளாறு
4. மனச்சோர்வு நோய்
5. புத்தி பேதலிப்பு
6. ஸிவோபைபியா (அ) பெஸ்டியாலிட்டி
7. சந்தேகம் (டிலூரஷன் ஆப் இன்ஃபிடலிட்டி)

போன்றவைகள் ஆகும்.

கள்ளின் வகைகள்

வள்ளுவர் குறளில் கூறுகின்ற கருத்துக்களின் அடிப்படையில் கள் பலவித தன்மைகளைக் கொண்டு காணப்படுகிறது.

மதிப்பினை இழக்கச் செய்தல்

பண்டைய கால சமுதாயத்திலும் நவீனச் சமுதாயத்திலும் ஓர் மனிதன் உயர்ந்தவராயினும் தாழ்ந்தவராயினும் செல்வந்தவராயினும் ஏழையாயினும் மதிப்புடன் வாழ்வே விரும்புகிறான். ஒருவன் கள்ளினை உண்டால் சமுதாயத்தில் மதிப்பற்ற வாழ்வு அவனுக்கு கிடைக்கும். இந்நிலையினை அவனுக்குத் கொடுப்பது கள்ளே என்பதற்கு கீழ்வரும் குறட்பாக்கள் சான்றாக அமைகிறது.

“உட்கப் படாஅர் ஒளிஇழப்பர் எஞ்ஞான்றும்
கட்காதல் கொண்டொழுகு வார்” (குறள்.921)

"ஈன்றாள் முகத்தேயும் இன்னாதால் என்மற்றுச்
சான்றோர் முகத்துக் களி" (குறள்.923)

"உண்ணற்க கள்ளை உணின் உண்க சான்றோரால்
எண்ணப் படவேண்டா தார்" (குறள்.922)

"ஈன்றாள் முகத்தேயும் இன்னதால்" (குறள்.923)

இக்குறள்கள் கள்ளுண்பவன் பகைவர், பெரியவர்கள், சான்றோர்கள் மற்றும் தெய்வத்திற்கிணையான தாயிடமும் மதிப்பினை இழக்கச் செய்வது கள்ளினுடைய தன்மையேயாகும் என குறிப்பிடுகிறது.

செல்வத்தை அழிக்கும்

'பொருளிலார்க்கு இவ்வுலகம் இல்லை' 'பணம் பத்தும் செய்யும்' 'பணம் பாதாளம் வரை பாயும்' இவைகள் செல்வத்தின் தேவையை உணர்த்தும் தொடர்களாகும். வாழ்க்கைக்குத் தேவையான செல்வத்தை அழிக்கும் தன்மை கள்ளிற்கு உண்டு.

"கையறி யாமை உடைத்தே பொருள் கொடுத்து" (குறள்.925)

என குறள் தான் ஈட்டியச் செல்வத்தை எல்லாம் கள்ளுண்டு மகிழ்வதற்காக செலவழித்து மதிமயங்கியிருப்பதைச் சுட்டிக்காட்டுகின்றது. பொருளை செலவழித்துக் கள்ளுண்பது ஏழையிலும் ஏழையாக, வறுமையுடையவனாக மாற்றுகின்ற தன்மையையுடையது கள் என்பது இதன் வழி புலனாகிறது.

வெட்கத்தைச் சிதைக்கும்

'நாண்' என்பது வெட்கம் என்ற பொருளினைக் குறிக்கிறது. நாண் என்கிற வெட்கம் பெண்பாலர்க்கு மட்டுமின்றி ஆண்பாலர்க்கும் உரியதாகும். எப்பொழுதும் இயல்பான மனிதன் பிறர் தன்னை மதிக்க வேண்டும் என எண்ணுவான்.

"நாண் என்னும் நல்லாள் புறங்கொடுக்கும் கள் என்னும்

பேணாப் பெருங்குற்றத் தார்க்கு" (குறள்.924)

எனும் குறளில் கள்ளுண்டு களிப்பதால் நாண் எனும் பெண் கூட அவனை விட்டு விலகிப்போகின்ற நாணமற்றச் செயல்களைச் செய்கின்ற இயல்பினைக் கொண்டது கள் என வள்ளுவர் விளக்குகின்றார்.

உணர்வற்ற நிலை

உயிர்களுக்கு அடிப்படையான உணர்வுகளில் ஒன்று சுயஉணர்வு. நாம் தும்பியினை பிடிக்க முயற்சி செய்தவுடனே மெய், வாய், மூக்கு, கண் எனும் நான்கின் புலனுணர்ச்சியால் அவ்விடத்திலிருந்து பறந்து செல்லும். ஆனால் மனிதன் மெய், வாய், மூக்கு, கண், செவி, மனம் எனும் ஆறு உணர்ச்சியால் பகுத்தறிவோடு வாழுபவன். இறந்த உடலுக்கும் தூங்கின்ற உடலுக்கும் உள்ள வித்தியாசம் தூங்கின்ற போது மூக்கில் சுவாசம் மட்டும் இருக்கும் ஆனால் கள்ளினை உண்டவனின் நிலையை,

"துஞ்சனார் செத்தாரின் வேறு அல்லர்" (குறள்.926)

என இக்குறள் தெளிவுப்படுத்துகிறது. தன்னுடைய புலனுணர்வுகளை இழந்து செத்தவரைப் போன்று கிடக்கின்ற உணர்வற்ற நிலையினை, கள் கொடுக்கின்ற தன்மையுடையது என வள்ளுவர் சிறப்புற எடுத்துரைக்கின்றார்.

மறதியை உருவாக்கும்

கள்ளுண்டால் தான் என்ன செயலினை செய்தோம், என்ன பேசினோம் என்பதை கள்ளின் மயக்கம் தெளிந்தவுடன் கள்ளுண்பவனுக்கு தெரிவதில்லை. கள்ளானது கள்ளுண்பவனின் உடலில் அறியாமையை கொள்ள செய்கிறது என்பதை, "மெய் அறியாமை கொளல்" (குறள்.925) எனும் குறள் மெய்ப்பிக்கிறது. இயல்பு நிலையில் உடுக்கை இழந்தவன் கையானது

அவ்வாடையை போய் அவனறியாது பற்றிப் பிடிக்கும். ஆனால் கள்ளுண்பவன் தன்னுடைய உடலில் ஆடை இருக்கின்றதா, தான் கொண்டு சென்ற உடைமைகளின் நிலை என்ன என்பது போன்ற மறதியினை உருவாக்குகின்ற தன்மையை உடையது என்பது இதன் வழி புலனாகிறது.

நஞ்சுத் தன்மை

எல்லா விதமான உயிர்களையும் கொல்லும் திறன் நஞ்சுக்கு உண்டு. சிலவகையான நஞ்சுக்கள் உயிரை உடனடியாகக் கொல்லும் தன்மையுடையன. சில வகையான நஞ்சுகள் மெல்ல மெல்ல உயிரைக் கொல்லும் தன்மை உடையது. கள்ளும் நஞ்சினைப் போன்ற தன்மையுடையது.

"நஞ்சுண்பார் கள்உண் பவர்" (குறள்.926)

என்பதை இக்குறள் குறிக்கிறது.

நஞ்சுண்டவனின் உடலின் உறுப்புகள் ஒவ்வொன்றாக செயலிழந்து கடைசியில் உயிர் அவனுடலிலிருந்து பிரியும். அதுபோல கள்ளும் நஞ்சினைப் போன்று உடலினுள் சென்றவுடன் சிறிது சிறிதாக உடல் உறுப்புகள் செயலிழந்து உடலானது இறப்பை நோக்கிச் செல்லும். இத்தகையத் தன்மையினைக் கள் கொண்டது என்பதை வள்ளுவர் சிறப்புற எடுத்துக் காட்டுகிறார்.

இன்பத்தைக் கொடுக்கும்

அனைத்து வகையான உயிர்களும் தனக்குப் பிடித்தமான பொருளைக் கண்டவுடன் மனதில் இன்பம் கொள்வது இயற்கையான நிகழ்வாகும். கள்ளினை உண்டு மகிழ்ந்தவனுக்கு கள்ளினைக் கண்டவுடனே இன்பத்தைக் கொடுக்கும் தன்மையினைக் கொண்டது.

"உள்ளக் களித்தலும் காண மகிழ்தலும்

கள்ளுக்கு இல்" (குறள்.1281)

என இக்குறள் இயம்புகிறது. இயல்பு நிலையில், கள்ளின் தன்மையானது கள்ளினைப் பற்றி எண்ணினால் மனம் அருவருப்பு அடைகிறது. அதைப் பார்க்கும் போது மேலும் அருவருப்பு அதிகமாகிறது என்றும் ஆனால் கள்ளினை உண்டால் அதிக அளவில் இன்பத்தினைக் கொடுக்கும் தன்மையை கொண்டது என்பதை இதன் வழி உணர முடிகிறது.

மேலும் மேலும் உண்ணும் விருப்பம்

'உண்டி வெய்யோர்க்கு உறுபிணி எளிது' என்கிறார் மதுரைக் கூடலூர் கிழார். அளவிற்கு மீறி மேலும் மேலும் உண்ணும் போது நோய் எளிதில் வந்து விடும் என்பது பொருள். இதனை,

"களித்தொறும் கள்ளுண்டல் வேட்டற்றால்" (குறள்.1145)

என இக்குறள் மொழிகிறது. கள்ளினை உண்ணுவது நஞ்சினை உண்பது போன்றதாகும். இந்நிலையில் கள்ளானது மேலும் மேலும் உண்ண வேண்டும் எனும் விருப்பத்தை உருவாக்குகின்ற தன்மையைக் கொண்டது என்பதை இதன் வழி அறிய செய்கிறார்.

கள்ளானது பகைவர், சான்றோர்கள் மற்றும் தெய்வத்தை ஒத்த தாயிடம் மதிப்பினை இழக்க செய்யும், நாணம் எனும் வெட்கத்தை ஓடிப்போக செய்யும் தன்மையினைக் கொண்டது. ஈட்டிய பொருளை கள்ளுக்காக அழிக்கும் தன்மையைக் கொண்டது. செத்தவரைப் போன்று கிடக்கின்ற தன்மையினை கள் உருவாக்கும். மறதியை உண்டு பண்ணும் தன்மையது, நஞ்சினை உண்டால் உடலானது எத்தகைய துன்பத்தினை பெறுமோ, அத்தகைய தீங்கினைக் கொடுக்கும் தன்மையினையுடையது கண்டவுடன் இன்பத்தினை அளிக்கும்

தன்மையது. மேலும் மேலும் உண்ணுகின்ற உணர்வை உருவாக்குகின்ற தன்மையினைக் கொண்டது என வள்ளுவர் கள்ளின் தன்மையினை வெளிப்படுத்துகிறார்.

மதுவும் மூளையும்

மனிதனின் உடல் முழுவதும் மூளையின் கட்டுப்பாட்டில் தான் இயங்குகிறது. மூளையானது தன்னுடைய செயல்பாட்டிலிருந்து மாறுபடும் போது உடலின் உறுப்புகளால் தங்களுடைய செயல்களைச் சரிவர செய்ய முடிவதில்லை. இதுமட்டுமின்றி அவனது மனநிலையிலும் பல தடுமாற்றங்கள் ஏற்படுகிறது.

மதுவானது முதலில் உண்பவனின் மூளையை சோர்வடையச் செய்கிறது. இதனால் நரம்பு மண்டலமானது சரியாக செயல்படாமல் தன்னுடைய செயல்பாட்டினைக் குறைக்கிறது. மனிதனின் சிறுமூளையானது (Cerebellem) உடல் உறுப்புகள் சீராக மற்றும் ஒருங்கிணைந்து செயல்பட உதவுகிறது. முன்மூளை (Frontal cortex) யானது மனிதனின் சிந்திக்கும் திறன் மற்றும் நினைவாற்றலைக் கவனித்து கொள்கிறது. மூளையின் பல்வேறு பகுதிகளை ஒருங்கிணைக்க நீயூரான் என்ற நரம்பு செல்கள் காணப்படுகின்றன. ஏறக்குறைய நூறுபில்லியன் நீயூரான் என்ற நரம்பு செல்கள் மனிதனின் மூளையில் காணப்படுகின்றன. நூறுபில்லியன் நியூரான்களும் தங்களுக்குள் பேசிக்கொள்ள ஒருவகையான வேதியியல் மற்றும் மின்குறிகளை பயன்படுத்துகின்றன.

பார்த்தல், கேட்டல், தொடுதல், நுகர்தல் மற்றும் சுவைத்தல் போன்ற உணர்வுகள் மின் மற்றும் வேதியியல் குறிகளாக மாற்றப்பட்டு உடலில்

ஒரு பகுதியிலிருந்து மற்றோர் பகுதிக்கு மாற்றப்படுகிறது. மூளையில் காணப்படுகின்ற நீயூரான் செல்களில் உற்பத்தியாகும் மின் மற்றும் வேதியியல் குறியீடுகள் 'நீயூரோ டிரான்ஸ் மிட்டர்ஸ்' (NTS) என்ற வேதிப்பொருளை வெளியிடுகின்றன. இந்த வேதிப்பொருளானது அருகிலிருக்கும் நீயூரான் செல்லை உற்சாகப்படுத்தலாம் அல்லது சோர்வடையச் செய்யலாம்.

மனித மூளையில் பல்வேறு வகையான நியூரோ டிரான்ஸ் மிட்டர்ஸ்கள் (Nero Transmitters) உற்பத்தியாகின்றன. அவற்றுள் குளுட்டாமேட் (Glutamate), காமா அமினோ பிட்யூட்ரிக் ஆசிட் (Gamma Amino Butyric acid), டோப்பமின் (Dopamine) மற்றும் செர்டோட்டின் (Serotonin) போன்றவை குறிப்பிடத்தக்கவை.

குளுட்டாமேட் (Glutamate)

குளுட்டாமேட் நியூரோ டிரான்ஸ்மிட்டரின் முக்கிய வேலை மனிதனை எழுச்சியூட்டுவதாகும். மனிதன் மகிழ்ச்சியாக, ஆரோக்கியமாக இருப்பதை உணரச் செய்வதற்கு இதன் பங்கு முக்கியமாகும். ஆனால் மதுவானது குளுட்டாமேட் நீயூரோ டிரான்ஸ் மிட்டரை செயல் இழக்கச் செய்து மனிதனைச் சோர்வடையச் செய்கிறது.

காமா அமினோ பிட்யூட்டரிக் ஆஸிட் (Gamma Amino Butyric acid)

இது நம் மூளையில் உள்ள இயற்கையான உணர்வுகளைக் கட்டுப்படுத்தும். மதுவுண்ணும் போது காமா அமினோ பிட்யூட்டரிக் ஆசிட் நீயூரோ டிரான்ஸ்மிட்டரின் செயல்பாட்டைத் தூண்டி விட்டு உணர்வுகள் சோர்வடையவும், செயலிழக்கவும் செய்கின்றது. மதுவுண்ண உண்ண இதன்

எண்ணிக்கையும், செயல்பாடுகளும் மாற்றம் பெற்று அவனை அறியாமலே மதுவிற்கு அவனை அடிமைப்படுத்துகிறது.

டோப்பமின் (Dopamine)

மனிதர்கள் சில செயல்களை விரும்பி செய்வதற்கு டோப்பமின் நியூரோ டிராஸ்மிட்டர் காரணமாகிறது. மதுவை விரும்பி உண்ணும் போது டோப்பமின் உற்பத்தி செய்யப்பட்டு அவனை அறியாமலே மதுவும் அவனுக்கு மிக பிடித்த தவிர்க்க முடியாத உணவாக மாற்றி விடுகிறது.

செர்டோட்டின் (Serotonin)

இந்த நியூரோ டிரான்ஸ்மிட்டர் மனிதனின் உணர்வுகளை தூண்டி விடுகிறது. மனிதன் விரும்பி செய்யும் செயல்கள் மூளையில் ஒரு சுகமான நினைவாக பதிந்து விடுகிறது. மூளையில் இருக்கும் வென்டெர்னல் டெக்மென்டல் (Venereal tegenenlal) பகுதியில் சந்தோஷம் தரும் நினைவுகள் முதலில் பதியப்படுகின்றது. பின்னர் இந்நிலைகள் படிப்படியாக உயர்ந்து நீயூக்ளியஸ் அக்கும்பென்ஸ் (Nucleolus acumens) என்ற பகுதிக்கு வந்தடைகிறது. இந்நினைவுகள் நிகழ்வுகள் என்றென்றும் அழிக்க முடியாத நிரந்தர நினைவு (Permanent memory) யாக கார்டெக்ஸில் பதியப்படுகிறது. மதுவுண்பது என்றென்றும் மகிழ்ச்சித் தரக்கூடிய திரும்ப திரும்ப விரும்பிச் செய்யத் தூண்டும் நிகழ்வாக பதிவு செய்யப்படுகிறது. எனவே தான் மதுவினை உண்பவர் திரும்ப திரும்ப மதுவுண்ணும் செயலைச் செய்கின்றனர்.

மனநிலை

சமீப சில ஆண்டுகளாக பண்டிகை நாட்கள் குடியின் குறியீடாக மாறி விட்டது. பண்டிகை நாட்களில் ஓர் நாள் விற்பனை நாடளவில் பல

கோடிகளைத் தாண்டுகிறது. இதற்கு காரணம் பண்டிகை நாட்களை மதுவுடன் கொண்டாட வேண்டும் எனும் மனநிலை ஆகும். பண்டிகை நாட்கள், விடுமுறை நாட்கள், திருமண விழாக்கள், பிறப்பு, இறப்பு என்று மகிழ்ச்சியையோ, துக்கத்தினையோ மதுவினை முன்னிறுத்தியே தொடங்கும் மனநிலை செல்வந்தன் முதல் ஏழைவரை பரவலாக அனைவரிடமும் காணப்படுகிறது.

ஒரு மனிதனின் நடத்தையின் இயல்பினையும் போக்கினையும் நிர்ணயிப்பதில் அவனது மனம் முக்கிய பங்காற்றுகிறது. முந்தைய காலத்தில் கள்ளினையும், தற்காலத்தில் மதுவினையும் அதிக அளவில் பயன்படுத்துகின்றனர். இதனை உண்பவன் மட்டும் துன்பமடையாது அவனைச் சார்ந்தவர்களையும், சமுதாயத்தில் அவனோடு வாழ்பவர்களையும் துன்பப்படுத்தி மனதளவில் பாதிப்புகளை உருவாக்குகின்றான்.

கள்ளுண்ணுபவரின் மனநிலை ஒரே நிலையில் இருப்பதில்லை. கள்ளினை உண்டு இருக்கும் போது ஒரு மனநிலையையும், கள்ளுண்ணா-திருக்கும்போது சிறிதளவேனும் இயல்பான மனநிலையிலிருப்பதைக் காணலாம். பெண்களின் மனநிலையைப் பொறுத்தவரை மதுவினை உண்பவரின் மேல் வெறுப்பும் கோபமும் கொண்டதாகக் காணப்படுகிறது. கணவன் டாஸ்மாக் எனும் மதுக்கடையே கதியெனக்கிடக்கும் நிலையில் பெண் வேலைக்குச் சென்று பொருளீட்டும் நிலைக் காணப்படுகிறது. தந்தை பல நேரங்களில் மதுவுண்டு போதை அதிகமாகிக் குப்பைத் தொட்டிக்கருகில், சாக்கடையருகில், சாலையோரங்களில் விழுந்து கிடக்கின்ற போது குழந்தைகளின் மனநிலை எந்நிலையில் இருக்கும். குறிப்பாக பெண் குழந்தைகள் மனரீதியாக பெரிதும் பாதிக்கப்படுகிறார்கள். வள்ளுவர் கள்ளுண்பவனின் மனநிலையினையும்.

பெரியோர், சான்றோர் உள்ளூரின் மக்கள் தாயின் மனநிலையினை மட்டுமே குறளில் கூறுகின்றார்.

பிறரிடத்தில் மறைத்தல்

கள்ளின் தீமைகளைக் கள்ளுண்பவனின் மனது அறியாமல் இல்லை. அவன் கள்ளின் தீமைகளை அறிந்தவன் ஆவான். கள்ளுண்பது தவறான செயல் வெட்ககேடானது என்பதனை அவனது மனமானது சுட்டிக் காட்டிக் கொண்டே இருக்கும். அதனால் தான் கள்ளுண்போரும், மதுவுண்போரும் பிறர் அறியாது உண்ணுகின்ற மனநிலையினை,

"களித்தறியேன் என்பது கைவிடுக நெஞ்சத்து
ஒளித்ததூஉம் ஆங்கே மிகும்" (குறள்.928)

எனும் குறள் கூறுகிறது. ஆயினும் அவனது உடலில் தள்ளாட்டமும், அவன் பேசுகின்ற இழிச்சொற்களும் அவன் கள்ளுண்டதை பிறருக்கு வெளிப்படுத்தும். இதனை செண்பகராமன் பள்ளுவில் பகவதிப்பள்ளனின் நிலையை,

". . . . . . . பனங்கள் - வெறியும்
தள்ளாட்டம் முந்துலங்க
துள்ளாட்டமாய்"[29]

என்று இவ்வடிகள் உணர்த்துகின்றன. பகவதிப்பள்ளன் குடித்திருக்கிறான் என்பதை பிறருக்கு அறிவிப்பதாக உடல் அசைவினை வைத்து தள்ளாட்டநடையையும் துள்ளாட்ட நடையையும் குறிப்பிட்டுக் காட்டுகிறார்.

மீண்டும் மீண்டும் குடித்தல்

கள்ளினையோ, மதுவினையோ ஒருவர் அருந்திவிட்டால் அதனை மீண்டும் மீண்டும் குடிக்க வேண்டும் என்னும் மனநிலையில் காணப்படுவர்.

இதனை,

"இளித்தக்க இன்னா செயினும் களித்தார்க்குக்

கள்ளற்றே கள்வநின் மார்பு" (குறள்.1288)

எனும் குறள் உணர்த்துகின்றது. கள் உண்டவர் மீண்டும் மீண்டும் அதனையே உண்ண வேண்டும் என எண்ணுவர் என்பதை அறிய முடிகிறது.

இம்மனநிலையினை "மீன் ஏலமிடும் தொழிலாளி மது அருந்திவிட்டு மித மிஞ்சிய போதையில் வீட்டிற்குச் சென்று மீண்டும் மதுவுண்ணும் ஆசையில் மதுவென்று டெட்டாலினை குடித்து பலியானார்"[30] என்ற நிகழ்ச்சியின் மூலம் மதுவினை மீண்டும் உண்ணும் உணர்வின் மூலமாக தன்னுடைய உயிரை மாய்த்துக் கொண்ட அவலநிலையினைக் காண முடிகிறது.

மயக்க நிலை

மதுவில் காணப்படும் ஆல்கஹால் உடனடியாக இரத்தத்தோடு கலக்கும் தன்மை கொண்டது. மது அருந்துபவர்கள் தாம் எந்நிலையில் எங்கு இருக்கிறோம் என்பதைக்கூட அறியாத மனநிலையில் காணப்படுகின்றனர்.

"உண்டார்கண் அல்ல தடுநறா" (குறள்.1090)

"கண்சாய் பவர்" (குறள்.927)

மேற்கண்ட குறள்கள் கள்ளினை உண்டவன் கண்செருகி மயக்கநிலையில் இருப்பதைக் கூறுகிறது. இம்மனநிலையை மணிமேகலை,

"மயக்கும் கள்ளும் மன்னுயிர் தேறலும்"[31]

என குறிப்பிடுகிறது. ஆதிரையின் கணவன் சாதுகன் வாணிகம் செய்ய சென்ற போது மரக்கலம் உடைந்து மயங்கி கிடக்கும் போது அத்தீவின் தலைவன் 'இவன் அலைகடலில் சிக்கி வருகிறான். அதனால் இவனுக்கு கள்ளினைக்

கொடுங்கள்' எனக் கூறும் போது, சாதுகன் 'கள் நல்லறிவை மயக்கும் தன்மையுடையது' எனக் கூறுகிறான். திருமூலரும்,

"மயக்கு மதுவுண்ணு மாமூடர்"[32]

இவ்வரிகளின் வழி மதுவுண்டால் மயக்கம் ஏற்படும் அதோடு அவனை மாபெரும் மூடனாக ஆக்கிவிடும் எனக் கூறுகிறார்.

மதுவானது உண்பவனை உடலளவில் மட்டுமின்றி மனதளவிலும் மூடன் செய்கின்ற அறிவற்ற செயல்களையும் செய்ய தூண்டும் மனநிலையை உருவாக்கும் என்பது புலனாகிறது.

மது அருந்தும் போது இரத்தத்தில் கலக்கும் ஆல்கஹாலின் அளவுக்கு மருத்துவக் குறியீடுகள் உண்டு. இதனை 'இரத்தத்திலுள்ள ஆல்கஹாலின் அளவு (Blood content level) எனக் கூறுகின்றனர்.

ஆண் சுமார் 240 மில்லி அளவுக்கு மதுவருந்தும் போது, சராசரியாக இரத்தத்திலுள்ள ஆல்கஹாலின் அளவு 0.20லிருந்து 0.29 வரை இருக்கும். இந்த அளவு இரத்தத்தில் ஆல்கஹால் காணப்படும் போது சுயநினைவு இல்லாமல் போகக் கூடியதற்கான வாய்ப்புகள் இருப்பதாக கூறுகின்றனர்.

பெண் சுமார் 240 மில்லி அளவுக்கு மதுஅருந்தும் போது, சராசரியாக இரத்தத்திலுள்ள ஆல்கஹாலின் அளவு 0.30லிருந்து 0.39 வரை இருக்கும். இந்த அளவு இரத்தத்தில் இருக்கும் போது 'சுய உணர்வு இல்லாத நிலை' எனக் கூறுகின்றனர். இந்நிலையினை 'மரணத்துக்கு வாய்ப்புள்ள நிலை' என்றும் மருத்துவம் குறிப்பிடுகிறது.

பிறரால் நகைக்கப்படும் நிலை

ஒருவர் மதுவுண்டவுடன் தன்னுடைய இயல்பு நிலையிலிருந்து மாற்றம் பெறுகிறார். அவரது இயல்பான மனநிலையில் மாற்றம் ஏற்படுகிறது

அதனால் அதிக சத்தத்துடன் பேசுதல், இழிச்சொற்களை கூச்சமின்றி பேசுதல், பொருட்களை உடைத்தல், தூக்கி எறிதல், பிறரிடம் மதுவுண்ண பணம் கேட்டல், பிறரை உடல் மற்றும் மனரீதியில் துன்புறுத்தல் போன்ற செயல்களை செய்கின்றார். அதனால் அக்கம் பக்கத்தினரால் நகைப்புக்கு உள்ளாகும் நிலையினை,

"உள்ஒற்றி உள்ளூர் நகப்படுவர் எஞ்ஞான்றும்" (குறள்.927)

என இக்குறள் குறிப்பிடுகிறது.

கள்ளுண்டவர் செயலை மனதில் இழிவாக நினைத்து எப்போதும் உள்ளூரில் வசிப்பவர்களும் நகைப்பார்கள் என இக்குறள் வழி அறிய முடிகிறது. கம்பராமாயணத்திலும் இந்நிகழ்வு குறித்து குறிப்பு உள்ளது.

"கொலைவேற் கண்ணாள் மணியின் வள்ளத்து வெள்ளை
நிறநிலாக் கற்றை பாயநிறைந்து போன்று தோன்ற
நறவென வதனை வாயின் வைத்தன ணாணுட் கொண்டாள்"[33]

பெண்ணானவள் கள்ளையெடுத்து பருகுமாறு கையில் கொண்ட இரத்தினமயமான மணி கிண்ணத்திலே நிலாவின் வெண்ணிற ஒளி தோன்றுவதால் அக்கிண்ணம் மதுவினால் நிறையப் பெற்றிருக்கிறது என எண்ணி அதனை வாயில் வைத்தாள். அதனைக் கண்டு அவளை பிறர் நகைத்தனர் என்பதை உணர முடிகிறது.

இத்தகைய செயல்களைச் செய்வதால் இயல்புநிலையிலும் பிறர் இகழ்ந்து நகைப்புக்குள்ளாக்குவர். இது கள்ளுண்பவனின் மனநிலையில் மாற்றங்களை ஏற்படுத்தும். இதனால் அந்நபரிடம் சண்டையிடுதல் போன்ற செயல்களைச் செய்யும் மனநிலைக்கு கள்ளுண்போர் தள்ளப்படுகின்றனர்.

குற்ற உணர்வு

கள்ளுண்ணாத இயல்புநிலையில் கள்ளுண்பது தனக்கும் தன்னைசார்ந்த குடும்பத்தினர், தன்னை சார்ந்த சமூகத்திற்கும் பாதிப்பை உருவாக்கும் எனும் குற்ற உணர்வு மனநிலையை.

"களித்து அறியேன் கைவிடுக" (குறள்.928)

எனும் குறளடி வலியுறுத்துகின்றது. இந்நிலையை காந்தியடிகள்,

"ஐயோ! இந்த கள்ளுக்கடைகள் எங்கள் கண் முன்னாலிருந்து தொலையாதா?"[34] என்று பரிதாபமாக கேட்கும் கள்ளுண்பவர்கள் சிலரை பார்த்திருக்கிறேன் என்று கூறுகிறார்.

பிறர் தம்மை மதிக்க வேண்டும் ஒழுக்கமுடையவனாக, சராசரி மனிதனாக வாழ வேண்டும் என்று உணர்கின்ற உணர்வு நிலையினை உணர முடிகின்றது.

பொருளாதார நிலை

பொருளாதார நோக்கில் கள்ளுண்பவனின் மனநிலை மோசமான நிலையில் காணப்படுகிறது. இவரின் குடும்பத்தினர் பெரும்பாலும் வறுமையில் வாடுகின்றநிலை காணப்படுகின்றது. கள்ளுண்பவன் தன் செல்வத்தினை அழிக்கிறான் என்பதை கீழ்வரும் குறள் எடுத்தியம்புகிறது.

"கையறி யாமை உடைத்தே பொருள்கொடுத்து
மெய்யறி யாமை கொளல்" (குறள்.925)

இக்கருத்தினை முக்கூடற்பள்ளும் மெய்ப்பிக்கிறது.

"பரத்திகைச் சுள்ளும் - அக்கரைத்
திருத்தனில் கள்ளும் கொண்டந்த
பசுவையும் விற்றான்"[35]

பள்ளன் மீன்பரத்தியிடம் வாங்கிய கருவாட்டிற்கும், அக்கரைதிருத்திலே வாங்கிய கள்ளுக்கும் பணம் கொடுக்க பசுமாடுகளை விற்றுவிட்டான் என்னும் செய்தி பதிவாகியுள்ளது.

நாட்டுப்புறப்பாடலில் மீனவர் ஒருவர் கள்ளுண்ணுவதற்காக மீன்பிடிப்பதற்குரிய பொருட்களை விற்று கள்ளுண்டிருக்கிறான் எனும் செய்தி பதிவாகி இருக்கிறது.

“வள்ளம் வித்தேன் வலையும் வித்தேன்
வாளாமலை புனையும் வித்தேன்
கொம்பை வித்தேன் குழலை வித்தேன்
குடிக்க இருந்த செம்பை வித்தேன்
எல்லாம் வித்து கள் குடிச்சேன்”[36]

விளிம்புநிலை மக்களின் பெரும்பான்மையான கள்ளுண்ணும் ஆண்மகனின் மனைவிகளும் குழந்தைகளும் வேலைக்குச் செல்கின்றனர். ஆனால் ஆணோ வேலைக்குச் செல்லாமல் வீட்டிலுள்ளப் பொருட்களை விற்று மதுவுண்ணும் நிலையினை,

“தனது மகனுக்கு பள்ளியில் அரசு இலவசமாக கொடுத்த மடிக்கணினியை விற்றுக்குடித்த தந்தை”[37] எனும் இந்நிகழ்வு மூலம் அறிய முடிகிறது.

வெறுக்கப்படும் நிலை

கள்ளுண்போர் பெற்றோர், மனைவி, குழந்தைகள், உடன்பிறந்தோர், நண்பர்கள், உறவினர்கள், அக்கம்பக்கத்தினர் தம்மீது அன்பினைக் காட்டவில்லை. அனைவரும் தன்னை வெறுக்கின்றனர் என்ற மனநிலையில் தான் வாழ்ந்து வருகின்றனர் என்பதை,

"ஈன்றாள் முகத்தேயும் இன்னாதால்" (குறள்.923)

என இக்குறள் எடுத்துரைக்கிறது. தாய் கள்ளுண்பவனை வெறுக்கிறாள் என்று குறளடி கூறுகிறது. மற்ற குடும்ப உறுப்பினர்களின் நிலை பற்றி குறளின் எவ்விடத்திலும் குறிப்படவில்லை என்பது நோக்குவதற்குரியதாகும்.

தற்போதைய சமுதாயச் சூழலில் மதுவுண்போரை விட மதுவுண்போரின் குடும்பத்தினரின் மனநிலை பரிதாபத்திற்குரியதாகவே காணப்படுகிறது. குடும்பத்தினை நடத்தி செல்லும் பெண் எப்போதும் அச்ச உணர்வு, உடல் மற்றும் மனதளவில் நலக்குறைவு உடையவளாகவே காணப்படுகிறாள். தன் கணவனின் செயல்களால் பிறரால் மதிக்கப்படாத மனநிலையில் காணப்படுகிறாள். கணவனின் மீது கோபம் மற்றும் மதுவுண்ணும் பழக்கத்திலிருந்து மீண்டு விட வேண்டும் எனும் மனநிலையிலும் காணப்படுகிறாள். மதுவுண்ணும் கணவனைப் பற்றி பெண்ணொருத்தி,

"எத்தனையோ புத்திகள
எடுத்துரைத்தேன் சாராயத்த
நித்தம் போய் குடிக்கிறிய
நீயும் ஒரு ஆம்பளையா
ஒன்னோடு நான்பேசி - நீ
ஒதுங்கி போடா சீச்சி
கஞ்சிக்கு உப்பு இல்ல
கால் தம்படி கையில் இல்ல
நாசக்கார வேசிமவன
ஒனக்கொரு பொண்டாட்டி - ஒன்
ஒழுங்குக்கொரு வைப்பாட்டி"[38]

என பாடுகிறாள். மேற்கண்ட பாடல் வரிகள் மூலம் தன் குடும்பத்திற்கான அடிப்படை தேவைகளைப் பற்றி கூறுவதுடன், இழிந்த சொற்களோடு ‘உன் ஒழுங்குக்கு ஒரு வைப்பாட்டி’ என்று தன்னுடைய குடும்ப வாழ்வை பங்கு போடுகின்ற நிலையினைப் பற்றி பாடும் மனநிலையை காண முடிகிறது.

மதுவுண்ணும் காரணத்திற்காக கணவனை மனைவி விவாகரத்து செய்து கணவனிடமிருந்து விலகி இருக்கலாம். ஆனால் குழந்தைகளின் நிலை கவலைக்குரியதாக காணப்படும் குழந்தைகள் மதுவுண்ணும் தந்தையால் பள்ளி, கல்லூரிகளில் அவமானப்படும் நிலை, கல்வி வசதிகள் கிடைக்காமை, வீட்டில் எப்பொழுதும் சண்டைச் சச்சரவுகளை தினசரி சந்திக்க வேண்டிய சூழ்நிலையில் பதட்டமான மனநிலையுடன் காணப்படுகின்றனர். கள்ளுண்பதனால் ஏற்படும் குடும்பச் சிக்கல்களுக்கு கீழ்வரும் நாட்டுப்புறப் பாடலே சான்றாக அமைகிறது.

“சாராயத்தை குடிச்சிட்டு
வூடுக்கு வந்து
பொண்டாட்டிய அடிச்சி
வெளியே துரத்திட்டு
சோத்தைப் போட்டு
சாப்ட்டுட்டுப் படுங்க”[39]

கள்ளுண்பவனை குடும்பத்தின் உறுப்பினர்கள் மட்டுமின்றி பெரியவர்களாலும் சான்றோர்களாலும் வெறுக்கும் நிலையில் காணப்படுகின்றனர் என்பதை,

“உட்கப் படாஅர் ஒளி இழப்பர்” (குறள்.921)

“ . . . . . . என்மற்றுச்
சான்றோர் முகத்துக் களி” (குறள்.923)

"உண்ணற்க கள்ளை உணின் உண்க சான்றோரால்

எண்ணப் பட வேண்டா தார்" (குறள்.922)

என மேற்கண்ட குறள்கள் வெளிப்படுத்துகிறது. கள்ளுண்பவர்கள் பெரியவர்களால் மனிதர் என்று கருதப்படமாட்டார்கள். அறிவு ஒழுக்கங்களில் உயர்ந்தவர் இவர்களின் இழிந்த வாழ்க்கையைக் கண்டு வருந்துவர். பெரியவர்களால் விரும்பப்பட வேண்டும் எனில் கள்ளுண்பதை விட்டு விட வேண்டும் என்கிறார்.

முக்கூடற்பள்ளு பள்ளன்,

"தடி சுற்றி ஏப்பமிட்டே

அடி வைப்பதும்

மறுக்கும் மதுவெறி கொண்டு"[40]

என அறிமுகப்படுத்தப்படுகிறான். மதுவினை உண்ட போதை மயக்கத்தால் நடப்பதற்கு பாதங்கள் மறுக்கின்ற நிலையில் நடந்து வருவதாக ஆசிரியர் கூறுகிறார். இத்தகைய இழிவானச் செயல்களை செய்யும் போது பெரியோராலும் சான்றோராலும் வெறுக்கப்படும் மனநிலையில் தான் கள்ளுண்பவர் காணப்படுவர் என்பது இதன் வழி தெளிவாகிறது.

குற்றச் செயல்கள்

மதுவுண்ணுபவனின் மனமும் உடலும் இயல்பு நிலையில் இல்லாததால் பல்வேறு குற்றச்செயல்களில் ஈடுபடுகின்றான். பெருமளவில் மதுவுண்டுவிட்டு குற்றச் செயல்களில் ஈடுபடுகிறார்கள். மதுவுண்ணுவதற்கும் குற்றங்கள் நடப்பதற்கும் அதிக தொடர்பு காணப்படுகின்றது. மதுவினால் பெரியவர்கள் இளைஞர்கள், பெண்கள், குழந்தைகள் என்ற பாராபட்சமின்றி

அனைவருக்கும் தொல்லைகளும் துன்பங்களும் ஏற்படுகின்றன. இத்தொல்லைகளும் துன்பங்களும் உடலளவிலும் மனதளவிலும் வாழ்நாள் முழுவதும் உணர்கின்ற செயலாக இருக்கிறது. ஒருவர் மதுவுண்ணத் தொடங்கும் நேரத்திலிருந்து அவர் உடலில் மதுவின் தாக்கம் குறையும் வரை அவரால் எப்படிப்பட்ட ஆபத்துகளும் பிறருக்கு ஏற்படலாம்.

வள்ளுவர் கள்ளுண்பவனால் பிறருக்கு ஏற்படும் உடல் மற்றும் மனம் சார்ந்த துன்பத்தினைப் பற்றி எவ்விடத்திலும் குறிப்பிடவில்லை. ஆனால் இன்றைய சமுதாயம் கள் மற்றும் மதுவுண்ணுபவர்களால் சீரழிந்துக் கொண்டிருப்பதுடன், இவர்களால் அதிகமான குற்றச்செயல்களும் ஏற்படுகின்றது.

இதனைப் பற்றி “தமிழகத்தில் நடைபெறும் அனைத்து சட்ட ஒழுங்கு பிரச்சினைகளுக்கும் மதுதான் காரணம்”[41] என இல, கணேசன் அவர்கள் கூறுகிறார்.

விபத்துகளை உருவாக்குதல்

தினசரி மதுபோதையில் அதிகமான விபத்துகள் சாலைகளில் நடக்கின்றது. இவ்விபத்துகளைக் கட்டுப்படுத்துவதற்கு போக்குவரத்துக் காவலாளிகளால் வாகனச் சோதனைகள் நடத்தப்படுகிறது. மதுவுண்டு வாகனம் ஓட்டுபவர்களிடம் அபராதமும் வசூலிக்கப்படுகிறது. ஆனாலும் மதுவுண்பர்களால் ஏற்படுகின்ற விபத்துகளின் எண்ணிக்கை குறைந்தபாடில்லை.

சாலைவிபத்துகள் அதிகம் நடக்கும் மாநிலங்களில் தமிழகம் முதலிடத்தில் இருக்கிறது. 2013-ஆம் ஆண்டு நடந்த 14,504 விபத்துகளில்

15,563 பேர் பலியாகியிருக்கிறார்கள். இதில் 70% மதுபோதையால் நடந்த விபத்துகள் குறிப்பாக 2002 முதல் 2012 ஆம் ஆண்டு வரையிலான கால கட்டத்தில் தமிழகம் மிக மோசமான மதுபோதை விபத்துகளால் பாதிக்கப்பட்டிருக்கிறது என்கிறது மேலாண்மை மற்றும் தொழில் நுட்பத்திற்கான பன்னாட்டு ஆய்விதழ்.

"தமிழகத்தில் 2013-ஆம் ஆண்டு மட்டும் மதுவருந்திய போதை ஓட்டுநர்களால் 718 பேர் இறந்திருக்கின்றனர் என்று மத்திய சாலைப்போக்குவரத்து மற்றும் நெஞ்சாலைத் துறை அமைச்சகத்தின் புள்ளி விவரம் கூறுகின்றது."[42]

"சென்னை போதை டிரைவரால் தறிகெட்டு ஓடிய கார் மோதி நடைபாதையில் படுத்திருந்த எட்டுமாத கர்ப்பிணி உட்பட மூன்று பேர் பலி"[43] மதுவுண்ணுபவர்களால் பொதுமக்களும் துன்பமடையும் அவலநிலையை இந்நிகழ்வு நமக்கு தெளிவுபடுத்துகிறது.

கொலைகள்

கொலை என்ற சொல் கொல்லுதல் எனும் பொருளில் எடுத்தாளப்படுகிறது. கொலை என்பது உடலின்று உயிரைப்பிரித்தல் முதலாகிய அனைத்து விதத்துன்ப செயல்களையும் குறிப்பதாகும். கொலை செய்வதைப் பற்றி,

"தன் உயிர் நீப்பினும் செய்யற்க தான்பிறி
தின்னுயிர் நீக்கும் வினை" (குறள்.327)

என குறள் கூறுகிறது.

உடம்பிலிருந்து பிரிந்த உயிரைத் திருப்பி உடம்போடு கூட்ட ஆற்றல் இல்லாத ஒருவன் பிறரின் உயிரைப் பிரிக்கவும் தகுதியற்றவனாகிறான் என இக்குறள் கூறுகிறது.

மதுவுண்டு மதுவின் மயக்கத்தினால் உயிர் விலை மதிப்பற்றது என்பதைக் கூட உணராது சகமனிதனைக் கொல்லுகின்ற நிலைப்பாடு சமுதாயத்தில் பரவிக் கிடக்கின்றது. நடைமுறை சமுதாயத்தில் கொலைகளைச் செய்வதற்கு முன்பதாக மதுவுண்ணுகிற நிலைக் காணப்படுகிறது. மதுவுண்டு அதனால் ஏற்படுகின்ற போதையினால் பிறரின் உயிரை எடுக்கிற மற்றொரு நிலையும் காணப்படுகிறது. மதுவுண்ட ஒருவன் தன் மனைவியின் மீது கொண்ட கோபத்தினால் தான் பெற்றெடுத்த குழந்தையினை கொலைச் செய்த நிகழ்வினை,

“உடுமலை அருகே குடிபோதையில் ஒரு வயது குழந்தை அடித்துக் கொலை தந்தை வெறிச்செயல்”[44]

“மனைவியின் நடத்தையில் சந்தேகம் மதுவுண்டு விட்டு இரண்டு வயது குழந்தையை சுவரில் தூக்கி எறிந்த தொழிலாளி கைது”[45]

மதுவுண்டு போதையினால் கொடூரக் கொலைகளைச் செய்வதனைக் இந்நிகழ்வுகள் தெளிவுப்படுத்துகின்றன.

பாலியல் கொடுமையும் வன்புணர்வும்

இன்று நாட்டு மக்களுக்கு பெரும் பிரச்சினையாக காணப்படுவது பெண்களுக்கும், பெண் குழந்தைகளுக்கும் எதிரான பாலியல் வன் கொடுமைகளும் வன்புணர்வுகளுமே ஆகும்.

நமது சமுதாயம் தந்தை, தாய் அந்தஸ்தில் காணப்படுவோர், இந்நிலையில் காணப்படும் உறவுமுறைகள் சகோதர சகோதரிகள், இந்நிலையில் காணப்படும் உறவுமுறைகளிடம் பாலுறவு வைத்துக் கொள்ளும் பழக்கம் இல்லை. ஒரு மனிதன் பாலுறவு கொள்பவர்களுக்கான சில வரைமுறையை நாம் வாழ்ந்து வரும் சமுதாயம் கடைப்பிடித்து வருகிறது. ஆனால் மதுவுண்ட மனிதனோ இவ்வரைமுறைகளை தாண்டி குற்றங்களைப் புரிகின்றான். பாலியல் கொடுமைக்கு மிகப் பெரிய காரணமாக இருப்பது மதுவாகும்.

“பெற்றோர் தன் மகள்களை எப்படி கண்காணிப்போடு வளர்க்கின்றார்களோ அது போல ஆண்பிள்ளைகளையும் கண்காணிப்போடு வளர்க்க வேண்டும்”[46] என்று ரா.ம. கோபாலன் அவர்கள் கூறியுள்ளார்.

“பாலியல் தொல்லை கொடுத்த தந்தையைக் கொல்ல மதுவில் விஷம் வைத்த மகள்.”[47]

“இரவு நேரங்களில் குடிபோதையில் வந்து பாலியல் தொந்தரவு செய்த அக்காள் கணவரை கழுத்தை அறுத்துக் கொன்ற கல்லூரி மாணவி.”[48]

தமிழ்நாடு குற்ற ஆவணக் காப்பகம் வெளியிட்டுள்ள புள்ளி விவரங்களின்படி “2014-ஆம் ஆண்டின் 1126 பெண்கள் பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாக்கப்பட்டிருக்கின்றனர். இது கடந்த 2013-ஆம் ஆண்டின் எண்ணிக்கையான 923 குற்றங்களை விட 22% அதிகமாகும் இதில் 655 பேர் சிறுமிகள் ஆவர்.”[49]

இத்தகைய குற்றங்கள் பெரும்பாலும் மதுவருந்திய நிலையிலும், மதுவுக்கு அடிமையாகி தாம் என்ன செயலை செய்கிறோம் என்ற உணர்வில்லாமையால் செய்யப்படுகின்றது.

நம் வாழ்வியல் நெறிகளுக்கு எதிரான குற்றச்செயல்களை மதுவுண்போர் செய்வது வள்ளுவர் காட்டுகின்ற வாழ்வியலுக்கு எதிரானது என்பதை இந்நிகழ்வுகள் நமக்கு எடுத்துக்காட்டுகின்றன.

திருட்டு

பெரும்பாலும் மதுவுண்ணும் பழக்கமுடையோர் வேலைகளுக்குச் செல்லாமல் பொருளாதார நிலையில் மிகவும் பின்தங்கிய நிலையிலே காணப்படுகின்றனர். மதுவுண்ணுவதற்கும், பிற பணத் தேவைகளுக்கும் பணம் தேவைப்படுகின்றது. அதற்காக திருட்டு போன்ற குற்றச் செயல்களில் ஈடுபடுகின்றனர். திருடுவதைப் பற்றி,

"களவினால் ஆகிய ஆக்கம் அளவிறந்து
ஆவது போலக் கெடும்" (குறள்.283)

"களவின்கண் கன்றிய காதல் விளைவின்கண்
வீயா விழுமம் தரும்" (குறள்.284)

என்று கூறுகிறார். பிறர் பொருளைக் களவினால் அடைவதினால் உண்டாகும் வளர்ச்சி அளவுக்கு மீறியதைப்போல் தோன்றி இறுதியில் அழிவைக் கொடுக்கும். களவாடியப்பொருள் அதன் பயனைக்கொடுக்கும் போது அந்த இன்பமே தொலையாத துன்பத்தைக் கொடுக்கும் என்று இக்குறள் வழி உணர முடிகிறது.

"மது ஆடம்பர செலவுக்காக சுமார் ஒரு லட்சம் ரூபாய் மற்றும் நகைகள் கொள்ளை."[50]

"இளைஞரின் வாழ்க்கையை சீரழித்த மதுப்பழக்கம் காவல் ஆய்வாளரை கத்தியால் குத்தி போலீஸ் ஜீப் கடத்தல்."[51]

மதுவினால் திருட்டுச் செயல்களில் ஈடுபட்டிருப்பதையும், அத்திருடிய பொருளால் காவல்துறையினரால் தங்கள் வாழ்க்கையைச் சீரழிக்கும் அவல நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கும் நிலையினை இந்நிகழ்வுகள் எடுத்துக்காட்டுகின்றன.

கள்ளும் மதுவும் மனிதனைக் குற்றவாளியாக சமுதாயப் பொறுப்பற்றவனாக சமுதாயத்தில் தீமைச் செய்பவனாக மாற்றுகிறது. மேற்கண்ட சான்றுகள் வழியாக கள் மற்றும் மது பல்வேறு குற்றச்செயல்களுக்கு தொடக்க புள்ளியாக அமைகிறது என்பது புலனாகிறது.

விழிப்புணர்வும் போராட்டங்களும்

பெரியோர்கள் மட்டுமின்றி இளைஞர்களும் சிறுவர்களும் மதுவிற்கு அடிமையாகி இருக்கின்றனர். இத்தகைய மதுப்பழக்கம் தனிமனித வாழ்வு, குடும்ப வாழ்வு மற்றும் சமுதாய வாழ்வில் பல பாதிப்புகளை ஏற்படுத்தினாலும் இதனால் பெருமளவு பாதிக்கப்படுவது எதிர்கால சந்ததியினரே ஆவர். ‘விழுதுகள் ஆலமரத்தை தாங்கும்’ அதுபோல விழுதினைப் போன்ற எதிர்கால சந்ததியினரை காப்பதற்கும், அவர்களின் எதிர் காலத்தினை பாதுகாப்பதற்கும் விழிப்புணர்வு அவசியமான ஒன்றாகும். மேலும் மது எனும் அரக்கனை இச்சமுதாயத்தை விட்டு ஓடச் செய்ய நம்மிடம் இருக்கும் ஓர் ஆயுதம் விழிப்புணர்வு ஆகும். மதுவுண்பது ஒழுக்க மற்றும் சமுதாயக் கேடு என்பதைப் பற்றிய விழிப்புணர்வும் மிக மிக அவசியமானது.

பெற்றோர்களும் உறவினர்களும்

மதுவினைப் பற்றிய விழிப்புணர்வினை குழந்தைகளுக்கு அளிப்பது வருங்கால சந்ததியினரையே பாதுகாப்பது போன்றதாகும். மதுவுண்ணும்

பிள்ளைகளுக்கு மதுவின் தன்மை, மதுவினால் உடல் மற்றும் மனம் சார்ந்து ஏற்படக்கூடிய தீமைகளைப் பற்றிக் கூறலாம். மதுவினால் சீரழிந்து போனவர்களின் வாழ்வில் நிகழ்ந்த நிகழ்ச்சிகளைக் கூறலாம். மதுவுண்ணும் பழக்கத்தை நிறுத்துவதற்கு பெற்றோர்களும் உறவினர்களும் பாசத்தையும் கண்டிப்பையும் இணைந்து கையாளுதல் வேண்டும். மதுவுண்ணும் பழக்கத்திலிருந்து மீண்டு வர முடியும் என்ற தன்னம்பிக்கையை அவர்கள் மனதில் பதிய வைப்பதும், விழிப்புணர்வை உருவாக்குவதும் ஒவ்வொரு பெற்றோர் மற்றும் உறவினரின் கடமையாகும்.

ஆசிரியர்கள்

மதுபழக்கம் படிக்கின்ற இளைஞர்கள் மத்தியில் பரவலாக காணப்படுகிறது. பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் பயில்கின்ற மாணவர்களிடம் காணப்படுகின்ற மதுவுண்ணும் பழக்கத்தை கிள்ளி எறிய வேண்டும். இதற்கு ஆசிரியர்கள் முன்மாதிரியாக காணப்பட வேண்டும். மதுவுண்ணும் பழக்கம் தற்காலச் சமுதாயச்சூழலில் பதின்வயதிலிருந்தே தொடங்குகிறது. மதுவினால் உண்டாகும் விளைவுகளைப் பற்றி அவர்கள் உணரும்படி ‘மதுதரும் போதை இன்பம் குறுகியதே அது நெடுங்காலம் தீமைகளையும் தொல்லைகளையும் கொடுக்கும் என்பதைக் கூறுதல்’ ஒவ்வொரு ஆசிரியரின் தலையாயப் பணியாகும். இதனைப் பற்றி குன்னூர் அருகேயுள்ள மலைக்கிராமம் பெட்டடியின் நடுநிலைப்பள்ளி தலைமை ஆசிரியர் “இன்று நாடு இருக்கும் நிலையில் மற்ற இடங்களை விடப் பள்ளிக் கல்லூரிகளில் தான் மதுவின் தீமைகள் குறித்துப் பாடம் எடுக்க வேண்டும். கடந்த தலைமுறையின் பாதியை

மது அழித்து விட்டது. எனவே வரும் தலைமுறையையாவது காப்பது அவசியம். இப்பணி பள்ளி, கல்லூரிகளில் தொடங்க வேண்டும். அதற்கு முன்னதாக அனைத்து பள்ளி ஆசிரியர்களும் சிறுமுயற்சியையாவது தங்கள் பள்ளியில் மேற்கொள்ள வேண்டும்”[52] என்று கூறுகிறார்.

பள்ளி, கல்லூரிகளில் மதுவுண்ணும் பழக்கம் குறித்த விழிப்புணர்வை வகுப்பறை விவாதங்கள், நாடகங்கள், பேச்சுப்போட்டிகள், குறும்படங்கள் போன்றவற்றின் மூலமாக ஏற்படுத்தலாம். மனோதத்துவம், சமூகவியல், உடல்நலக்கல்வி போன்ற பாடங்களுக்கிடையேயும் மாணவர்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்தலாம்.

சமூக வலைத்தளங்கள்

மதுவிற்கு எதிராக சமூக வலைத்தளங்கள் விழிப்புணர்வை ஏற்படுத்துகின்றன. குறிப்பாக இளைஞர்கள் முகநூல் (Facebook), புலனம் (Whatsapp), படவரி (Instragram), கூகுள் (Google), கீச்சகம் (Twitter) போன்ற சமூக வலைத்தளங்களைப் பயன்படுத்தி வருகின்றனர். அவர்களிடையே சமூக வலைத்தளங்கள் மதுவின் தீமைகளை கேலி சித்திரங்கள், குறுங்கவிதைகள் சிரிப்பு துணுக்குகள், காணொலி குறும்படங்கள் மூலமாக எடுத்துக் கூறுகின்றன.

“காலியான சாராய
பாட்டில் சொல்கிறது
இன்று உன்னால் நான்
காலி . . . . . .
நாளை என்னால் நீ
காலி”[53]

என்றும், மதுவினை விற்பனைச் செய்யும் அரசாங்கத்தினைப் பற்றி,

"தாலிக்கு தங்கம்!

தாலியறுக்க

டாஸ்மாக் . . . . ??"[54]

"நாங்க தள்ளாடுற வரைக்கும் தான்

அரசாங்கம் ஸ்டெடியா இருக்கும் நாங்க

ஸ்டெடியான அரசாங்கமே தள்ளாடும்"[55]

என்றும் புதுக்கவிதைகள் எடுத்தியம்புகிறது. இவ்வாறு பலவழிகளில் சமூக வலைத்தளங்கள் மதுவுக்கெதிராக மக்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்துகின்றன.

மதுவின் தீமையை,

"பிறந்தால் குடி இறந்தால் குடி

வென்றால் குடி தோற்றால் குடி

இன்பத்திற்கு குடி துன்பத்திற்கு குடி

விழித்திருக்க குடி தூங்குவதற்கு குடி

குடியில் திளைக்கும் குடிமகனே

குடியின் பயனை கேள் மகனே

மதியினை மருங்கச் செய்யும்

மனதினை குழப்பம் செய்யும்

நாவினை குளறச் செய்யும்

நாற்றமே எடுக்கச் செய்யும்

கண்களை மறைக்கச் செய்யும்

காமமும் மீறச் செய்யும்

களவுகள் செய்யச் சொல்லும்

கொலைகளும் செய்யத் தூண்டும்

சாலையில் வேகம் கூட்டி

சாவையும் தேடச் சொல்லும்

. . . .

சொந்தங்கள் தூரம் ஓடும்

சோகங்கள் கைகள் சேரும்

. . . .

நோய்களைத் தேடிச் செல்லும்

நொடியினில் வீழச் செய்யும்

. . . .

எத்தனை பயன்களடா

என்னால் சொல்லி முடியலடா”[56]

என்று மதுவின் தீமைகளைப் பற்றி மணிஅமரன் கூறுகிறார்.

இதழ்கள் பத்திரிகைகள்

மதுவுக்கு எதிரான விழிப்புணர்வை ஏற்படுத்துவதில் பத்திரிகைகளின் பங்கு இன்றியமையாதது. மதுவுக்கு எதிராக போராடுகிற மக்களைப் பற்றியும் அங்கு எழுப்பப்படும் வாசகங்கள், மருத்துவர்களின் விளக்கங்கள், மதுவின் தீமை பற்றிய விளக்கங்கள், பொது மக்களின் விமர்சனங்கள் அவர்கள் பெற்றிருக்கும் விழிப்புணர்வு நிலைகளைப் பற்றியும், கேலிச் சித்திரங்கள், சிரிப்புத் துணுக்குகள், உண்மை நிகழ்வுகள், மதுவின் தீமையால் ஏற்படும் மனம் மற்றும் உடல் சார்ந்த விழிப்புணர்வுகள் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

“மதுவுண்ட கணவனின் உரையாடல்,

கணவன் : அடியே! இவன் தான் உன் கள்ளக் காதலனா? பார்க்க பிச்சைக்காரன் மாதிரி இருக்கான்?

மனைவி : சனியனே குடிச்சிட்டு கண்ணாடி முன்னாம நிக்காதே போய் படு”[57]

இவ்வுரையாடல் சிரிப்பதற்கல்ல, சிந்திக்கத்தூண்டும் நகைச்சுவை, மதுவுண்டால் மனைவியை சந்தேகத்தோடு பார்க்கும் நிலை ஏற்படும் என்ற விழிப்புணர்வை ஏற்படுத்துகிறது.

பொதுமக்களின் விமர்சனமாக “காந்தி மதுவை எந்த அளவுக்கு வெறுத்தார் என்பது உலகம் அறிந்தது. மதுவால் அடித்தட்டு, மக்கள் படும்பாட்டைத் கண்டு வேதனையுற்று ‘கள்ளுக்கடை மறியல்’ போராட்டத்தை கையிலெடுத்தார். பெரியார் தனக்குச் சொந்தமான தென்னை, பனைமரங்களை வெட்டிச் சாய்த்தார். இவர்களின் தடயம் மறையவில்லை. இன்னும் சில இயக்கங்களும் அரசியல் கட்சிகளும் போராடிக் கொண்டிருக்கின்றன”[58] என்று கி. ரெங்கராஜன் வாசகர் பகுதியில் குறிப்பிடுகிறார்.

இதுபோன்ற பலவழிகளில் பத்திரிகைகளும் இதழ்களும் மதுவுக்கெதிராக விழிப்புணர்வை ஏற்படுத்துகின்றன.

இயக்கங்களும் போராட்டங்களும்

தனிநபர்கள், குழுக்கள், அரசியல் கட்சிகள், பெண்கள், மாணவர்கள் என்று மத, இன, அரசியல் உணர்வுகளைத் கடந்து பெரும்பான்மையானோர் மதுவுக்கெதிராக விழிப்புணர்வையும், போராட்டங்களிலும் ஈடுபட்டிருப்பது மதுவுக்கெதிரான வெற்றியாகும்.

தனிநபர்களான பிராங்கிளின், ஆசாத் காந்தி, நந்தினி, சசிபெருமாள் போன்றோர் தனிநபராக மதுவுக்கெதிராக விழிப்புணர்வையும் போராட்டங்களையும் செய்து வருகின்றனர். இதில் சசிபெருமாள் அவர்கள் தன்இன்னுயிரை மதுவுக்கெதிராக ஈந்துள்ளது இங்கு நினைவுகூரத்தக்கது.

பொதுமக்கள் இயக்கம், உலக சமுதாய சேவா சங்கம், இடதுசாரி பெண்கள் அமைப்பு, காந்திய மக்கள் இயக்கம், இந்திய மாதர் தேசிய சம்மேளனம், இளைஞர் பெருமன்றம், மாணவர் பெருமன்றம், தமிழ்நாடு மதுகுடிப்போர் விழிப்புணர்வு சங்கம், சத்யாக்கிரக போராட்டக்காரர் அமைப்பு, சட்டப் பஞ்சாயத்து இயக்கம், புரட்சிகர மாணவர் இளைஞர் அணி, மக்கள் அதிகார அமைப்பு போன்ற இயக்கங்கள் உண்ணாவிரதம், மதுபாட்டில்களை அரசிற்கு எதிராக கோஷமிட்டு உடைத்தல், மதுக்கடைகளை சேதமுறச் செய்தல், மதுக்கடைகளைத் திறக்கவிடாமல் செய்தல் போன்ற செயல்களில் ஈடுபட்டு தங்கள் எதிர்ப்பினைத் தெரிவிக்கின்றனர். புரட்சிகர மாணவர் இளைஞர் அணி சார்பில் நடைபெற்ற போராட்டத்தில் மாணவிகள் “புத்தகத்தை படிக்கவா? சாராயத்தை குடிக்கவா?”[59] என முழக்கமிட்டனர்.

மேலும் பொதுமக்கள் இயக்கத்தை சேர்ந்த ராபர்ட் குமார் ”ஐந்து கிராம மக்கள் ஒருங்கிணைந்து இந்த இயக்கத்தை ஆரம்பித்தோம். ஆரம்பித்த நோக்கமே ஊருக்குள் இருக்கிற மதுக்கடையை மாத்துறது தான். எங்க அமைப்பை ஆரம்பிச்ச அன்னிக்கே மதுபோதைக்கு எதிராக வாகனப் பேரணியை நடத்தி அடையாளம் உண்ணாவிரதம் இருந்தோம்”[60] என்று கூறுகிறார்.

இவ்வமைப்பைப் போன்று உலக சமுதாய சேவா சங்கம், “திருநெல்வேலிக்கடுத்த துவரங்காடு கிராம மக்களுக்கு மதுவிற்கு எதிராக யோகா, உடற்பயிற்சி, எளிய முறை தியானம், அகத்தாய்வு பயிற்சிகள், போதையிலிருந்து விடுபடுவதற்குரிய பயிற்சி, சினம் தவிர்த்தல் பயிற்சி போன்ற பயிற்சிகளை வழங்கி மதுவில்லா கிராமத்தை வழங்கியுள்ளது.”[61]

இயக்கங்கள், அரசியல் கட்சிகளால் மதுவுக்கெதிராக பிரச்சாரங்கள் மேற்கொள்ளப்படுகிறது. இதனைப் பற்றி “மதுவுண்ணக் கூடாது என்று சட்டம் செய்வது மதுவுண்ணுவோருக்கு அனுமதியளிப்பது என்ற சட்டமுறையால் மதுவைத் தடுத்து விட முடியாது. சட்டத்தால் தடுக்க முயற்சிப்பதை விட பிரச்சாரத்தாலேயே மதுவுண்ணுவதை தடுக்க முடியும், மதுவுண்ணுவோரின் எண்ணிக்கையும் குறைக்க முடியும்”[62] என்று சாமி சிதம்பரனார் கூறுகிறார்.

இன்றைய இளைஞர்களின் நிலை

‘சனி நீராடு’ என்பது பழமொழி ‘சனி பீர் ஆடு’ என்பது இளைஞர்களின் புதுமொழியாகக் காணப்படுகிறது. அலுவலகங்களின் வேலைப்பளுவைக் குறைக்க, வெற்றியைக் கொண்டாட, அலுவலக, குடும்ப சிறப்பு நிகழ்வுகளின் போது மதுவுடன் கூடிய இரவு உணவு வெகுசாதாரணமான நடைமுறையில் இருக்கிறது. மதுவுண்பது சமூக அந்தஸ்தின் அடையாளமாக இன்று இளைஞர்கள் மத்தியில் இருக்கிறது.

இதற்கு மது விடுதிகளும், நட்சத்திரத் தனியார் விடுதிகளும், ஊக்கமளிக்கின்றன. ‘ஒன்று வாங்கினால் இன்னொன்று இலவசம்’ என்று மதுவிடுதிகள் கூவி விற்பனைச் செய்கின்றன. சில நட்சத்திரத் தனியார் மது விடுதிகள் வாடிக்கையாளர் அதிக அளவு குடிக்க வேண்டும் என்று போட்டிகளையும் நடத்துகின்றன.

“சென்னை எழும்பூரிலுள்ள மது விடுதியில் மது அருந்தும் போட்டி பாரதிய வித்யார்த்தி பரிஷத் (எபிவிபி) தடுத்து நிறுத்தியது. இவ்விடுதியின் நிர்வாகி மது குடிக்கும் போட்டி நடத்தப்படவில்லை ரூ.2500க்கு அளவில்லா பீர் குடிக்கும் சலுகையை மட்டும் அறிவித்திருந்தோம்”[63] எனக் கூறுகிறார்.

அலுவலக நேரமான காலை பத்து மணிமுதல் ஆறுமணி வரை அதிகமானோர் மது குடிப்பதில்லை. அந்நேரத்தில் விற்பனையை அதிகரிக்க மதுவிடுதிகள் ‘‘ஹேப்பி விலாஸ் என்ற பெயரில் ஒரு பாட்டில் வாங்கினால் இன்னொன்று இலவசம், சைட் டிஷ் இலவசம் என விளம்பரம் செய்கின்றனர்”[64] என பாரதீய வித்யார்த்தி அமைப்பின் மாவட்ட அமைப்பாளர் கூறுகிறார்.

தான் மதுவுண்டு பழகியதைப் போன்று பிறரையும் மதுவுண்ண செய்யும் நிலை பரவலாக காணப்படுகிறது.

“திருவண்ணாமலை போளூர் அருகே 4 வயது சிறுவனை மது குடிக்க வைத்த தாய்மாமன் கைது”[65]

பெரியவர்கள் சிறுவர்களுக்கு மாதிரியாக வாழ வேண்டும். ஆனால் நமது வாழ்வியலை விட்டு வழிவிலகி வாழ்கிறோம் என்பதையும் இவ்வித அவலநிலைக்கு மனிதனை மது தள்ளியிருக்கிறது என்பது இதன் வழி புலனாகிறது.

மாணவ சமுதாயம்

பெருநகரங்கள் மட்டுமின்றி குக்கிராமங்களில் கூட பள்ளி கல்லூரி மாணவர்கள் எவ்விதக் குற்றவுணர்ச்சியும் இன்றி மதுவுண்ணுவதை நாகரிகமாக எண்ணுகின்றனர். பள்ளி, கல்லூரிகளில் சில மாணவர்கள் மதுபோதையில் காணப்படுகிற அவலநிலையும் காணப்படுகிறது.

"கோவை காதல் தோல்வியால் தோழிகளுடன் மது அருந்தினார் பிளஸ் - 2 மாணவி, குடிபோதையில் நடுரோட்டில் ரகளை - மகளின் நிலைக்கண்டு பெற்றோர் கதறல்."[66]

மாணவர்கள் மட்டுமின்றி மாணவிகளும், மதுவருந்தும் அவலநிலைக்குத் தள்ளப்பட்டிருக்கின்றனர். இதனைப் பற்றி "பாஸ்மார்க் எடுக்கும் அளவுக்காவது படித்து, மானத்தை மகன் காப்பாற்றுவான் என பள்ளிக்கு பிள்ளையை அனுப்பி வைத்தால் 'டாஸ்மாக்' பாரில் மதுகுடித்து விட்டு மயங்கி கிடக்கும் அவலம் தெருவுக்கு தெரு திறந்து கிடக்கும் மதுக்கடைகளால் ஏற்பட்டிருக்கிறது"[67] என பாபு தேவ சங்கர் கூறுகிறார்.

மது இக்கால இளைஞர்கள், மாணவர்கள் மத்தியிலும் ஒன்றி காணப்படுகிறது. இதனால் வருங்கால சமுதாயம் சீர்கெட்டு அவலநிலைக்கு செல்ல வாய்ப்பிருப்பதையே இந்நிலைச் சுட்டிக் காட்டுகிறது.

அமைப்புகள்

மதுவுண்ணுவோர், மதுவுண்போரின் மனைவி மற்றும் பெற்றோர், உடன் பிறந்தோர்களுக்கும் உதவிகள் மற்றும் ஆலோசனைகளை வழங்குவதற்கும் பல அமைப்புகள் காணப்படுகின்றன. மதுவுண்ணும் பெற்றோர்களின் குழந்தைகளைப் பாதுகாக்கவும் ஆலோசனைகளை வழங்குவதற்கும், உதவிகளைச் செய்யவும் அமைப்புகள் உதவுகின்றன.

ஆல்கஹாலிக்ஸ் அனானிமஸ்

உலகம் முழுவதும் இவ்வமைப்பு செயல்படுகிறது. 1935 ஆம் ஆண்டு அமெரிக்காவில் தொடங்கப்பட்டது. குடிநோயாளிகள் மீள பல்வேறு

அமைப்புகள் வடிவமைத்துக் கொண்டு உருவானது தான் ஆல்கஹாலிக் அனானிமஸ் இவ்வமைப்பு உருவாக்கிய புத்தகம் 'பிக் புக்' ஆகும். இன்று உலகம் முழுவதும் 182 நாடுகளில் 30 லட்சத்துக்கும் அதிகமான உறுப்பினர்களுடன் இவ்வமைப்பு செயல்பட்டு வருகிறது. இவ்வமைப்பு மதுவுண்போருக்கு உடல் மற்றும் மனம் சம்மந்தமான அனைத்து ஆலோசனைகளையும் உதவிகளையும் வழங்குகிறது.

அல் -அனான்

'அல் அனான்' (AL - ANON) இவ்வமைப்பு குடிநோயாளிகளின் குடும்ப உறுப்பினர்களுக்கானது. இதில் குடும்பத்தில் குடித்துவிட்டு வரும் கணவனிடம், தந்தையிடம், மகனிடம் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்று மனரீதியாக சொல்லிக் கொடுக்கப்படுகிறது. குடிப்பழக்கத்திலிருந்து மீண்டவர்கள் இவ்வமைப்போடு தொடர்பில் இருக்கின்றனர். இங்கு மதுவுண்ணும் பழக்கத்திலிருந்து மீண்டவர்கள் தங்கள் அனுபவங்களைக் கூறுகின்றனர். இது மதுவுண்ணுவோரின் குடும்ப உறுப்பினர்களுக்கு ஆறுதலை அளிக்கும் வண்ணம் உள்ளது.

அல்லட்டீன் (ALATEEN)

கணவனைப் பிடிக்கவில்லையெனில் மனைவி விவாகரத்துக் கேட்கிறார். மனைவியைப் பிடிக்கவில்லையெனில் கணவன் விவாகரத்துக் கோருகிறார். மதுவுண்ணும் தந்தை அல்லது தாயை பிடிக்கவில்லையெனில் குழந்தைகளால் விவாகரத்தினைப் போன்று எதுவும் பெற முடியாது. இப்படிப்பட்ட குழந்தைகளுக்காக இவ்வமைப்பு செயல்படுகிறது. இவ்வமைப்பு தமிழகத்தில் பெருமளவு பிரபலமடையவில்லை.

இவ்வமைப்புகள் மூலம் மதுவுண்ணும் குடும்பத்தினரின் அவலநிலை குறைந்த அளவேனும் சரி செய்யப்படுகிறது.

முடிவுரை

கள் மதுவின் வகையாகக் கொள்ளப்படுகிறது. மதுவகைகள் நொதித்தல் மற்றும் காய்ச்சி வடித்தல் முறையில் தயாரிக்கப்படுகிறது. இம்மதுவினை உண்டவனின் நிலையானது பிறரால் மதிக்கப்படாமை, உணர்வற்ற நிலை, பிறரிடம் மறைத்து கள்ளுண்ணும் நிலை கொண்டதாக காணப்படுகிறது. மேலும், பெற்றோர் மற்றும் மனைவி குழந்தைகளால் முற்றிலும் வெறுக்கப்படும் நிலைக்குத் தள்ளப்படுகின்றனர். மதுவினை உண்டு விபத்துக்களை ஏற்படுத்துதல் கொலை, பாலியல் வன்கொடுமைகள் போன்ற குற்றச் செயல்களில் ஈடுபடுகின்றனர். மதுவுண்பவர்களுக்காகவும், மதுவுண்போரின் உறவினர்களுக்காகவும் ஆல்கஹாலிக்ஸ் அனானிமஸ், அல்-அனான், அல்லட்டீன் போன்ற அமைப்புகள் உதவி புரிகின்றன. முந்தைய அரசுகள் மதுவிலக்கிற்காக முயற்சிகளை எடுத்தும் பூரண மதுவிலக்கிற்காக முயற்சிகளை எடுத்தும் பூரண மதுவிலக்கை அமல்படுத்த முடியவில்லை. மதுவிற்கு எதிராக பெற்றோர்கள், ஆசிரியர்கள் உறவினர்கள் தங்கள் குழந்தைகளுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும். விழிப்புணர்வினால் மட்டுமே மது எனும் அரக்கனை இன்றைய சமுதாயத்திலிருந்தும் இளம்பருவத்தினரின் வாழ்வியல் கூறிலிருந்து விரட்டியடிக்க முடியும் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

இயல் குறிப்புகள்

1. மதுரை பேரகாதி, ப. 592.
2. லிப்கோவின் தமிழகராதி, ப. 780.
3. லிப்கோவின் தமிழகராதி, ப. 324.
4. பிரகாஷ், எஸ்., ‘குடிநோய் ஒரு மூளைநோய்’, ப.1.
5. பெருமாள், அ.கா., ‘குடிபோதை புனைவுகள் தெளிவுகள்’, ப. 179.
6. நமச்சிவாயம், கே., ‘தமிழர் உணவு’, ப. 149.
7. மகாத்மா காந்தி, ‘மதுபானம் என்னும் மாபாதகம்’, ப. 11.
8. பெருமாள், அ.கா., ‘குடிபோதை புனைவுகள் தெளிவுகள்’, ப. 79.
9. வரதராசன், மு., ‘அறமும் அரசியலும்’, ப. 43.
10. பிள்ளை, கே.கே., ‘தமிழக வரலாறும் பண்பாடும்’, ப. 43.
11. திருவிவிலியம் நீதி, 23:30-31.
12. நீதி. 23:30-35.
13. அத் 2 வசனம் 219,
14. பெருமாள், அ.கா., ‘குடிபோதை புனைவுகள் தெளிவுகள்’, ப. 188.
15. பெருமாள், அ.கா., ‘குடிபோதை புனைவுகள் தெளிவுகள்’, ப. 188.
16. பகவத்கீதை, இராசவித்யா, இராச குக்ய யோகம், 20.
17. சுவாமி மதுரானந்தர், ‘ஸ்ரீமத் பகவத்கீதை’, ப.88.
18. பெ.பா.ப. 142.
19. பெ.பா.ப. 28.
20. அகம். 102-2.
21. அகம். 35-9.
22. கும்பகருணன் வதைபடலம், 1277.

23. புறம். 235.
24. புறப்பொருள் வெண்பாமாலை, உண்டாட்டுப்படலம், ப. 20.
25. பாரதியார் கவிதை, பா.1.
26. கறுப்புமலர்கள், ப. 34.
27. பெருமாள், அ.கா., ‘குடிபோதை புனைவுகள் தெளிவுகள்’, ப. 242.
28. மேலது, ப.243.
29. செண்பகராமன், ‘பள்ளு’, ப. 50.
30. தினகரன், 14.07.2015, ப. 7.
31. மணிமே., ஆதிரை பிச்சையிட்ட காதை, ப. 84.
32. திருமந்திரம்.329.
33. உண்டாட்டுப்படலம், பா.1059:3-4.
34. யங் இந்தியா, 15.09.1927, ப.306
35. முக்கூடற்பள்ளு, ப.59.
36. வானமாமலை, நா., ‘தமிழர் நாட்டுப்பாடல்கள்’, ப. 499.
37. தி.இந்து, 13.10.2014, ப.9.
38. இராமநாதன், ஆறு,, ‘நாட்டுபுறவியல் ஆய்வுகள்’, பா.30.
39. தனஞ்செயன், ‘தஞ்சை மீனவர் பாடல்கள்’, ப.231.
40. முக்கூடற்பள்ளு, பா.11.
41. தி. இந்து, 26.10.2014, ப.7.
42. தி.இந்து, 05.10.2014, ப.9.
43. தி.இந்து, 14.10.2014, ப.6.
44. தி.இந்து, 10.08.2015, ப.9.

45. தி.இந்து, 20.06.2014, ப.2.
46. தி.தந்தி, 27.02.2015, ப.20.
47. தி.இந்து, 26.10.2014, ப.7.
48. தி.இந்து, 01.02.2010, ப.10.
49. கணையாழி மாத இதழ், ப.13.
50. தினகரன், 31.01. 2014, ப.3.
51. தி.இந்து, 21.11.2014, ப.7.
52. தி.இந்து, 05.12.2014, ப.9.
53. இணையதளம்: பிலிப்பு wwwj.mp/tamil.com.
54. இணையதளம்:பிரிஸ்லின் wwwj.mp/tamil.com.
55. இணையதளம்: பிரபாகரன் wwwj.mp/tamil.com.
56 இணையதளம் : http: /google webelight.com/i?u: http://eluthu.com/ kavithai/ 255934. htmt? hl=en=IN
57. குமுதம், 27.11. 2013, ப. 30.
58. தி.இந்து, 19.10. 2014, ப. 11.
59. தி.இந்து, 04.08. 2015, ப.1.
60. தி.இந்து, 08.08. 2015, ப.2.
61. தி.இந்து, 19.10. 2014, ப.1.
62. சிதம்பரனார், சாமி., ‘வள்ளுவர் வாழ்ந்த தமிழகம்’, ப. 65.
63. தி.இந்து, 16.10.2014, ப.16.
64. தி.இந்து, 16.10.2014, ப.16.
65. தி.இந்து, 08.07. 2015, ப.1.
66. தினத்தந்தி, 9.07.2015, ப.12.
67. பாபுதேவ சங்கர், ‘வாசகன் மாத இதழ்’, ப. 4.

இயல் மூன்று

குறளில் மன்னராட்சியும் இன்றைய மக்களாட்சியும்

முன்னுரை

கூடி வாழும் பண்புடைய மனிதர்களுக்குத் தலைமையானவனாக இருந்தவன் அரசனாவான். அவ்வரசனின் இயல்புகளையும் தகுதிகளையும், நாடு, நாட்டு மக்களின் நிலை, அரண்கள், படைகள், போர் மற்றும் அமைச்சர்கள், தூதுவர்கள், ஒற்றர்கள், பணியாளர்களின் குணங்கள், பணிகள் மற்றும் அரசு பெற்றவரிகள், மக்களுக்கு வழங்கப்பட்ட தண்டனையின் நிலைகளைக் குறித்து குறள்வழி நின்றும், இக்கால மக்களாட்சி முறையோடும் இக்கால வாழ்வியல் மற்றும் இந்திய அரசியலைப்போடும் ஆய்வதாக இவ்வியல் அமைகிறது.

முடியாட்சி

வள்ளுவர் கால அரசியலில் முடியாட்சியே நடைபெற்று வந்தது. முடியாட்சி என்பது மன்னராட்சி ஆகும். தந்தைக்குப் பின்னர் மூத்தமகன் பட்டம் பெறுவது முற்கால மரபாகக் காணப்பட்டது.

முடியாட்சி முறையினைக் குறித்து "ஒருவனது வலிமையைக் கொண்டோ, அல்லது ஒருவனுடைய திறனையும் வீரத்தையும் உணர்ந்த மக்கள் அவனைத் தங்களுக்குத் தலைவனாக வரித்துக் கொள்வதின் மூலமோ (Selection (or) election) அல்லது மற்றொருவனால் நியமிக்கப்படுவதனாலோ ஏற்பட்டு பின்னால் அவனும் அவன் வழி வருகிறவர்களும் தலைமுறை தலைமுறையாக ஒரு நாட்டை ஆளுவதைக் குறிக்கும்."[1]

மன்னனின் முடிசூட்டு விழா 'மண்ணு மங்கலம்' என்று அழைக்கப்பட்டது. மன்னனின் அவை "நாளோலக்கம் அவை, வேட்டடை நாள், மகிழிருக்கை"[2] என குறிக்கப்பட்டது.

அரச சின்னங்களாக படைக்கலம், கொடி, குடை, முரசு, புரவி, களிறு, தேர், மாலை, ஆகியவை காணப்பட்டன.

மன்னனின் வேறு பெயர்கள்

மன்னனைக் குறிக்க வள்ளுவர் பல பெயர்களை எடுத்தாண்டுள்ளார். “அரசருள்” (குறள்.381), “இறை” (குறள்.432), “இறைவன்” (குறள்.690), “காவலன்” (குறள்.560), “மன்னன்” (குறள்.386), “மன்னவன்” (குறள்.388), “கோவலன்” (குறள்.563), “வேந்து” (குறள்.550), “வேந்தர்” (குறள்.689), “வேந்தர்” (குறள்.382), “ஆன்ற பெரியோர்” (குறள்.694), “குறும்பு” (குறள்.735), “நிலனாள்பவன்” (குறள்.383), “படியுடையார்” (குறள்.606), “புரந்தார்” (குறள்.180), “வேலார்” (குறள்.683) எனும் இப்பெயர்கள் அவ்வரசரின் பண்பையும் பணியையும் சுட்டி நிற்கின்றன,

அரசியல் வல்லுநர்கள் கூறும் இறை எனும் சொல் வள்ளுவரால் மக்கள் தலைவன் எனும் பொருளில் கூறப்பட்டுள்ளது. இதனை

“இறையென்று வைக்கப்படும்” (குறள்.388)

எனும் குறளடி மெய்ப்பிக்கிறது. மன்னனை மக்கள் உயர்ந்த சக்தியாக எண்ணியதை இதன் மூலம் அறிய முடிகிறது.

அரசு

ஒரு குறிப்பிட்ட எல்லைக்குள் வாழும் மக்கள் அமைதியையும் அறத்தையும் நிலை நிறுத்திக் கொள்வதற்காகத் தமக்குள் தோற்றுவித்துக் கொள்ளும் ஓர் அமைப்பை அரசு எனலாம். இவ்வமைப்பு அரசன் எனும் தனிநபராலும் அமைச்சர்களைக் கொண்ட குழுவாலும் நிர்வகிக்கப்படலாம் .

“அரசு என்பது சட்டத் திட்டங்களை உருவாக்குவதற்கும், செயல்படுத்துவதற்கும், பொது சுகாதாரத்தையும் நலனையும் பேணுவதற்கும்,

வரிவிதிப்பதற்கும், பொது மூலதனத்தை பகிர்ந்து கொடுப்பதற்கும், வெளிநாட்டு விவகாரங்களைச் செயல்படுத்துவதற்கும், போரும் சமாதானமும் குறித்து தீர்மானம் செய்வதற்கும் நிறுவப்பட்ட அமைப்பாகும்."[3] சுக்கிரநீதி "அரசியல் - அரசு, அமைச்சு, நட்பு, பொருள், நாடு, மதில், படை எனும் ஏழு உறுப்புகளையுடைத்து அவற்றுள் அரசு தலையாக மதிக்கப்படுவதாகும்"[4] என்று கூறுகிறது.

அரசியல்

தமிழில் அரசியல் எனப்படுவதை வடநூலார் 'ராஜ தர்மம்' என்று வழங்கினர். அரசின் அனைத்து கடமைகளையும் இச்சொல் குறிக்கிறது.

மக்களாட்சி

மக்கள் தங்களைத் தாங்களே ஆளும் ஆட்சி மக்களாட்சி எனப் பெறும் மக்களாட்சி என்பது மக்கள் தாங்களே தங்களுடைய தலைவரைத் தேர்ந்தெடுப்பது ஆகும்.

அரசனின் இயல்புகளும் தகுதிகளும்

வள்ளுவர் காலத்தில் அரசனே உயர்ந்த மதிப்புடையவனாக காணப்பட்டான். அரசன் பல்வேறுப்பட்ட இயல்பினையும் தகுதியினையும் கொண்டவனாக காணப்பட வேண்டுமென்பதை, அரசன் என்பவன் மக்களை கண்ணாகவும் உயிராகவும் உடலாகவும் கருத வேண்டும். அவை மட்டுமின்றி அரசன் எளிதில் காணக் கூடியவனாகவும் இன்சொல் கூறுபவனாகவும் இருத்தல் வேண்டும் என்பதை,

"காட்சிக்கு எளியன் கடுஞ்சொல்லன் அல்லனேல்

மீக்கூறும் மன்னன் நிலம்" (குறள்.386)

எனும் குறள் வழி உரைக்கிறார். "மேலும் குறைகளைச் சுட்டும் போது அதனைப் பொறுத்துக் கொள்ளுதல்" (குறள்.389) ஈகை, அறிவு நுட்பம், அஞ்சாநெஞ்சம், அன்பு காட்டுதல், நீதி தவறாமை, பாதுகாத்தல் ஆகிய பண்புகளில் சிறந்தவனாகவும் காணப்பட வேண்டும். மேலும் தன்னுடைய வலிமையையும் தனது எதிரிக்குத் துணைச் செய்பவர்களின் வலிமையை அறிந்து நடக்கும் திறனுடையவனாகவும் இருக்க வேண்டுமென்று கீழ்க்கண்ட குறள் மூலம் வலியுறுத்துகிறார்.

"வினைவலியும் தன்வலியும் மாற்றான் வலியும்

துணைவலியும் தூக்கிச் செயல்" (குறள்.471)

மேலும் அரசனின் தலைசிறந்த தகுதியினை,

"படைகுடி கூழ்அமைச்சு நட்பரண் ஆறும்

உடையான் அரசருள் எறு" (குறள்.381)

எனும் குறளில் வள்ளுவர் குறிப்பிடுகிறார். நாட்டைப் பாதுகாக்கத் தேவையான படைபலம், ஆட்சிக்கு உட்பட்டு நடக்கும் மக்கள், வறுமையின்மை, அறிவும் திறனும் வாய்ந்த அமைச்சர்கள், அண்டை நாடுகளுடன் நட்பு, நாட்டைக் காக்கும் இயற்கை அரண் ஆகிய உறுப்புகளைத் தன்னகத்தே உடையவன் அரசனுள் தலைசிறந்தவன் என்பது இதன் வழி புலனாகிறது. மேலும் அரசனின் மிகப் பெரிய தகுதியினை,

"இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த

வகுத்தலும் வல்லது அரசு" (குறள்.385)

என்று குறள் குறிப்பிடுகிறது. காலத்திற்கும் இடத்திற்கும் சமுதாயத்திற்கும் ஏற்றவாறு தொழில்களைப் பெருக்கி வருவாய்களை உருவாக்குதல், சேர்த்தல், சேர்த்தவற்றைப் பாதுகாத்தல், காத்தவற்றை நல்வழிகளில் செலவிட வகுக்கும் வல்லவனே பொருளாதார ரீதியிலும் மிகச்சிறந்த அரசனாக இருக்க முடியும் என்பதை வள்ளுவர் தெளிவுற எடுத்துக்காட்டுகிறார். வெற்றிக்குச் சாதகமான இடத்தை அறிந்து செயலினைச் செய்ய வேண்டுமென்பதை,

"ஆற்றாரும் ஆற்றி அடுப இடனறிந்து

போற்றார்கண் போற்றிச் செயின்" (குறள்.493)

எனும் இக்குறள் எடுத்தியம்புகிறது. வலிமை மிகுந்த பகைவரையும் வெல்லத்தக்க இடமறிந்து பாதுகாவலோடு போர்ச் செய்தால் அவனுக்கு வெற்றி கிடைக்கும். எனவே அரசன் இடமறிந்து செயல்படுபவனாக காணப்பட வேண்டும் என்கிறார்.

செங்கோன்மை

நல்லாட்சிக்குக் குறியீடாக அரசனின் செங்கோலினைச் சிறப்பித்துக் கூறுவர். அரசனின் செங்கோல் "செம்மற் செங்கோல், தண்தொழிற் செங்கோல், ஆசில் செங்கோல், அறம்புரி செங்கோல், வீயாச் செங்கோல், இருளறு செங்கோல்"[5] எனப் பெருமை சான்ற அடைமொழிகளைக் கொண்டு காணப்பட்டன.

சோழனின் செங்கோன்மையை மனுநீதிச்சோழன் கதைமூலம் அறிய முடிகிறது. சேக்கிழார் பாடிய திருத்தொண்டர் புராணத்தனுள் காணப்படுகிற மனுநீதிச் சோழன்,

"மன்னுயிர் காக்கும் செங்கோல் மனுவின் பொற்கோவில் வாயில்

பொன்னணி மணியைச் சென்று கோட்டினால் புடைத்தது"[6]

என்று கன்றை இழந்த பசுவின் நிலையைக் கூறுகிறது. பசுவின் நிலையறிந்த மன்னனின் செயலை,

"என்மகன் செய்பாதகத்துக்கு இருந்தவங்கள் செய இசைந்தே

அன்னியனோர் உயிர்கொன்றால் அவனைக் கொல்வேன்"[7]

எனும் இப்பாடல்வழி மன்னனின் செங்கோன்மைத் தன்மையை அறிய முடிகிறது. செங்கோன்மையைக் குறித்து,

"வான்நோக்கி வாழும் உலகெல்லாம் மன்னவன்

கோல்நோக்கி வாழும் குடி" (குறள்.542)

"குடிதழீஇக் கோல்ஓச்சும் மாநில மன்னன்

அடிதழீஇ நிற்கும் உலகு" (குறள்.544)

எனும் குறள்கள் சுட்டி நிற்கிறது. நாட்டிலுள்ள குடிமக்கள் அந்த நாட்டு அரசனின் செங்கோலை எதிர்பார்த்து வளர்ச்சிப் பெறுகிறார்கள். குடிகளின் நன்மையைக் கருதி, அக்குடிமக்களைத் தழுவி, நல்லாட்சி செய்யும் அரசனது கட்டளையை மக்கள் தலைமேல் ஏற்று அதன் படி நடப்பார்கள்.

"இயல்புளிக் கோல்ஓச்சும் மன்னவன் நாட்ட

பெயலும் விளையுளும் தொக்கு" (குறள்.545)

எனும் குறளில் நீதிதவறாது ஆட்சி நடத்தும் நாட்டில் தவறாது மழை பெய்யும் என்று வள்ளுவர் குறிப்பிடுவதிலிருந்து மன்னவன் செங்கோன்மையோடு ஆட்சிபுரிந்தால் மக்கள் செழிப்பான வாழ்க்கை மேற்கொண்டிருப்பார்கள் என்பதை ஐயமின்றி உணர முடிகிறது.

மக்கள்

நாடு என்பது மக்களைச் சார்ந்தது. குடிமக்கள் உயர்ந்தால் தான் நாடும் உயரும். குடிமக்கள் என்பது பண்பினால் அவர்கள் வாழ்வினால் அறியப்படும்.

"பெற்ற பெருவளம் பெறா அர்க்கு அறிவுறீஇச்

கென்று பயன்எதிரச் சொன்ன பக்கமும்"[8]

எனும் பாடலடி பகர்வதிலிருந்து தன்னைப் போல் மற்றவர்களும் சிறப்புப் பெற வேண்டும் என்ற உயர்பண்பு உடையவராக மக்கள் காணப்பட்டதை அறிய முடிகிறது. இத்தகைய உயர்ந்த பண்பினை உடைய நாட்டு மக்களின் நலனை எண்ணாத அரசனின் நிலையை,

"நாள்தொறும் நாடி முறைசெய்யா மன்னவன்

நாள்தொறும் நாடு கெடும்" (குறள்.553)

"அல்லற்பட்டு ஆற்றாது அழுதகண் ணீர்அன்றே

செல்வத்தை தேய்க்கும் படை" (குறள்.555)

எனும் குறள்கள் குறிப்பிடுகிறது. தன்நாட்டு மக்களின் நலனைப் பற்றி கவனிக்காத அரசனது நாட்டின் நலன் குறைந்து கெடும். மக்கள் துன்பப்பட்டு தாங்க முடியாது. அழுத கண்ணீர் அரசனது செல்வத்தைக் குறைக்கும் என்று மக்கள் நலனினைக் குறித்து விளக்கமளிக்கிறார்.

அரசனை மக்கள் அனைவரும் காணும் வகையில் இருந்ததை,

"கொடையும் கோலும் வழங்குநர்த் தடுத்த

அடையாவாயில் மிளைசூழ் படப்பை"[9]

எனும் வரிகள் எடுத்துரைக்கின்றன.

இதனை,

"அருஞ்செவ்வி இன்னா முகத்தான்" (குறள்.565)

எனும் குறளடி விளக்குகிறது. அரசனிடம் மக்கள் தங்கள் குறைகளைக் கூறுகின்ற அளவு எளிமைத்தன்மை கொண்டவனாக காணப்பட வேண்டும் என்பதை இதன் வழி அறிய முடிகிறது. இந்த வாழ்வியல் கூறு இக்கால அமைச்சர்களுக்கும் அதிகாரிகளுக்கும் முற்றும் பொருந்தும்.

அமைச்சர்களும் அதிகாரிகளும் எளிய முறையில் காணப்பட்டால் மக்கள் தங்களுக்குத் தேவையான உதவிகளைப் பெற்று தங்கள் வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக் கொள்ள முடியும். இச்சூழ்நிலை பெரும்பாலும் இன்றைய மக்களாட்சி முறையில் இல்லை. இந்நிலை மாற்றப்பட்டால் பெருவாரியான மக்களின் வாழ்க்கைத்தரம் மாறும் என்பதில் ஐயமில்லை. வள்ளுவர் கூறும் செய்தி இன்றைய ஆட்சியாளர்களுக்கு வழிகாட்டும் வாழ்வியல் கூறாகவே காணப்படுகிறது.

நாடு

நாடு என்பது மக்களின் சுயதேவைகளைப் பூர்த்திச் செய்து கொள்வதற்காக குடும்பங்கள். கிராமங்கள், சமுதாயங்கள் சேர்ந்த அமைப்பு ஆகும். நாடு பற்றி திரு.வி.க அவர்கள் "வாழ்க்கையில் உறுதியும் உரிமை வேட்கையும் முயற்சியும் ஊக்கமும் இல்லாதநாடு, சோர்வும், சோம்பலும் கவலையும் செறியும் நாடு எவ்வளவு பெரியதாயினும் பழமையுடையதாயினும் சுதந்திரமிழந்து வாட்டமுறும்"[10] என்கிறார்.

இந்திய நாட்டின் ஒருமைப்பாட்டை குறித்து "அரசியல் அதிகார வரம்பிற்கும், வரையறுக்கப்பட்ட, நிலவிய எல்லைக் கோட்டிற்கும் மேலான

ஒருமைப்பாட்டை உடையதாக இந்தியா இருக்கிறது. இது ஆழமான ஒருமைப்பாடு"[11] என்று வரலாற்று ஆசிரியர் வின்சென்ட் ஸ்மித் கூறுகிறார்.

நாட்டின் மக்கள் சோம்பலும் சோர்வும் இன்றியும், ஒருமைப்பாட்டுடனும் இருந்தால் நாடு சிறப்புடையதாக காணப்படும் என்பதை இக்கூற்றுகளின்று அறிய முடிகிறது. நாடு பற்றி,

"தள்ளி விளையுளும் தக்காரும் தாழ்விலாச்
செல்வரும் சேர்வது நாடு" (குறள்.731)

"பொறையொருங்கு மேல்வருங்கால் தாங்கி இறைவற்கு
இறையொருங்கு நேர்வது நாடு" (குறள்.733)

"நாடென்ப நாடா வளத்தன" (குறள்.739)

எனும் குறள்கள் விளக்குகின்றன. நிலமானது குறையாது கொடுக்கும் விளைப் பொருள்களையும், அந்தப் பொருள்களை உண்டாக்கக்கூடிய அறிஞர்களையும் அவ்வாறு ஈட்டிய பொருள்களைப் பயன்படுத்தக் கூடிய தாழ்வில்லாச் செல்வர்களையும் ஒருங்கே பெற்றதாக காணப்பட வேண்டும். பஞ்சம், பிணி, பகைகளால் பெருஞ்சுமை வந்த காலத்தும் தாங்கிக் கொண்டு, அதனைத் தாங்கும் அரசனுக்குப் பல வழிகளிலும் வளப்பொருளை வரியாகத் கொடுத்து உதவுவதே சிறந்த நாடு என்றும், நாடானது தனக்குத் தேவையானப் பொருள்களுக்குப் பிற நாடுகளை நாடாமல் தன்னிடத்தே பெற்று இருப்பதாகும் என்று வள்ளுவர் விளக்குகிறார்.

வள்ளுவர், நாடு விளைப்பொருட்கள் நிறைந்ததாயும் பஞ்சம், பிணி, பகைவரால் ஏற்படுகின்ற துன்பகாலத்தில் அரசனைத் தாங்குகின்ற மக்களைக் கொண்டதாயும் காணப்பட வேண்டும் எனக் கூறுகிறார்.

நாட்டை நாசப்படுத்தும் அங்கங்களாக,

"பல்குழுவும் பாழ் செய்யும் உட்பகையும் வேந்தலைக்கும்

கொல்குறும்பும் இல்லது நாடு" (குறள்.735)

என குறள் குறிப்பிடுகின்றது. பல தரப்பட்ட அரசியல் கட்சிகளும் அரசை அழிக்கும் உள்பகைவர்களும், மக்களைத் துன்புறுத்தும் கொள்கைக் கூட்டத்தாரும் இல்லாமல் இருத்தல் நாடாகும் என்கிறார்.

நாட்டினுடைய உறுப்புகளாக கிரேக்க நாட்டுப் பேரறிஞர் அரிஸ்டாட்டில் "ஒரு நாடு என்றால் எல்லை (Territory) மக்கள் (People) ஆளுகின்ற உரிமை (Soverigrity) அரசாங்கம் (Government) இவை வேண்டற்பாலது"[12] என்கிறார்.

வள்ளுவர் நாட்டினுடைய உறுப்பாக,

"இருபுனலும் வாய்ந்த மலையும் வருபுனலும்

வல்லரணும் நாட்டிற்கு உறுப்பு" (குறள். 734)

என்று கூறுகிறார். நீர்நிலைகள், மலைகள், ஆறுகள் போன்ற இயற்கைப் பாதுகாவலையும் கோட்டை கொத்தளங்கள் போன்ற செயற்கைப் பாதுகாவலையும் நாடு பெற்றிருக்க வேண்டும் என நாட்டிற்குரிய அங்கமாக வள்ளுவர் விளக்கமளிக்கிறார். மேலும்,

"ஆங்கமைவு எய்தியக் கண்ணும் பயமின்றே

வேந்தமைவு இல்லாத நாடு" (குறள். 740)

என்று குறள் கூறுகிறது. எத்தகைய வளத்தினைப் பெற்றிருந்தாலும் அரசியல் அமைதி இல்லாத நாட்டில் இயற்கை நலன்களும் செயற்கை நலன்களும் அழிந்து போகும் என்று இக்குறள்வழி இன்றைய அரசியல் கட்சிகளுக்கு வழிகாட்டுகிறார்.

அரண்கள்

நாட்டினைப் பாதுகாப்பது அரண்களாகும். இவ்வரண்கள் இயற்கை மற்றும் செயற்கை அரண்களாகக் காணப்படுகின்றன. இயற்கை அரண்களாக மலை, நீர், மணல், காடு போன்றவை காணப்பட்டன. செயற்கை அரண்களாக கோட்டைகள், மதில்கள், மற்றும் கொத்தளங்கள் காணப்பட்டன.

"ஒருங்கு அகப்படுத்த முரவு வாய் ஞாயில்

ஓர் எயில் மன்னன் போல"[13]

எனும் குறளில் எயில் என்பது மதிலையும் ஞாயில் என்பது மதிலின் ஓர் உறுப்பு எனவும், மதில்களின் உள்ளே வீரர்கள் நின்று போரிடும் இடத்தினை "ஞாயில்"[14] என்று தமிழ் அகராதி கூறுகிறது.

பல்வகை அரண்கள் நாட்டுக்குக் காவலாக இருந்தன. நகரைச் சூழக் காட்டரண் உண்டு. அது மிளை எனப்பட்டது. கோட்டைகள் விண்தோய் உயர்வுடையன. அவற்றைச் சூழ ஆழமான அகழிகள் உண்டு. அகழிகளைப் படகின் உதவியால் தான் கடக்க இயலும்.

நாட்டையும் மக்களையும் பாதுகாவல் செய்ய அரண் மிகவும் இன்றியமையாதது. இயற்கை அரணினைக் குறித்து,

"மணிநீரும் மண்ணும் மலையும் அணிநிழல்

காடும் உடையது அரண்" (குறள். 742)

என்கிறது. ஒருபுறம் கடலும் இன்னொரு புறம் சதுப்பு நிலமும், மற்றொரு புறம் மலையும் வேறொரு புறம் அடர்ந்த காடும் இயற்கையாக அமைந்திருப்பது ஒரு நாட்டிற்கு நல்ல பாதுகாவல் என்பதை அறிய முடிகிறது. செயற்கை அரணினைக் குறித்து,

"உயர்வகலம் திண்மை அருமைஇந் நான்கின்

அமைவரண் என்றுரைக்கும் நூல்" (குறள். 743)

என குறள் கூறுகிறது. ஏற முடியாத உயரமும் தன் படையினர் நின்று தாக்கக் கூடிய அகலமும் பகைவரால் வெல்ல முடியாத வலிமையும் நெருங்க முடியாத ஆயுதங்களும் இந்நான்கும் ஒருங்கே அமைந்திருப்பது செயற்கை அரணாகும் என்று செயற்கை அரணினைக் குறித்து குறிப்பிடப்படுகிறது. மேலும் அரணின் வலிமையைக் குறித்து,

"முற்றியும் முற்றாது எறிந்தும் அறைப்படுத்தும்

பற்றற்கு அரியது அரண்" (குறள். 747)

என குறள் கூறுகிறது. பகைவர் நாற்புறமும் கோட்டையைச் சூழ்ந்தும் சூழாதே துளைத்தும், பூமியிலே சுரங்கம் உண்டாக்கியும், உள்ளே நுழைந்து கோட்டையைப் பிடிக்க முடியாதபடி அமைவது அரணாகும் என்று கூறுவதிலிருந்து பண்டைய அரசர்கள் அரண்களின் வாயிலாக மக்களுக்கு பாதுகாப்பு கொடுத்ததை நன்கு அறிய முடிகிறது.

சுதந்திரத்திற்குப் பிறகு உள்நாட்டுப் போர்கள் ஏற்படவில்லை. மாநிலங்களுக்கு மாநிலம் எல்லைகள் வகுக்கப்பட்டுள்ளன. இந்தியாவிற்கு அரணாக வடக்கே இமயமலையும், தெற்கே இந்தியப் பெருங்கடலும், கிழக்கே வங்காள விரிகுடாவும், மேற்கே அரபிக்கடலும் இயற்கை அரணாகக் காணப்படுகின்றன. செயற்கை அரணாக பாகிஸ்தான், பங்காளதேஷ், சீனா போன்ற நாடுகளின் எல்லையை வரையறை செய்வதற்காக மின்சார முள்வேலிகள் எல்லைக்கற்கள் போன்றவைகள் காணப்படுகின்றன. எல்லைக்கற்கள், முக்கிய தூண்கள் (Mainpiller) சிப்சிடாரி தூண்கள் மற்றும் 'டி' தூண்கள் (T Piller) என மூன்று வகைகளாகக் காணப்படுகின்றன.

படைகள்

நாட்டின் மீது படையெடுக்கும் பகைவரைத் தடுக்கவும், நாட்டில் சுயாட்சியை நிலை நிறுத்தவும் அரசாட்சியில் முக்கியப் பங்கு வகிப்பது படையாகும். முற்காலத்தில் அரசர்கள் காலாட்படை, யானைப்படை, குதிரைப்படை , தேர்ப்படையினைக் கொண்டிருந்தனர். படைத்தளபதி 'ஏனாதி' என்று அழைக்கப்பட்டார். வேல், வாள், வில், அம்பு, கவுண் போன்றவை படைக்கருவிகளாகவும் கேடயமும் கவசமும் பாதுகாப்புக் கருவிகளாகவும் பயன்படுத்தப்பட்டன. படைகளைக் குறித்து,

"உறுப்பமைந்து ஊறஞ்சா வெல்படை வேந்தன்
வெறுக்கையு ளெல்லாம் தலை" (குறள். 761)

என குறள் இயம்புகிறது. படைகளின் உறுப்பாக யானை, குதிரை, தேர் காலாட்படையினைக் குறித்து வள்ளுவர் கூறுகின்றார்.

தகுதி

படையினர் பெற்றிருந்த தகுதிகளை,

"அழிவின்றி அறைபோகா தாகி வழிவந்த
வன்க ணதுவே படை" (குறள். 764)

"கூற்றுடன்று மேல்வரினும் கூடி எதிர்நிற்கும்
ஆற்ற லதுவே படை" (குறள். 765)

"மறம்மானம் மாண்ட வழிச்செலவு தேற்றம்
எனநான்கே ஏமம் படைக்கு" (குறள். 766)

"சிறுமையும் செல்லாத் துனியும் வறுமையும்
இல்லாயின் வெல்லும் படை" (குறள். 769)

எனும் குறள்கள் குறிப்பிடுகிறது.

போர் வீரனானவன் அஞ்சாநெஞ்சமும், வஞ்சமில்லா உள்ளமும், போர் பரம்பரையைக் கொண்டவனாகவும், எமனே கோபங்கொண்டு எதிர்த்தாலும், எதிர்த்து நின்று போர்புரிபவனாகவும், வீரமும், மானமும், உயர்ந்த வீர பரம்பரையினராகவும், தெளிவான போர்புரிபவனாகவும், இழிகுணங்களும், அடங்காத சிறு முன்கோபத்தன்மையும் இல்லாதிருத்தல் வேண்டுமென்பதை வள்ளுவர் இங்கு தெளிவுப்படுத்துகின்றார்.

இன்றைய வாழ்வியல் சூழலிலும் நாட்டினைக் காக்க தரைப்படை, கப்பற்படை, விமானப் படை போன்றவை செயல்படுகின்றன. தரைப்படை நிலம் சார்ந்த காவல் பணியினையும், கப்பற்படை கடல் சார்ந்த எல்லைப் பகுதிகளையும், விமானப்படை ஆகாய எல்லையைப் பாதுகாக்கும் பணியினையும் செய்கின்றன. துணை இராணுவப் படைகளாக மத்திய ரிசர்வ் போலீஸ் படை (சி.ஆர்.பி.எப்), எல்லை பாதுகாப்புப்படை (பி.எஸ்.எப்), இந்தோ - திபெத் எல்லை போலீஸ் படை (ஐ.டி.பிபி), மத்திய தொழில் பாதுகாப்புப் படை (சி.ஐ.எஸ்.எப்) போன்றவை செயல்படுகின்றன. துணை இராணுவப்படைகளில் பணிபுரிய தகுதிகளாக பத்தாவது வகுப்பு தேர்ச்சி பெற்று பதினெட்டு வயது முதல் இருபத்தி மூன்று வயதுக்குட்பட்டவர்கள் வரை விண்ணப்பிக்கலாம். உடல் தகுதித்தேர்வு, இயங்கலைத் (Online) தேர்வுகள் மூலமாக வீரர்கள் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். இப்படைகள் அண்டை நாடுகளிடமிருந்து நாட்டையும் மக்களையும் காப்பதோடு நாட்டின் அவசர காலங்களான வெள்ளப்பெருக்கு, நில நடுக்கம், கலவரங்கள் போன்ற பதற்றமான நெருக்கடி காலங்களில் பணியாற்றுகின்றன. படை வீரர்களின் பணி பெரும்பாலும் நம் நாட்டிற்குள் தரை வழி, கடல் வழி, வான் வழிகள் வழியாக அண்டை நாட்டினர் அத்துமீறி நுழைவதைத் தடுத்து நாட்டின் எல்லையைப் பாதுகாப்பதாகும்.

"ராஜவுரி மாவட்டத்தில் உள்ள எல்லைக் கட்டுப்பாட்டுப் பகுதியிலும், பூஞ்ச் மாவட்டம் காதிகர்மாரா மற்றும் சகன்டாபாக் ஆகிய பகுதிகளின் மீதும் பாகிஸ்தான் இராணுவம் தாக்குதல் நடத்தியது"[15] எனவும், "ஐம்மு-காஷ்மீர் மாநிலம் அனந்த்நாக் மாவட்டம் தியால்கம் பகுதியிலும், ஷோபியான் பகுதியிலும் கச்தூரு பகுதியிலும் இராணுவம், உள்ளூர் போலீஸார், சி.ஆர்.பி.எப் உள்ளிட்ட துணை இராணுவத்தினருக்கும் தீவிரவாதிகளுக்கும் ஏற்பட்ட சண்டையில் பதிமூன்று தீவிரவாதிகள், மூன்று இராணுவ வீரர்கள் பொதுமக்கள் நான்கு பேர் பலி"[16] என்றும், "பாகிஸ்தான் படையினர் சரமாரியாக துப்பாக்கியால் சுட்டும், பீரங்கிக்குண்டுகளை வீசியும் தங்கள் தாக்குதலைத் தொடங்கினர். இதற்கு இந்திய இராணுவம் தரப்பில் தகுந்த பதிலடி கொடுக்கப்பட்டது. எல்லையில் சண்டை நிறுத்த உடன்பாட்டை மீறி பாகிஸ்தான் இராணுவம் நடத்தி வரும் தாக்குதல் இந்த ஆண்டு அதிகரித்துள்ளது, 650-க்கும் மேற்பட்ட இத்தகைய சம்பவங்களில் பாதுகாப்புபடை வீரர்கள் 16 பேர் உட்பட 30 பேர் இறந்துள்ளனர்"[17] என இராணுவ உயர் அதிகாரி தகவல் தெரிவிப்பதாக குறிப்பிடப்படுகிறது.

"சிக்கிம் எல்லைப்பகுதியான டோக்லாமில் சீன ராணுவ வீரர்கள் அத்துமீறி நுழைந்த போது இந்திய இராணுவ வீரர்கள் தடுத்து நிறுத்தினர். இதன் காரணமாக இரு நாடுகளுக்கும் இடையே 73 நாட்கள் பதட்டம் நீடித்தது. இதே போல் அருணாச்சலப் பிரதேசம், உத்தராகண்ட், காஷ்மீர் எல்லைப் பகுதிகளிலும் இந்தியாவுக்கும் சீனாவுக்கும் இடையே மோதல் நீடிக்கிறது."[18]

இக்கூற்றுகளை உற்று நோக்கின் அண்டை நாடுகளால் நம் தாய்நாடான இந்தியாவிற்கு சிறுசிறு அச்சுறுத்தல்கள் இருப்பதையும், அதனை

நாட்டின் படைவீரர்கள் வீரத்துடனும் அஞ்சாநெஞ்சத்துடனும் முறியடிப்பதையும் அறிய முடிகிறது. மேலும் நாட்டிற்காக வீரர்கள் வீரமரணம் அடைகின்ற செய்தியையும் அறிய முடிகிறது. அண்டை நாடுகளிடையே போர் மூளும் அபாயங்கள் ஏற்படும் சூழல்களில் பெரும்பாலும் பிற நாடுகளின் அமைதி பேச்சுவார்த்தைகள், சண்டை நிறுத்த உடன்படிக்கை மூலமாகவும் தடுக்கப்படுகின்றன.

படை நிற்கும் வகை

படை வீரர்கள் எவ்வகையில் நின்று போர்புரிய வேண்டுமென்பதை,

"தார்தாங்கிச் செல்வது தானை தலைவந்த
போர்தாங்கும் தன்மை யறிந்து" (குறள். 707)

என குறள் கூறுகிறது.

படை வகுக்கும் போது, முன்னே நிறுத்தும் படையும் அதற்குப் பக்கபலமாக நிறுத்தும் படையும் எதிரியினுடைய வலிமை மிக்கத் தாக்குதலை எதிர்த்து நிற்கவும், பின் வெற்றி காணவும், ஆற்றல் மிக்கதாக அமைய வேண்டும் என்று போரில் படைநிற்க வேண்டிய அமைப்பினைக் கூறுகின்றார்.

படைவீரனுக்கான தகுதிகளில் அஞ்சாநெஞ்சமும் வீரமும் உடையவனாக காணப்பட வேண்டுமென்று கூறிய வள்ளுவர் வீரத்தின் அடையாளமாக, வீரர்கள் வீரக்கழலை அணிந்திருந்த செய்தியை,

"சுழலும் இசைவேண்டி வேண்டா உயிரார்
கழல்யாப்புக் காரிகை நீத்து" (குறள். 777)

எனும் குறளில் குறிப்பிடுகிறார்.

போர்கள்

மனித இனத்தின் தோற்றத்திலிருந்தே யுத்தங்கள், போர்கள் என்பவை இருந்தன. வரலாற்றின் அடிப்படையில் ஆட்சி அதிகாரத்தினைத் தக்க வைக்கும் பொருட்டும் போர்கள் மேற்கொள்ளப்பட்டன. இழந்த பொருட்களையும் மரியாதையையும் மீட்டுப் பெறும் பொருட்டும் பல்வேறு போர்கள் தொடர்ந்திருக்கின்றன.

"போர் ஏற்படுவதற்கு மண்ணாசையும் புகழ் பெற வேண்டும் என்ற ஆர்வமும், போரில் இறந்தவர்க்கு வீர சுவர்க்கமுண்டு என்ற நம்பிக்கையும், பெரிய நாட்டை ஆள வேண்டுமென்ற பேராசையும், சில போது மகட்கொடை மறுப்பும் போருக்குக் காரணமாயின."[19]

தொல்காப்பியப் புறத்திணை இயலும் சங்ககால புறநூல்களும் போர்முறைகளைப் பற்றி பலவாறு விவரித்துரைக்கின்றன. புறநானூறு,

"ஒருவனை ஒருவன் அடுதலும் தொலைதலும்
புதுவது அன்று இவ்வுலகத்து இயற்கை"[20]

எனக் கூறுகிறது. இதேப் போன்று புறத்திணையில் வெட்சி, கரந்தை, வஞ்சி, காஞ்சி, உழிஞை, நொச்சி, தும்பை என ஏழு திணைகளும் போரினைக் குறித்து கூறுகிறது.

வள்ளுவர் இவ்வேழு போர்முறைகள் பற்றி குறள்களில் கூறவில்லை. ஆயினும் இருவகைப் போர்முறைகள் பற்றி எடுத்துரைக்கின்றார். அதில் ஒன்று தற்காப்பு மற்றொன்று பகைமேற்சேர்தல் ஆகும். தற்காப்பினைக் குறித்து,

"சிறுகாப்பின் பேரிடத்தது ஆகி உறுபகை

ஊக்கம் அழிப்பது அரண்" (குறள். 744)

என்று கூறுகிறார். பெரியதாக அகன்றுள்ள நாட்டில் சிறிய நுழைவு இடத்தில் நின்று பாதுகாவல் செய்து தொந்தரவு கொடுக்கும் பகைவரை முறியடித்துத் தளரச் செய்வது நல்ல பாதுகாவல் என்பதை இதனின்று விளக்குகிறார்.

மேலும் தவிர்க்க இயலாத சூழலில் பகைவன் மேல் படைமேற்கொண்டு செல்வதை,

"கைவேல் களிற்றொடு போக்கி வருபவன்

மெய்வேல் பறியா நகும்" (குறள். 744)

"விழித்தகண்வ்கொண் டெறிய அழித்திமைப்பின்

ஒட்டன்றோ வன்க ணவர்க்கு" (குறள். 775)

"பகைஅகத்துச் சாவார் எளியர்" (குறள். 723)

எனும் குறள்கள் விளக்குகின்றன. கையிலேயுள்ள ஒரே வேலால் எதிர்த்து வரும் யானையை மாய்த்து வெற்றியோடு திரும்பி வருபவன். மற்றொரு யானை எதிர்த்த பொழுது, தன் மார்பில் பாய்ந்து கிடந்த வேலை உருவி அதைப் பயன்படுத்தி மகிழ்வான். பகையரசன் தன் மேல் வேலால் எறிந்த போது தனது வெற்றியில் கருத்தூன்றி விழித்த கண்ணோடு நின்ற வீரன் மனம் மாறித் தற்பாதுகாவலுக்காக அஞ்சி இமைத்து விடுவானால் அதுவே அந்த நெஞ்சுறுதியுடைய வீரனுக்குத் தோல்வியாகும். வெற்றி கருதிப் போர்க்களத்திலே சென்று உயிர் துறப்பவர் உலகத்திலே எளிமையாகப் பலர் இருப்பார்கள் என்று கூறும் போர்க்களச் செய்திகளிலிருந்து பகைவன் மேல் நுழைவு வாயிலில் மட்டுமின்றி போர்க்களத்திலும் வேற்படையோடும்

யானைப்படையோடும் வீரத்தோடு வீரர்கள் போர்புரிந்ததை அறிந்து கொள்ள முடிகிறது.

போர்நெறிகள்

போரின் போது யாருக்கெல்லாம் துன்பத்தைக் கொடுக்கக்கூடாது என பழந்தமிழர்கள் நெறி வகுத்துள்ளனர். மணிமேகலை போர்நெறியினைக் குறித்து,

"பார்ப்பார் அறவோர் பசுபத்தினிப் பெண்டிர்
மூத்தோர் குழவியெனும் இவரைக் கைவிட்டு
தீத்திறத்தார் பக்கமே சேர்க"[21]

என்று கூறுகிறது. பார்ப்பார், துறவிகள், பசுக்கள், பத்தினிப் பெண்கள், முதியவர்கள், சிறுவர்கள் இவர்களுக்கு எவ்வித இன்னலும் ஏற்படாதவாறு போர்புரிய வேண்டுமென்ற தமிழர்களின் உள்ள நிலையை இதன் வழி உணர முடிகிறது.

போரில் அஞ்சிநடுங்குபவரை நடத்தும் விதத்தினை குறித்து,

"பேராண்மை என்ப தறுகண்ஒன்று உற்றக்கால்
ஊராண்மை மற்றதன் எ∴கு" (குறள். 773)

என்று குறள் குறிப்பிடுகின்றது. போரில் எதிரியிடம் அஞ்சாநெஞ்சத்தோடு போர்புரிவது வீரச் செயல்தான், ஆனால் போரில் பகைவன் தன்முன் துன்பநிலையில் அடைக்கலம் புகுந்தால் அவனுக்கு இரக்கம் காட்ட வேண்டும் என்பதை அறிய முடிகிறது.

வள்ளுவர் கூறுகின்ற போர் நெறி எந்தகாலத்திலும் எல்லா சூழ்நிலைகளிலும் பின்பற்றத்தக்க வகையிலே கூறப்பட்டுள்ளன. இன்றைய

போர்முறைகள் ஆயுதமில்லாத நிராயுதபாணியினைத்தாக்குவதும், பண்டைய போர் மரபுகளுக்கு எதிராக பெண்கள், சிறு குழந்தைகள் மற்றும் முதியவர்களை கொன்று குவிப்பதும் நடைமுறையில் காணப்படுகிறது. மேலும் தன்னிடம் சரணடைந்த எதிரி நாட்டு வீரனை ஈவு இரக்கமின்றி சித்ரவதைச் செய்து கொலைச் செய்கின்ற நிலையும் காணப்படுகிறது. வள்ளுவர் கூறுகின்ற பகைநாட்டு வீரனோ, பொதுமக்களோ அடைக்கலம் புகுந்தால் அவர்களுக்கு இரக்கம் காட்ட வேண்டும் என்பது உலக நாடுகளுக்கும் பொருந்தும்.

"இந்திய நாட்டின் காஷ்மீரிலுள்ள கார்கில் பகுதியை பாகிஸ்தான் இராணுவம் கைப்பற்றிய போது, கார்கிலை கைப்பற்றுவதற்காக இந்தியா போரினை மேற்கொண்டது. இப்போரிற்கு 'ஆப்பரேஷன் விஜய்' என்று பெயரிட்டனர். இப்போர் 1999- ஆம் ஆண்டு மே மாதம் முதல் ஜூலை மாதம் வரை நடந்தது. இப்போரில் பாகிஸ்தானின் படையில் 4,000பேரும், இந்தியப் படையில் 527 பேரும் உயிரிழந்தனர். கடைசியில் இந்தியா கார்கிலை கைப்பற்றி போரில் வெற்றிப் பெற்றது. இப்போரானது ஜூலை 19-ஆம் தேதி முடிவுக்கு வந்தது."[22]

இதுவே இந்தியா நடத்திய கடைசி போராகும். சமீபத்திய காலங்களில் பிறநாடுகளோடு போரின்றி அமைதியான நிலையில் அண்டை நாடுகளோடு நட்புறவுடன் இருந்து வருகிறது.

அமைச்சர்

அமைச்சர் எனும் சொல் 'அமை' என்னும் சொல்லின் அடிப்படையில் அமைந்த சொல்லாகும். 'அமை' என்பதற்குச் செந்தமிழ் சொற்

பிறப்பியல் பேரகரமுதலி “நெருங்குதல், கூடுதல், பொருந்துதல், நட்பாய் பொருந்துதல், உடன்படுதல் எனும் பொருளினைக் குறிப்பிடுகிறது.”[23]

‘அரசன் எவ்வழியோ குடிமக்கள் அவ்வழி’ என்பது பண்டைய பழமொழி ‘அமைச்சன் எவ்வழியோ குடிகள் அவ்வழி’ என்பது புதுமொழியாக விளங்குகிறது.

“அமைச்சனானவர் அரசனுக்கு அண்மையில் இருந்து அரசன் ஆணைகளை நிறைவேற்றவும், அரசனுக்கு ஆலோசனை கூறவும் அமைந்த அறிவுடைச்செயலாளர்”[24] என்று ஜி. வரதராசன் அவர்கள் குறிப்பிடுகின்றார். நல் அமைச்சனைக் குறித்து,

“கருவியும் காலமும் செய்கையும் செய்யும்
அருவினையும் மாண்டது அமைச்சு” (குறள்.631)

“வன்கண் குடிகாத்தல் கற்றறிதல் ஆள்வினையோடு
ஐந்துடன் மாண்டது அமைச்சு” (குறள்.682)

என்று குறள்கள் மெய்ப்பிக்கிறது. அமைச்சன், கருவி, காலம், செயலைச் செய்யும் முறை, செயல் ஆகிய எல்லாவற்றையும் செம்மையாக செய்பவன், உறுதித்தன்மை, குடிமக்களுக்கு தீமை வராமல் பாதுகாத்தல், கல்வி, செயலை ஆளும் திறமை ஆகியவற்றை கொண்டவனே நல்ல அமைச்சன் என்பதை இதன் வழி புலப்படுத்துகின்றார்.

பணிகள்

சிறந்த அமைச்சனின் பணிகளை,

“பிரித்தலும் பேணிக் கொளலும் பிரிந்தார்ப்
பொருத்தலும் வல்லது அமைச்சு” (குறள்.633)

"தெரிதலும் தேர்ந்து செயலும் ஒருதலையாகச்

சொல்லலும் வல்லது அமைச்சு" (குறள்.634)

"அறன்அறிந்து ஆன்றமைந்த சொல்லான் எஞ்ஞான்றும்

திறன்அறிந்தான் தேர்ச்சித் துணை" (குறள்.635)

"உலகத்து இயற்கை அறிந்து செயல்" (குறள்.637)

"அறிக்கொன்று அறியான் எனினும் உறுதி

உழைஇருந்தான் கூறல் கடன்" (குறள்.638)

எனும் குறட்பாக்கள் வலியுறுத்துகின்றன. அமைச்சன் அரசனுக்கு வேண்டியவர்களை சந்தர்ப்பத்திற்கேற்ப விலக்கியும், வேண்டாதவனை புத்திசாலியாய் விரும்பி அமைத்தும் செய்கின்ற செயலை செம்மையாக செய்து முடிக்க வேண்டும். பலதுறை பற்றிய ஆராய்ந்த அறிவும், பின்னர் நிகழ்வதை முன்கூட்டியே சொல்லும் திறனும், உலக மக்களின் விருப்பு வெறுப்புகளை அறிந்து பொருந்துவனவற்றை செய்பவனாக இருக்க வேண்டும் என்று கூறுவதிலிருந்து சிறந்த அமைச்சனின் பணிகளை அறிந்து கொள்ள இயலுகிறது.

தகுதியற்ற நிலை

அரசனோடு உடன் இருப்பவர்களின் தகுதியற்ற நிலையை,

"பழுதெண்ணும் மந்திரியின் பக்கத்துள் தெவ்வோர்

எழுபது கோடி உறும்" (குறள்.639)

"முறைப்படச் சூழ்ந்து முடிவிலவே செய்வர்

திறப்பாடு இலாஅ தவர்" (குறள்.640)

எனும் குறள்கள் வழி உணர்த்துகிறார்.

தீமை என்னும் படியான அமைச்சன் ஒருவன் பக்கத்தில் இருப்பது எழுபது கோடி பகைவர்கள் உடனிருப்பது போன்றது என்றும், செயல் செய்யும் திறமை இல்லாதவர் நீதிநெறிக்கேற்ப ஆராய்ந்தாலும் நற்பயனைத் தரும் செயல்களைச் செய்து முடிக்க மாட்டார்கள் என்று கூறுவதிலிருந்து தகுதியற்ற அமைச்சன் அமைச்சரவையில் இருந்தால் அவனால் நன்மை ஒன்றும் இல்லை. அவனால் தீமையே நிகழும் என்பதை இதன் வழி வள்ளுவர் எடுத்துரைக்கிறார்.

அறிவுரைகள்

அமைச்சன் எப்படி பிறரிடம் நடந்து கொள்ள வேண்டும் என்பதற்கான அறிவுரையை,

“ஆக்கமும் கேடும் அதனால் வருதலால்
காத்தோம்பல் சொல்லின்கண் சோர்வு” (குறள்.642)

எனும் குறளில் காண முடிகிறது. தான் முன்னே சொன்னபடி மறக்காமல் செயலைச் செய்ய வேண்டும். அச்செயலைச் செய்து விட்டால் அதனால் வாழ்வும், செயலைச் செய்யாது மறந்து விட்டால் தாழ்வும் அடைவது உறுதி. மேலும் செய்யக்கூடிய செயலுக்கு எற்ற அளவில் பேசுதலும், பகைவர் குற்றம் காணாதபடி பேச வேண்டும். கோபம், மறதி, அறியாமையால் தவறி பேசுவதிலிருந்து காத்துக் கொள்ள வேண்டும் என்று வள்ளுவர் வழிகாட்டுகிறார்.

இவ்வறிவுரை இக்கால அமைச்சர்களுக்கும் முற்றிலும் பொருந்தும். இன்றைய அமைச்சர்களின் நிலையை மக்களுக்குச் செய்கிறேன் என்ற போர்வையில் மக்களை ஏமாற்றும் மந்திரிகளையும் அடையாளப்படுத்தி, ஏமாற்றும் அரசியல்வாதிகளிடம் எச்சரிக்கைத் தேவையென்றும் குடிமக்களிருவரின் உடையாடலை கீழ்வரும் பாடல் எடுத்தியம்புகிறது.

"மந்திரி சொன்னாரே
எல்லோரும் இந்நாட்டு
மன்னராமே
என ஒருவர் சொல்ல,
மன்னர்களுக் கேதப்பா
மரியாதை?
எல்லோரும் இந்நாட்டு
மந்திரிகள் ஆவதெப்போ?"[25]

இவ்வரிகளின் வழி முடிசூடிக்கொண்ட மன்னர்கள் மக்களுக்காக நல்லதைச் செய்தனர். ஆனால் தேர்ந்தெடுக்கப்பட்ட மந்திரிகள் சுயநலவாதிகளாகவே இருக்கின்றனர் என சாடுவதை காண முடிகிறது.

தேர்தலின் போது மக்களுக்குச் செயல்களையும், நல்வாழ்வுத் திட்டங்களையும் முடிப்பதாக வாக்குறுதிகளை அளிப்பதும் தேர்தலில் வெற்றி பெற்றபிறகு தான் கூறிய வாக்குறுதிகளைப் பெருமளவு மறந்து விடுவது இக்கால அமைச்சர்களின் நடத்தையாக காணப்படுகிறது. மேலும் வள்ளுவர் கூறுவது போன்று அல்லாமல், எதிர்க்கட்சிகள் குறைகூறுகின்ற அளவிற்கு கருத்துக்களை வெளிப்படுத்தி, தேவையற்ற பிரச்சினைகளை அவதூறு வழக்குகள், மானநஷ்ட வழக்குகள் மூலமாகவும் எதிர்கொள்ளும் நிகழ்வுகள் இன்றைய அரசியலில் சர்வ சாதாரணமான நிகழ்வாக காணப்படுகிறது.

தூது

ஒரு நாடு மற்றொரு நாட்டில் கண்ணியமாய் நடத்தப்படுவதற்கும். இரண்டு நாடுகளிடையே நேச மனப்பான்மை வளர்வதற்கும் தூதர்களே

முக்கியமானவர்கள் ஆவார்கள். தூதர்களினைக் குறித்து சாமி. சிதம்பரனார் "ஒரு நாட்டுக்கும் மற்றொரு நாட்டுக்கும் கருத்து வேற்றுமை ஏற்படும் போது, அதைப் பற்றி இரண்டு நாடுகளும் கலந்து பேசி முடிவுகாண வேண்டும். இப்படிக் கலந்து பேசுகின்றவர்கள் தூதுவர்கள்"[26] என்று விளக்கமளிக்கிறார்.

பிற நாட்டு அரசனிடம் வெளிப்படையாய்ச் சென்று தன் நாட்டு அரசரின் பணியைச் சொல்வதும், அந்த நாட்டினுடைய நிலையை அறிவதும் தூதுவனின் கடமையாகும். தொல்காப்பியம்,

"ஓதலுந் தூது முயர்ந்தோர்மேன"[27]

என தூதினைக் குறிக்கிறது. தூதுவனின் பண்பினை,

"அன்பறிவு ஆராய்ந்த சொல்வன்மை தூதுரைப்பார்க்கு
இன்றி அமையாத மூன்று" (குறள்.682)

"அன்புடைமை ஆன்ற குடிப்பிறத்தல் வேந்துஅவாம்
பண்புடைமை தூதுரைப்பான் பண்பு" (குறள்.681)

"தொகச்-சொல்லி தூவாக நீக்கி நகச்சொல்லி
நன்றி பயப்பதாம் தூது" (குறள்.685)

"கற்றுக்கண் அஞ்சான் செலச்சொல்லி
தக்கவது அறிவதாம் தூது" (குறள்.686)

"தூய்மை துணைமை துணிவுடைமை இம்மூன்றின்
வாய்மை வழியுரைப்பான் பண்பு" (குறள்.688)

எனும் குறள்கள் இயம்புகின்றன. தூதுவன் அன்புநிறைந்த மனம், நல்லது தீயது என அறியும் பகுத்தறிவு, தாம் எண்ணிய படி பிறரைச் செய்யும் படி சொல்லும் திறமை, உயர்குடியில் பிறத்தல், அரசன் மதிக்கும் படி தகுதிவுடைமை, சொல்ல

வேண்டிய பொருளைத் தொகுத்துச் சொல்லும் திறன், மாற்றரசனுக்குப் பொருந்தாதவற்றை சொல்லும் போது அவனுக்குத் தரக்கூடிய வகையில் தன்னரசனுக்கு நன்மை தரக்கூடியவனாகவும், கற்றவனாகவும், அஞ்சாநெஞ்சம் உடையவனாகவும், சூழ்நிலைகளை அறிந்து கொள்பவனாகவும், உண்மைத் தன்மை உடையவனாகவும், தன்னரசனுக்குத் துணையாகவும், தனக்கு வரும் இடர்களுக்கு அஞ்சாதவனாகவும் இருக்க வேண்டும் என வள்ளுவர் கூறுவதை உணர முடிகிறது.

இன்றைய அரசியல் சூழலில் அண்டைய மற்றும் நட்பு நாடுகளுக்கு இடையே அந்நாட்டுக்கென்று தூதுவர்கள் காணப்படுகின்றனர். ஒவ்வொரு நாட்டிற்கும் நியமிக்கப்பட்டிருப்பவர் அந்நாட்டின் தூதுவராக செயல்படுவார். ஒரு நாட்டின் குடிமகன் தொழில் முதலான பணிக்காக எந்த நாட்டிற்குச் சென்று நாட்டிற்கு திரும்பி வர துன்பப்பட்டாலும் அந்நாட்டின் தூதுவர் துணையோடு அவர்களின் துன்பத்தைப் போக்கி, அவர்களின் சொந்த நாட்டிற்கு அனுப்புவதற்கும், நாட்டிற்கிடையேயான உடன்படிக்கைகள், பேச்சுவார்த்தை-களுக்கு தூதுவரின் பங்கு மிக முக்கியமானதாக காணப்படுகிறது. ஒவ்வொரு நாட்டிற்குரிய தூதரகங்கள் நம் நாட்டிலும் செயல்பட்டு கொண்டிருக்கின்றன. சான்றாக அமெரிக்க நாட்டிற்காக அமெரிக்க தூதரகமும் இலங்கை நாட்டிற்காக இலங்கை தூதுரகமும் இந்தியாவில் இயங்குவதை சான்றாகக் கொள்ளலாம்.

ஒற்றர்கள்

‘ஒற்றுதல்’ என்பதற்கு பிறரிடம் உள்ள பொருளைத் தன்னிடம் உள்ளதாகச் சேர்த்துக் கொள்ளல் எனப் பொருள்படும். பிற அரசனிடம் மறைவாக ஒருவரை அனுப்பி அங்கே நடந்தவற்றையும், நடப்பவற்றையும்

அறிந்த அரசனிடம் கூறுபவர் ஒற்றர் எனப்படுவார். ஆங்கிலத்தில் ஒற்றர் என்பதை ‘Spy’ எனக் குறிப்பர். ஒற்றர் வழியாக உளவறிதல் ஒற்றாடல் எனப் பெறுகிறது.

ஒற்றர்களைக் குறித்து ‘ஒற்றராவார் அவ்வக் காலத்திற்கும் இடத்திற்கும் ஏற்ப மாறுகோலம் பூண்டு, பகையரசர் இடம் புகுந்து, பிறர் ஐயுறாதவாறு அங்குள்ள அருமறைகளையும், மருமங்களையும், திறமையாக அறிந்தும், ஐயுற்றும், பகைவராற் கைப்பற்றப்பட்டு உயிர்க்கிறுதி நேரினும் வாய் சோர்ந்து உண்மை வெளியிடாதவராய், செய்திகளையெல்லாம் உடனுக்குடன் அரசனுக்கு மறைவாக வந்து உரைக்கும் மாபெருந் திறவோரும், மறவோரும் ஆவர்”[28] என்று ஞா. தேவநேயப் பாவணர் அவர்கள் குறிப்பிடுகின்றார். வள்ளுவர் ஒற்றருக்கான இலக்கணமாக,

“வினைசெய்வார் தம்சுற்றம் வேண்டாதார் என்றாங்கு
அனைவரையும் ஆய்வது ஒற்று” (குறள்.584)

“கடாஅ உருவொடு கண்ணாஞ்சாது யாண்டும்
உகாஅமா வல்லதே ஒற்று” (குறள்.585)

என்று கூறுகிறார்.

அரசனது வேலைகளைச் செய்பவரையும், அவனது உறவினரையும், நாட்டு எதிரிகள் என்ற மூன்று பிரிவினரையும் ஆராய்ந்து அவர்களைத் தெரிந்து கொள்பவனும், பார்த்தால் சந்தேகமில்லாத உருவத்தோடும், அஞ்சாத மனப்பான்மையோடும், எவ்வித துன்ப நிலைமையிலும் மனத்தில் கொண்ட எண்ணத்தை வெளியிடாமலும் அஞ்சாமலும் இருப்பவனே ஒற்றன் என வள்ளுவர் தெளிவு செய்கிறார். ஒற்றரின் தன்மையாக,

"மறைந்தவை கேட்கவற் றாகி அறிந்தவை

ஐயப்பாடு இல்லதே ஒற்று" (குறள்.587)

என குறள் உணர்த்துகிறது. பிறரால் உணர முடியாத இரகசியப் பொருள்களைக் கேட்டுக் தெரிந்து கொள்வதும் அவ்வாறு தெரிந்த பொருள்களைக் கொஞ்சமும் சந்தேகமில்லாமல் உணர்ந்து கொள்வதுமே ஒற்றர் தன்மை என்பதை வள்ளுவர் தெளிவுறுத்துகிறார். ஒற்றர்களின் வேடத்தினைக் குறித்து பின்வரும் குறள் வழி அறிய முடிகிறது.

"துறந்தார் படிவத்தர் ஆகி இறந்தாராய்ந்து" (குறள்.586)

முனிவர் வேடந்தரித்தோ அல்லது மாறுவேடம் பூண்டு செல்பவர் என ஒற்றரின் வேடத்தை வள்ளுவர் குறிப்பிடுகிறார்.

அரசனும் ஒற்றரும்

அரசனுக்கும் ஒற்றர்களுக்குமுரிய தொடர்பினை,

"ஒற்றொற்றித் தந்த பொருளையும் மற்றும் ஓர்

ஒற்றினால் ஒற்றிக் கொளல்" (குறள்.588)

"ஒற்றொற்று உணராமை ஆள்க உடன் மூவர்

சொல்தொக்க தேறப் படும்" (குறள்.589)

என்று குறள் சுட்டுகிறது. ஒற்றர் ஒருவர் அறிந்து வந்து சொல்லிய பொருளை இன்னொரு ஒற்றரின் மூலம் மீண்டும் விசாரித்து அரசன் அறிந்து கொள்ள வேண்டும். ஒரு ஒற்றரின் செயலை அறிவதற்கு அவர் தெரிந்து கொள்ளாதபடி, வேறொரு ஒற்றரை அமைக்க வேண்டும். மேலும் மூன்று ஒற்றர்களும் சொல்லும்படியான விஷயங்களும் ஒன்றாக இருந்தால் உண்மையென்று அரசன்

தெளிவு பெற வேண்டும். ஒற்றன் கூறும் செய்தியின் உண்மைத்தன்மையை அரசன் அறியும் முறையினை வள்ளுவர் வழிநின்று அறிய முடிகிறது.

மேலும் ஒற்றனுக்கு அரசன் வெளிப்படையாக சிறப்பு செய்யக் கூடாது என்பதை,

“சிறப்பறிய ஒற்றின்கண் செய்யற்க; செய்யின்
புறப்படுத்தான் ஆகும் மறை” (குறள்.590)

எனும் குறள் மூலம் வலியுறுத்துகிறார்.

இன்றைய வாழ்வியல் சூழலில் ஒற்றர் பணியினை உளவுத்துறை அமைப்புகள் மேற்கொள்கின்றன. பிறநாட்டவர் அனுமதியின்றி நம் நாட்டிற்குள் ஊடுருவி நாட்டின் பாதுகாப்பைக் குலைக்க சதிவேலைகளில் ஈடுபடுதல், வன்முறையைத்தூண்டி கலவரங்களை உருவாக்குதல், அரசியல் தலைவர்கள் மற்றும் நாட்டின் உயர் பதவி வகிப்போரின் உயிருக்கு அச்சுறுத்தல் போன்றவைகளை உளவுத்துறையினர் தீவிரமாக கண்காணித்து எச்சரிக்கைச் செய்யும் பணியினை மிக நேர்த்தியாக புரிகின்றனர்.

அலுவலர்களைத் தேர்வு செய்தல்

எல்லாராலும் எல்லா பணிகளையும் திறன்பட செய்தல் இயலாது. அரசனானவன் அரசுப் பணிகளில் அலுவலர்களைப் பணியமர்த்தும் போது ஆழ்ந்த ஆராய்ச்சிக்கு பிறகே பணியமர்த்த வேண்டும். முடியாட்சி காலத்தில் பணியாளரின் குணங்களை அரசன் அறிந்து கொள்வதை.

“நாடோறும் நாடுக மன்னன் வினை செய்வான்
கோடாமை கோடா துலகு” (குறள்.520)

எனும் குறள் விளக்குகிறது.

பணியினைச் செய்து கொண்டிருப்பவன் ஒழுங்காகப் பணியினை செய்து கொண்டிருக்கிறானா, பணிகள் ஒழுங்காக நடக்கிறதா என்பதை அரசன் தினந்தோறும் கண்காணித்துக் கொண்டிருக்க வேண்டுமென்பதை இதன் வழி அறிய முடிகிறது. இக்கூற்று இன்றைய நடைமுறைக்கும் ஒத்ததாகும். அரசுப் பணியில் இருப்போர் எந்நிலையில் தம் பணியினைச் செய்கின்றனர் என்பதை கண்காணித்தால் குடிமக்களுக்கு அரசு சார்ந்த உதவிகள் பெறுவதற்கு உதவியாகக் காணப்படும்.

இன்றைய அரசில் உளவறியும் பணி, பல்வேறு அமைச்சுப் பணிகள், அரசு சார்ந்த குடிமைப் பணிகள், நாட்டின் பாதுகாவல், வங்கித் தொழில் மற்றும் ஊர்தி சார்ந்த ஒவ்வொரு பணிக்கும் அந்தந்தப் பணியில் படித்து தகுதி பெற்றவரை அமர்த்தினால் நிர்வாகம் சரிவர நடக்கும் என்பதை,

“எனைவகையான் தேறியகண்ணும் வினைவகையான

வேறாகும் மாந்தர் பலர்” (குறள்.514)

எனும் குறள் வலியுறுத்துகிறது. இவ்வாறு பணியாளர்களை பணியமர்த்தாவிடில் நாட்டின் நிர்வாகத்தில் பல வழிகளில் இடையூறு எழுந்து இன்னல் ஏற்படும் என்பதற்கு ஐயமில்லை.

பணியாளரின் குணங்கள்

அரசு சார்ந்த பல தரப்பட்ட துறைகளில் பணியாற்றும் பணியாளரின் குணங்களைக் குறித்து,

“தன்மையும் தீமையும் நாடி நலம்புரிந்த

தன்மையான் ஆளப் படும்” (குறள்.511)

"வாரி பெருக்கி வளம்படுத்து உற்றவை

ஆராய்வான் செய்க வினை" (குறள்.512)

"அன்புஅறிவு தேற்றம் அவாஇன்மை இந்நான்குப்

நன்கு உடையான்கட்டே தெளிவு" (குறள்.513)

எனும் குறள்கள் வலியுறுத்துகின்றன. ஒரு செயலைச் செய்யும் முன் நன்மையும் தீமையும் எண்ணிப் பார்த்து நன்மை தரும் செயல்களையே நாடும் பண்புடையவனாகவும் அரசின் வருவாயை பெருக்க வல்லவனாகவும் செல்வத்தைச் சிறக்க வைப்பவனாயும், வினைகளுக்கான இடையூறுகளை அகற்ற வல்லவனாயும் ஆளுபவன் மேல் அன்பு ஆகும் செயல்கள் பற்றிய அறிவு, செய்யும் செயலில் கலங்காமை, கையூட்டு வாங்காமை ஆகிய குணங்களைக் கொண்ட நல்லோரிடத்தில் நம்பிக்கை வைக்க வேண்டும் என்று வள்ளுவர் இன்றைய அரசிற்கும் பணியாளர்களுக்கும் அறிவுரை கூறி வழிகாட்டுகின்றார்.

வள்ளுவர் கூறுகின்ற மேற்கண்ட குணங்கள் பெரும்பாலும் குறைந்த வண்ணமே காணப்படுகிறது. பெருமளவில் தங்களது பணிகளைச் சரிவரச் செய்யாமல் இருப்பது போன்ற குற்றங்களைப் புரிகின்றனர்.

இதற்கு விலக்காக சில அதிகாரிகள் செய்கின்ற செயல்களில் கலக்கமின்றி, கையூட்டுப் பெறாமல், மக்களுக்கு பயன்தரும் திட்டங்களை பல எதிர்ப்புகளின் மத்தியிலும் செயல்படுத்தி, மக்கள் மத்தியில் புகழடையவும் செய்கின்றனர். அரசுத் துறைகளில் காணப்படும் முதல்வர்கள், அமைச்சர்கள், அதிகாரிகள் மீதான ஊழல் புகார்களை விசாரிக்க வகை செய்யும் "தமிழ்நாடு லோக ஆயுக்தா சட்டம் 2018 சட்டப்பேரவையில் நிறைவேற்றப்பட்டுள்ளது"[29] இச்செய்தியின் வழி முதல்வர்கள், அமைச்சர்கள் மீது ஊழல் புகார்களும் தெரிவிக்க முடியுமென்பதை அறிய முடிகிறது. "மத்திய அரசில் ஒன்றிய

பொதுப்பணித் தேர்வாணையம் (Union Public Service Commission) செயல்பட்டு வருகிறது. மாநிலங்களில் மாநில பொதுப்பணித் தேர்வாணையம் (State Public Service Commission) செயல்பட்டு வருகின்றன. மத்திய அரசின் இடை மற்றும் கீழ்நிலை ஊழியர்களைத் தேர்ந்தெடுக்க பணியாளர்கள் தேர்வு ஆணையம் (Staff Selection Commission) செயல்பட்டு வருகிறது."[30]

இன்றைய கால வாழ்வியலில் அரசு சார்ந்த பதவிகளுக்குப் போட்டித் தேர்வுகள் மத்திய, மாநில அரசுகள் சார்பில் நடத்தப்படுகிறது. இதன் வழி பெரும்பாலும் அரசுப் பணியாளர்கள் தேர்வு செய்யப்படுகின்றனர்.

வரிகள்

பொருளாதாரத்தில் வளர்ச்சிப் பெற்ற அரசாங்கமே வலிமைப் பெற்றதாகும். பொருளாதார நிலையின் அடிப்படையிலே நாடுகளை வளர்ச்சியடைந்த நாடு, வளருகின்ற நாடு, வளர்ச்சியடையாத நாடு என வகை செய்கின்றனர். செல்வமற்ற அரசாங்கம் பொருளாதார ரீதியில் பல சீரழிவுகளைச் சந்திக்கும். இதனால் எதிர்கால சந்ததிகள் தங்களுடைய வாழ்வையும், அடிப்படைத் தேவைகளையும் பெற இயலாத நிலை ஏற்படும். உலக நாடுகளில் மிகவும் நலிவடைந்த, பொருளாதாரத்தில் பின்தங்கிய நாடாக எத்தியோப்பியாவை சான்று பகரலாம்.

ஒரு நாட்டை ஆளுபவருக்கு அரசாங்கத்தின் செல்வத்தைப் பாதுகாக்கும் திறமையும், அரசாங்கத்திற்குப் பொருள் வரும் வழிகளைக் கண்டுபிடிக்கும் அறிவும் வேண்டும். இதனை,

"இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த
வகுத்தலும் வல்லது அரசு" (குறள்.385)

என குறள் சுட்டுகிறது. பொருள் வரும் வழிகளை உண்டாக்குதலும் வந்த பொருள்களை ஒன்று சேர்த்தலும், ஒன்று சேர்ந்த பொருளைக் காப்பாற்றுதலும், காப்பாற்றிய பொருளைத் திட்டமிட்டுச் செலவு செய்தலும் வல்லதே நல்ல அரசாங்கம் என்பதை இதன் வழி புரிய முடிகிறது.

அரசிற்குப் பொருள் வரும் முறையில் மிக முக்கியமானது வரியாகும். வரி என்பது மக்கள் வருவாயிலிருந்து ஒரு பகுதியை அரசு பெறுவதாகும்.

வரியானது திறை, உல்கு, சுங்கம், புரவு, கப்பம், கொண்டி, உல்குப் பொருள், தொறுபொருள், தண்டப்பொருள், இறை, ஆயம், கடை , கடமை, இரவு, சிற்றாயம், சில்லிறை, குடிமை என இலக்கியங்களில் பல பெயர்களில் குறிப்பிடப்படுகிறது. முத்தொள்ளாயிரம்,

“அரவகல் அல்குலாய்
ஆறில் ஒன்றன்றோ
புரவலர் கொள்ளும்
பொருள்”[31]

என கூறுகிறது. இப்பாடலில் வழி குடிமக்களிடமிருந்து அரசன் முறையாகப் பெற்றுக் கொள்ள வேண்டிய வரிப்பொருள் ஆறில் ஒரு பங்கு என்பதை அறிய முடிகிறது.

வரியின் இன்றியமையாமை

தனிமனிதன் வாழ்வு பெறவும், வளம் பெறவும் ஒரு நாடும் வாழ்வும் வளமும் பெறவும் பொருள் இன்றியமையாதது. அரசானது செயல்பட பொருள் அவசியம் பொருளின் அவசியத்தை,

"பொருளிலார்க்கு இவ்வுலகம் இல்லை" (குறள்.110)

என்று குறள் குறிக்கிறது. பொருளாதார வளர்ச்சி இல்லையென்றால் நாடானது வளம் இழந்து வறுமையில் சிக்க நேரிடும். நாட்டை ஆள்வதற்கும், போர் புரிவதற்கும், நாட்டு மக்களுக்கேற்ற நலத்திட்ட பணிகள் புரிவதற்கும் செல்வம் மிகமிக அவசியம் என்பதை உணர முடிகின்றது.

அரசு பெற்ற வரிகள்

முற்காலத்தில் வரியைப் பல வழிகளில் குடிமக்களிடமிருந்தும், சிற்றரசர்கள் கட்டிய 'கப்பம்' எனப்பெறும் திறை வரியாயும், ஏற்றுமதி இறக்குமதி மூலமும், நெடுஞ்சாலைகளையும், ஆறுகளையும் கடக்கும் போதும், நகர்களுக்குள் நுழையும் போது வசூலிக்கப்படும் சுங்கம் எனப்பட்ட ஆயம் மூலமும் வரிகள் பெறப்பட்டன. வள்ளுவர் காலத்தில் வரிகள் பெற்றமையை,

"உறுபொருளும் உல்கு பொருளும் தன் ஒன்னார்த்
தெறுபொருளும் வேந்தன் பொருள்" (குறள்.756)

என குறள் எடுத்துக் கூறுகின்றது. 'உறுபொருளும்' என்ற சொல்மூலம் மன்னருக்கு மக்கள் வரி செலுத்திய செய்தியை அறிய முடிகிறது. மேலும் அரசு ஏற்றுமதி இறக்குமதியோடு உள்நாட்டு சுங்கவரிகள் மூலமும் வருவாய் ஈட்டியதையும் அறிய முடிகிறது.

அரசனின் கொடுங்கோலாட்சியை அரசனின் வரிவிதிப்பின் மூலம் அறியலாம். மக்களின் வாழ்வு நிலையை மீறி அரசன் வரியைப் பெறும் அவலநிலையை,

"வேலொடு நின்றான் இடுஎன் றதுபோலும்
கோலொடு நின்றான் இரவு" (குறள்.552)

எனும் குறள் தெரிவிக்கிறது. அரசன் முறையின்றி மக்களிடம் வரிவசூல் செய்வது கொள்ளையடிப்பதைப் போன்றது என்று அதிக வரிவதிப்பின் கொடியத் தன்மையை இங்கு விவரிக்கிறார்.

இந்தியா சுதந்திரமடைந்த பிறகு அரசு பொருளாதாரத்தை மேம்படுத்த நிலவரி, தனிமனித வருமானவரி, நிறுவன வருமான வரி, அன்பளிப்பு வரி, செலவு வரி, சுங்கத் தீர்வைகள், செய்பொருள் வரி, வேளாண்மை வருமான வரி, மோட்டார் வண்டி வரி, மாநகராட்சி வரிகள், ஆயத்தீர்வை, இரயில் மற்றும் விமான பயணத்திற்குச் செலுத்தும் கட்டணத்தில் வரி என பலவகைகளில் வரியை மக்களிடமிருந்து பெற்றது. நடப்பு அரசு மேற்கண்ட வரிகளில் சில வரிகள் தவிர்த்து பிறவரிகளை நாடு முழுவதும் ஒரே வரியை அமல்படுத்தும் விதமாக ‘சரக்கு மற்றும் சேவை வரி’ (Goods & Sales Tax) எனும் ஜி.எஸ்.டி-யை 30.06.2017 அன்று நள்ளிரவில் அமலுக்கு கொண்டு வந்தது.[32]

இதன்படி நாடு முழுவதும் ஒரே முறையில் வரி வசூலிக்கப்படுகிறது. மேலும் சொத்து மற்றும் தனிநபர் வருமான வரிகளை குறிப்பிட்ட காலத்திற்குள் கட்டவில்லையெனில் அரசு அவர்களை கண்காணிக்கவும், நீதிமன்றங்கள் மூலமாக வழக்குகளைத் தொடர்ந்து தண்டிக்கவும் செய்கிறது.

தண்டனைகள்

முற்காலத்தில் குற்றத்தில் ஈடுபடுபவர்களுக்கு கடுமையான தண்டனைகள் வழங்கப்பட்டன. சீவக சிந்தாமணியில் அரசன் குற்றத்தின்

பொருட்டு தண்டித்த போது ‘நடை விளக்கெரித்தல்’ எனும் கடுந்தண்டனை குறிப்பிடப்பட்டுள்ளது. “கைவிரல் முதலிய உறுப்புகளை எண்ணெயில் தோய்த்து தீ வைத்து எரிப்பது இந்நடைவிளக்கெரியும் தண்டனை”[33] எனக் கூறுகிறது.

மக்களைக் காக்க வேண்டிய அரசன் சில நேரங்களில் தண்டனைகளை வழங்க நேரிடும். மனு ஸ்மிருதி “கொலைத்தொழில் புரிந்த க்ஷத்திரியர், வைசியர், சூத்திரர் ஆகிய மூன்று வர்ணத்தார்களையும் தூக்கிலிட வேண்டும் ஆயின் அந்தணர் ஒருவர் கொலைக் குற்றம் புரிந்தால் அவருடைய தலைமுடியை மொட்டையடித்தாலே போதுமானதாகும்”[34] என்று கூறுகிறது.

ஆனால் வள்ளுவர் கொலை செய்பவரையும் கொலையை ஒத்த கொடுஞ் செயல்கள் செய்கின்றவர்களையும் கொலைத் தண்டனைக் கொடுத்து தண்டிப்பது தவறல்ல என்பதை,

“கொலையின் கொடியாரை வேந்தொறுத்தல்” (குறள்.550)

எனும் குறள்வழி தெளிவுபடுத்துகின்றார்.

கொலைத் தண்டனையைக் குறித்து கூறிய குற்றவாளிகளுக்குத் தண்டனையை ஆதரிக்கும் அதே நேரத்தில் குற்றத்தின் தன்மையையும், குற்றம் செய்தோர் தகுதியையும் ஆராய்ந்து அக்குற்றம் மீண்டும் நடக்காதவாறு நடுவுநிலைமையோடு நின்று குற்றத்திற்கேற்ப தண்டனை அளிக்க வேண்டும். குற்றம் செய்வோரைக் கடுமையான விசாரணைக்கு உட்படுத்தி குறைந்த தண்டனை விதிக்க வேண்டுமென்பதை,

“தக்காங்கு நாடி தலைச்செல்லா வண்ணத்தால்
ஒத்தாங்கு ஒறுப்பது வேந்து” (குறள்.561)

"கடித்தோச்சி மெல்ல எறிக நெடிதாக்கம்

நீங்காமை வேண்டு பவர்" (குறள்.562)

போன்ற குறள்கள் வழி தெளிவுப்படுத்துகின்றார்.

முற்காலத்தைப் போன்று கொடுமையான தண்டனைகள் இன்றைய மக்களாட்சியில் பெரும்பாலும் கொடுக்கப்படவில்லை எனலாம். ஆனால் இன்றைய வாழ்வியலில் கொடுமையான குற்றங்கள் புரிவோருக்கு அதிகபட்சமாக தூக்குத்தண்டனையும், ஆயுட்கால சிறைதண்டனையும் வழங்கப்படுகிறது. மேலும்,

"தேசிய மனித உரிமைகள் ஆணையம் (National Human Rights Commission), மாநில மனித உரிமைகள் ஆணையங்கள் (State Human Rights Commission), மத்தியப் புலனாய்வு ஆணையம் (Central vigilance Commission), மத்திய புலனாய்வுத் துறை (Central Bureau of Investigation)"[35] போன்றவைகளும், பொருளாதார ரீதியில் மோசடி செய்வோர் திருடுதல் போன்ற குற்றங்களை விசாரிப்பதற்கு புலன் விசாரணை, குற்றபிரிவு போன்றவைகள் காணப்படுகிறது. இவர்கள் மூலம் தீவிர விசாரணை நடத்தப்பட்டு, குற்றத்தின் தீவிர தன்மையைப் பொறுத்து அதிகபட்ச தண்டனைகளும் குறைந்தபட்ச தண்டனைகளும் வழங்கப்படுகிறது.

மேலும் தண்டனைகளை வழங்க இந்திய நாட்டின் உயர்ந்த அதிகாரமுடையதாகக் கருதப்படும் உச்சநீதி மன்றமும், மாநிலங்களின் சார்பில் உயர்நீதிமன்றகளும் காணப்படுகிறது. சிறப்பு வழக்குகளை விசாரிக்க சிறப்பு நீதிமன்றங்களும் செயல்படுகின்றன.

உச்சநீதிமன்றம் வழங்குகின்ற தீர்ப்பே இறுதியானதாகவும் அங்கு வழங்கப்படுகின்ற தண்டனையை மறுபரிசீலனை செய்ய நாட்டின் குடியரசு

தலைவருக்கே அதிகாரம் காணப்படுகிறது. தூக்குத்தண்டனை பெற்றோர் குடியரசு தலைவருக்கு கருணை மனுவின் மூலம் மேல்முறையீடு செய்யவும் வாய்ப்புக்கள் அளிக்கப்படுகிறது.

சிறைத்தண்டனைப் பெற்று சிறைச்சாலைகளில் இருக்கும் கைதிகளுக்கு உணவு, உடை, மருத்துவம் போன்ற அடிப்படை வசதிகளை அரசே ஏற்படுத்திக் கொடுக்கிறது. மேலும் அங்கு கல்வி மற்றும் கைத்தொழில்களைக் கற்கவும் வசதிகள் செய்து கொடுக்கப்படுகிறது. மேலும் கைதிகள் கைத்தொழில்கள் மூலம் வருவாய் ஈட்டவும் சிறைத்துறை வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கின்றது.

மேலும் அரசு சுதந்திரதினம், தலைவர்களின் பிறந்த நாள் போன்ற முக்கிய தினங்களில் நன்னடத்தையின் அடிப்படையில் வயதான கைதிகளுக்கு பொது மன்னிப்பு வழங்குவதை, "மகாத்மா காந்தியின் 150-வது பிறந்த நாளையொட்டி வயதான கைதிகளுக்கு பொது மன்னிப்பு மத்திய சட்ட அமைச்சர் ரவிசங்கர் பிரசாத் அறிவிப்பு"[36] எனும் செய்தி வழி அறிய முடிகிறது.

இந்திய அரசியலமைப்பு

இந்தியநாடு மக்களாட்சி முறையில் தான் செயல்படுகிறது. "இங்கிலாந்தில் பின்பற்றப்படும் பாராளுமன்ற அரசாங்க முறையை (Parliamentary form of Government) தான் இந்திய அமைச்சரவைக் குழு முறை ஒத்திருக்கிறது."[37]

அரசியல் மற்றும் அமைப்பு முறை ஆகிய இருதொடர்களின் சேர்க்கையே அரசியல் அமைப்பு முறையாகும். அரசியல் என்பது அதிகாரம்

(Power) மற்றும் ஆணை பிறப்பித்தல் (Authority) பற்றியதாகும். அமைப்பு முறை ஒன்றுக்கொன்று தொடர்புடைய பகுதிகளைக் கொண்ட முழுமையான அமைப்பாகும். அமைப்பும் அதன் பகுதிகளும் விதிகளுக்கு உட்பட்டு செயல்படுபவை. அரசாங்கத்தின் மூன்று கிளைகள் சட்டமன்றம், ஆட்சித்துறை மற்றும் நீதித்துறையாகும். அரசியல் அமைப்புமுறை என்பது ஒழுங்கு-படுத்தப்பட்ட அரசியல் சார்ந்த அமைப்பும், அரசியல் அமைப்பு பகுதிகளுக்கான தொடர்புமேயாகும்.

குடிமகன்

குடிமகன் (Citizen) என்ற சொல் இலத்தீன் சொல்லான சிவிக்ஸ் என்ற சொல்லின் திரிபாகும்.

அடிப்படைக் கடமைகள்

1976-ஆம் ஆண்டில் சேர்க்கப்பட்ட அரசியலமைப்பில் பகுதி 4அ குடிமகனின் அடிப்படைக் கடமைகளைக் கூறுகிறது.

“தேசியக்கொடியையும், தேசிய கீதத்தையும் மதித்து நடக்க வேண்டும். எல்லா குடிமக்களும் அரசியல் சட்டத்தை மதித்துப் பேண வேண்டும் சுதந்திரத்திற்காகப் போராடிய நமது தலைவர்களை அனைவரும் பின்பற்றி நடக்க வேண்டும். எல்லா குடிமக்களும் நாட்டைப் பாதுகாக்க வேண்டும். நாட்டுக்காக தேவைப்படும் போது சேவை செய்ய தயாராக இருக்க வேண்டும். அனைவரும் சாதி, மத, மொழி, இன, எல்லை கடந்த சகோதர மனப்பான்மையை உருவாக்க வேண்டும். நமது பழம் பெருமைமிக்க பாரம்பரியத்தை காக்க வேண்டும். காடுகள், நதிகள், ஏரிகள், உள்ளிட்ட இயற்கையும்

வனவிலங்குகளையும் பாதுகாக்க வேண்டும். அறிவியல், மனிதாபிமானம் சீர்திருத்த உணர்வுகளை வளர்க்க வேண்டும். வன்முறையைத் தவிர்த்து அரசு சொத்துக்களைப் பாதுகாக்க வேண்டும். குழந்தைகளின் பெற்றோர் அல்லது பாதுகாவலரோ, தமது குழந்தைகளுக்குக் கல்வி வாய்ப்புகளை 6-14 வயதிற்குள் தர வேண்டும்."[38]

குடிமக்கள் என்பது பெண்கள், குழந்தைகள் தேர்தலில் வாக்களிப்போர் மற்றும் வாக்களிக்காதவர்கள் அரசியல் அமைப்புச் சட்டம் ஏற்றுக் கொள்ளப்பட்ட போது இருந்தோரும், அவர்களது வம்சாவளியினரும் சட்டப்படி குடிமக்களானவர்கள். குடிமக்கள் அனைவரும் இந்திய மக்களேயாவர்.

குடியரசுத் தலைவர்

இந்திய நாட்டின் முதல் குடிமகன் குடியரசுத் தலைவரே ஆவார். இவர் மக்களால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படவில்லையாயினும் மக்கள் பிரதிநிதிகளால் மறைமுகமாகத் தேர்ந்தெடுக்கப்படுகிறார். இவரது பதவிகாலம் ஐந்து ஆண்டுகள் ஆகும்.

தகுதிகள்

இந்திய குடிமகனாக இருக்க வேண்டும் முப்பத்தைந்து வயதைப் பூர்த்திச் செய்திருக்க வேண்டும். நாடாளுமன்ற அவையிலோ அல்லது சட்டமன்ற அவையிலோ உறுப்பினராக இருக்கக் கூடாது. வேறு எந்த ஊதியம் பெறும் பதவியிலும் (Office of Profit) இருக்கக் கூடாது என இந்திய அரசியலமைப்பு சட்டங்கள் வலியுறுத்துகிறது.

அதிகாரங்கள்

இந்திய அரசாங்கத்தின் அனைத்து ஆட்சித்துறை நடவடிக்கைகளும் குடியரசுத் தலைவரின் பெயரால் எடுக்கப்படுகிறது.

ஆட்சித்துறை அதிகாரங்கள் (Executive Powers)

பிரதமரையும் அவரது ஆலோசனையின் பேரில் பிற அமைச்சர்களையும் நியமித்தல், உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி, உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி மற்றும் பிற நீதிபதிகள், தலைமை வழக்குரைஞரும் (Attorney General of India), இந்திய கணக்காய்வு மற்றும் தணிக்கைத் துறைத்தலைவர் (Comptroller and Auditor General of India), மத்தியப் பணியாளர் தேர்வாணையத் தலைவர் மற்றும் உறுப்பினர்கள் (Union Public Service chairman and It's Members), தேர்தல் ஆணையத் தலைவர் மற்றும் தேர்வாணைய ஆணையர்கள் (Election Commission and Commissioners), நிதி ஆணைத்தலைவர் மற்றும் உறுப்பினர்கள் (Finance Commission), போன்றோர் குடியரசுத் தலைவரால் நியமிக்கப்-படுகின்றனர்.

சட்டமன்றத்துறை அதிகாரங்கள் (Legislative Powers)

நாடாளுமன்றத்தைக் கூட்டவோ ஒத்திவைக்கவோ அல்லது கலைப்பதற்கான அதிகாரமும், நாடளுமன்றம் செயல்படாத போது அவசரகாலச் சட்டங்களைப் பிறப்பிக்கும் அதிகாரம் குடியரசுத் தலைவருக்கு உண்டு.

நீதித்துறை அதிகாரங்கள் (Judicial Powers)

குடியரசுத் தலைவர் நீதித்துறையின் தலைவராகக் கருதப்படுகிறார். இவருடைய நீதி நடவடிக்கைகளை எந்த நீதிமன்றமும் விசாரிக்க முடியாது.

இராணுவ நீதிமன்றங்கள் வழங்கும் தண்டனைகளை மன்னிக்கும் அதிகாரமும் (Power of Pardon) உண்டு. இதே போன்று தண்டனையை நிறுத்தி வைக்கும் அதிகாரமும் (Power of Reprieve), சிறப்புக் காரணங்களுக்காக தண்டனையை குறைக்கும் அதிகாரமும் (Power of Respite), தண்டனைக் காலத்தைக் குறைக்கும் அதிகாரமும் (Power of Remission) ஒரே விதமான தண்டனையை மற்றொரு விதமான தண்டனையாக மாற்றும் அதிகாரமும் (Power of Commutation) மற்றும் தண்டனையை நிறுத்தி வைக்கும் அதிகாரம் (Power of suspend) இவையாவும் கருணை அதிகாரங்கள் (Clemency Powers) என அழைக்கப்படுகின்றன.

நிதி அதிகாரங்கள் (Financial Powers)

குடியரசுத்தலைவரின் பரிந்துரை இன்றி பண மசோதா நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்ய முடியாது.

தூதராண்மை அதிகாரங்கள் (Diplomatic Powers)

குடியரசுத் தலைவருக்கு இந்தியாவின் வெளியுறவுத்துறை சம்பந்தப்பட்ட அதிகாரங்களில் உள்ள முக்கியமானவைகளாக வெளிநாட்டுத் தூதுவர்களை நியமித்தல், சர்வதேச உடன்படிக்கை உடன்பாடுகளை மேற்கொள்ளல், வெளிநாட்டுத் தூதுவர்களை வரவேற்று, உரையாடி உபசரிக்கும் பொறுப்பு போன்றன ஆகும்.

இராணுவ அதிகாரங்கள் (Military Powers)

காலாட்படை, கப்பல்படை, விமானப்படை ஆகிய முப்படைகளுக்கும் தலைவர் மற்றும் இந்திய இராணுவத்தின் தலைமை தளபதி

என்ற முறையில் இராணுவ அதிகாரங்களைக் கொண்டவர். மேலும் போர்ப் பிரகடனம் செய்தல், போருக்குப் பின்னான அமைதியை நிலைநாட்டுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் அதிகாரம் பெற்றவராவார்.

மேலும் நெருக்கடிகால அதிகாரங்கள் (Emergency Powers), தற்காலிக அதிகாரங்கள் (Temporary Power), மன்னிக்கும் அதிகாரம் (Power of Parden) போன்ற அதிகாரங்கள் குடியரசுத்தலைவருக்கு காணப்படுகிறது.

பிரதமர்

பிரதமரால் நியமிக்கப்படுவது தான் அமைச்சரவைக் குழு (Cabinet) ஆகும். பிரதமர் பிரதம மந்திரி எனவும், பிரதம அமைச்சர் எனவும் அழைக்கப்படுகிறார். இவரது தலைமையில் செயல்படும் அமைச்சரவைக்குழு எடுக்கும் கொள்கை முடிவுகள் தான் அரசாங்கத்தின் கொள்கை முடிவுகளாகும். முறையாகத் தெரிவு செய்யப்பட்ட பிரதமர் ஐந்து ஆண்டு காலம் பதவியில் நீடிப்பார். எப்போது மக்களவையில் நம்பிக்கையை இழக்கிறாரோ அப்போது பதவியை விட்டு விலகி விட வேண்டும்.

இந்திய குடியரசுத் தலைவர்கள் மற்றும் பிரதமர்களின் பெயர்ப்பட்டியல் பின்னிணைப்பில் இணைக்கப்பட்டுள்ளது.

அமைச்சரவை அமைப்பு

அமைச்சரவை 1. அமைச்சரவைக் குழு அமைச்சர்கள் (Cabinet Ministers), 2. இராஜாங்க அமைச்சர்கள் (Ministers of State), 3. இணை அமைச்சர்கள் (Deputy Ministers), என மூன்று வகைகளாக காணப்படுகிறது.

மாநிலங்களவை, இராஜ்ய சபை, மக்களவை, லோக் சபை, நாடாளுமன்றத்தின் 'மேலவை' (Upper house) என்றும், மக்களவை 'கீழவை' (Lower house) என்றும் அழைக்கப்படுகிறது. மக்களவை மற்றும் மாநிலங்களவையின் உறுப்பினர்களுக்கான பதவிகாலம் ஐந்து ஆண்டுகள் ஆகும். குடியரசுத் துணைத் தலைவர் மாநிலங்களவைத் தலைவர் என்று அழைக்கப்படுகிறார். மாநிலங்களவை மக்களவையின் உறுப்பினர்களில் தலா ஒரு அவைத் தலைவரும், ஒரு துணை அவைத் தலைவரும் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

இறையாண்மை

அரசாங்கம் மக்களைத் தன் ஆட்சி அதிகார வட்டத்துக்குள் கொண்டு வருவதற்கான அதிகாரத்தைக் கொடுப்பது இறையாண்மையாகும்.

அரசியல் அறிவியல் கோட்பாட்டின்படி தமிழ்நாடு மாநிலம் மட்டுமே ஏனெனில் தமிழ்நாட்டிற்கு இறையாண்மை இல்லை.

மாநில அரசு

மாநிலங்களின் அரசியல் அமைப்பு மத்திய அரசியல் அமைப்பைப் போன்றே வடிவமைக்கப்பட்டுள்ளது.

ஆளுநர்

மத்திய அரசு பரிந்துரைக்கும் ஒருவரை மாநில ஆளுநராக குடியரசுத்தலைவர் நியமிக்கிறார். இவரது பதவிகாலம் பதவிப் பொறுப்பேற்ற நாளிலிருந்து ஐந்து ஆண்டுகள் ஆகும்.

அதிகாரங்கள்

ஆளுநர் குடியரசு தலைவரைப் போன்று மாநிலம் சார்ந்த அதிகாரங்களை கொண்டவராவார். 1. ஆட்சித்துறை அதிகாரங்கள், 2. சட்டமன்றத்துறை அதிகாரங்கள், 3. நீதித்துறை சார்ந்த அதிகாரங்கள் போன்ற அதிகாரங்கள் இவர் கொண்டுள்ள அதிகாரங்களாகும்.

முதலமைச்சர்

முதலமைச்சர் மாநிலத்தின் உண்மையான ஆட்சித்துறைத் தலைவர் ஆவார். மாநில அரசாங்கத்தின் தலைவரும் இவரேயாவார். இவரது தலைமையில் அமைச்சரவையும் நிர்வாகமும் செயல்படுகிறது. முதலமைச்சரின் அறிவாற்றல், ஆளுமை, ஈர்ப்பு, நிர்வாகத் திறமை, மாநிலத்தின் தரத்தையும், நம்பகத்தன்மையும் தீர்மானிக்கிறது. மாநில சட்டப்பேரவையில் அறுதிப்பெரும்பான்மை பலம் பெற்றுள்ள கட்சித்தலைவரை மாநில ஆளுநர் முதலமைச்சராக நியமிக்கிறார்.

அமைச்சரவைக் குழு

மத்திய அரசினைப்போன்று 1. அமைச்சரவைக் குழு அமைச்சர்கள் (Cabinet Ministers), 2. இராஜாங்க அமைச்சர்கள் (Ministers of State), 3. இணை அமைச்சர்கள் (Deputy Ministers), என மாநில அமைச்சரவைக் குழுவில் மூன்று வகையான அமைச்சர் குழுக்கள் இடம் பெற்றுள்ளனர்.

முதலமைச்சரின் பிரதம ஆலோசகராக அமைச்சரவை குழு செயலர் (Cabinet Secretary) செயல்படுகிறார். தலைமைச் செயலரும் (Chief Secretary) முதலமைச்சரின் பிரதம ஆலோசகராக செயல்படுகிறார்.

சட்டப்பேரவை

சட்டப்பேரவை உறுப்பினர்கள் அம்மாநில மக்களால் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். சட்டப்பேரவை உறுப்பினர்களின் பதவிகாலம் ஐந்து ஆண்டுகள் ஆகும். சட்டப் பேரவை சபாநாயகர் சட்டப்பேரவை உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்படுகிறார். சட்டமன்றக் கூட்டங்கள் மக்கள் பிரச்சினைகளை விவாதித்து தீர்வு காண்பதற்காக கூட்டப்பட்டு அரசாங்கத்தின் கொள்கைகள் விவாதிக்கப்பட்டு நிறைவேற்றப்படுகிறது. தமிழ்நாடு சட்டமன்றம் தற்போது ஓரவை மன்றமாகவே செயல்படுகிறது.

“இந்தியாவில் 24 மாநிலங்களில் ஓரவைச் சட்டமன்றமே உள்ளது. எஞ்சிய உத்திரபிரதேசம், பீகார், மராத்திய மாநிலம், கர்நாடகம், ஜம்மு காஷ்மீர் மாநிலங்களில் ஈரவைச் சட்டமன்றம் நடைமுறையில் உள்ளது.”[39]

மேலும் உள்ளாட்சி அமைப்புகளான மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி, சிறப்புநிலை, பேரூரட்சி மற்றும் ஊராட்சி மன்றங்களுக்குத் தேர்தல் முறையில் தலைவர்கள் மக்களால் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். இவர்களால் உள்ளாட்சி அமைப்புகளுக்கான நிர்வாகம் மற்றும் பிற பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

முடிவுரை

அரசன் என்பவன் ஈகை, அறிவுநுட்பம், அஞ்சா நெஞ்சம், அன்பு காட்டுதல், நீதி தவறாமை ஆகிய குணங்களைக் கொண்டவனாக காணப்பட வேண்டும். இக்குணங்களை உடைய அரசனை மக்கள் உயர்ந்த சக்தியாக எண்ணியதையும், நாடானது வளங்கொடுக்கும் விளைப்பொருட்களைக்

கொடுப்பதாயும், பஞ்சம், பிணி, பகைவரால் ஏற்படுகின்ற துன்பகாலத்தில் அரசனையும் மக்களையும் தாங்குவதாகக் காணப்பட வேண்டுமென்றும், நாடானது இயற்கை மற்றும் செயற்கை அரண்களைக் கொண்டதாகவும், போர்வீரன் வீரம், மானம் உடையவனாகவும் இழி குணங்கள் மற்றும் முன்கோபத்தன்மை இல்லாதவனாகவும், அமைச்சர் பல்துறைப் பற்றிய அறிவும், நல்லது கெட்டது அறிகின்ற அறிவும், பின்வருபவனவற்றை முன்கூட்டியே சொல்லும் திறனுடையவனாகவும் அரசன் மக்களின் நிலையை மீறி வரிவிதிக்காமலும், குற்றத்தை ஆராய்ந்தே குற்றவாளிகளுக்குத் தண்டனை அளிக்க வேண்டுமென்றும் வள்ளுவர் கூறுகிறார். இன்றைய மக்களாட்சி முறையில் தனிநபர் அதிகாரமின்றி மக்களே தங்களுக்குரிய அமைச்சர்களை தேர்தலின் மூலம் தெரிவு செய்து, அவ்வமைச்சர் குழுக்களால் செய்யப்படுவதை இவ்வியல் வழி உணர முடிகிறது.

இயல் குறிப்புகள்

1. இலட்சுமிரதன் பாரதி, ‘இறைமாட்சி அல்லது அரசியல்’, ப.3.
2. தட்சிணா மூர்த்தி, ‘தமிழர் நாகரிகமும் பண்பாடும்’, ப.18.
3. கஸ்தூரி ஜாண்சன், ‘குமரி மாவட்டப் புதினங்களில் சமூக நிறுவனங்கள்’, ப.130.
4. இலட்சுமிரதன் பாரதி, ‘இறைமாட்சி அல்லது அரசியல்’, ப.7.
5. கிருட்டினன், அ., ‘தமிழர் பண்பாட்டியல்’, ப.117
6. மேலது, ப.250.
7. மேலது, ப.252.
8. தொல். பா.1037-36:3-4.
9. பெரும்பாண்., ப.400-401.
10. பாதமுத்து, மா., ‘காந்திவழி கல்வியும் சமூகமும்’, ப.58.
11. மேலது, ப.82.
12. அகத்தியலிங்கம், ச., ‘ஐந்தாவது கருத்தரங்கு ஆய்வுக்கோவை’, ப.143.
13. அகம். 373., வரி.17-18.
14. கதிரைவேற் பிள்ளை, ‘தமிழ்மொழி அகராதி’, ப.736.
15. தி.இந்து, 12.02.18, ப.12.
16. தி.இந்து, 02.04.18, ப.1.
17. தி.இந்து, 27.04.18, ப. .
18. தி.இந்து, 09.03.18, ப.11.
19. தட்சிணாமூர்த்தி, அ., ‘தமிழர் நாகரிகமும் பண்பாடும்’, ப.51.
20. புறம். 76.

21. மணிமே. 21:53-56.

22. https: //simple/m/wikipedia/org/wiki/kargic-war

23. தேவநேயப்பாவாணர், ‘செந்தமிழ் சொற்பிறப்பியல் பேரகரமுதலி’, ப.228.

24. வரதராசன், ஜி., ‘திருக்குறள் உரை விளக்கம்’, ப.292.

25. சாதிக்பாட்சா, சா.மு., ‘பன்முகத் தமிழ்ப் பார்வையும் பதிவும்’, ப.162.

26. சிதம்பரனார், சாமி., ‘வள்ளுவர் வாழ்ந்த தமிழகம்’, ப.128.

27. தொல். அகம். 26.

28. இராச கோபாலன், வெ., ‘குறளில் அரசியல்’, ப.181.

29. தி.இந்து, 10.07.18, ப.1.

30. பெருமாள், என்.எம்., ‘இந்திய அரசியலமைப்புச் சட்டம்’, ப.141.

31. மு.தொ. ப.35.

32. தி.இந்து, 01.07.17, ப.1.

33. கிருட்டினன், அ., ‘தமிழர் பண்பாட்டியல்’, ப.108.

34. அகத்தியலிங்கம், ச., ‘ஐந்தாவது கருத்தரங்கு ஆய்வுக்கோவை’, ப.146.

35. வெங்கடேசன், க., ‘இந்திய அரசியலைப்பு’, ப.514.

36. தி.இந்து, 19.07.18, ப.10.

37. வெங்கடேசன், க., ‘இந்திய அரசியலமைப்பு’, ப.289.

38. https:/ta.wikipedia.org/wiki இந்திய அரசியலமைப்பிலுள்ள அடிப்படைக் கடமைகள்.

39. வெங்கடேசன், க., ‘இந்திய அரசியலமைப்பு’, ப.420.

இயல் நான்கு

குறளில் மனித வாழ்வுமுறைகளும் இன்றைய நிலையும்

முன்னுரை

கடல்சூழ் உலகில் வாழ்கின்ற அனைத்து மனிதர்களும் தங்கள் வாழ்வியல் முறைகளை அந்தந்த சமுதாயத்திற்கு ஏற்றவாறே அமைத்து வாழ்ந்து வருகின்றனர். பெரும்பாலும் மனிதன் இல்லறம் மற்றும் துறவறம் எனும் வாழ்விற்குள்ளாக தனது வாழ்வுமுறையை அமைத்துக் கொள்கிறான். இல்லற வாழ்வுமுறைகளுக்கும் துறவற வாழ்வு முறைகளுக்கும் இடையே அதிகமான மாறுபாடுகள் காணப்படுகின்றன. வள்ளுவர் கூறுகின்ற இல்லற மற்றும் துறவற வாழ்வுமுறைகளை இக்கால சமுதாய வாழ்வுமுறைகளோடு இணைத்து ஆய்வதாக இவ்வியல் அமைகிறது.

இல்லறம்

இல்லறம் என்பது இல்வாழ்க்கை நிலைக்குச் செல்லுகின்ற நெறிக்கண் நின்று அதற்குத் துணையாகிய கற்புடை மனைவியோடு செய்யப்படுவது இல்லறம் ஆகும். மேலும் மனைவி மக்களோடு கூடி வாழும் இடத்தினை இல்லறம் எனலாம்.

இல்லத்தில் தலைவனும் தலைவியும் ஒன்றுகூடி வாழும் வாழ்க்கையை இல்வாழ்க்கை என்று கூறுவர்.

இல்லறம் வரைவிலக்கணம்

“திருமணம் செய்து கொண்டு கணவனும் மனைவியுமாக இருவர் வாழ்கின்ற வாழ்க்கையே இல்லறம் அல்லது கிருகஸ்த தருமம்”[1] எனப்படுகிறது.

இல்லறம் என்பது தற்காலத்தில் குடும்பம் என்று அழைக்கப்படுகிறது. குடும்பம் எனும் அமைப்பு மிகப்பழமையானது. சமுதாய அமைப்பின்

அடித்தளம் குடும்பமே ஆகும். பல குடும்பங்கள் சேர்ந்து தான் சமுதாயம் ஆகின்றது.

“எந்தப் பண்பாடும் சமுதாயமும் ஏதாவதொரு வகையில் குடும்ப நிலையமைப்பின்றி இருந்தது கிடையாது”[2] என்று பாஸ்கல் கிஸ்பர்ட் கூறுகிறார்.

“குடும்பம் என்பது கணவன் - மனைவி என்ற உறவு, பெற்றோர் - மக்கள் என்ற நேர்வரை உறவு, உடன்பிறந்தோர் என்ற இணைவரை உறவு ஆகிய பல உறவுகள் பின்னிப்பிணைந்திருக்கும் தொகுதியாகும்”[3] என்று வாழ்வியல் களஞ்சியம் குறிப்பிடுகிறது.

இந்த இல்வாழ்க்கைக்கு அடித்தளமாக இருப்பது காதல் வாழ்வும் கற்பு வாழ்வாகிய திருமண வாழ்வும் ஆகும்.

திருமணம்

திருமணம் என்பது ‘ஆயிரங்காலத்து பயிர்’ என்று முன்னோர் கூறுவர். பருவம் வந்த ஓர் ஆணும் பெண்ணும் குடும்ப வாழ்க்கையில் ஈடுபடுத்துவதற்கான இணைப்பு திருமணம் என்று கூறலாம்.

“திருமணம் என்பது சட்டமுறைப்படி அமையும் சடங்கு, அதுபல சமுதாயங்களில் ஒரு மத ஏற்பாடாக காணப்படுகிறது”[4] என்று பெர்ராண்டு ரஸ்ஸல் கூறுகிறார்.

நமது சமுதாயத்திலும் காலப்போக்கில் திருமணங்கள் சமயச் சார்புடையவனாக விளங்கி வருகின்றன. எனினும் இன்று திருமணம் எனும் நிகழ்வு தெய்வீகச் சடங்கு எனும் நிலையிலிருந்து ஓரளவிற்கு மாறி சமுதாய ஒப்பந்தம் என்ற நிலையிலும் காணப்படுகிறது.

திருமணத்தைக் குறிக்கும் சொற்கள்

திருமணம் எனும் நிகழ்விற்கு பல்வேறு வகையான சொற்கள் பயன்படுத்தப்படுகிறது. தற்காலம் திருமணம், கல்லியாணம், கல்யாணம், இருமண இணைப்பு விழா என அழைக்கப்படுகிறது. ஆனால் இலக்கியங்கள் "வரைவு, வதுவை, மன்றல், கரணம், மணம்"[5] எனும் சொற்களில் கூறுகின்றது.

"பொய்யும் வழுவும் தோன்றிய பின்னர்
ஐயர் யாத்தனர் கரணம் என்ப"[6]

"பல்லா ரறியப் பறையறைந்து நாள்கேட்டுக்
கல்யாணஞ் செய்து"[7]

"அறத்தோடு கல்யாண மாள்வினை கூரை"[8]

"கல்லியாணந் தேவர் பிதிர்விழா வேள்வியென்"[9]

மேற்கூறப்பட்ட செய்யுள் வரிகளிலிருந்து திருமணத்தைக் குறிக்க கரணம், கல்யாணம், கல்லியாணம் எனும் சொற்களைப் பயன்படுத்தியதை காணமுடிகிறது.

திருமணமுறைகள்

திருமணமுறைகள் சமயம், இனம் மற்றும் கொள்கையின் அடிப்படையில் நடத்தப்படுகின்றன. தொல்காப்பியம்,

"இன்பமும் பொருளும் அறனும் என்றாங்கு
அன்பொடு புணர்ந்த ஐந்திணை மருங்கின்
காமக்கூட்டம் காணுங்காலை
மறையோர் தேஎத்து மன்றல் எட்டனுள்
துறைமை நல்யாழ்த் துணைமையோர் இயல்பே"[10]

என்கிறது.

எண்வகைத் திருமணமாக,

1. பிரமம் - தகுதியுடைய பிரம்மச்சாரிக்கு பெண்ணைக் கொடுப்பது.
2. பிரசாபத்தியம் - தலைவன் தலைவி இருவரது பெற்றோரும் உடன்பட்டு திருமணம் செய்து வைப்பது.
3. ஆரிடம் - ஒன்றோ இரண்டோ பசுவும் காளையும் தானமாகப் பெற்றுக் கொண்டு பெண்ணைக் கொடுப்பது.
4. தெய்வம் - வேள்விகள் பலவும் இயற்றும் ஓர் வேள்வி ஆசிரியனுக்குப் பெண்ணைக் கொடுப்பது.
5. கந்தர்வம் - கொடுப்போரும் கேட்போரும் இன்றி தலைமகனும் தலைமகளும் தனி இடத்தில் எதிர்ப்பட்டு தாமே கூடி இன்புற்று திருமணம் செய்வது.
6. ஆசுரம் - பெண்ணின் தந்தைக்கு பணம் கொடுத்து அணிகலன் அணிவித்து ஏற்று மணந்து கொள்வது.
7. இராக்கதம் - தலைவியை அவளது விருப்பமோ, உறவினர் விருப்பமோ இன்றி அடைவது.
8. பைசாசம் - உறங்கிய பெண், கள் உண்டு களிந்திருக்கும் பெண், பித்துப்பிடித்த பெண் முதலானவர்களுடன் கூடிக் களிப்பது.

என எண்வகையானத் திருமணத்திற்கு விளக்கம் நல்கப்படுகிறது.

சங்ககாலத் திருமணமுறையாக பழந்தமிழர் திங்கள் உரோகிணியோடு கூடிய நல்ல நாளில் திருமணம் செய்தனர். திருமண விழாவிற்கு வீட்டின் முன் பந்தலிட்டு, அதன்கீழ்ப் புதுமணல் பரப்பி, விளக்கேற்றி மாலைகள் தொங்கவிட்டு வீட்டை அழகுபடுத்தினர்.

"மனை விளக்குறுத்து, மாலை தொடரிக்
கனையிருள் அகன்ற கவின்பெறு காலைக்
கோள் கால நீங்கிய கொடு வெண் டிங்கள்
கேடில் விழுப்புகழ் நாடலை வந்தென"[11]

என அகநானூறு குறிப்பிடுகிறது.

திருமணம் ஆணும் பெண்ணும் அவர்களாகவே விரும்பி பெற்றோர் சம்மதத்துடனோ, சம்மதமின்றியோ திருமணம் செய்வது ஒரு வகை. மற்றொரு வகை தாய், தந்தை மற்றும் உறவினர்களால் வாழ்க்கைத்துணைத் தெரிவு செய்யப்பட்டு திருமணம் செய்து வைத்தல். இவ்விரண்டு வகைத் திருமணங்களும் தற்கால சமுதாயத்தில் நடந்த வண்ணம் உள்ளன.

திருமணத்தைக் குறித்து தைத்திரிய உபநிஷதம், "திருமணமானது காதல் இன்பமோ அல்லது உடலுக்குள் இருக்கும் விலங்குபான்மைக்கு செய்யும் பூஜைக் கிரமமோ அல்ல, விவாகமும் இல்வாழ்க்கையும் சமுதாயத்திற்குச் செய்ய வேண்டிய சேவை உண்டு. அதை செய்வதற்குரிய உறுப்பினர்களை நிரந்தரமாக உருவாக்கி, பிறருக்கு உதவ வேண்டும் என்பதே இல்லறத்தத்துவம்"[12] என்கிறது.

களவு எனும் காதல்

திருமண பந்தத்தின் முந்தைய நிலையை 'களவு வாழ்வு', 'களவு மணம்' என்று தமிழிலக்கியங்கள் கூறுகிறது. களவு மணத்தைக் குறித்து, "முன்பின் அறியாத ஒரு ஆணும் பெண்ணும் ஒருவரையொருவர் சந்திக்கின்றனர். இருவரும் மணமாகாதவர்கள் ஒத்த பருவமும் ஒத்த உருவமும் ஒத்த நிலையும் உடையவர்கள். இருவர் கண்களும் ஒன்றுபடுகின்றன. உள்ளத்தாலும் ஒன்றுபடுகின்றனர். இந்நிகழ்ச்சிக்கு களவு மணம்"[13] என்று பெயர்.

திருமணம் செய்யாமல் ஓர் ஆணும் பெண்ணும் அன்பு செய்வதை களவு என்கிறார். ஆனால் இக்காலச் சூழலில் களவு என்பது காதல் செய்வதையே குறிக்கிறது. களவு வாழ்க்கையைத் தொல்காப்பியம்,

"நாட்டம் இரண்டும் அறிவுடம் படுவதற்குக்

கூட்டி யுரைக்கும் குறிப்புரையாகும்"[14]

என்று கூறுகிறது.

காதல் நோய்

மனிதனைத் துன்பப்படுத்துவது நோய். அது மனிதனைப் பிணித்துத் துன்புறுத்துவதால் பிணியாகும். காதலும் நோயாக வள்ளுவரால் எடுத்துக்காட்டப்படுகிறது.

"பிணிக்கு மருந்து பிறமன் அணியிழை

தன்நோய்க்குத் தானே மருந்து" (குறள்.1102)

காதல் நோய்க்கு அந்நோய் கடைக்கண் காட்டிய பெண்ணே மருந்தாவாள் என்று வள்ளுவர் நோயையும் நோயிற்கான மருந்தினையும் கூறுகிறார். மேலும், இக்கருத்தினை,

"நோயை இறைப்பவர்க்கு" (குறள்.1161)

"நோயை நோய் செய்தார்க்கு" (குறள்.1162)

"தண்டா நோய்" (குறள்.1171)

"உய்வுஇல் நோய்" (குறள்.1174)

"காமநோய் செய்த என்கண்" (குறள்.1175)

"எமக்கிந்நோய்" (குறள்.1176)

போன்ற குறள்களில் பதிவு செய்கின்றார்.

இராமாயணத்தில் இராமனின் மனைவியைக் கவர்ந்த இராவணன் சீதையை எண்ணி,

"மந்திரமில்லை வேறோர் மருந்தில்லை மைய

சுந்தர குமுதச் செவ்வாய் அமுதலால் அமுதச் சொல்லீர்"[15]

என ஏங்கிப் புலம்பினான். இக்கூற்றின் வழி காதல் நோய்க்கு வேறெந்த மருந்தும் பயன்கொடுக்காது. அப்பெண்ணின் பார்வை மற்றும் அமுதச் சொற்களே மருந்தாக முடியும் என்பதை அறியமுடிகிறது. பெண் மருந்தாக அமையாவிடில் சாதல் உண்டாகும் என்பதை பாரதியார்,

"காதல் காதல் காதல்

காதல் போயிற் காதல் போயிற்

சாதல் சாதல் சாதல்"[16]

என்கிறார். இக்காலச் சூழலிலும் காதல் ஒரு தீரா நோயாகவே கருதப்படுகிறது. இது திருமணத்திற்கு முந்தைய காதலுக்கும் திருமணத்திற்குப் பிறகு உள்ள பிந்தைய காதலுக்கும் முற்றும் பொருந்தும். காதலர்களுக்கு இடையே மனக்கசப்பு நிகழ்வதால் தற்கொலைகள் செய்வதும், காதலியைக் கொலைச் செய்கின்ற நிகழ்வுகளும் பரவலாக நிகழ்ந்த வண்ணம் காணப்படுகிறது.

காதலின் இயல்பு

காதலின் பொதுவான இயல்பு பிறர் அறியாமல் மறைந்து பழகும் உள்ளுணர்வு உடையவர்களாக காணப்படுதல் ஆகும். இதனை,

"அறிகிலர் எல்லாரும் என்றேஏன் காமம்

மறுகின் மறுகும் மருண்டு" (குறள்.1139)

என குறள் குறிப்பிடுகிறது.

பிறர் எல்லாருக்கும் தெரியாது என எண்ணினேன் என்று கூறுவதிலிருந்து பிறர் அறியாமல் மறைந்து பழகும் பண்பு வெளிப்படுகிறது.

இன்றைய காதலர்களும் பிறர் அறியா வண்ணம் வெளியே செல்லுதல், மறைந்து பேசுதல் போன்ற செயல்களில் ஈடுபடுகின்றனர்.

காதலும் உறுப்புகளும்

காதலில் உறுப்புகள் முக்கியப் பங்கினை வகிக்கின்றன. தலைவன் தலைவியின் உடலுறுப்புகளை வருணிப்பதை காணமுடிகிறது. தலைவன் தலைவியின் ஐம்புலனையும் வருணிப்பதை குறுந்தொகை,

"ஒடுங்கு ஈர் ஓதி நுதற் குறுமகள்
நறுந் தண்நீரல் ஆர் அணங்கினாளே
இனையள் என்று அவட்புனை அளவு அறியேன்
சில மெல்லியவே கிளவி
அனை மெல்லியல் யான் முயங்குங்காலே"[17]

என குறிப்பிடுகிறது.

வள்ளுவரும் ஐம்புலன்களைப் பற்றி களவு, கற்பு ஆகிய இருஇயல்களிலும் எடுத்துரைக்கின்றார்.

கண்களில் தொடங்கி இதயத்தில் முடிவது காதல். மனதில் உள்ள காதலை வெளிப்படுத்துவதில் கண்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன. ஆண் பெண் இருவருக்கும் காதலை வெளிப்படுத்தும் ஊடகமாகவும் உணர்வுகளை வெளிப்படுத்தும் கருவியாகவும் கண்கள் பயன்படுகின்றன. கண்களே தலைவனுக்குத் தலைவியையும், தலைவிக்குத் தலைவனையும் அறிமுகப்படுத்துகின்றன. அக்கண்ணின் மூலம் தலைவன் அனுபவித்த நிகழ்வுகளை வள்ளுவர் கீழ்வரும் குறள்களில் எடுத்தியம்புகிறார்.

"பண்டறியேன் கூற்றென பதனை இனியறிந்தேன்

பெண்டகையால் பேரமர்க் கட்டு" (குறள். 1083)

"நோக்கினாள் நோக்கெதிர் நோக்குதல் தாக்கணங்கு

தானைக்கொண் டன்னது உடைத்து" (குறள்.1082)

"கூற்றமோ? கண்ணோ? பிணையே? மடவரல்

நோக்கம்இம் மூன்றும் உடைத்து" (குறள்.1085)

"யான்நோக்கும் காலை நிலன்நோக்கும் நோக்காக்கால்

தான்நோக்கி மெல்ல நகும்" (குறள். 1094)

தெய்வப்பெண் படையோடு வந்து தாக்கினால் உடலுக்கு எவ்வளவு துன்பத்தைக் கொடுக்குமோ அவ்வளவு வருத்தம் அவளது பார்வை என் மனதிற்கு கொடுத்தது. மனவருத்தம் தருவதால் எமனோ, தெய்வமோ என நினைப்பதால் அச்சமும், மருண்ட பார்வையால் மானைப் போன்றும் மூவகை நிலையும் அவளது கண்ணிலிருந்து மாறி மாறி வருகிறது என்றான். மேலும் நான் அவளைப் பார்த்த போது அவள் தலைகுனிந்து வெட்கத்துடன் நிலத்தைப் பார்க்கிறாள். ஆனால் நான் பார்க்காத போது அவள் என்னைப் பார்த்து மகிழ்ச்சியடைகிறாள் என்று கூறுகிறான். இன்றைய காதலனின் கூற்றினை,

"நான்

எத்தனை மந்தம்

என்று

எனக்குத்தான் தெரியும்

ஆனால்

உன் விரலசைப்பில்

விழிகளின் ஜாடையில்

ஆயிரம் விஷயங்கள்

உடனே புரிகின்றன”[18]

எனும் கவிதை வரிகள் எடுத்தியம்புகின்றன. கண்களின் முதன்மைத் தன்மையை, தலைவன்

“எனது

ராஜாங்கத்தில்

இந்த கண்களுக்கு

மட்டும்

ரொம்பத்தான்

பெருமை

காரணம்

அவர்கள் தான்

உன்னை

எனக்குக்

கண்டுபிடித்து

அறிமுகப்படுத்தியது”[19]

என வருணித்து, கண்களைச் சிறப்புக்காட்டி ‘அவர்கள்’ என சிறப்பித்துக் கூறுகிறான். கவிஞர் மீரா,

“உனக்கென்ன

ஒரு பார்வையை

வீசிவிட்டு போகிறாய்

என் உள்ளமல்லவா

வைக்கோலாய்

பற்றி எரிகிறது”[20]

என காதலியின் பார்வையின் சிறப்பைக் குறிப்பிடுகிறார்.

"ஒண்ணுதற்கு ஓஓ உடைந்ததே ஞாட்பினுள்

நண்ணாரும் உட்கும்என் பீடு" (குறள்.1088)

"முயங்கி கைகளை ஊக்கப் பசந்தது

பைந்தொடிப் பேதை நுதல்" (குறள்.1238)

எனும் குறள்களில், தலைவியின் ஒளி பொருந்திய நெற்றிக்கு முன் தன்னுடைய வீரம் தோற்றுவிட்டதாக தலைவனும் தலைவன் தழுவிய போது தலைவியின் கைகள் இன்பமடைந்தது. ஆனால் என்னுடைய நெற்றியானது தான் இன்பமடையவில்லையே என தலைவி கூறுவதாக வள்ளுவர் குறிப்பிடுகிறார்.

"உறுதோறு உயிர்தளிர்ப்பப் தீண்டலால் பேதை

அமிழ்தின் இயன்றன தோள்" (குறள்.1106)

எனும் குறளில், பெண்ணின் தோள் அமிழ்தத்தால் செய்யப்பட்டவை போன்று இன்பத்தைக் கொடுக்கிறது எனத் தலைவன் கூறுகிறான்.

பெண்ணினுடைய மேனியை மென்மைத் தன்மைக்கு கூறுவது இயல்பு. இதனை,

"முறிமேனி முத்தம் முறுவல் வெறிநாற்றம்

வேல் உண்கண் வேய்த்தோ ளவட்கு" (குறள்.1113)

எனும் குறள் எடுத்தியம்புகிறது.

பெண்ணின் தளிரே மேனியாகவும், முத்துக்களே பற்களாகவும், இயற்கை மணமே அவளது மணமாகவும், வேலே கண்களாகவும், மூங்கிலே தோள்களாகவும் இருந்ததாக ஐம்புலன்களையும் தலைவன் கூறுகிறான்.

"மாதர் முகம்போல் ஒளிவிட வல்லையேல்

காதலை வாழி மதி" (குறள்.1118)

"மதியும் மடந்தை முகனும்" (குறள்.1116)

எனும் குறள்களில் சந்திரனுக்கும் பெண்ணினுடைய முகத்திற்கும் வேறுபாடு இல்லையென பெண்ணின் முகத்தைக் குறித்துத் தலைவன் கூறுகிறான். தலைவனின் மார்பைத் தலைவி,

"பெண்இயலார் எல்லாரும் கண்ணின் பொது உண்பர்
நண்ணேன் பரத்தநின் மார்பு" (குறள்.1311)

என வர்ணிக்கிறாள். தலைவியின் மார்பினைக் குறித்து,

"கடாஅக் களிற்றின்மேல் கட்படாம் மாதர்
படாஅ முலைமேல் துகில்" (குறள்.1081)

என தலைவன் வர்ணிக்கிறான். தலைவன் பிரிந்து சென்று விட்டான் தலைவன் பிரிந்து சென்ற நாளைத் தொட்டுத் தொட்டு எண்ணிப் பார்த்ததால் விரல்களும் தேய்ந்தன என தலைவியின் கைவிரலைக் குறித்து,

"வாளற்றுப் புற்கென்ற கண்ணும் அவர்சென்ற
நாளொற்றி தேய்ந்த விரல்" (குறள்.1261)

என்ற குறளில் வள்ளுவர் குறிப்பிடுகிறார்.

தலைவன் தலைவியின் அழகினை உள்ளதைவிட மிகைப்படுத்தியே பேசுகிறான். தலைவியின் வாயில் ஊறும் எச்சில் நீரை தேன் கலந்த பாலுக்கு ஒப்பிட்டுத் தலைவன் கூறுவதை,

"பாலொடு தேன்கலந் தற்றே பணிமொழி
வாலெயிறு ஊறிய நீர்" (குறள்.1121)

எனும் குறளில் வள்ளுவர் பதிவு செய்கிறார்.

காதலும் நாணமும்

தொல்காப்பியம் பெண்ணுக்குரிய சிறப்பு குணம் நாணம் என்பதை கீழ்வரும் நூற்பாக்களில் எடுத்துரைக்கிறது.

"நாணும் மடனும் பெண்மைய ஆதலின்"[21]

"அச்சமும் நானும் மடனும் முந்துறுத்த

நிச்சமும் பெண்பாற்குரிய என்ப"[22]

தலைவன் தலைவியின் நாணத்தைக் குறித்துப் பேசுவதாக கீழ்வரும் குறள்களில் வள்ளுவர் எடுத்துரைக்கிறார்.

"நோக்கினாள் நோக்கி இறைஞ்சினாள்" (குறள்.1093)

"யான்நோன்கும் காலை நிலன்நோக்கும் நோக்காக்கால்

தான்நோக்கி மெல்ல நகும்" (குறள். 1094)

". . . . . ஒரு கண்

சிறகணித்தாள் போல நகும்" (குறள்.1095)

"பிணைஏர் மடநோக்கும் நாணும்

உடையாட்கு" (குறள்.1089)

தலைவி என்னைப் பார்த்து நாணித் தலைகுனிந்தாள், நான் அவளைப் பார்த்தபோது நாணத்தால் தலைகுனிந்து நிலத்தைப் பார்த்தாள். என் மீது கொண்ட காதலை வெளிப்படையாக காட்ட நாணம் இடம் கொடாததால் கண்களைச் சுருக்கி என்னைப் பார்த்து சிரித்தாள். மானைப் போன்ற மருண்ட பார்வையையும், பெண்ணுக்குரிய நாணமும் அவளை அழகுப்படுத்துகிறது எனக் கூறக் காணலாம்.

இன்றைய காலத்தில் நாணம் 'வெட்கம்' என்ற சொல்லால் கூறப்படுகிறது. பெண் படிப்பறிவு, பணி மற்றும் உலகம் அறிந்தவளாக காணப்படினும், பெரும்பாலான நாகரீகப் பெண்களிடமும் கூட நாணம் என்கிற வெட்கம் காணப்படுகிறது. இதனைப் பெண் பார்க்கும் நிகழ்ச்சி, புதிதாக

திருமணம் செய்து கொண்ட தம்பதிகள், குழந்தை கருவுற்றச் செய்தியைப் பிறரிடம் கூறும்போதும் பெண்களிடம் காணமுடிகிறது.

காதலும் மாலைப்பொழுதும்

காலையில் உடலுறுப்புகள் சுறுசுறுப்புடன் இருப்பது இயற்கை. பகலில் உழைக்கும் உடல் உழைப்பாலும், சிந்தனை முதலிய மூளை உழைப்பாலும் சோர்வடைகின்றன. ஆனால் காலையில் உள்ள மனமகிழ்ச்சி மாலையில் இருப்பதில்லை. இவ்வுண்மை மற்றகாலங்களில் தெரிவதைவிட ஒருவருடைய வாழ்வில் துன்பம் நிகழும்போது நன்றாகப் புலப்படும். துயரத்திற்கு ஆளானவர்கள் காலையில் வருந்துவதைவிட மாலையில் மிகுதியாக வருந்துகின்றனர்.

தொல்காப்பியர் அன்பின் ஐந்திணைக்குரிய காலப்பின்னணியில் சிறுபொழுதினைக் குறிக்கும்போது மாலைப்பொழுதை இராப்பொழுதின் முற்கூறு எனக் குறிப்பிடுகிறார்.

முல்லைத்திணையில் தலைவன் வரவை எதிர்பார்த்துக் காத்திருக்கும் தலைவியின் காதலானது மாலைப் பொழுதில் தான் உச்சநிலையை அடையும்.

“காரும் மாலையும் முல்லை”[23]

எனவே முல்லைத் திணைக்கு சிறுபொழுதாக மாலைப்பொழுதை கூறுகிறார்.

வள்ளுவர் மாலைப்பொழுதின் துன்பத்தை

“காலை யரும்பிப் பகலெல்லாம் போதாகி
மாலை மலருமிந் நோய்” (குறள். 1227)

எனக் குறிப்பிடுகிறார்.

காதல் எனும் பூவானது காலையில் அரும்பி, பகல் முழுவதும் தலைவனின் நினைவுகளால் பக்குவப்பட்டு மொட்டாகி மாலையில் அடங்காத துன்பத்தைக் கொடுக்கும் மலராக மலர்கிறது என தலைவி கூறுவதாக கூறுகிறார். மேலும்

"மாலையே அல்லை; மணந்தார் உயிருண்ணும்
வேலை நீ வாழி பொழுது" (குறள்.1221)

". . . மாலை நுனியரும்பித்
துன்பம் வளர வரும்" (குறள்.1223)

"காதல ரில்வழி மாலை கொலைக்களத்து
ஏதிலர் போல வரும்" (குறள்.1224)

". . . என்கொல்
மாலைக்கு செய்த பகை" (குறள்.1225)

போன்ற குறள்களில் மாலை நேரத்தின் இயல்பை எடுத்துரைக்கிறார். மணமுடித்து பிரிந்திருக்கும் பெண்களின் உயிரை உண்ணும் விடமாக மாலைப்பொழுது காணப்படுகிறது. மாலைப்பொழுது தலைவிக்கு வெறுப்பையும் துன்பத்தையும் கொடுப்பதோடு, மாலைப் பொழுதானது கொலைக்களத்தில் கொலைச் செய்கின்ற பகைவரைப் போலவும் தென்படுகிறது. "மாலைப்பொழுதே நான் உனக்கு என்ன தீங்கு செய்தேன்" எனவும் தலைவி வினவுகிறாள். மாலைப்பொழுது மிகுந்த துன்பத்தைக் கொடுக்கிறது. எனவே இந்த மாலைப்பொழுதில் என் உயிர் பிரியும் என மாலையின் வேதனையை தலைவி எண்ணிப் பார்ப்பதாக வள்ளுவர் காட்டுகிறார். மேலும் மாலைப் பொழுதினால் தன் தலைவனும் துன்பமடைவான் என தலைவி கூறுவதை,

"பதிமருண்டு பைதல் வழக்கும் மதிமருண்டு

மாலை படர்தரும் போழ்து" (குறள்.1229)

எனும் குறள் மெய்ப்பிக்கிறது.

என் அறிவை மயக்கித் துன்பம் செய்யும் மாலைப்பொழுது வரும்போது என் தலைவனும் என்னைப் போல் துன்பப்படுவான் எனவும் எண்ணுகின்ற நிலையை வள்ளுவர் சிறப்புற எடுத்துரைக்கின்றார்.

இந்நிலை இக்கால காதலர்களுக்கும் கணவன் மனைவிக்கும் பொருந்தும் கவிஞர் அறிவுமதி திரைப்படபாடல் ஒன்றில் காதலன் காதலியை எண்ணி 'மாலைஎன் வேதனை கூட்டுதடி, காதல் தன் வேலையை காட்டுதடி' எனப் பாடுவதாக கருத்தினைப் பதிவு செய்கிறார்.

காதலும் அலரும்

தலைவன் தலைவி இருவரின் களவொழுக்கத்தைப் பற்றி ஊர்ப்பெண்டிர் வெளிப்படையாகப் பேசிக் கொள்வது அலர் எனப்படுகிறது. தலைவன் தலைவியரின் களவு வாழ்வு கற்பு வாழ்வாக மாறுவதற்கு துணை புரிவது அலர் ஆகும்.

களவை வெளிப்படுத்துவது அம்பலும் அலரும் என்பதை தொல்காப்பியம்.

"அம்பலும் அலரும் களவு வெளிப்படுதலிலே"[24]

என குறிப்பிடுகிறது.

அலரினைப் பற்றி வ.சு.ப. மாணிக்கம் அவர்கள் "தலைவியின் காதல் ஒழுக்கம் பற்றி ஊர்ப்பெண்டிர் ஒருவருக்கொருவர் தம்முள்ளே பேசிக்கொள்வது அம்பல் எனவும் வெளிப்படையாகப் பேசுவது அலர் எனப்பெறும்"[25] என்கிறார். அம்பல் தூற்றும் முறையினைப் பற்றி நற்றிணை,

"சிலரும் பலரும் கடைக்கண் நோக்கி
மூக்கின் உச்சிச் சுட்டுவிரல் சேர்த்தி
மறுகிற் பெண்டிர் அம்மல் தூற்றச்
சிறுகோல் வலந்தனள் அன்னை"[26]

என கூறுகிறது. அலர் பரவும் நிலையினை வள்ளுவர்,

"கண்டது மன்னும் ஒருநாள் அலர்மன்னும்
திங்களைப் பாம்புகொண் டற்று" (குறள்.1146)

என்கிறார். தலைவனும் தலைவியும் சந்தித்துக் கொண்டது ஒருநாள் தான் என்றாலும் வானில் சந்திர கிரகணம் தோன்றும் நிகழ்ச்சி போல அவர்களுடைய சந்திப்பு ஊர் முழுவதும் அலராகப் பரவியது எனக் கூறுகிறார்.

"இமைப்பின் கரப்பாக்கு அறிவல் அனைத்திற்கே
ஏதிலர் என்னும்இவ் ஆர்" (குறள்.1129)

"உவந்து உறைவர் உள்ளத்துள் என்றும்இகழ்ந் துறைவர்
ஏதிலர் என்னும்இவ் ஆர்" (குறள்.1130)

"அலரெடி ஆருயிர் நிற்கும் அதனைப்
பலரறியார் பாக்கியத் தால்" (குறள்.1141)

"யாங்கண்ணின் காண நகுப அறிவில்லார்
யாம்பட்ட தாம்படா வாறு" (குறள்.1140)

என்னும் குறள்கள் அலரின் இயல்பை வரையறுக்கின்றது.

தலைவி விழித்துக்கொண்டு தலைவனையே நினைக்கிறாள் அதனால் ஊரார் இவளுக்கு ஊண் உறக்கமில்லை என்று தூற்றுவதாகவும், எப்பொழுதும் என் காதலர் என்னுள்ளத்தில் தான் வாழ்கிறார். ஆனால்

இவ்வூரினர் என் காதலர் என்னிடம் அன்பில்லாதவராக பிரிந்து வாழ்வதாக கூறுகின்றனர் என அலரினைக் குறித்து ஊராரின் செயலைத் தலைவி குறைகொள்கிறாள்.

"யாங்கண்ணின் காண நகுப அறிவில்லார்

யாம்பட்ட தாம்படா வாறு" (குறள்.1140)

எனும் குறளில் என்னைக் கண்ணால் காணும்போது இவ்வூரார் என் நிலையைக் கண்டு சிரிக்கிறார்களே. என்னுடைய துன்பத்தை இவர்கள் அனுபவிக்க-வில்லையா என்று தலைவி தூற்றுவதாக வள்ளுவர் அலரினால் ஏற்படும் துன்பத்தினை வெளிக்காட்டுகிறார்.

இத்தகைய ஊராரின் நகைப்புகளும் குற்றப்படுத்தல்களும், குறைகூறுதல்களும் இன்றைய காதலர்களின் வாழ்விலும் காணப்படுகிறது. இதனால் இளம்பெண்ணை வீட்டில் அடைத்து வைப்பதையும் கல்லூரி மற்றும் பணிக்குச் செல்ல குடும்பத்தாரால் அனுமதி மறுக்கப்படும் செய்திகளையும் கேட்க முடிகிறது.

காதலும் மடலேறுதலும்

மடலேறுதல் என்பது தான் விரும்பிய தலைவி ஒருத்தியை பெறாத தலைவன் பனைமடலால் குதிரை போன்றதோர் உருவமைத்து தன் படத்தையும் தலைவிபடத்தையும் எழுதி வைத்துக்கொண்டு யாவருமறியத் தெருவினிடையே ஊர்ந்து வருவதாகும். இதனை கலித்தொகை,

"அணியலங் காவிரைப் பூவோ பெருக்கின்

பிணையலங் கண்ணி மிலைந்து மணியார்ப்ப

ஓங்கிவரும் பெண்ணை மடலூர்ந்தென"[27]

எனக் குறிப்பிடுகிறது. ஆவிரைமலர், எருக்கங்கண்ணி, உழிஞை ஆகிய பயனற்றப் பூக்களை அணிந்து மடலேறிய செய்தியை நாம் அறிந்துகொள்ள முடிகிறது. மடலேறுதல் ஆண்களுக்கானது. பெண்களுக்கு மடலேறும் பழக்கம் இல்லையென்று

"எத்திணை மருங்கினும் மகடூஉ மடன்மேல்

பொற்புடை நெறிமை இன்மையான்"[28]

எனும் நூற்பா உரைக்கிறது.

ஆடவன் மகளிரைக் குறித்து மடலேறுதலன்றி பெண் ஆடவனைக் குறித்துச் சென்று மடலூர்தல் கூடாது என்பது தமிழ்நெறியின் வரம்பாகும். இதனை,

"கடலன்ன காமம் உழந்தும் மடலேறாப்

பெண்ணின் பெருந்தக்கது இல்" (குறள்.1137)

எனும் குறள் வரையறுக்கிறது. கடலை ஒத்த அளவு காதல் உணர்வு மனத்தை வாட்டினாலும், ஊரார் அறிய நாணத்தை இழந்து மடல்ஏறி எண்ணத்தை வெளிப்படுத்தாது வாழும் பெண் இனத்துக்குரிய பெருமையை வேறு எங்கும் காணமுடியாது என்று வள்ளுவர் எடுத்தியம்புகிறார்.

திருமங்கையாழ்வார் அருளியுள்ள 'சிறிய திருமடல்', 'பெரிய திருமடல்' என்ற பிரபந்தங்களில் ஆழ்வார் நாயகி 'மடலூர்வேன்' என்று அச்சுறுத்தியுள்ளார் என்பதற்கு பாடலடிகள் சான்றாக அமைகின்றது.

"ஓர் ஆணை கொம்பொசித்து ஓர் ஆணைகோள் விடுத்த

சீரானை செங் நெடியானை தேன்துழாய்க்

தாரனை தாமரைபோல் கண்ணானை எண்ணருஞ்சேர்

பேர்ஆ யிரமும் பிதற்றிப் பெருந்தெருவே

ஊரார் இகழினும் ஊராது ஒழியேன் நான்

வார் ஆர்பூம் பெண்மை மடல்”[29]

மேலும் பெரிய திருமடல்,

“உலகறிய ஊர்வன நான் ஒழிந்த

முன்னிமுளைத் தெழுந்து ஓங்கி ஒளிமரந்த

மன்னியபூம் பெண்மை மடல்”[30]

என்று கூறுகிறது. வள்ளுவர் தலைவன் மடலேறுவதால் நாணத்தை இழக்கிறான் என்பதை,

“நோனா உடம்பும் உயிரும் மடலேறும்

நாணினை நீக்கி நிறுத்து” (குறள்.1132)

“நாணொடு நல்லாண்மை பண்டுடையேன்; இன்றுடையேன்

காமுற்றார் ஏறும் மடல்” (குறள்.1133)

“காமக் கடும்புனல் உய்க்குமே நாணொடு

நல்லாண்மை என்னும் புணை” (குறள்.1134)

எனும் குறள்களில் பதிவு செய்கிறார்.

நாணம் விட்டவுடன் உயிரானது உடலில் நிலைத்திருக்காது. ஆனால் தலைமகன் நாணத்தை விட்டு வாழ்ந்து கொண்டிருப்பது தலைவியை மடலேறியாவது பெறலாம் என்ற எண்ணத்தில் நாணத்தை இழந்தான் என்றும், காதல் கொண்ட காரணத்தால் நாணத்தையும் வீரத்தையும் இழந்து தலைவியை சேருவதற்கு மடல்தான் என்னிடம் இருக்கிறது என்றும், காதல் இன்பத்தில் திளைத்திருப்பவர்க்கு நாணமும் நல்லாண்மையும் பயன்படாததோடு மடலேறுதல் ஆண்மகனிற்கு அழிவையும் இழிவையும் கொடுக்கும் என்று காதல்

புரிந்ததால் நாணத்தை இழந்து தவிக்கும் தலைவனின் மனநிலையை தெளிவுற எடுத்துக்காட்டுகிறார்.

காதலுக்கு பாதுகாவல் மடலேறுதல் என்றும், காதலை வெற்றிப்பெற செய்ய எண்ணும் தலைவனின் நிலையை,

"காமம் உழந்து வருந்தினார்க்கு ஏமம்

மடலல்லது இல்லை வலி" (குறள்.1131)

எனக் குறிப்பிடுகிறார்.

மடல்ஊர்தல் யாமத்தும் உள்ளுவேன் (குறள்.1136)

என்ற குறள் மூலம் என்னுடைய காதலியை அடைவதற்காக நடுநிசியிலும் மடலேறுதலைப் பற்றி சிந்தித்துக் கொண்டிருக்கும் தலைவவனின் இயல்பை அறிய முடிகிறது.

மடலேறுதலால் தலைவனுக்கு ஏற்படுகின்ற உடல் வேதனையை வள்ளுவர்,

"தொடலைக் குறுந்தொடி தந்தாள் மடலொடு" (குறள்.1135)

எனும் குறளில் தெளிவுபடுத்துகிறார்.

பெற்றோரும் காதலும்

இக்காலத்தில் மட்டுமல்ல முற்காலத்திலும் காதலுக்கு பெற்றோரிடம் எதிர்ப்பு காணப்பட்டிருப்பதை,

. . . அன்னைசொல்

நீராக நீளும்இந் நோய்" (குறள்.1147)

என குறள் பதிவு செய்கிறது.

ஊராரின் புறமொழிகள் மூலமாக தலைவியின் தாய் அவளது காதலை அறிந்துகொண்டு தனக்கு அறிவுரைகள் வழங்குவதாக தலைவி கூறுகிறாள்.

தற்கால காதலர்கள் தங்கள் காதலை கற்பு வாழ்க்கையாக மாற்றுவதற்கு ஊடகங்கள், காவல்துறை, நண்பர்கள் போன்றவர்களை நாடுகிறார்கள். வள்ளுவர் காதலர்களின் உடன்போக்கினைக் குறித்து எவ்விடத்தும் கூறவில்லை. ஆனால் இன்றைய காதலர்களோ சிலநேரங்களில் உடன்போக்கினை மேற்கொள்கின்றனர். உடன்போக்கு மேற்கொள்ள இயலாத சூழ்நிலையில் தற்கொலை போன்ற செயல்களின் மூலமாக தங்கள் உயிரையும் மாய்த்துக் கொள்கின்றனர்.

பெற்றோரின் அனுமதியின்றி காதலர்கள் திருமணம் செய்து கொண்டாலும் காதலர்களின் பெற்றோர்கள் மற்றும் உறவினர்களால் பல்வேறு அச்சுறுத்தல்களுக்கு ஆளாகின்றனர். சிலநேரங்களில் காதல் திருமணம் செய்தவர்களின் பெற்றோர்கள் தற்கொலைச் செய்வது, ஜாதி மோதல்கள், காதலர்கள் தற்கொலைச் செய்வது மற்றும் கவுரவக் கொலைகள் தற்காலச் சூழலில் அதிகரித்துக்கொண்டே வருகின்றன. சான்றாக "கலப்புத் திருமணம் செய்துகொண்ட விமலாதேவி கவுரவக் கொலையா சி.பி.ஐ. விசாரிக்க சென்னை நீதிமன்றம் உத்தரவு."[31]

"மன்னார்குடி அருகே காதல் தம்பதி கடத்திக் கொலை கவுரவக் கொலை என சந்தேகம்"[32] இந்நிகழ்வுகளைக் கொள்ளலாம்.

காதலும் கனவும்

காதல் இளைஞர்களின் உள்ளத்தைக் கொள்ளைக் கொள்ளும் உணர்ச்சி. பரபரப்பான கடமைகள் மிகுந்த சூழ்நிலையில் வாழ்வோரும்,

அமைதியும் ஓய்வும் மிகுந்த சூழ்நிலையில் வாழ்பவரும் தன் நிலையை நினைத்து ஏங்குவது இயற்கை. மனம் எதை மிகுதியாக நினைத்து ஏங்குகிறதோ அது கனவிலும் வந்து அமையும். பகலெல்லாம் அதையே எண்ணி ஏங்கியபிறகு இரவில் ஓய்ந்து உறங்கும் மூளையில் அவ்வெண்ணமே மேலெழுந்து நிற்கும். இவ்வாறு மூளையில் மேலெழும் எண்ணமே கனவு எனப்படுகிறது.

கனவு காணுதல் என்பது செயலுக்கான முயற்சி நிலை. உளவியல் அறிஞர் 'சிக்மண்ட் பிராய்டு' 'நிறைவேறாத ஆசைக்கனவுகளை நனவாக்குவது கனவுகள்' என்கிறார். மனிதனின் நிறைவேறாத ஆழ்மன எண்ணங்களே கனவுகளாக வெளிப்படுகிறது.

தொல்காப்பியர் இளமைப் பருவக் கனவாக,

"காதல் கைம்மிக்க கனவில் ஆற்றலும்" [33]

"கனவும் உரித்தால் அவ்விடத்தான்"[34]

"நாணுதல் துஞ்சல் அரற்றுக் கனவெனாஅ"[35]

"கண்துயில் மறுத்தல் கனவொடு மயங்கல்"[36]

எனும் நான்கு நிலைகளைக் காட்டுகிறார்.

குறள் கனவினைக் காண்பது தலைவி என்று கூறுகிறது. தலைவி தன் தலைவனைக் கனவில் சந்திப்பதை,

"கயலுண்கண் யான் இரப்பத் துஞ்சின் கலந்தார்க்கு
உயல்உண்மை சாற்றுவேன் மன்" (குறள்.1212)

"நனவினால் நல்கா தவரைக் கனவினால்
காண்டலின் உண்டுஎன் உயிர்" (குறள்.1213)

"நனவென ஒன்றில்லை யாயின் கனவினால்
காதலர் நீங்கலர் மன்" (குறள்.1216)

எனும் குறள்கள் மெய்ப்பிக்கின்றன.

கனவிலே நான் என் தலைவனை சந்திக்கும்போது அவரிடம் நான் பிழைத்திருக்கும் செய்தியை சொல்லுவேன் என்கிறாள். மேலும் கனவில் நான் என் தலைவனைக் காண்பதால் பிழைத்திருக்கிறேன். இல்லையெனில் என்னுடைய உயிரானது என்னைவிட்டுப் பிரிந்திருக்கும் என்றும், விழிப்பதால் எனது கனவு கலைகிறது. அதனால் என்னுடைய தலைவன் எனைவிட்டுப் பிரிந்து போகிறார். எனக்கு விழிப்பு வராமல் போனால் எப்பொழுதும் என்னுடன் இருப்பார் என தலைவி தலைவன் அருகில்லாமையால் கொண்டுள்ள துன்ப உணர்வினை நயம்பட எடுத்துக் காட்டுகிறார் வள்ளுவர்.

தலைவி கனவிற்கு விருந்திடும் நிகழ்ச்சியை, கீழ்வரும் குறள் எடுத்தியம்புகிறது.

“காதலர் தூதொடு வந்த கனவினுக்கு
யாதுசெய் வேன்கொல் விருந்து” (குறள்.1211)

தலைவனை தன் கனவில் காண்பித்த கனவிற்கு விருந்துசெய்வேன் எனக் கூறுவதிலிருந்து அவள் தலைவன் மேல் கொண்ட காதல் புலனாகிறது.

கனவினைக் குறித்து தற்காலத் தலைவி உரைப்பதாக கீழ்வரும் கவிதை வரிகள் அமைகின்றன.

“நனவே வேண்டாம்
எனக்கு
நனவே வேண்டாம்
என்பேன்
கனவில் மட்டும்
உன்னோடு கலப்பதாலே”[37]

இதன்வழி கனவில் கூட தன் தலைவனை பிரிய எண்ணமில்லாது இருக்கும் தற்காலத் தலைவியின் நிலையையும் இங்கு காணமுடிகிறது.

காதலும் பிரிவும்

தலைவன் ஓதல், காவல், பகை, தூது, பொருளீட்டல், பரத்தை முதலிய காரணங்களுள் ஏதேனும் ஒன்றின் பொருட்டாகத் தலைவியை விட்டுப்பிரிந்துச் செல்வான். இப்பிரிவுகளைப் பற்றி தமிழிலக்கியங்கள் தெளிவாகக் கூறுகின்றன. தொல்காப்பியம், கல்விக்காக பிரியும் ஓதல் பிரிவை மூன்று ஆண்டுகள் எனவும்,

"வேண்டிய கல்வியாண்டுமுன் இறவாது"[38]

அரசர்க்கான தொழில்களான தூது, நாடு, காவல், பகைத்தணிவினை ஆகியவற்றிற்காக பிரியும் பிரிவுக்காலம் ஓராண்டெனவும்

"வேந்துரு தொழிலே யாண்டினதுகமே"[39]

எனவும், ஏனையப் பிரிவான பொருள்வயிற் பிரிவு, மூன்றாண்டு அல்லது ஓராண்டு அளவினதாக,

"ஏனைப் பிரிவும் அவ்வயின் நிலையும்"[40]

என பிரிவின் வகைகளையும், காலத்தினையும் தெளிவாகச் சுட்டுகிறது.

வள்ளுவர் இல்லறத்தலைவன் பரத்தமைக்காகத் தலைவியை விட்டுப் பிரிந்தச் செய்தியை குறள்களில் எவ்விடத்திலும் குறிப்பிடவில்லை. மேலும் களவு காலத்திலும் தலைவன் மற்றும் தலைவியின் பிரிவினைக் குறித்து எவ்விடத்திலும் கூறவில்லை.

பிரிவில் பயம்

தலைவி தலைவனின் பிரிவைக் குறித்து ஏற்படுகின்ற பயஉணர்வினைப் பற்றி வள்ளுவர்,

"இன்கண் உடைத்தவர் பார்வல் பிரிவஞ்சும்
புன்கண் உடைத்தால் புணர்வு" (குறள்.1152)

"நினைப்பவர் போன்று நினையார்கொல் தும்மல்
சினைப்பது போன்று கெடும்" (குறள்.1203)

"யாமும் உளேங்கோல் அவர்நெஞ்சத்து எம்நெஞ்சத்து
ஓஒ உளரே அவர்" (குறள்.1204)

எனும் குறள்களில் சுட்டுகிறார். தலைவனது முன்னைய பார்வையும் பேச்சும் இனிமையாக இருந்தன. ஆனால் எப்போது பிரிந்து விடுவாரோ என்ற பயமும், எனக்கு தும்மல் உண்டாவது போன்று இல்லாது போய் விடுகிறது. ஆதலால் தலைவன் என்னை நினைக்க முயன்றும் அந்நினைவு நீடிக்கவில்லையோ என்ற பயமும், என் மனதில் தலைவன் இருப்பது போன்று அவருடைய மனதில் நான் இருப்பேனோ என்ற பயத்துடன் பிரிவுகாலத்தில் இருப்பதாக தலைவியின் கூற்றாக கூறுகிறார்.

பொருள்வயிற் பிரிவு

பொருள் மனித வாழ்வின் அச்சாணி, அத்தகைய பொருளினை ஈட்டுவதற்காகத் தலைவியை பிரிந்திருப்பதையே பொருள் வயிற்பிரிவு எனலாம். பொருள்வயிற் பிரிவினைக் குறித்து,

"பொருள்மாலை யாளரை உள்ளி மருள்மாலை
மாயுமென் மாயா உயிர்" (குறள்.1230)

என்று குறள் குறிப்பிடுகிறது. தலைவன் பொருளையே பெரிதென்று மதித்துத் தலைவியை நினைக்கவில்லை. எனவே இந்த மாலையில் தன்னுயிர் மாயும் என்று தலைவி கூறுகிறாள். தலைவியின் கூற்றின் வழி தலைவன் பொருளீட்டச் சென்றுள்ளான் என்பதை அறியமுடிகிறது.

இம்மனநிலை இன்றைய பெண்களிடம் அதிக அளவில் காணப்படுகிறது. பொருளீட்டும் பொருட்டு வெளியூர், வெளிமாநிலங்கள் மற்றும் வெளிநாடுகளுக்குச் செல்லும்போது ஆண்களும் பெண்களும் தன் துணையினைப் பிரிந்து மனதளவில் பெரும் துன்பத்தினை சந்திக்கின்றனர். ஆயினும் இவ்வுணர்வுகளைப் பிறருக்கு வெளிப்படுத்தும் திறனற்று காணப்படுகின்றனர். தற்காலத் தலைவனின் உள்ளக்குமுறலாக,

“பனிமலரே புதுநிலவே
பருவமழைத் தேன்துளியே
தனிமரமாய் நீ நின்று
தவிப்புடனே எனை நோக்க
கனிவான உன்முகத்தைக்
கண்ணீரில் மூழ்கவிட்டே
வெந்நீரில் விழும் புழுவாய்
வெளிநாடு புறப்பட்டேன்”[41]

என கவிஞர் கூறுகிறார். நவீனக் காலத் தலைவியின் பிரிவுத்துயரை,

“கால்கள் நடக்காது மகிழ் ஊர்திப் பயணம்
நாள் நளினமாக நடை பயிலும்
சேய்கள் எல்லாம் வளமாக வளரும்
நாய்கள் கூட நாற்காலியில் அமரும்
அயல்நாட்டில் கணவரின் வாசம்
கயல்வழியில் கண்ணீரின் ஓட்டம்
இயல்பான வாழ்வில் இமாலய மாற்றம்
இவள் நெஞ்சமோ தலைவனில்லாது சாகும்”[42]

என்று ரொ. மரியதெரசா எனும் கவிஞர் பொருளினாலான பல இன்பங்களைப் பெற்றாலும் தலைவனது பிரிவால் இவளது கண்களோ கண்ணீரையும், நெஞ்சமோ சாகும் நிலையை அடைகிறது என்று கூறுவதிலிருந்து கணவனின் பிரிவுத்துயரின் துன்பத்தை நாம் அறிந்துகொள்ள முடிகிறது.

போர்வயிற் பிரிவு

பிற நாட்டினரிடமிருந்து தன் தாய் நாட்டைக் காப்பது ஒவ்வொரு குடிமகனின் இன்றியமையாத கடமையாகும். அக்கடமையினை ஆற்ற தலைவன் செல்வதே ‘போர்வயிற்பிரிவு’ எனப்படுகிறது.

போரின் போது வெற்றிவாகைச் சூடுவதும் வீரமரணம் அடைவதும் வீரனின் செயலாகும். போர்வயிற் பிரிவினைப் பற்றி தலைவி கூறும் கூற்றாக கீழ்வரும் குறள் அமைகிறது.

“உரன்நசைஇ யுள்ளந் துணையாகச் சென்றார்
வரல்நசைஇ இன்னு முளேன்” (குறள்.1263)

“வினைகலந்து வென்றீக வேந்தன் மனைகலந்து
மாலை அயர்கம் விருந்து” (குறள்.1268)

தலைவன் என்னை விட்டுப் பிரிந்து வெற்றியை எதிர்நோக்கி முயற்சியில் ஈடுபட்டு இன்பம் பெறுகிறார் என தலைவி எண்ணுகிறாள். போருக்குச் சென்ற அரசன் வெற்றியோடு திரும்பட்டும். நாமும் அன்று மாலை தலைவியைக் கூடி மகிழலாம் எனத் தலைவன் கூறுவதிலிருந்து தலைவனும் அரசனோடு போருக்குச் சென்ற செய்தியை அறிய முடிகிறது.

இன்றைய சமுதாயச் சூழலில் தாய் நாட்டைக் காக்கும் பொருட்டு தரைப்படை, கப்பற்படை, விமானப்படை போன்றவைகளில் பல்லாயிரக்-

கணக்கான வீரர்கள் தம்முடைய மனைவி, குழந்தைகளைப் பிரிந்து தம்முடைய கடமைகளைக் கண்ணெனெ எண்ணிச் செயல்படுவதைக் காண்கிறோம்.

தலைவனின் பிரிவை எண்ணிக் கொண்டிருக்கும் தலைவி உடல்மெலிவது இயற்கை. இந்நிகழ்விற்கு கீழ்வரும் குறள் சான்றாக அமைகிறது.

"துறைவன் துறந்தமை தூற்றாகொல் முன்கை
இறைஇறவா நின்ற வளை" (குறள்.1157)

என்முன்கை மணிகட்டிலிருந்து கழன்று கொண்டிருக்கும் வளையல்கள் என்னை பிரிய வேண்டுமென்று நினைக்கும் தலைவருக்கு என் நிலைமையை எடுத்துக் கூறாதோ என்று தலைவியின் ஏக்கத்தை வள்ளுவர் புலப்படுத்துகிறார்.

தலைவனைப் பிரிந்த தலைவியின் இரவுகளின் அவல நிலையை கீழ்வரும் குறள்கள் வழி அறிய முடிகிறது.

"காமக் கடும்புனல் நீந்திக் கரைகாணேன்
யாமத்தும் யானே உளன்" (குறள்.1167)

"மன்உயிர் எல்லாம் துயிற்றி அளித்திரா
என்னல்ல தில்லை துணை" (குறள்.1168)

"வாராக்கால் துஞ்சா; வரின்துஞ்சா; ஆயிடை
ஆர்அஞர் உற்றன கண்" (குறள்.1179)

காதலாகிய கடலின் கரையை தோணியாகிய என் தலைவனின்றி நடு இரவில் தவிக்கிறேன். உலகிலுள்ள எல்லா உயிர்களும் இன்புற்று ஓய்வினைப் பெறுகின்றன. ஆனால் நான் மட்டும் என் தலைவனின் பிரிவையே நினைத்து இரவில் தூக்கமின்றி தவிக்கின்றேன் என்றும், தலைவனுடைய

பிரிவை எண்ணித் தனியே இருக்கும் இந்த இரவுப் பொழுது நீண்ட பொழுதாகவே காணப்படுகிறது. மேலும் என் தலைவன் வராதபோது எப்பொழுது வருவாரோ என கண் துயில மறுக்கிறது. ஆனால் வந்த பொழுதோ என்னைவிட்டுப் பிரிந்து விடுவாரோ என்று கண் தூங்காமல் இருக்கிறது என வள்ளுவர் எடுத்துக்காட்டுகிறார். தலைவனின் கூற்றாக,

தலைவி என்னைவிட்டு பிரிந்து இருக்கிறாள். இப்பிரிவினால் அவளது உள்ளம் உடைந்து ஏதும் துன்பம் நேர்ந்து விடுமோ என தலைவன் அஞ்சுகிறான்.

"பெறின்என்ஆம் பெற்றக்கால் என்ஆம் உறின் என்ஆம்
உள்ளம் உடைந்து உக்கக் கால்" (குறள்.1270)

என எண்ணுவதுடன் ஏதும் துன்பம் நேர்ந்துவிட்டால் நான் அவளை அடைந்து என்ன பயன் என்று தன்னுள் கேட்டுக்கொள்கிறான். மேலும் தலைவியின் பிரிவு துன்பத்தை

". . . மனைகலந்து
மாலை அயர்கம் விருந்து" (குறள்.1268)

என்கிறது. தான் சென்ற வினையானது முடிந்துவிட்டது. எனவே நான் பிரிந்திருந்த தலைவியை மாலையில் கூடி மகிழ்வேன் எனக் கூறுவதிலிருந்து தலைவனுக்கும் பிரிவின் உணர்வு துன்பத்தை ஏற்படுத்துகிறது என்பதை இதன்வழி வள்ளுவர் எடுத்தியம்புகிறார்.

இன்றைய இல்லறத்தலைவிகள் கல்வியறிவு பெற்றவர்களாகவும், வேலைக்குச் செல்பவர்களாகவும், வெளியுலகை அறிந்தவர்களாகவும் காணப்பட்டாலும், வள்ளுவர் கால இல்லத் தலைவி தலைவனின் அன்பிற்கு

ஏங்குவதைப் போன்றே இன்றைய இல்லறத் தலைவிகளும் தலைவனின் அன்பிற்கும் அரவணைப்பிற்கும் ஏங்குகின்றனர். இதில் ஒருசில துணையைப் பிரிந்திருக்கும் ஆண்களும் பெண்களும் கணவரிடம் அல்லது மனைவியிடம் கிடைக்காத நெருக்கத்தினையும் பாதுகாப்பையும் அன்பையும் அரவணைப்பையும் பிற பெண்ணிடமும் பிற ஆணிடமும் எதிர்பார்க்கின்றனர். இதுவே தவறான உறவுமுறைகளுக்கும் அடிப்படைக் காரணமாக காணப்படுகிறது. இந்த தவறானத் தொடர்பு குடும்ப வாழ்க்கைச் சிதைவதற்கும் வழிவகுக்கிறது. இதனால் குழந்தைகளும் வாழ்க்கைத்துணையும் மன மற்றும் உடல் துன்பத்திற்கும் ஆளாகுவதை பரவலாக ஊடகங்கள் வழி அறிகிறோம். மேலும் சட்டரீதியாக பிரிந்து விடுவதையும் காண முடிகிறது.

காதலும் ஊடலும்

காதலில் சிறு சிறு கோபமே ஊடல் என்று அழைக்கப்படுகிறது. ஊடலே கூடலுக்கான முதல்படி எனலாம். தன் அன்புக்குரிய பொருள் தனக்கே உரியதாக இருக்க வேண்டும் என்று எண்ணுவது இயல்பு. “கணவனுடைய அன்பு தனக்கு மட்டுமே உரிமையாக இருக்க வேண்டுமென்பது மனைவியின் இயல்பு. அவ்வுரிமையில் ஏதேனும் குறையோ ஐயமோ ஏற்படும்போது அதற்காகப் போராடி உரிமையை முழுமையாகப் பெற முயலும் முயற்சியே ஊடல்”[43] என்று மு.வரதராசன் அவர்கள் குறிப்பிடுகின்றார்.

சங்க இலக்கியங்களில் காட்டப் பெறுகின்ற தலைவியின் ஊடலுக்குத் தலைமகனின் பரத்தமை ஒழுக்கமே காரணமாகின்றது. தலைவன் தன்னிடம் அன்பு செலுத்தாமல் பிறமகளிரிடத்து அன்பு செலுத்துகிறான். அவனது அன்பின் பெரும்பகுதி தனக்கு கிடைக்காதா என்ற ஏக்கமே ஊடலின் பொருளாக காணப்பட்டது.

ஆனால் வள்ளுவர் காட்டுகின்ற தலைவன் பரத்தமை நிமித்தமாக தலைவி ஊடியதாக எவ்விடத்திலும் கூறவில்லை. வள்ளுவர் தலைவனையும் தலைவியையும் உயர்ந்த பண்புடையவர்களாகவே காட்டுகிறார். ஆனால் தலைவன் மீது தலைவி பரத்தமைத் தன்மையுடையவன் என குற்றஞ்-சுமத்துவதை,

“பெண்ணியலார் எல்லாரும் கண்ணில் பொதுஉண்பர்

நன்னேன் பரந்தநின் மார்பு” (குறள்.1311)

எனும் குறள் குறிப்பிடுகிறது. உன்னுடைய பரந்த மார்பானது பலருக்கும் காட்சி கொடுத்து மகிழ்வித்து பரத்தமை தன்மை பெற்றுவிட்டது என்ற தலைவி கூற்றினை இக்குறள் வழி கூறுகிறார்.

ஊடியத் தலைவியை பல வழிகளில் சமாதானம் செய்ய நினைக்கிறான். ஆனால் ஊடலை முற்றுபெற தலைவன் எடுக்கின்ற முயற்சிகள் அனைத்தும் தலைவியின் ஊடல் சொற்களால் தோல்வியுறுவதை,

“கோட்டுப்பூச் சூடினும் காயும் ஒருத்தியைக்

காட்டிய சூடினீர் என்று” (குறள்.1313)

“யாரினும் காதலம் என்றேனா ஊடினாள்

யாரினும் யாரினும் என்று” (குறள்.1314)

“இம்மைப் பிறப்பில் பிரியலாம் என்றேனாக

கண்நின்ற நீர்கொண் டனள்” (குறள்.1315)

“உள்ளினேன் என்றேன்மற்று என்மறந்தீர் என்றென்னைப்

புல்லாள் புலத்தக் கனள்” (குறள்.1316)

"தும்முச் செறுப்ப அழுதாள் நுமருள்ளல்

எம்மை மறைத்திரோ என்று" (குறள்.1318)

எனும் குறள்கள் எடுத்தியம்புகிறது.

மரத்தில் உண்டான மலரை மாலையாக அணிந்தால் அவள்கோபம் நீங்கி சமாதானம் ஆவாள் என்று நினைத்தான். ஆனால் அவளோ வேறொருத்தியோடு சமப்படுத்தி பார்க்கலாம் என்றல்லவா மலர்மாலையை அணிந்தாய் என ஊடினாள். "எல்லோரையும் விட உன்மேல் பிரியமுள்ளவனாக இருக்கிறேன்" என்று சொன்னேன். அவளோ "வேறு யாரை விட என்னிடம் நீ பிரியமாய் இருக்கிறாய்" என்று சொல்லி கோபித்தாள். "இந்தப் பிறவியிலே பிரிய மாட்டேன்" என்று கூறினேன். அவளோ "மறுபிறவியில் பிரிந்து விடுவாயோ" எனக்கூறி கண்ணீர் விட்டாள். "நான் உன்னை எண்ணினேன்" என்றேன். அப்போது "என்னை ஏன் மறந்தீர்" என்று கூறி ஊடினாள். தும்மலை அடக்கினேன். அதற்கு "உம்மை விரும்புவரை மறைக்கத்தானே" அடக்கினீர் என அழுதாள். நான் அவளிடம் பணிந்து "என்னை பொறுத்துக்கொள்ள வேண்டும்" என்றவுடன் "நீ இப்படித்தானே எல்லோரிடம் பணிந்து கேட்டிருப்பாய்" என்று கோபம் கொண்டாள் என்கிறான். எதைக்கூறியும் ஊடலில் சமாதானம் ஆகவில்லையே என எண்ணி இனிநான் என்ன செய்வது என்றெண்ணி அவளைப் பார்த்தேன் என்று தலைவன் கூறுகிறான். ஆனால் தலைவி,

"நினைத்திருந்து நோக்கினும் காயும் அனைத்துநீர்

யார்உள்ளி நோக்கினீர் என்று" (குறள்.1320)

குறிப்பிடுகிறாள். 'நீர் யாரை நினைத்து என்னை பார்க்கிறீர்' என்று கூறி அதற்கும் என்னிடம் ஊடல் கொண்டாள் என்று ஊடலால் தான்படும் பாட்டினைக் குறித்து தலைவன் கூறுகிறான்.

தலைவன் தன்னை சமாதானப்படுத்த முயலுகிறான் என்பதை தலைவி அறிந்திருந்ததை

"ஊடி இருந்தேமாத் தும்மினார் யார்தம்மை
நீடுவாழ்க என்பாக் கறிந்து" (குறள்.1312)

எனும் குறள் வெளிப்படுத்துகிறது.

ஊடல் என்பது தலைவன் தலைவியின் தனிப்பட்ட வாழ்வில் மிக முக்கியமானது. ஊடல் இல்லையேல் வாழ்வானது இரசனையற்றதாகி விடும். ஊடல் இல்லாத வாழ்வு உப்பற்ற உணவைப் போன்று சுவையற்று காணப்படும் என்பதற்கு,

"துனியும் புலவியும் இல்ஆயின் காமம்
கனியும் கருக்காயும் அற்று" (குறள்.1306)

எனும் குறள் சான்றாகிறது. காதல் வாழ்க்கையில் பெரும்பிணக்கும் கூடாது. மேலும் ஊடலும் இருந்து கோபமாக மாறாமல் அமையுமானால் காதல் வாழ்வும் சுவையாக அமையும். ஊடல் காலங்களில் தலைவன் தலைவியின் காதலானது 'கெஞ்சினால் மிஞ்ச செய்யும், மிஞ்சினால் கெஞ்ச செய்யும்' தன்மையைக் கொண்டதாக காணப்படுகிறது.

தலைவன் புலன்களை வருணிக்கும் போதும் புணர்ச்சிக் காலங்களைத் தவிர சாதாரணமான தருணங்களில் தலைவனிடமிருந்து அன்பான, ஆதரவான, தாழ்மையானச் செயல்களையும், சொற்களையும் பெரும்பாலும் வெளிப்படுத்துவதில்லை. ஆனால் தலைவியின் ஊடலைத் தீர்ப்பதற்காக அவளிடம் இரங்கி வந்து பேசுவது அவர்களின் காதலை

வலுப்படுத்துவதாகவே காணப்படுகிறது. இந்நிலைகள் இக்காலத் தலைவன் தலைவிக்கு ஏற்புடையதாகவே காணப்படுகிறது.

ஊடல் காதலை வளர்ப்பதற்கான வழியென்று வள்ளுவர் கூறினாலும் ஊடலை நீட்டிப்பதால் வாழ்வில் ஏற்படும் துயரநிலையை பல குறள்களில் எடுத்தாண்டுள்ளார். ஊடலின் அளவினைக் குறித்துக் கூறுகையில்,

“உப்புஅமைந் தற்றால் புலவி அதுசிறிது
மிக்கற்றால் நீள விடல்” (குறள்.1302)

என்கிறார்.

ஊடல் என்பது உணவில் உப்பு அமைந்து அளவாகச் சுவை கொடுப்பது போன்றதாகும். ஊடல் காலம் நீளுமாயின், உணவில் உப்பு மிகுந்து சுவைக் கெடுவது போலாகும் என்று கூறுகிறார்.

ஊடலின் காலம் சிறிதளவு காணப்பட்டால் ஊடலினால் காதல் உணர்வு பெருகும். ஊடலின் காலம் நீட்டிக்கும் போது தலைவன் தலைவியினிடையே துன்ப சூழ்நிலையை உருவாக்கும். எனவே காதலில் ஊடலின் கால அளவை நீட்டிக்கக் கூடாது என இன்றைய கால தலைவன் தலைவிக்கும் அறிவுரை வழங்குகிறார்.

ஊடியவரின் ஊடலை நீக்காவிடில் ஊடியவரின் நிலையை,

“அலந்தாரை அல்லல்நோய் செய்தற்றால் தம்மைப்
புலந்தாரைப் புல்லா விடல்” (குறள்.1303)

“ஊடி யவரை உணராமை வாடிய
வள்ளி முதல்அரிந் தற்று” (குறள்.1304)

என்கிறார்.

ஊடியவரின் துன்பத்தை மேலும் அதிகப்படுத்துவது போன்றதாகும். மேலும் முன்னமே வாடிய கொடியை நீர்விட்டு வளர்க்காது வேரை அறுத்துவிடுவது போன்றதாகும். எனவே ஊடியவரின் நிலையை அறிந்து அவரது ஊடலைத் தீர்க்க வேண்டுமென்று உரைக்கிறார்.

இன்றைய இல்லறங்களில் இத்தகைய நிலை பெருமளவு காணப்படுகிறது. சிறுசிறு ஊடல்களே இல்லத்தில் பெரிய பிரச்சினைகள் உருவாகுவதற்கு காரணமாகிறது. இவையே ஆண், பெண் முறையற்ற தொடர்பிற்குக் காரணமாக அமைவதுடன் விவாகரத்து, கணவன், மனைவி பிரிந்து வாழ்தல், தற்கொலைச் செய்தல் போன்ற துயரநிலைக்குத் தலைவன் தலைவியை இட்டுச் செல்கிறது.

ஊடலின் பயன்

பொதுவாக பிரிவும், சிறுகோபமும் மனிதனுக்குப் பகைவனாய் இருந்து மனதைத் துன்புறுத்துவன. ஆனால் தலைவன் தலைவியின் இல்லற வாழ்வில் பிரிவும் சிறுகோபமும் இன்பத்திற்கும் காதல் வளர்ச்சிக்கும் துணை புரிகின்றன. இதனை,

“தவறிலர் ஆயினும் தாம்வீழ்வார் மென்றோள்

அகன்றலின் ஆங்கொன்று உடைத்து” (குறள்.1325)

என்கிறது குறள். ஒரு தவறும் இல்லாதபோதும் தாம் விரும்பும் பெண் ஊடிசற்று விலகியிருப்பது இன்பத்தை அளிக்கிறது என தலைவன் எண்ணுகிறான்.

ஊடலின் போதுதான் குற்றங்குறைகளைப் பேசி தலைவன் தலைவியிடையே மனஒற்றுமை ஏற்படும் என்பதை,

"... காமம்

புணர்தலின் ஊடல் இனிது" (குறள்.1326)

என்கிறது குறள். காதலில் கூடி மகிழ்வதை கூடுவது இன்பமாக இருக்கும் என்று வள்ளுவர் எடுத்துரைக்கிறார்.

ஊடலில் தோற்றவர் யார்? வெற்றியடைந்தவர் யார்? என தீர்மானிப்பதை,

"ஊடலில் தோற்றவர் வென்றார் அதுமன்னும்

கூடலிற் காணப் படும்" (குறள்.1327)

எனும் குறளில் விடை தருகிறார். தலைவன் தலைவி இருவரில் ஊடல் தாங்காது தோற்றவரே வெற்றியடைந்தவராவார் என ஊடலின் வெற்றி தோல்வியைக் குறித்துத் தெளிவுபடுத்துகிறார்.

ஊடலானது கணவன் மனைவியின் குறைநிறைகளைப் பேசி புரிதலை உருவாக்குகிறது என்பது இக்கால கணவன் மனைவிக்கும் சாலப் பொருந்துகிறது.

ஒழுக்கம்

சமுதாயத்தின் சிறுகூறே இல்லறம் ஆகும். இல்லறம் என்பது தனித்தனி மனிதர்களின் உறவுமுறையால் ஆன சிறுஅமைப்பாகக் கருதப்படுகிறது. சமுதாய வாழ்விலும், தனிமனித வாழ்விலும் ஒழுக்கம் என்பது இன்றியமையாததாகும். இவ்வொழுக்கத்தைக் குறித்து "ஒழுக்கமே மனிதனுடைய உயர்ந்த குறிக்கோளாக இருத்தல் வேண்டும்"[44] என்பதை மிகுந்த உறுதியோடு வள்ளுவர் கூறுவதாக ஆல்பர்ட் சுவைட்சர் குறிப்பிடுகின்றார்.

அறம் என்னும் சொல்லுக்கு தமிழில் பலபொருள்கள் உண்டு. பொதுவாக நற்பண்பு அல்லது ஒழுக்கம் என்னும் பொருளிலே தமிழ் இலக்கியங்கள் இச்சொல்லினை கையாளுகிறது. எண்ணம், சொல், செயல் ஆகிய மூன்றாலும் நன்மையே விளைவித்தல் ஒழுக்கமாகும். பண்டையத் தமிழர்கள் ஒழுக்கத்தில் நாட்டமுடையவர்கள். உயிரினும் சிறந்தது ஒழுக்கமே என்ற உண்மையை அறிந்திருந்தனர். மாறுபாட்டிற்கு காரணிகளாக அமையும் குணங்களை பதிற்றுப்பத்து கீழ்வருமாறு விவரிக்கிறது.

“சினனே, காமம், கழி, கண்ணோட்டம்,
அச்சம், பொய்ச்சொல், ஆன்மீக உடைமை
தெறல், கடுமையொடு, பிறவும் இவ்வுலகத்து
அறந்தெரி திகரிக்கு வழியடையாகும்”[45]

பொருளற்ற கோபம், காமவெறி அளவுக்கு மீறிய தயவு, பகைவர்களுக்குப் பயப்படுதல், பொய் கூறல், பொருளின் மேல் பேராசை, கடுஞ்சொல் கூறல் இவைகளும் இவைகளைப் போன்ற குணங்களும் அறநெறியில் செல்லும் வண்டிக்கு அது செல்லுகின்ற வழியிலே போடப்படும் முட்டுக்கட்டையாகும் என்று கூறுகிறது. ஒழுக்கம் உயிரினும் சிறந்தது என்பதை வள்ளுவர்,

“. . . . . ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும்” (குறள். 131)

எனும் குறள்வழிக் கூறுகிறார். உயர்ந்தக் குடிப்பிறப்பின் தன்மையை ஒழுக்கமே நிர்ணயம் செய்யுமென்பதை,

“ஒழுக்கம் உடைமை குடிமை இழுக்கம்
இழிந்த பிறப்பாய் விடும்” (குறள். 133)

எனும் குறள் மெய்ப்பிக்கிறது. ஒழுக்கம் உயர்வைத் தரும். அவ்வுயர்வு பெற்றவன் எவனும் உயர்ந்த குடிமகனாக கருதப்படுவான். எவ்வளவு உயர்ந்த குடியில் பிறந்தாலும் நல்லொழுக்கம் தவறினால் இழிந்த குடியினைச் சார்ந்தவனாகவே எண்ணப்படுவான். இதன்வழி ஒழுக்கமே நல்இல்லத்தை அமைப்பதற்கான தகுதியைக் கொடுக்கிறது என்பது புலனாகிறது.

வள்ளுவர் நல்இல்லத்தை அமைப்பதற்கும் இல்லத்தில் வாழ்கின்ற மனிதர்கள் உயர்ந்த வாழ்வியலை வாழுவதற்கும் பல குறள்களில் மூலமாக ஆலோசனைகளைக் கூறுகிறார்.

நற்குணம்

ஒரு மனிதன் ஒழுக்கமுடையவன் என்பதை வெளிக்காட்டுவதே அவனுடைய நற்குணங்களாகும். "இல்லறத்துக்குரிய நற்குணங்களாக நகை, ஈகை, இன்சொல், இகழாமை, பொறாமையின்மை, பொறுமை, சிக்கனம், சினமின்மை, சாந்தம், சந்தேகமின்மை, தியாகம், தொண்டு, விருந்தோம்பல் ஆகியவற்றையும் இல்வாழ்க்கையை பெருமைப்படுத்துபவை"[46] என பொன். பரமகுரு அவர்கள் கூறுகிறார்.

இல்லத்தில் வாழ்கின்ற இல்லாள் நற்குணத்தைப் பெற்றிருக்க வேண்டுமென்பதற்கு வள்ளுவர் பல கருத்துக்களைத் தெரிவிக்கின்றார்.

"மனைமாட்சி இல்லாள்கண் இல்லாயின் வாழ்க்கை
எனைமாட்சித் தாயினும் இல்" (குறள். 52)

"இல்லது என் இல்லவள் மாண்பானால் உள்ளதுஎன்
இல்லவள் மாணாக் கடை" (குறள். 53)

"பெற்றார் பெறின்பெறுவர் பெண்டிர்" (குறள். 58)

மனைவி நல்லகுணங்களை பொருந்தியவளாக இருக்க வேண்டும். நல்வாழ்க்கை அமைய வேண்டுமானால் செல்வம் முதலியன இல்லையானாலும் நற்குணங்களைக் கொண்ட மனைவியைப் பெற்றிருந்தால் கணவன் வாழ்வில் ஒரு குறையும் இல்லை. நல்ல குணநலனுடைய பெண்ணை மனைவியாகப் பெற்றவன் தேவர் உலகில் பெறக்கூடிய இன்பத்தைப் பெற்றவன் என்கிறார்.

தற்காலச் சமுதாயச் சூழலிலும் இல்லத்தின் தலைவி நற்குணங்களைப் பெற்றிருந்தால் இல்லமானது சுமூக நிலையுடன் காணப்படும். குடும்பத் தலைவி நற்குணங்களைப் பெறாதவளாக காணப்பட்டால் இல்லமானது பிறரால் நகைக்கப்படும் சூழ்நிலைக்குத் தள்ளப்படுவதை கண்கூடாக காணமுடிகிறது.

இல்லத் தலைவிகளுக்கு மட்டுமன்றி இக்கால இல்லத் தலைவர்களுக்கும் முற்றும் ஏற்புடையதாகவே வள்ளுவர் கூறும் கருத்துக்கள் காணப்படுகிறது.

பொறாமை கொள்ளாமை

பொறாமை என்பது பிறர் செல்வம் முதலிய சிறப்புகளைக் கண்டு மனம் பொறுக்காத நிலையாகும். பொறாமை ஒருவனுடைய ஒழுக்கத்தையும், வளர்ச்சியையும் கெடுக்கக் கூடியது. ஒவ்வொரு மனிதனும் பொறாமை இல்லாது வாழும் இயல்பைத் தனக்கு ஒழுக்கமாகக் கொண்டு வாழ வேண்டும் ஔவையார்,

"ஔவியம் பேசேல்"[47]

என்கிறார். மனிதன் பிறரிடம் எதற்காகவெல்லாம் பொறாமைக் கொள்கிறான் என்பதை,

"அறன்ஆக்கம் வேண்டாதான் என்பான் பிறன்ஆக்கம்

பேணாது அழுக்கறுப் பான்" (குறள். 163)

எனும் குறள் சுட்டுகிறது. பொறாமை இல்லாத பண்பினை தன் வாழ்க்கையில் ஒழுக்கமாகக் கடைபிடிக்க வேண்டுமென்பதற்கு கீழ்வரும் குறள் சான்றாக அமைகிறது.

"ஒழுக்காறாக் கொள்க ஒருவன்தன் நெஞ்சத்து

அழுக்காறு இலாத இயல்பு" (குறள். 161)

ஒரு மனிதன் தன் நெஞ்சிலே பொறாமையிலாது வாழும் வாழ்க்கையை இயல்பாக ஆக்கி, அதை தன் ஒழுக்கத்தின் சிறந்த வழியாக கடைபிடிப்பானாக என இக்குறள் வழி வழிகாட்டுகிறார்.

பொறாமைக் கொள்பவனுக்கு யாரும் தீங்குச் செய்ய எண்ண வேண்டாம் என்றும் குறள் அறிவுரை கூறுகிறது.

"அழுக்காறு என ஒரு பாவி திருசெற்றுத்

தீயுளி உய்த்து விடும்" (குறள். 168)

"அழுக்காறு உடையார்க்கு அதுசாலும் ஒன்னார்

வழுக்கியும் கேடீன் பது" (குறள். 165)

ஒருவரிடம் காணப்படுகிற பொறாமையே அவருக்குத் தீங்கு செய்யும் பொறாமை கொண்டவரிடம் உள்ளச் செல்வங்களை அழித்து அவனைத் தீச்செயலை செய்யத் தூண்டுகிற தன்மையை கொண்டதாகும் என்று பொறாமையின் தீமையினைக் குறித்து கூறுகிறார்.

பகுத்துண்ணல்

காகம் பகுத்துண்டு வாழும் உயிரிக்கு மிகச்சிறந்த சான்றாகும். ஒரு பருக்கை உணவாயினும் கா கா எனக் கத்தி பிற காகத்தினை அழைக்கும்

தன்மையினைக் கொண்டது. பண்டையத் தமிழன் தன் இயலாமையிலும் பகுத்துண்ணும் தன்மையினைக் கொண்டிருந்தான் என்பதை,

“நின் நயந்து உறைநர்க்கும் நீ நயந்து உறைநர்க்கும்
பல் மாண் கற்பின் நின் கிளை முதலோர்க்கும்
கடும்பின் கடும்பசி தீர யாழநின்
நெடுங்குறி யெதிர்ப்பை நல்கி யோர்க்கும்
இன்னோர்க்கு என்னாது, என்னோடும் சூழாது
வல்லாங்கு வாழ்தும் என்னாது நீயும்
எல்லோர்க்கும் கொடுமதி மனைகிழவோயே”[48]

எனும் பாடலடிகள் சுட்டி நிற்கிறது.

வீட்டில் உணவு எதுவும் இல்லாமல் குப்பைக்கீரையை உப்பின்றி காய்ச்சித் தன் குழந்தைகளுக்கு அளிக்கும் தன் மனைவியைக் கண்ட பெருஞ்சித்திரனார் இயலாமையை எண்ணி நொந்து குமண வள்ளலைப் பாடிப் பெற்ற பொருளினைப் பகுந்தளிக்க மனைவியிடம் கூறுவதை காணமுடிகிறது. மேலும் புறம்,

“உண்டிக் கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே”[49]

என்று கூறுகிறது. தேடிச் சேர்த்த உணவைத் தான் மட்டும் தனித்துண்பது இரத்தலை விட கொடியது என்று கீழ்வரும் குறள் விளக்குகிறது.

“இரத்தலின் இன்னாது மன்ற நிரப்பிய
தாமே தமியர் உணல்” (குறள். 229)

பகுத்துண்ணும் சிறப்பிற்கு கீழ்வரும் குறட்பாக்கள் சான்றாக அமைகிறது.

"பழியஞ்சிப் பாத்தூண் உடைத்தாயின் வாழ்க்கை

வழிஎஞ்சல் எஞ்ஞான்றும் இல்" (குறள். 44)

"பாத்தூண் மரீஇ யவனைப் பசிஎன்னும்

தீப்பிணி தீண்டல் அரிது" (குறள். 227)

"தம்மில் இருந்து தமதுபாத்து உண்டற்றால்" (குறள். 1107)

"பகுத்துண்டு பல்உயிர் ஓம்புதல் நூலோர்

தொகுத்தவற்றுள் எல்லாம் தலை" (குறள். 332)

இல்வாழ்க்கையில் பழிவந்துவிடுமோ என்று அஞ்சி, பகுத்துண்டு வாழ்க்கை நடத்துபவர்களது வம்சவழி எக்காலத்தும் நிலைத்திருக்கும். தனக்குக் கிடைத்த உணவைப் பங்கிட்டுக் கொடுத்து உண்ணும் வாழ்வுடையானைப் பசியென்னும் கொடியநோய் தொடுவதில்லை. இல்லறவாழ்க்கையிலிருந்து நல்வழியிலே ஈட்டிய பொருளைப் பிறர்க்குக் கொடுத்துத் தாமும் பங்கிட்டு கொடுப்பது இன்பமானது. பலருக்கும் பகுத்துக்கொடுத்து தானும் உண்டு பல உயிர்களைக் கொல்லாமல் காப்பாற்றுவது அறங்களில் சிறந்த அறம் என்று வள்ளுவர் கூறுகிறார்.

பகுத்துண்டு வாழும் குணம் இன்றைய குடும்பச் சூழலில் குறைந்துகொண்டே வருகிறது. பெரும்பாலும் தனிக்குடும்பச் சூழ்நிலையில் வாழ்வதாலும், குழந்தைகள் குடும்பத்தில் அதிகஅளவு இல்லாமையும் இதற்கு காரணமாக அமைகிறது. இன்றையத் தலைமுறையினருக்கு இக்குணத்தினை ஏற்படுத்த பெற்றோர்கள் சந்தர்ப்பங்களை ஏற்படுத்திக் கொடுத்தால் மட்டும் தான் குழந்தைகள் பகிர்ந்துண்ணும் மனப்பான்மையைப் பெற இயலும்.

இனியச் சொற்களைப் பேசுதல்

அன்போடு கலந்த வஞ்சனையில்லாத சொற்களையே இனிய சொற்கள் என்கிறோம். இன்சொல் பொய்யானதாகவும், போலியானதாகவும் இல்லாமல் நேர்மையானதாய் இருத்தல் வேண்டும். எடுத்தக் காரியத்தைத் தடையின்றி முடிக்கும் ஆற்றலும் பகைவரின் குற்றத்தைத் திருத்தும் திறமையும் இனியச் சொற்களுக்கு உண்டு. இதனை

"ஏயம் பட உரை"[50]

என ஔவையார் மொழிகின்றார்.

"அகன்அமர்ந்து ஈதலின் நன்றே முகன் அமர்ந்து
இன்சொலன் ஆகப் பெறின்" (குறள். 92)

என இன்சொல்லின் சிறப்பினை கூறுகிறார்.

"துன்புறூஉம் துவ்வாமை இல்லாகும் யார்மாட்டும்
துன்புறூஉம் இன்சொ லவர்க்கு" (குறள். 94)

எனும் இக்குறள் வழி இனியச் சொல்லால் பிறருக்குத் துன்பம் ஏற்படாது என வலியுறுத்துகிறார்.

பணிவான இன்சொல்லே ஒருவருக்கு அணிகலனாக விளங்கும் என்பதற்கு கீழ்வரும் குறள் சான்றாக அமைகிறது.

"பணிவுடையன் இன்சொலன் ஆதல் ஒருவற்கு
அணியல்ல மற்றுப் பிற" (குறள். 95)

இனியச்சொற்கள் இருக்கும்போது, இனிமையற்ற கொடுஞ்-சொற்களைப் பேசும்போது ஏற்படும் தீமைகளை கீழ்வரும் குறட்பாக்களில் விளக்குகிறார்.

"இன்சொல் இனிதீன்றல் காண்பான் எவன்கொலோ

வன்சொல் வழங்கு வது" (குறள். 100)

"இனிய உளவாக இன்னாது கூறல்

கனியிருப்பக் காய்கவர்ந் தற்று (குறள்.100)

நாவினால் சுட்ட வடு" (குறள். 129)

"யாகாவா ராயினும் நாகாக்க" (குறள். 127)

இனியச் சொற்களைப் பேசுவதால் பிறர் மகிழ்ச்சியடைவர் எனத் தெரிந்திருந்தும் இனிமையற்ற கொடுஞ்சொற்களை பேசுவது ஏன்? எனவும் கனி போன்ற இனிய சொற்கள் இருக்க காயினைப் போன்ற கடுஞ்சொற்களை பேசுவது ஏன் எனவும் வினவுகிறார். மேலும் நாவினால் பேசப்படுகின்ற கூரிய வார்த்தைகள் பிறர் மனதில் ஆறாத காயத்தை ஏற்படுத்தும் கடுஞ்சொற்களைப் பேசுகின்ற வாயினை காக்க வேண்டும் என்று இளைய சமுதாயத்தினருக்கு அறிவுறுத்துவதாக இக்குறள்கள் காணப்படுகிறது.

அன்புடைமை

அன்பு என்பது இயற்கையான உணர்வு ஆகும். வாழ்விற்கு அன்பு இன்றியமையாத அடிப்படைப் பண்பாகும். சமுதாய மற்றும் குடும்ப உறுப்பினர்களிடையே உறவுகள் உறுதிப்படவும் வலிமையடையவும் அன்பெனும் ஆற்றல் தேவைப்படுகிறது. அனைத்து உயிர்களிடத்திலும் அன்பு செலுத்துவது வாழ்வின் தலையாய ஒழுக்கமாகும். பிறர்க்கு உதவி செய்தல், அனைவரிடத்திலும் நட்புறவு, இன்சொல், இனியமுகம் ஆகியவற்றின் மூலம் அன்பு வெளிப்படுகிறது.

"அன்பின் வழியது உயிர்நிலை அஃதிலார்க்கு
என்புதோல் போர்த்த உடம்பு" (குறள். 80)

"அன்பிற்கும் உண்டோ அடைக்குந்தாம் ஆர்வலர்
புன்கணீர் பூசல் தரும்" (குறள். 71)

"அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு" (குறள். 72)

ஒருவரிடம் அவருக்குத் தெரியாமல் அன்பு கொண்டிருந்தாலும் அவருக்குத் துன்பம் வரும்போது அன்பு கொண்டிருந்தவரின் கண்களில் வரும் கண்ணீரானது அவரது அன்பை பிறருக்கு வெளிப்படுத்திவிடும். அன்பு இல்லாதவர் எல்லா பொருளையும் தமக்கே பயன்படுத்துவர். அன்புடையவர் பொருளேயன்றித் தம் உடம்பின் அங்கமாகிய எலும்பினையும் பிறருக்கு கொடுத்து உதவுவர் என அன்பின் சிறப்பினை வள்ளுவர் வரையறுக்கின்றார்.

இன்றைய காலத்திலும் தன்னுடைய உடலின் பாகங்களை பிறருக்குத் தானமாக வழங்கும் நிலை காணப்படுகிறது. ஒருவர் உயிரிழந்தாலோ அல்லது மூளைச்சாவு அடைந்தாலோ அவரது உடலுறுப்புகளைப் பிறருக்குத் தானம் செய்யும் நிலை அதிகரித்துள்ளது. அதற்கான விழிப்புணர்வும் மக்களிடையே பெருமளவு ஏற்பட்டுள்ளது. மேலும் பெற்றோர் குழந்தைகளுக்கும், குழந்தைகள் பெற்றோருக்கும் மற்றும் பிற உறவினர்களுக்கும் கண்கள், சிறுநீரகங்கள், கல்லீரல் போன்றவைகளை அன்பின் காரணமாக வழங்குவதை இக்காலத்திலும் காணமுடிகிறது.

நன்றி மறவாமை

நன்றியை மறத்தல் கூடாது என்பதைத் தமிழர்கள் தலைசிறந்த ஒழுக்கமாகப் போற்றியிருக்கின்றனர். நன்றி மறவாமை என்பது பிறர் செய்த

உதவியை மறவாமையாகும். மக்கள் ஒருவருக்கொருவர் உதவி செய்து கொண்டு ஒத்து வாழ்வதற்கு இந்த நன்றியுணர்ச்சியே பெருந்துணையாக நிற்கிறது. செய்த உதவியை மறந்தவர்களுக்கு தப்பிப்பிழைக்க வழியில்லை என்பதை ஆலத்தூர் கிழார்,

"ஆன்முலை அறுத்த அறன் இலோர்க்கும்
மாண்இழை மகளிர் கருச்சிதோத்தோர்க்கும்
பார்ப்பார்த் தப்பிய கொடுமை யோர்க்கும்
வழுவாய் மருங்கின் கழுவாயும் உள என
நிலம்புடை பெயர்வது ஆயினும் ஒருவன்
செய்தி கொன்றோர்க்கு உய்தி இல்என
அறம்பாடின்றே"[51]

எனும் பாடலடிகளில் சுட்டுகிறார்.

பசுவின் மடியை அறுத்த பாவிகள், பெண்ணின் கர்ப்பத்தை அழித்தவர்கள், அறநூல்களை ஆராய்ந்து பார்த்து மக்களுக்கு நல்லறம் காட்டும் அந்தணர்களுக்குக் கொடுமைச் செய்தவர்கள் இவர்களுக்கெல்லாம் பாதகத்தைப் போக்க வழிகள் உண்டு. ஆனால் உலகமே கீழ் மேலாக மாறுவதானாலும் ஒருவன் செய்த உதவியை மறந்தவர்களுக்கு நரகம் கிடைப்பது நிச்சயம், அதிலிருந்து தப்பித்துப் போகவே முடியாது என்கிறார். வள்ளுவரும் இந்நிகழ்வினை,

"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்நன்றி கொன்ற மகற்கு" (குறள். 110)

எனும் குறள்வழி சுட்டிக்காட்டுவது சிறப்பிற்குரியது.

எத்தகைய பெரிய அறங்களைக் கெடுத்தவர்களுக்கும் கழுவாய் உண்டு. ஆனால் ஒருவன் தனக்குச் செய்த உதவியை மறந்தவனுக்கு உய்யும் வழி இல்லை என்கிறார் வள்ளுவர். மேலும்,

"காலத்தி னால்செய்த நன்றி சிறிதெனினும்
ஞாலத்தில் மாணப் பெரிது" (குறள். 102)

என்கிறார். துன்பக்காலத்தில் செய்த உதவி சிறியதாயினும், அது இவ்வுலகத்தை விட பெரியதாகும் என நன்றியின் அளவினைக் கூறுகிறார்.

அடக்கத்துடன் வாழ்தல்

அடங்கு + அம் என்பது அடக்கம் எனப்படுகிறது. அடக்கம் அறிந்து அடங்குதல் என்றும் பொருள்படும். மனிதனின் பண்பு நிலைகள் பலவற்றில் அகத்தில் நிலைகொள்வன அடக்கம். பொறுமை, உண்மை போன்ற பலவாகும். மனிதன் எவ்வளவுதான் செல்வந்தனாக இருப்பினும், அறிவுத் திறனுடையவனாக இருந்தாலும் அடக்கமுடையவனாக இருக்க வேண்டும். அடக்கமே ஒருவனை உயர்வடையச் செய்யும் என்பதை

"அடக்கம் அமரருள் உய்க்கும் அடங்காமை
ஆர்இருள் உய்த்து விடும்" (குறள். 121)

எனும் குறள் வலியுறுத்துகிறது.

அடக்கம் ஒரு மனிதனை உயர்வடையச் செய்யுமென்பதை வள்ளுவர்,

"செறிவறிந்து சீர்மை பயக்கும் அறிவறிந்து
ஆற்றின் அடங்கப் பெறின்" (குறள். 123)

எனும் குறள்வழி விளக்குகிறார். அறிய வேண்டுவனவற்றை அறிந்து நல்வழியினின்றும் வழுவாது அடங்கி நடக்கப் பெறுவானானால் நல்லோரால் பாராட்டப்படும் பெருமை அடக்கம் அவனுக்குக் கொடுக்கும் என்று இக்குறள் வழிக் கூறுகிறார்.

'அடக்கம் ஆயிரம் பொன் தரும், அடக்கம் உடையார் அறிஞர் அடங்காதார் கல்லார்' என்ற பழமொழிகள் அடக்கத்தினால் ஏற்படும் விளைவுகளை உணர்த்துகின்றன.

பொறுமை

'பொறுத்தார் பூமி ஆள்வார்' என்பது ஆன்றோர் வாக்காகும். ஒருவன் தமக்குத் தீமை செய்தபோதும் அதைப் பொறுத்து வாழ்வது பொறுமை ஆகும். தவத்தை மேற்கொள்ளும் முனிவர்க்கு மட்டுமன்றிப் பொறுமை அனைவருக்கும் பொதுவானதும் இன்றியமையாததாகும். பொறுமையைக் குறித்து கம்பர் கூறுகையில்,

"பெருமையும் வன்மை தானும்பேர் எழில் ஆண்மை தானும்
ஒருமையின் உணர நோக்கம் பொறையினது ஊற்றம் அன்றே"[52]

என்கிறார். வள்ளுவர்,

"அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை
இகழ்வார்ப் பொறுத்தல் தலை" (குறள். 151)

"பொறுத்தல் இறப்பினை என்றும்; அதனை
மறத்தல் அதனினும் நன்று" (குறள். 152)

"ஒறுத்தாரை ஒன்றாக வையாரே; வைப்பர்
பொறுப்பாரை பொன்போல் பொதிந்து" (குறள். 155)

எனும் குறள்வழி பொறுமையின் சிறப்பினை உலகிற்கு உணர்த்துகிறார். நிலம் தன்னையே வெட்டிக்குழி தோண்டுபவரையும் தாங்கி நின்றே காப்பது போல தம்மை இகழ்ந்து அவமதிப்பாரையும் பொறுத்துக்கொள்ளுதல் பெரியோருக்குத் தலையாய ஒழுக்கமெனவும், பிறர் செய்கின்ற தீமையைப் பொறுக்க வேண்டும். பொறுப்பதோடு மறந்துவிடுவது அதனினும் நல்லதாகும். தீமை செய்தவருக்கு தீமை செய்யாமல் பொறுப்பவனை இந்த உலகம் பொன்னைப் போல் பொதிந்து போற்றிப் பாராட்டுவர் என்று இன்றைய இளையத்தலைமுறைகளுக்கு நல்லதொரு ஆலோசனையை வழங்குகிறார்.

புறங்கூறாமை

ஒருவரை எதிரே சந்திக்கும்போது புகழ்வதும், பின் அவர் இல்லாதபோது இகழ்வதும் புறங்கூறுதல் ஆகும். அறத்தைப் பற்றி ஒருவன் தன் வாயினால் கூறாமலிருந்தாலும் தீமைகளையே செய்துகொண்டு வந்தாலும் அவன் பிறரைப் பற்றி பழித்துப் பேசாமல் இருப்பது இனிமையானது என வள்ளுவர் கூறுகிறார்.

“அறங்கூறான் அல்ல செயினும் ஒருவன்
புறங்கூறான் என்றல் இனிது” (குறள். 181)

இன்றைய சமுதாயத்தில் புறங்கூறுதல் என்பது வேரைப் போன்று குடும்பங்கள், வேலைச் செய்யும் இடங்கள், தொழுகைக் கூடங்கள் என எல்லா இடங்களிலும் பரவிக் கிடக்கின்றன. இதனால் பலவித பிரச்சினைகளும் மனமுறிவுகளும் ஏற்படுகின்றன. வள்ளுவர் தீமை செய்தாலும் செய்யலாம். ஆனால் புறங்கூறுதல் கூடாது எனக் கூறுவதிலிருந்து புறங்கூறுதலின் கொடிய தன்மையை அறிய முடிகிறது.

ஈகை

பிறர் துன்பங்கண்டபோது மனமிரங்கித் தானே கொடுப்பது ஈகை எனலாம். வள்ளுவர்,

“வறியார்க்குஒன்று ஈவதே ஈகை” (குறள். 221)

என்று ஈகைக்கு இலக்கணம் வகுத்துக் கூறுகிறார். பிறரின் பசியை ஆற்றுவதே ஈகையென

“ஆற்றவார் ஆற்றல் பசியாற்றல்; அப்பசியை
மாற்றுவார் ஆற்றலின் பின்” (குறள். 225)

“அற்றார் அழிபசி தீர்த்தல்” (குறள். 226)

எனும் குறள்களில் வள்ளுவர் குறிப்பிடுகிறார்.

தவவலிமையை விட பெருமை கொண்டது பசியால் வருந்துவார்க்கு உணவளித்துப் பசியைப் போக்கின கொடையாளியின் செயல் என்றும், பொருள் இல்லாதவரை வருத்தும் பசியினை தீர்க்க வேண்டுமெனவும் கூறுகிறார். மேலும்,

ஈகையும் சில தருணங்களில் துன்பத்தைக் கொடுக்கும் என்பதை கீழ்வரும் குறளில் பதிவு செய்கிறார்.

“இன்னாது இரக்கப் படுதல் இரந்தவர்
இன்முகம் காணும் அளவு” (குறள். 224)

ஒருவன் தன்னிடம் வந்து யாசிக்கும் பொருளைப் பெற்றுக்கொண்டு மனமகிழவில்லையென்றால் ஈதல் புரிபவருக்கு அந்நிகழ்வு துன்பத்தையே கொடுக்கும் என்கிறார்.

இன்றைய காலத்திலும் வீடு, தெரு மற்றும் வேறுபல பொதுவிடங்களிலும் யாசிப்பவர்கள் நாம் உதவி செய்யும்போது அவ்வுதவி

அவர்களுக்குத் திருப்தியாகாவிடில் திட்டுதல், முகம்சுளித்தல், முகங்கோணி செல்தல் போன்ற செயல்களில் ஈடுபடுகின்றனர். இந்நிகழ்வுகள் உதவி செய்பவருக்கு மனவேதனை கொடுப்பதாக அமைகின்றது.

பிறர் உதவி கேட்கின்றபோது அவர்களுக்கு உதவி செய்ய முடியாத நிலை இறத்தலை விட துன்பமானது என்பதை,

"சாதலின் இன்னாதது இல்லை இனிது அதூஉம்
ஈதல் இயையாக கடை" (குறள். 230)

என கூறுகிறார். இக்கருத்தினை கலித்தொகை,

"ஈதல் இறந்தார்க்கு ஒன்று ஆற்றாது வாழ்தலின்
சாதலும் கூடுமாம் மற்று"[53]

என எடுத்தியம்புகிறது. மணிமேகலை ஈகையை,

"அறம்எனப் படுவது யாதெனக் கேட்பின்
மறவாது இதுகேள் மன்னுயிர் கெல்லாம்
உண்டியும் உடையும் உறையுளும் அல்லது
கண்டது இல்"[54]

எனும் பாடலில், உலகில் உறையும் உயிர்களுக்கெல்லாம் உணவு, உடை, உறையுள் எனும் மூன்றும் கொடுத்து உதவுவதே சிறந்த அறமென வலியுறுத்துகிறது.

புயல், பூமியதிர்ச்சி, வெள்ளப்பெருக்கு, உள்நாட்டு வெளிநாட்டு போரில் சிக்குண்ட மக்களின் உணவு மட்டுமன்றி அடிப்படைத் தேவைகளுக்காக எவ்வித எதிர்பார்ப்புமின்றி அம்மக்களின் முகத்தினை அறியாது இந்நாள்களில் மக்களும் தொண்டு நிறுவனங்களும் பெருமளவு செய்கின்ற உதவி வள்ளுவர்

கூறுகின்ற ஈகையின் இலக்கணத்தை அடித்தளமாக கொண்டிருக்கிறது. ஆனாலும் இன்றைய வாழ்வியலில் பிச்சைக்காரர்கள், அநாதைகள் போன்றோர் கடைத்தெருவிலும், குப்பை மேடுகளிலும் உணவுக்காக தெருநாய்களோடு சண்டை போட்டு அழுக்கும் தூசியும் கந்தலும் இணைந்த கூட்டணியில் துர்நாற்றத்தோடு வாழ்க்கை நடத்தும் நிலையினை,

“சிக்கிய எச்சிலை பொறுக்கிய வேளையில்

தெருநாய்கள் உறவு எனக்கு”[55]

எனும் இவ்வரிகள் உணர்த்துகின்றன. ஆனால் சிலர் ஈகை எனும் பெயரில் பிறரிடமும் இச்சமுதாயத்தில் பெருமையடையவும் உயர்ந்த புகழைப் பெறவும் ஈகை புரிகின்றனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இரத்தலுக்கு அஞ்சல்

பிறரிடம் சென்று பொருளைக் கேட்பதால், துன்பமும் இழிவும் உண்டாகிறது. எனவே பொருளை பிறரிடம் கேட்பதற்கு அஞ்ச வேண்டும். இதனை ஔவையார்

“ஏற்பது இகழ்ச்சி”[56]

என்று கூறுகிறார். வள்ளுவர் இந்நிகழ்வுகளை

“நல்லாறு எனினும் கொளல் தீது” (குறள். 222)

“இன்மை இடும்மை இரந்துதீர் வாமென்னும்

வன்மையின் வன்பாட்ட தில்” (குறள். 1063)

“ஆவிற்கு நீரென்று இரப்பினும் நாவிற்கு

இரவின் இளிவந்தது இல்” (குறள். 1066)

எனும் குறள்வழி சுட்டிகாட்டுகிறார்.

பிறரிடம் இரந்து பெறுதல்தான் நன்மை அடைவதற்கு வழி என்று கூறினும் ஏற்றுக் கொள்வது தீது. வறுமையே துன்பந்தான். ஆகையால் பிறரிடம் யாசித்து வறுமை போக்கிக் கொள்ளலாம் என்று எண்ணுவதைப் போன்று கொடுமையான செயல் இல்லை. பசுமாட்டிற்கு தண்ணீர் வேண்டுமென்று கேட்கும் நிலை வந்தால் அந்நிலை நாவிற்கு இழிவாகும் என்று இரத்தலின் இழிந்த நிலையைக் கூறுகிறார்.

பிறரிடம் கேட்காது முயற்சினால் பொருள் பெற்று வாழ வேண்டுமென்பதற்கு கீழ்வரும் குறட்பாக்களில் ஆலோசனைத் தருகிறார்.

"தெண்ணீர் அடுபுற்கை யாயினும் தாள்தந்தது
உண்ணலின் ஊங்கினியது இல்" (குறள்.1065)

"இரவென்னும் ஏமாப்பில் தோணி கரவென்னும்
பார்தாக்கப் பக்கு விடும்" (குறள்.1068)

தெளிந்த நீரும் புல்லரிசியுணவுமானாலும் தன் சொந்த முயற்சியினால் பெற்று உண்ணுவதைப் போல இந்த உலகில் இன்பத்தைக் கொடுக்கும் மேம்பட்ட பொருள் இல்லை. வாழ்க்கையில் யாசகம் செய்வதைத் தொழிலாகக் கொண்டு வாழ்பவர், பிறர் இல்லையென்றதும் அவரது வாழ்வு கெடும். முயற்சியாகிய தோணியைக் கொண்டு வாழ்ந்தால் வாழ்க்கை நன்றாக காணப்படும் என்று கூறுகிறார்.

பெரும்பாலும் இன்று யாசகம் கேட்பது என்பது அவர்களது அடிப்படைத் தேவைகளை பூர்த்தி செய்வதற்கு இல்லை. மாறாக அதனை ஒரு தொழிலாகக் கொண்டு வருமானம் ஈட்டி வங்கியில் சேமிப்புக் கணக்குகளை வைத்திருக்கின்ற நிலை யாசிப்போரிடம் காணப்படுகிறது. ஆதலால் அடிப்படைத் தேவைகளுக்காக யாசிப்பவர்களை மக்களால் அடையாளம் கண்டு

கொள்ள முடியாத சூழ்நிலை இன்று ஏற்பட்டுள்ளதை அறிய முடிகிறது. இரத்தல் இழிவு என்பதை உணர்ந்து உழைத்து உயர்வைப் பெற வள்ளுவர் இன்றைய சமுதாயத்தினருக்கு ஆலோசனை வழங்குகிறார்.

பகை

மனிதருக்கு இயல்பாய் உள்ள குணம் பகைமை உணர்வு ஆகும். இது சமுதாயத்திற்கு முற்றிலும் முரண்பாடான குணமாகும். பகையினால் ஏற்படும் தீமைகளை,

" . . . . இகல் என்னும்
துன்பத்துள் துன்பம் கெடின்" (குறள்.854)

"இகலின் மிகல் இனிது என்பவன் வாழ்க்கை
தவலும் கெடலும் நணித்து" (குறள்.856)

"இகலிற்கு எதிர்சாய்தல் ஆக்கம்; அதனை
மிகல்ஊக்கின் ஊக்குமாம் கேடு" (குறள்.858)

"இகல்காணான் ஆக்கம் வருங்கால் அதனை
மிகல்காணும் கேடு தரற்கு" (குறள்.859)

"இகலான்ஆம் இன்னாத எல்லாம்" (குறள்.860)

எனும் குறள்களில் வெளிப்படுத்துகிறார். பகைமை பெருந்துன்பத்தைக் கொடுக்கும். பகையை வளர்ப்பவனின் வாழ்வானது குறைவதும் கெடுவதும் மிக சமீபத்தில் காணப்படுகிறது. பகையை ஒருவன் மேலும் மேலும் வளர்த்துக் கொண்டால் அவனை கேடு நெருங்கிக் கொண்டே வரும். நன்மை வருங்காலம் உண்மையான பகைவனை பகைவன் என எண்ண மாட்டான். கெட்ட

காலத்துக்கு தகுந்தபடி நண்பனைக் கூட பகைவனாக்கி கொண்டு துன்பத்தை அடைவான். ஒருவன் அடைகின்ற துன்பங்கள் எல்லாம் அவன் பகைமையினால் வருமென வள்ளுவர் கூறுகிறார். மேலும் பகையை நோய் என்றும், நோயைப் போக்கினால் கிடைக்கும் பலனையும்,

"இகல்என்ப எல்லா உயிர்க்கும் பகல் என்னும்
பண்பு இன்மை பாரிக்கும் நோய்" (குறள்.851)

"இகல் என்னும் எவ்வநோய் நீக்கின தகல் இல்லாத
தாவில் விளக்கம் தரும்" (குறள்.853)

எனும் குறள்களின் பதிவு செய்கிறார். பகை என்பது எல்லா உயிர்களும் ஒன்றி வாழாதபடி பிரிக்கின்ற, தீக்குணத்தைப் பரப்பும் நோய் என்றும், அந்நோயை விரட்டினால் எக்காலத்தும் குன்றாததும் அழிவற்றதுமான புகழ் தானே உண்டாகும் என்று இக்குறள்கள் வழி கூறுகிறார். இத்தகைய குணங்கள் இன்றைய வாழ்வியலில் பெருந்தாக்கத்தை ஏற்படுத்துகிறது. இதனை 'தினை விதைத்தவன் தினை அறுப்பான் வினை விதைத்தவன் வினை அறுப்பான்' என்னும் பெரியோர் வாக்கின் மூலம் உணர முடிகிறது.

திருடாமை

பிறர் உரிமைப்பட்ட பொருளை மனத்தாலும் அவர் அனுமதியின்றி விரும்புவது துன்பத்தையே கொடுக்கும். அவரறியாமல் அவரது பொருளை கைப்பற்றுவதைத் திருடுதல் எனலாம். திருடுதல் என்பது பொருளாக மட்டுமின்றி, பிறரது எண்ணங்கள், உழைப்பு போன்றவைகளையும் குறிக்கும். திருட்டின் தீமையைக் குறித்து,

"களவினால் ஆகிய ஆக்கம் அளவிறந்து
ஆவது போலக் கெடும்" (குறள்.283)

"களவின் கண் கன்றிய காதல் விளைவின்கண்
வீயா விழுமம் தரும்" (குறள்.284)

"கள்வார்க்குத் தள்ளும் உயிர்நிலை; கள்ளார்க்குத்
தள்ளாது புத்தேள் உலகு" (குறள்.290)

எனும் குறள்கள் குறிப்பிடுகிறது. பிறர் பொருளை வஞ்சித்து அடைவதினால் உண்டாகும் வளர்ச்சியானது அளவுக்கு மீறி வளர்வது போலத் தோன்றி இறுதியில் அழிவையே கொடுக்கும். பிறர் பொருளைக் களவினால் அடைய வேண்டுமென்னும் பேராசையானது அதன் பயனைக் கொடுக்கும் போது அந்த இன்பமே தொலையாத துன்பத்தைக் கொடுக்கும். பிறரை வஞ்சித்து வாழ்வதால் அவரது உடம்பு கூட அவரை வெறுக்கும் என்று வள்ளுவர் கூறுகிறார்.

திருடுவதை நிறுத்துவதற்கான அறிவுரையாக,

"எள்ளாமை வேண்டுவான் என்பான் எனைத்தொன்றும்
கள்ளாமை காக்கதன் நெஞ்சு" (குறள்.281)

என்கிறார். பிறரால் இகழப்படாமல் வாழ வேண்டும் என எண்ணுபவன் பிறரின் சிறிய வகையான பொருளையும் களவினால் அனுபவிக்கலாம் என்ற தீய எண்ணம் தன்நெஞ்சை அடைந்து விடாதபடி பாதுகாப்பாக வைத்தால் திருடும் எண்ணம் மறைந்து விடும் என்று கூறுகிறார்.

இன்றைய நாளேடுகள், வார இதழ்கள், குற்ற புலனாய்வு இதழ்கள், வலைத்தளங்கள் என அனைத்து ஊடகங்களிலும் திருடுதல் குறித்தச் செய்திகள் வந்த வண்ணம் உள்ளன. திருடும் போது கொலைகளையும் துணிந்து திருடர்கள்

செய்கின்றனர். வள்ளுவர் கூறுவது போன்று பிறர் பொருளைத் திருடும் போது இன்பமாக இருக்கிறது. ஆனால் திருடிய பொருள் அதன் பயனைக் கொடுக்கும் போது காவல்துறையால் கைது செய்யப்பட்டு சிறைக்குச் செல்கின்ற துன்பமானது வந்து சேர்கிறது. ஆதலால் திருடுவதை விட்டு விட்டு சமுதாயத்தில் சிறந்த மனிதர்களாக வாழ திருடுவோர் முன்வர வேண்டும்.

சூதாட்டம்

சூதாடுபவன் தன் பொருளை இழந்து வறுமையில் வாடக்கூடிய சூழல் ஏற்படும். ஆகவே சூதாடுதல் நல்ல பொழுதுபோக்கு அல்ல. சூதாட்டத்தை விரும்புதல் கூடாது. பொருளைப் பெறலாம் என்ற எண்ணத்தைக் கொடுத்துக் கொண்டே பொருளை இழக்கச் செய்வது சூதாட்டம் ஆகும். சூதாட்டம் பிறரை மயக்கி தன்னையும் மயக்கி பிறர் பொருளை வஞ்சிக்க வழி செய்வதாகும். ஆத்திசூடி

"சூது விரும்பேல்"[57]

என்கிறது. சூதாட்டத்தின் இயல்பினைக் குறித்து,

"இழத்தொறூஉம் காதலிக்கும் சூதேபோல் துன்பம்
உழத்தொறூஉம் காதற்று உயிர்" (குறள்.940)

"சிறுமை பலசெய்து சீரழிக்கும் சூதின்
வறுமை தருவதுஒன்று இல்" (குறள்.934)

"அகடாரார் அல்லல் உழப்பாகூ தென்னும்
முகடியான் மூடப்பட் டார்" (குறள்.936)

"பழகிய செல்வமும் பண்பும் கெடுக்கும்
கழகத்துக் காலை புகின்" (குறள்.937)

"பொருள்கெடுத்துப் பொய்மேல் கொளிஇ அருள்கெடுத்து
அல்லல் உழப்பிக்கும் சூது" (குறள்.938)

"உடைசெல்வம் ஊண்ஒளி கல்விஎன் றைந்தும்
அடையாவாம் ஆயம் கொளின்" (குறள்.939)

போன்ற குறட்பாக்கள் விவரிக்கிறது. பொருளை இழக்கும் போதெல்லாம் பின்னால் வெற்றி பெறலாம் என்ற எண்ணத்தை உண்டாக்கும். பல தீய செயல்களைச் செய்யத் தூண்டும். அதனால் பெருமை இழக்க செய்யும், வறுமையைக் கொடுக்கும், சூதாடும் பழக்கமுடையவர் தங்கள் வயிறு நிறைய உண்ணவும் மாட்டார். மேலும் பல துன்பங்களை அடைவர். இளம் பருவத்திலேயே சூதாடும் பழக்கத்தினைக் கொண்டிருந்தால் அவன் தன் முன்னோர்கள் தேடி வைத்த பொருளையும் இயல்பாக உடைய குடிப்பிறப்பு, நற்குணம் முதலான பண்புகளை இழந்தவனாக காணப்படுவான். பொருளை அழித்துப் பொய் பேசும் படிச் செய்து பிறருக்குத் துன்பம் செய்யும் படி தூண்டுகிறது. சூதாடும் கூட்டத்தில் சேர்ந்தால் உடை, செல்வம், உணவு, புகழ், கல்வி ஆகிய ஐந்தும் அவனிடமிருந்து நீங்குமென வள்ளுவர் கூறுகிறார்.

பாரத இதிகாசத்தில் பாண்டவரும் நூற்றுவரும் தம் நாடு, நகரம், பொருள் மற்றும் மனைவியைப் பணயப் பொருளாக வைத்து சூதாடியதன் விளைவாக சகோதர உணர்வை இழந்து பகைவராகி உயிரை இழந்ததே சூதாட்டத்தின் தீங்கை அறிய நமக்கு கிடைத்த மிகப்பெரிய சான்றாகும்.

சூதாட்டம் இன்றையத் தமிழ்நாட்டில் தடைச்செய்யப்பட்ட விளையாட்டாகும். சூதாடினால் அரசின் சட்டப்படி தண்டனை வழக்கப்படுகிறது.

நட்பு

நட்பு என்பது பெருமளவு ஆங்கிலத்தில் 'பிரண்ட்ஷிப்' (Friends Ship) என்ற சொல்லால் பயன்படுத்தப்படுகிறது. மூழ்காத ஷிப் (Ship) பிரண்டஷிப் (Friendship) என்பது இன்றையத் தலைமுறையினரின் புதுமொழியாக காணப்படுகிறது. ஒருவனின் குணநலத்தைக் கொண்டே அவன் நண்பன் நல்லவனா? கெட்டவனா? என்பதை ஊகித்து அறிய முடியும். வள்ளுவர் நட்பு தொடர்பாக நட்பு, நட்ராய்தல், தீ நட்பு, கூடாநட்பு, பழைமை போன்ற அதிகாரங்களில் கூறியுள்ளார். நட்பு தனிமனிதர்க்கும் அரசியல் முதலானவற்றில் இருப்போர்க்கும் முதன்மையானதாக காணப்படுகிறது.

நா. கதிரைவேல் பிள்ளை நட்பு என்பது உறவு, சிநேகம், சுற்றம் என்று விளக்கமளிக்கிறார். நட்பு என்ற சொல் 'நள்' என்ற வேர்ச்சொல்லை அடிப்படையாக கொண்டு பிறந்தது. 'நள்' என்பதற்கு 'நெருங்குதல்' எனப் பொருள் கொள்ளலாம். நெருக்கத்தை தரும் உறவே நட்பு ஆகும்.

தீய குணங்களை உடையவரது நட்பு 'தீ நட்பு' ஆகும். நட்பின் காரணமாகத் தீமை நிகழும் போது நட்பினரைப் பிரிய முடியாது. ஆகையால் நண்பன் ஆகும் முன்னர் தீயநட்பின் விளைவுகளை அறிந்து கொள்ள வேண்டும். தீய நட்பின் குணத்தை,

"உறின்நட்டு அறின்ஒரூஉம் ஒப்பிலார் கேண்மை
பெறினும் இழப்பினும் என்" (குறள்.812)

"எனைத்தும் குறுகுதல் ஒம்பல் மனைக்கெழிஇ
மன்றில் பழிப்பார் தொடர்பு" (குறள். 820)

என்கிறார் வள்ளுவர்.

கையில் பொருள் உள்ளவரையில் நட்புச் செய்து, பொருள் இல்லாத காலத்து விலகும் தன்மையுடைய நண்பரைப் பெற்றாலும் பயனில்லை இழப்பதாலும் பயனில்லை. வீட்டில் இனிமையாய் பழகி வெளியில் தூற்றும் குணம் கொண்டவரிடம் நட்பு கொள்ளுதல் நல்ல நட்பு எனில் பிறரிடம் புகழ்ந்து பேசி வீட்டில் இடித்துரைத்துப் பேசும் குணம் கொண்டவனாக காணப்படுவான். எனவே இத்தகையவரிடம் நட்புரிமை கொள்வது துன்பமாகவே முடியும்.

உள்ளத்தில் பகை எண்ணமும் தோற்றத்தில் நண்பனைப் போன்று நடிப்பவரது நட்பினை மேற்கொள்ள கூடாது என,

"முகத்தின் இனிய நகாஅ அகத்தின்னா
வஞ்சரை அஞ்சப் படும்" (குறள்.824)

எனும் குறள்வழி உணர்த்துகிறார்.

ஒருவன் தன்னுடைய குணத்தோடும், அறிவோடும், செயலோடும் ஒன்றி இன்ப துன்ப காலத்துப் பிரியாது இருப்பவனைத் தெரிந்துக் கொள்வதே 'நட்பாராய்தல்' ஆகும். இதனை நாலடியார்,

"யானை யனைவர் நண்பொரீஇ நாயனையாக
கேண்மை கெழீஇக் கொளல் வேண்டும் யானை
அறிந்தறிந்தும் பாகனையே கொல்லும் மெறிந்தவேல்
மெய்யதா வால் குழைக்கும் நாய்"[58]

என்கிறது. பலகாலம் பழகியிருந்தும் அன்போடு உணவூட்டி வளர்த்து வரும் பாகன் ஏதாவது சிறு தவறு செய்யின், அதை மறவாது மனத்தில் வைத்திருந்து பாகனையே கொல்லும் இயல்புடையது யானை. பல காலம் நண்பன் பல உதவிகள் செய்திருந்தும் சிறுதவறு செய்யின் அதனை முதன்மைப்படுத்தி செய்த

உதவியை மறப்பவனின் நட்பை தொடரக் கூடாது என்கிறது. இந்நிகழ்வை வள்ளுவர்,

“ஆய்தாய்ந்து கொள்ளாதான் கேண்மை கடைமுறை
தான்சாம் துயரம் தரும்” (குறள்.792)

எனும் குறளில் குறிப்பிடுகிறார். தீயவன் ஒருவனின் குணநலனை அறியாது அவனை நண்பனாகப் பெற்றால் இறுதியில் உயிருக்கே அழிவு தரக்கூடிய துன்பத்தைக் கொடுக்கும். ஆகையால் ஆராய்ந்தே ஒருவரை நண்பனாக்க வேண்டும் என்கிறார்.

நட்பை அளந்துகாட்டும் கருவி என்கிறார்.

“கேட்டினும் உண்டோர் உறுதி கிளைஞரை
நீட்டி அளப்பதோர் கோல்” (குறள். 796)

துன்பத்திலும் ஒரு உண்மையான நன்மை இருக்கிறது. அதுயாதெனின் உண்மை நண்பன் துன்பத்தில் பங்கு பெறுவான். உறுதியான நட்பு இல்லாதவன் துன்பகாலத்தில் விலகிவிடுவான். அதனால் நட்பை அளந்துகாட்டும் கருவி துன்பம் என்கிறார் வள்ளுவர்.

தீயகுணம் உடையவரின் நட்பை விலக்கி, கூடா நட்பை விடுத்து, நண்பனாக போகிறவனின் குணத்தை ஆராய்ந்த பிறகே உண்மையான நட்பினை பெற்றுக்கொள்ளமுடியும் என ஆலோசனை தருகிறார்.

“நகுதற் பொருட்டன்று நட்டல்; மிகுதிக்கண்
மேற்சென்று இடித்தற் பொருட்டு” (குறள். 784)

“முகநக நட்பது நட்பன்று; நெஞ்சத்து
அகநக நட்பது நட்பு” (குறள். 786)

"உடுக்கை யிழந்தவன் கைபோல் ஆங்கே

இடுக்கண் களைவதாம் நட்பு" (குறள். 788)

"செயற்கரிய யாவுள நட்பின்?

வினைக்கரிய யாஉள காப்பு? அதுபோல் (குறள். 781)

"அழிவின் அவைநீக்கி ஆறுய்த்து அழிவின்கண்

அல்லல் உழப்பதாம் நட்பு" (குறள். 487)

இன்பத்தைக் கூடி அனுபவிக்க பலர் இருக்கலாம். துன்பச்செயலைச் செய்ய முற்படும்பொழுது அதை செய்யாதவாறு தடுத்து இடுத்துரைப்பதும், மனத்தால் நட்பு கொண்டு நெஞ்சில் நண்பனை நினைக்கும்பொழுதே இன்பத்தையும், தாழ்வு வரும்போது ஆடையினை நழுவாமல் சரிசெய்யும் கையினைப் போன்று தக்க சமயத்தில் உதவிசெய்து, தாழ்வைப் போக்கி மானங்காப்பதும், உண்மை நட்பைப் பெற்றவனுக்கு அவன் செய்ய வேண்டிய செயலையும் நண்பன் தன்செயலாகவே செய்து முடிப்பான். அதனால் வேறு காவல் வேண்டாம் என்றும், நண்பன் தீயவழியில் சென்றால் அவனைத் தடுத்து நல்வழியில் நடக்கச் செய்வதே நல்ல நண்பன் என்று கூறுகிறார்.

இக்காலச் சூழலிலும் நட்பு என்பது சில நேரங்களில் துன்பகாலத்தில் விலகி ஓடுகின்றதாயும், சில தருணங்களில் உயிரைக் கொடுப்பதாகவும் காணப்படுகிறது. நட்பைப் பொறுத்தே ஒருவன் நல்லவனாகவும் தீயவனாகவும் இந்த சமுதாயத்தில் வாழ முடியும்.

இல்லறத்தின் பெண்

இல்லறத்தில் பெண்ணின் பங்கு மிக முக்கியமானது. கணவன் பொருளைத் தேடிச் சென்று வீடு திரும்பினாலும், அப்பொருளை நிர்வகிப்பது பெரும்பாலும் பெண்களேயாவர்.

சங்ககால பெண்கள்

சங்ககாலச் சமுதாயத்தில் அரசமகளிர் இல்லற மகளிர், கலைமகளிர், கைம்மை மகளிர், பரத்தை மகளிர் போன்ற நிலைகளில் பெண்கள் வாழ்ந்திருக்கின்றனர். இல்லற மகளிர், 'தாய், செவிலி, தலைவி, தோழி, விறலி போன்ற பல நிலைகளில் வாழ்ந்தனர். களவு, கற்பு, கைக்கிளை, பெருந்திணை, கைம்மை, தீப்பாய்தல் போன்ற நிலைகளில் மகளிரின் வாழ்க்கைநிலை காணப்பட்டது. இல்லற மகளிரின் பண்புநலனாக விருந்தோம்புதல், சுற்றம் ஓம்புதல், அடிசின் வன்மை, மக்களைப் பேணுதல், தலைவனைப் பேணுதல், வறுமையிற் செம்மை, சிக்கனம் போன்றவை இல்லறப்பணிகளாக காணப்பட்டன.

பெண்களுக்குரிய குணங்களாக "அச்சம், நாணம், பொறை, அன்பு, கற்பு, மென்மைத்தன்மை, மறமேம்பாடு, கொடைத்திறன் போன்றவை இருந்தன"[59] என்று க. திலகவதி குறிப்பிடுகின்றார்.

வள்ளுவர் காட்டுகின்ற பெண்ணானவள் சமுதாயத்தில் நன்மதிப்புடையவளாகவே காணப்படுகிறாள். வள்ளுவர் பெண்ணின் குணநலத்தை முன்னிறுத்தி பெண், தாய், மகளிர், நலம்பெற்றாள், நல்லாள், ஈன்றாள், மாண்புடையவள், இல்லாள், இல்லவள், அன்னை என்னும் சொற்களால் குறிப்பிடுகிறார். காதல் உணர்வு நிலையில் பெண்களின் அழகுணர்வின் வெளிப்பாடாக மாதர், மங்கை, மடந்தை, ஆயிழை, அணியிழை, சேயிழை, மான்இழை, பசையினர், மன் இவள், கண்ணாள், ஒண்மொழி, குறுந்தொடி, பைந்தொடி, பேதை, பாவாய் என்னும் சொற்களால் காட்டுகிறார்.

சமுதாயத்தில் பண்பில் இழிவான நிலையில் மகளிர் மாய மகளிர், இருமனப்பெண்டிர், பொருட்பெண்டிர், வரைவிலா மகளிர், மாணிழையார்,

அன்பின் விழையார், புன்னலத்தார், பொது நலத்தார் என்ற அடைமொழியோடு வேற்றுமைப்படுத்தி கூறுகிறார்.

இல்லறக் கடமைகள்

ஆணும் பெண்ணுமாய் இணைந்து இல்லறத்தை நடத்தும்போது இல்லறத்திற்கான கடமைகளை ஆற்ற வேண்டியது ஆண் மற்றும் பெண்ணின் கடமையாக உள்ளது. இல்லறக்கடமை குறித்து சில குறள்களில் வரையறை செய்கிறார் வள்ளுவர்

"தென்புலத்தார் தெய்வம் விருந்துஒக்கல் என்றாங்கு
ஐம்புலத்தாறு ஓம்பல் தலை" (குறள். 43)

"இல்வாழ்வான் என்பான் இயல்புடைய மூவர்க்கும்
நல்லாற்றின் நின்ற துணை" (குறள். 41)

"துறந்தார்க்கும் துவ்வா தவர்க்கும் இறந்தார்க்கும்
இல்வாழ்வான் என்பான் துணை" (குறள். 42)

இல்லாளைத் துணைக்கொண்டு வாழ்க்கை நடத்துபவன், இளைஞர்கள், தம்நிலையிலே இல்லறவாழ்க்கை நடத்துபவர்கள், துறவிகள் என்ற இயல்பான மூவகைப்பட்டவர்களுக்கும் உதவ வேண்டும். ஆதரவில்லாதவர், ஏழைகள் மற்றும் இறந்தவர்களுக்கும் உதவி செய்து வாழ வேண்டும்.

இங்கு ஒவ்வொரு குறளிலும் மூவகையினர் குறிப்பிடப்படு-கின்றனர். அவர்களை "பழைய உரையாசிரியர்கள் 'இயல்வுடைய மூவர்' என்பதற்கு பிரம்மசாரிய அல்லது மாணவ நிலையிலுள்ளோர், வனப்பிரத்த

நிலையிலுள்ளோர், துறவியர் ஆகிய மூவர் என்று குறிப்பிடுகின்றார்கள். தற்கால உரையாசிரியர்கள் 'இயல்புடைய மூவர்' என்பதற்கு தந்தை, தாய், மனைவி என்றோ அல்லது பெற்றோர் மனைவி, மக்கள் என்றோ பொருள் கொள்ளுதலும் கூடும்"[60] என்று காமாட்சி ஸ்ரீனிவாசன் அவர்கள் கூறுகின்றார். இவர்களுக்கு உதவுவது இல்லத்தாரின் கடமையாக கொள்ளப்படுகிறது.

தற்காலச் சூழலுக்கு பழைய உரையாசிரியர்களின் உரையின் பொருளை ஏற்று செய்வது சற்று சிரமமானதாகும். தற்கால உரையாசிரியர்கள் கூறுகின்ற தந்தை, தாய், மனைவிக்கு உதவுவதே அவசரகால உலகில் வாழும் இல்லத்தாருக்கு கடினமான செயலாகவே காணப்படுகிறது.

குழந்தையைப் பேணல்

இல்வாழ்க்கையின் அன்பிற்கு அடையாளமாக பெற்றுக் கொள்கின்ற குழந்தையைப் பேணிக்காப்பது இல்லறக்கடமை மட்டுமின்றி பொறுப்பாகவும் காணப்படுகிறது. குழந்தைச் செல்வத்தின் சிறப்பினை கீழ்வருமாறு வள்ளுவர் கூறுகிறார்.

பெறுமவற்றுள் யாமறிவ தில்லை அறிவறிந்த
மக்கட்பேறு அல்ல பிற (குறள். 61)

அமிழ்தினும் ஆற்ற இனிதேதம் மக்கள்
சிறுகை அளாவிய கூழ் (குறள். 64)

மக்கள்மெய் தீண்டல் உடற்கின்பம் மற்றவர்
சொற்கேட்டல் இன்பம் செவிக்கு (குறள். 65)

குழலினிது யாழினிது என்பர்தம் மக்கள்
மழலைச்சொல் கேளா தவர் (குறள். 66)

ஒருவன் பெறக்கூடிய அரிய செல்வங்களில், அறிய வேண்டுவனவற்றை அறிந்த நன்மக்களைப் பெறுவதைப்போன்ற செல்வம் வேறில்லை. தம்முடைய குழந்தைகள் சிறிய கையினால் குழப்பிய அற்ப உணவுகூட அமிர்தத்தை விட இனிமையானதாகும். குழந்தைகளின் உடலைத் தொடுவது பெற்றோருக்கு இன்பத்தைக் கொடுக்கும். அவர்கள் பேச்சானது காதிற்கு இனிமையை உண்டாக்கும். குழல், யாழ் இசையை இனிமையாக இருக்கிறது என்பவர்கள் தங்களுடைய மழலையினுடைய மழலை மொழியை கேட்காதவர்கள் என்று குழந்தைகள் சிறப்பினையும், குழந்தையின் உணவு மற்றும் குழந்தைகளின் உடலினைத் தொட்டு விளையாடுவதையும், குழந்தைகளின் மழலைப் பேச்சின் இனிமையும் அழகுற எடுத்துக் கூறுகிறார்.

வள்ளுவர் கூறுகின்ற 'மெய்தீண்டல்' என்னும் சொல்லின் பொருளானது தற்கால சமுதாயத்தில் சில நேரங்களில் தவறான கண்ணோட்டத்தோடே பார்க்கப்படுகிறது. பெற்ற தகப்பனே பெண் குழந்தைகளைத் தவறான கண்ணோட்டத்தோடு பார்ப்பதும் தங்களுடைய பாலியல் தேவைகளுக்காக இரையாக்குவது போன்ற செய்திகள் ஊடகங்களில் அதிக அளவு வெளிவருகின்றன.

"உடல் சுகத்துக்காக வாழ்வியல் நெறிகளை மீறக்கூடாது. மகளை பலாத்காரம் செய்து கர்ப்பிணி ஆக்கி கொன்ற செயல் மிருகத்தைவிட கேவலமானது. முன்னாள் ராணுவ வீரருக்கு அளித்த தீர்ப்பால் நீதிபதி கடும் கண்டனம்."[61]

இதுபோன்ற செய்திகள் வாழ்வியலுக்கு முரணாகக் காணப்படுவதை அறிய முடிகிறது.

"ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன்மகனைச்

சான்றோன் எனக்கேட்ட தாய்" (குறள். 69)

மகன் தந்தைக்கு ஆற்றும் உதவி (குறள். 70)

எனும் குறள்கள் வழி குழந்தையைப் பெற்றெடுக்கும்போது தாயானவள் இன்பமடைவதையும், ஆனால் பிறர் சான்றோன் எனக்கூறும் பொழுது தாயானவள் அதிக அளவு இன்பமடைவதையும் புலப்படுத்துகிறார்.

ஈன்றெடுத்தப் பெற்றோரை இறப்புவரை பாதுகாப்பதும், அரவணைப்பதும், பராமரிப்பதும் ஒவ்வொரு குழந்தையின் கடனாகும். இது ஆண் குழந்தைக்கும் பெண்குழந்தைக்கும் பொருந்தும். ஆனால் தன்னுடைய தேவைகளைப் பெற்றோர் பூர்த்திச் செய்த பிறகு முதியோர் இல்லங்களிலும் அநாதை இல்லத்திலும் பொதுவிடங்களிலும் அநாதைகளாக வீதியிலே விடப்படுகிற அவலநிலை இன்று பெருகி வருகின்றது. அதனால் இளம் பெற்றோர் தங்களுடைய பெற்றோரை செவ்வனே பாதுகாப்பது அவசியமாகும். அரசும் இதற்காக சட்டங்களை இயற்றியுள்ளது. வயதான காலத்தில் பெற்றோரைக் கவனிக்காத அவர்களது பிள்ளைகளுக்கு மூன்றுமாத சிறைத்தண்டனை தற்போது அமலில் இருக்கிறது. பெற்றோர் மற்றும் மூத்த குடிமக்கள் நலம் மற்றும் பராமரிப்புச் சட்டம் 2007-ன் படி இதை அரசு செயல்படுத்தி வருகிறது. "இச்சட்டத்தின்படி மகன், மகள்கள், பேரக் குழந்தைகளுக்கு மட்டுமே இந்தத் தண்டனை பொருந்தும். ஆனால் புதிய வரைவு மசோதாவில் மருமகன், மருமகள், பேரக்குழந்தைகள், தத்தெடுக்கப்ட்ட மகன், மகள்கள் மாற்றாந்தாய் குழந்தைகளையும் சேர்ப்பதற்கு வழிவகைச் செய்யப்பட்டுள்ளது. தண்டனைகாலம் 6மாத சிறைத் தண்டனையாக மாற்றப்பட்டுள்ளது என மத்திய சமூகநீதி மற்றும் அதிகாரமளித்தல் அமைச்சக

வட்டாரம் தெரிவித்துள்ளது."[62] ஏனெனில் பெற்றோர்களின் செயல்களையே பிள்ளைகளும் பின்பற்றுவர். இதனை குமரி ராஜீ அவர்கள்.

"நமக்குள்
மனவேற்றுமையென்றால்
மனிதநேயம்
மழலைகளுக்கும்
மரத்துப்போகும்
அன்பே!
பிஞ்சுகளைப்
புற்றீசல்களாக்க
வேண்டாம்."[63]

என பெற்றோரை கணவன் மனைவிக்குள் ஏற்படுகின்ற மனவேற்றுமையினால் துன்பப்படுத்தும்போது குழந்தைகளிடம் காணப்படுகிற மனிதநேயம் மரத்துப்போகும் என நயம்பட எடுத்துரைக்கிறார்.

மேலும் தற்காலச் சமுதாயத்தில் திருமணத்திற்கு முன்பே குழந்தைப்பெறுதல், தவறான வழிகளில் பிறக்கும் பச்சிளம் குழந்தைகளை விற்பனைச் செய்வதும், கொல்வதும், குப்பைத் தொட்டிகளில் வீசி எறிவதும் இளம் சமுதாயத்தை அழிக்கின்ற செயலாக காணப்படுகிறது. குழந்தைகளின் மேல் அக்கறை அற்ற பெற்றோரின் அவல நிலையை,

"பத்து மாதங்கள்
மாமிசக் குகைக்குள்
துள்ளி விளையாடிய

பச்சிளம் பிள்ளையைப்

பத்து நாளாக

நான் தத்தெடுத்தும்

தட்டிக் கேட்க ஆளில்லை”[64]

என்று கவிஞர் குமரி ராஜி குறிப்பிடுகிறார்.

ஈன்றெடுத்தப் பச்சிளங்குழந்தையின் இழப்பினை தாங்கமுடியாத தாயின் நிலையினை,

“எல்லாப் பத்துவயது மகனைப் போலவே

இவனுக்கு நாய் வளர்க்கும் ஆசை வந்துவிட்டது

எல்லா இளம் தகப்பனை போலவே

அவனும் சம்மதம் சொல்லிவிட்டான்

எல்லா அம்மாக்களை போலவே

அவள் கத்த துவங்கி இருந்தாள்

முகத்தில் கருப்படித்த வெள்ளைக் குட்டியை

பார்த்ததும் வாந்தி வருகின்றதென்றாள்

பிராணிகளிடத்தில் அன்பு செய்தல்

அவள் வீட்டாரின் குணம் இல்லை என்றான்

இவன்

போதாதா? என்பது போல் பொங்கித்

தீர்த்தாள்

திங்கள் விடிந்ததும்

மகனும் அப்பனும் ஆளுக்கொரு

திக்காய் போனதும்

தட்டில்

பாலை ஊற்றி

குட்டியின் முன்அமர்ந்து

விசும்பத் துவங்கினாள் இவள்

எனில்

இறந்துபோன குழந்தைகளை

ஒருபோதும்

பால்முலைகள் மறப்பதில்லை போலும்”[65]

என கவிஞர் அழகுற எடுத்துக்காட்டுகிறார்.

வள்ளுவர் குழந்தை கூழ் உண்ணுவதையும், மெய் தொட்டு விளையாடுவதையும் குழந்தையின் மழலைப் பேச்சினை ரசிப்பதையும் விளக்கிக் கூறுகிறார். ஆனால் இன்றைய சமுதாயத்தினரால் பெற்றோர்கள் குழந்தைகளை தவறாக நடத்துவதும், பிள்ளைகள் பெற்றோர்களை வயதான காலத்தில் ஆதரிக்காத நிலை பெருமளவும் பெருகி வருகிறது. பெற்றோர் குழந்தைகளின் உறவு வலுபெற வேண்டுமாயின் மனமொத்த அன்போடு இருவரும் செயல்பட வேண்டும்.

இில்லத்தைப் பேணுதல்

இில்லறத்தில் ஆண்பெண் இருவரும் சமம் என்றாலும் ஆணிற்கு பொருளீட்டல் முக்கிய கடமையாகக் காணப்படுகிறது. பெண்ணும் தற்காலத்தில் பொருளீட்டுகிறாள். அதனோடு சேர்த்து குடும்பத்தினரை கவனித்துக் கொள்ளுதல், கணவனுக்குரிய பணிவிடைகளைச் செய்தல், வீட்டு வேலைகளைச் செய்தல் போன்ற அனைத்துப் பணிகளையும் செய்கிறாள். வள்ளுவர்

எக்குறளிலும் இவைகளைக் குறிப்பிட்டுக் கூறவில்லை. ஆனால் மனைவியை பன்முகத்தன்மை கொண்ட தொழிலாளி என்று கூறுகின்ற நிலையே காணப்படுகிறது என்பதற்கு கீழ்வரும் கவிதையே சான்றாக அமைகிறது.

“எட்டுமணி நேர வேலைக்கு
கொட்டினாராம் இரத்தம்
பெற்றனராம் உரிமை!
வாழ்க! வாழ்க! வாழ்க!
மனைவி எனும் தொழிலாளிக்கு
எட்டுமணி நேரச்
சட்டம் உண்டோ?
காலையில் அவள்தான்
தெருக்கூட்டும் தொழிலாளி
பின்னர் சமயலறையில்
சமையல் தொழிலாளி!
துணி துவைக்கும்போது
சலவைத் தொழிலாளி!
பரிமாறும்போது
ஓட்டல் தொழிலாளி!
பாத்திரம் தேய்க்கும்போது
வீட்டு வேலைத் தொழிலாளி!
இரவிலோ
இன்பம் தரும் தொழிலாளி

ஒரு சேதி தெரியுமோ?

மனைவி பிள்ளை பெறுகிற

மருத்துவமனைப்

பகுதிக்குப் பெயரே

'லேபர் வார்டு'"[66]

என இக்கவிதை இல்லறத்தில் பெண்களின் நிலைப்பாட்டை அழகுற எடுத்துக்காட்டுகிறது.

கணவன் மனைவி நிலை

இன்றைய காலச் சூழலில் காதல் என்பது திருமணத்துக்கு முன்பு தோன்றுவது என்ற எல்லைக்குள் காதல் சுருக்கி விடப்படுகிறது. உண்மையில் பூரணமான காதல் என்பது திருமணத்திற்கு பிறகே தொடங்குகிறது. காதலும் புரிந்து கொள்ளுதலுமே இல்லற வாழ்க்கைக்கு அடிப்படையானது. ஆண் பெண்ணையும், பெண் ஆணையும் பேணுவதன் மூலம் காதலும் புரிந்து கொள்ளுதலும் அதிகரிக்கிறது. மனைவி கணவன் மீது கொண்ட அன்பின் நிலையை,

"பேணாது பெட்பவே செய்யினும் கொண்கனைக்

காணா தமையல கண்" (குறள். 1283)

"ஊடற்கண் சென்றேன்மன் தோழி அதுமறந்து

கூடற்கண் சென்றதென் நெஞ்சு" (குறள். 1284)

"காணுங்கால் காணேன் தவறாய - காணாக்கால்

காணேன் தவறல் லவை" (குறள். 1286)

எனும் குறள்கள் சுட்டுகிறது.

கணவனை கண்டால் என கண்கள் அமைதி பெறுகின்றன. அவரை காணவில்லையென்றால் கண்கள் அமைதி பெறுவதில்லை. கணவனைக் கண்டவுடன் கோபம் கொள்ள வேண்டும் என எண்ணினாலும், அவனைக் கண்டவுடன் என்னுடைய மனமும் அவனுடன் சென்றுவிடுவதால் என்னால் கோபம் கொள்ள முடிவதில்லை. கணவனைக் காணும்போது அவன் செய்த தவறுகளை நினைப்பதில்லை. அவனைக் காணாததால் கோபமுறும் போது அவனைப் பற்றிய நல்ல செய்திகளை நான் எண்ணுவதில்லை என்று தலைவி கூறுவதிலிருந்து கணவன் மனைவி உறவுநிலையை அறிய முடிகிறது. காந்தியடிகள் திருமண வாழ்வில் கணவன் மனைவி உறவினைக் குறித்து “மனைவி கணவனது ஒப்பந்த அடிமை அல்ல. அவள் அவன் தோழி ; அவனுக்கு உதவுபவள். அவன் இன்ப துன்பங்கள் அனைத்தையும் சமமாய்ப் பகிர்ந்து கொள்பவள்; அவனைப் போலவே தானும் தன் வாழ்க்கை முறையைத் தீர்மானித்துக் கொள்ள உரிமையுள்ளவள்”[67] என்று கூறுகிறார்.

காந்தியடிகள் கூறுகின்ற கணவன் மனைவி புரிதல் ஓரளவு காணப்பட்டாலும் இன்றைய அவசர உலகில் கணவன் மனைவி உறவு என்பது வேலை செய்து வீடு திரும்பியதும் அலைபேசியையோ தொலைக்காட்சியையோ பார்த்துவிட்டு தன் துணையிடம் மனம்விட்டு பேசாததால் பல்வேறுபட்ட பிரச்சனைகள் ஏற்படும் சூழ்நிலையிலேயே முடிகிறது.

சுற்றம் ஓம்புதல்

உறவினர்களுக்கு உணவு முதலியன தந்து பாதுகாத்தல் சுற்றம் ஓம்புதல் எனப்படுகிறது. தொல்காப்பியர் தலைவியின் பண்புகளில் ஒன்றாகச் சுற்றம் ஓம்புதலைக் கூறியுள்ளார். “கொண்டோன் புரக்கும் நண்புடை மாந்தரும்,

சுற்றத்தாரும் குஞ்சரம் முதலிய காசேலங்களும் (கால்நடைகள்) பலபடை மாக்களும் உள்ளிட்ட சுற்றங்களை பாதுகாத்து அவை உண்டபின் உண்டல்”[68] என சுற்றம் ஓம்புதலைக் குறித்து உரை விளக்கம் கொடுத்துள்ளார்.

“கொடுத்தலும் இன்சொலும் ஆற்றின் அடுக்கிய
சுற்றத்தால் சுற்றப் படும்” (குறள். 525)

ஒருவன் பொருளினைக் கொடுத்தலும் இன்சொல் பேசுபவனையும் சுற்றத்தினர் சூழ்ந்து கொண்டே இருப்பார்கள் என்கிறார்.

சுற்றம் ஓம்புதலின் முக்கிய பண்பாக பொருளுதவி செய்தல். இனிய சொற்களைப் பேசுவதையே குறிக்கிறார்.

விருந்தோம்புதல்

விருந்தோம்புதல் என்பது தம்மிடம் புதிதாய் வந்த விருந்தினரைப் பாதுகாத்தல் எனப் பொருள்படும். தொல்காப்பியம் விருந்தே புதுமை எனக் குறிப்பிடுகிறது. புதுமை எனும் சொல் புதிதாக வந்தவரைக் குறிக்கிறது சிலப்பதிகாரம்.

“அறவோர்க்கு அளித்தலும் அந்தணர் ஓம்பலும்
துறவோர்க்கு எதிர்தலும் தொல்லோர் சிறப்பின்
விருந்தெதிர் கோடலும் இழந்த என்னை”[69]

என்கிறது. வேறு எதற்கும் வருந்தாத கண்ணகி பழம் பெருமையுடைய விருந்தின் சிறப்பைப் போற்ற இயலாமையை எண்ணி வருந்திய செய்தியை மேற்கூறும் பாடலடிகள் எடுத்தியம்புகிறது. வள்ளுவர்,

“இன்மையுள் இன்மை விருந்தொரால்” (குறள். 153)

என்கிறார். வறுமையிற் கொடிய நிலை, தம்மிடம் வந்த விருந்தினரை உபசரிக்க முடியாத அளவுள்ள வறுமை எனக் கூறுவதிலிருந்து வறுமையிலும் விருந்தினரை உபசரிக்க வேண்டுமென்ற உயர்ந்த பண்பாட்டினைக் கற்றுத் தருகிறார். மேலும்,

"வருவிருந்து வைகலும் ஓம்புவான் வாழ்க்கை
பருவந்து பாழ்படுதல் இன்று" (குறள். 83)

என கூறுவதிலிருந்து, தம்மிடம் வந்த விருந்தினரை நாள்தோறும் உபசரிப்பவனது வாழ்வில் துன்பம் வந்து பாழடைவதில்லை என்பதை உணர முடிகிறது. மேலும் விருந்தோம்பல் முறையை

"விருந்து புறத்தாத் தானுண்டல் சாவா
மருந்தெனினும் வேண்டற்பாற்று அன்று" (குறள். 82)

". . . . . . முகனமர்ந்து
நல்விருந்து ஓம்புவான் இல்" (குறள். 84)

"வித்தும் இடல்வேண்டும் கொல்லே விருந்தோம்பி
மிச்சல் மிசைவான் புலம்" (குறள். 85)

"மோப்பக் குழையும் விருந்து" (குறள். 90)

என்கிறார். விருந்தினருக்கு விருந்தளித்து மிஞ்சிய உணவை உண்ண வேண்டும். எதிர்பாராத விருந்தினருக்கு உணவளிக்க வேண்டிய இக்கட்டான சூழ்நிலை ஏற்படுமாயின் விதை நெல்லை எடுத்து சமைத்து விருந்தோம்ப வேண்டும். மேலும் விருந்தினரை முகமலர்ச்சியோடு இன்முகத்தோடு வரவேற்க வேண்டும். மனதின் வெறுப்பை வெளிப்படுத்தும் விதமாக முகவேறுபாட்டை காட்டினால் விருந்தினர் முகமும் வாடிவிடும். அதனால் இன்முகத்தோடு வரவேற்க வேண்டும். சமுதாயத்தினருக்கு ஆலோசனைத் தருகிறார். இன்றைய அவசர

உலகில் தெரிந்த மற்றும் தெரியாத விருந்தினரும் அறிவிப்பைக் கொடுத்த பின்னரே செல்லும் முறை நாகரிகமாக கொள்ளப்படுகிறது. ‘விருந்தும் மருந்தும் மூன்று நாள்’ என்பது இன்று புழக்கத்தில் காணப்படும் தொடராகும். விருந்தினரை வரவேற்பது தமிழர் பண்பாட்டில் தலைசிறந்ததாக கருதப்படுகிறது. இன்றைய இளையத் தலைமுறையினருக்கு இந்த வாழ்வியல் உண்மையைக் கற்றுக்கொடுப்பது ஒவ்வொரு பெற்றோரின் கடமையாகும். இல்லையாயின் இவ்விருந்தோம்பல் பண்பு சிறிதுசிறிதாக மறைந்துவிடும் என்பதில் ஐயமில்லை.

வருவாய்க்கேற்ற செலவு

இல்லத்தரசிகளின் மிகப்பெரிய பொறுப்பு கணவனின் வருவாய்க்கேற்றபடி செலவு செய்வதே ஆகும். வருவாய்க்கேற்றபடி செலவு செய்யும் மனைவி அமைந்தால் அக்குடும்பம் பெரும்பாலும் பொருளாதார நிலையில் முன்னேற்றம் கொண்டதாக காணப்படும். இதனை,

“மனைத்தக்க மாண்புடைய ளாகித்தற் கொண்டான்
வளத்தக்காள் வாழ்க்கைத் துணை” (குறள். 51)

“ஆகாறு அளவிட்டிது ஆயினும் கேடில்லை
போகாறு அகலாக் கடை” (குறள். 478)

“அளவறிந்து வாழாதான் வாழ்க்கை உளபோல
இல்லாகித் தோன்றாக் கெடும்” (குறள். 479)

என்கிறார். இல்லத்தரசி இல்லத்துக்குரிய செயல்கள் மற்றும் விருந்தோம்பல் முதலிய பண்புகளைக் கொண்டிருந்தாலும் கணவனுடைய வருமானத்திற்கேற்ப செலவு செய்பவளே சிறந்த வாழ்க்கைத் துணை என்கிறார். மேலும் வருவாய்க்கு

ஏற்ற செலவினம் இருக்க வேண்டும். வருவாயைவிட செலவினம் குறைவாக இருத்தல் நல்ல செயலேயாகும். தன்னுடைய பொருள், வலிமை மற்றும் தன் நிலையை அறிந்து வாழாதவனுடைய வாழ்க்கை ஆடம்பர வாழ்வாகக் காணப்பட்டு விரைவில் அழிந்துவிடும் என்ற நடைமுறை வாழ்வியலை அழகுற எடுத்தியம்புகிறார்.

இந்த நடைமுறை வாழ்வியல் அனைத்து உயர், நடுத்தர, வறுமையுற்ற குடும்பத்திற்கும் நன்கு பொருந்தும். இதனை பேச்சு வழக்கில் ‘விரலுக்கேத்த வீக்கம் வேண்டும்’ என்று கூறுவர். தன்னுடைய நிலையை அறியாது தொழில்களைத் தொடங்கியும், ஆடம்பரமாக வாழ்வதற்கு வரவுக்கு மீறிய செலவினைச் செய்து கடன் தொல்லையால் தற்கொலைச் செய்து கொள்கிற ஏராளமான குடும்பங்களையும், தவணை முறையில் பொருட்களை வாங்குவதையும், அதற்கான தவணையைச் செலுத்த முடியாமல் பிறரால் பரிகசிக்கப்படுகிற நிலையையும் இன்றைய காலச் சூழலில் காணமுடிகிறது. ஆகவே குடும்பத்தில் கணவன் வரவுக்கு அதிக செலவு செய்வதை தடுத்தும், மனைவி வரவுக்கு அதிக செலவு செய்வதையும் விடுத்தும் பொறுப்புடன் செயல்பட்டால் உயிரிழப்புகளையும் மனவேதனையையும் தவிர்க்கலாம்.

மனைவி சொற்கேட்டல்

வள்ளுவர் மனைவியின் சொற்கேட்டு நடக்க கூடாது என்று கூறுவதிலிருந்து பெண்மைக்கு எதிரானவர் என்று எண்ணுதல் கூடாது. பெண்ணினத்தை வள்ளுவர் ‘மங்கலம் என்ப மனைமாட்சி’ (குறள்.60) என மங்கலப் பொருளாகவே கூறுகிறார்.

மனையாளின் சொற்படி நடப்பவன் மறுமைபயனாகிய அறத்தையும், இம்மைப் பயனாகிய பொருளையும் பெற்று பயனடைய மாட்டார். வீட்டின் இல்லாளைக் கண்டு அஞ்சுபவன் எக்காலத்தும் தன் விருப்பப்படி நல்லவர்களுக்கு உதவி செய்ய மாட்டான். மனைவி விருப்பப்படி வாழ்பவர்களால் நண்பனின் குறைகளைப் போக்கவும் அவர்களுக்கு நன்மை செய்யவும் முடியாது. மனைவி சொற்பேச்சை கேட்பவனால் பிறருக்கு உதவி செய்ய முடியாது. பிறர்முன் அவமானத்தையே சந்திப்பான் என்பதை

“பேணாது பெண்விழைவான் ஆக்கம் பெரியதோர்
நாணாக நாணம் தரும்” (குறள். 902)
“இல்லாள்கண் தாழ்ந்த இயல்பின்மை எஞ்ஞான்றும்
நல்லாருள் நாணுத் தரும்” (குறள். 903)

எனும் குறளில் கோட்டிட்டுக் காட்டுகிறார்.

தன் உரிமையைப் பாதுகாத்து கொள்ளாது மனைவியின் சொற்கேட்டு நடப்பவனது செல்வம், தன்னைப் போன்ற ஆண்மகனுக்கு முன்னே அவனை நாணும்படியான பெரிய அவமானத்தைக் கொடுத்து தன்னையே நாணமடையச் செய்யும். மனைவியின் சொற்படி கேட்டு நடக்கும் செயலானது எக்காலத்தும் நல்லோர்கள் முன்னிலையில் அவமானத்தைக் கொடுக்கும் என்கிறார். விவேக சிந்தாமணி,

“மங்கை கைகேயி சொற்கேட்டு மன்னர்புகழ் தசரதனும் மரணமானான்
செங்கலச் சீதை சொல்லை ராமன் கேட்டவுடன் சென்றான் மாண்பின
தங்கையவள் சொற்கேட்ட இராவணனும் கிளையோடு தானும் மாண்டான்
நங்கையருக்கு ஆட்படுதல் எல்லாம் கேடுவரும் பேருலகோர் நகைப்பர்தாமே
நாணம் இல்லாதானும் பெண்புத்தி கேட்பவனும் பேய்”[70]

என்கிறது.

க. கலியபெருமாள் அவர்கள், “வள்ளுவர் பெண்ணைப் பற்றி இழிவாக பேசவில்லை. மனைவிக்கு அடிமையாகி தனக்கென சிந்தனையும் செயல்திறனும், இல்லாத ஆண்மகனையே இடித்துரைக்கிறார். ‘அடங்கா மனைவி’ அடிமைப்புருஷன் குடும்பத்திற்கு ஆகாது”[71] என்பது அவர் கருத்து.

இக்கூற்றுகளைக் கொண்டு ஆயும்போது வள்ளுவர் பெண்ணின் அழகில் மயங்கி சரி, தவறு எதுவென அறியாது இருப்பவர்களையே சாடுகிறார்.

ஆனால் இன்றைய குடும்பச் சூழலில் சிறிய செயலை செய்வதாயினும் மனைவியிடம் அனுமதி பெற்றே பெரும்பாலும் கணவன் செய்வதைக் காண முடிகிறது. சில குடும்பங்களில் மனைவியின் சொற்கேட்டு பெற்றோர் மற்றும் உடன்பிறந்தோருக்கும், நண்பர்களுக்கும் தேவைப்படுகிற உதவிகளைச் செய்யாமல் இருக்கின்றனர். மேலும் கணவனின் தாய் தந்தையரை அநாதைகளாகவும், பராமரிப்பின்றியும் விட்டுவிடுகிற நிலையை இன்றைய சமுதாயத்தில் கண்கூடாக காண முடிகிறது. இத்தகைய ஆண்களை ‘பொண்டாட்டி தாசன்’ என்று பிறர் இழிவுபடுத்துவதையும் கேட்க முடிகிறது. இவ்வாறு மனைவியின் சொற்கேட்டு பிறருக்கு உதவி செய்யாதவர்களையே ‘பெண்வழிச் சேரல்’ அதிகாரத்தின் வழி வள்ளுவர் எள்ளி நகையாடுகிறார்.

கற்பு

பெண்ணின் கற்பினைக் குறித்து இலக்கியங்கள் பல முறைகளில் கூறுகின்றன தொல்காப்பியம்,

> “உயிரினும் சிறந்தன்று நாணே நாணினும்
> செயிர்தீர் காட்சிக் கற்பு சிறந்தன்று”[72]

என்றும்,

"பத்தினி இல்லோர் பல அறம் செய்யினும்

புத்தேள் உலகம் புகாஅர்"[73]

என்றும்,

"கையது வீரினுங் கணவன் அல்லது

தெய்வம் அறியாத் தேர்ந்துணர்க் காட்சிப்

படிவக் கற்பு"[74]

என்றும் இலக்கியங்கள் கூறுகின்றன.

கற்பு இருவகையாகக் கொள்ளப்படுகின்றன. அவை அறக்கற்பு, மறக்கற்பு என்பனவாகும்.

அறக்கற்பு என்பது கற்பினை அமைதி வகையில் காத்துக் கொள்ளுதல் ஆகும். சான்றாக தன் கணவன் இறந்தவுடன் உயிர்நீத்த கோப்பெருந்தேவியைக் கூறலாம்.

மறக்கற்பு, கற்பினை அஞ்சத்தக்க முறையில் வெளிப்படுத்துதல். சான்றாக கண்ணகி மதுரையை தன்சொல்லினால் எரித்ததைக் கூறலாம்.

வள்ளுவர் பெண்ணின் கற்பினைப் பற்றி

"பெண்ணிற் பெருத்தக்க யாவுள கற்பென்னும்

திண்மைஉண் டாகப் பெறின்" (குறள். 54)

"தெய்வம் தொழாஅள் கொழுநன் தொழுதொழுவாள்

பெய்யெனப் பெய்யும் மழை" (குறள். 55)

"தற்காத்து தற்கொண்டான் பேணித் தகைசான்ற

"சொற்காத்துச் சோர்விலாள் பெண்" (குறள். 56)

"ஒருமை மகளிரே போலப் பெருமையும்

தன்னைத்தான் கொண்டொழுகின் உண்டு" (குறள். 974)

எனும் குறள்களில் வரையறுக்கிறார். மனநிறைவும், மனஉறுதியும் உறுதியான கற்பு என்றும் தன்னை மணந்த கணவனை வழியொழுகுபவள் கற்புடையவள் அவள் நினைக்க மழை முதலிய இயற்கையும் அவளுக்குக் கட்டுப்பட்டு இருக்கும். தன்னுடைய இளமைக் காலத்திலும், கணவனோடு கூடியிருக்கும் போதும், பிரிந்திருக்கும்போதும் தன்னைக் காத்துக்கொள்வதே கற்பு என்கிறார். ஆனால் இக்காலத்தில் "கற்பு என்றால் என்ன? அது ஆண்பாலருக்குரியதா? பெண்பாலருக்குரியதா? கற்பு என்பது திருமணத்திற்கு முன்பு உடலுறவில் ஈடுபடாமல் இருப்பதா"[75] என்பது குறித்து கற்பு குறித்து கேள்விகள் எழுப்பப்படுகிறது.

ஆனால் பாரதியார்,

"கற்பு நிலைஎன்று சொல்லவந் தால்; இரு
கட்சிக்கும் அஃது பொதுவில் வைப்போம்"[76]

என்கிறார். இதன் மூலம் கற்புநிலை என்பது இருபாலருக்கும் பொதுவானது என்று கூறுகிறார்.

ஆனால் பண்டைய தமிழகத்தில் ஒரு ஆண்மகன் பல பெண்களை மணந்து கொள்ளலாம். மணந்து கொண்ட மனைவியைத் தவிர வேறுபெண்களையும், மணம் புரியாமல் கூடி வாழலாம். இவர்களைத் தவிர பரத்தையார், கணிகையர், வரைவின் மகளிர் பொதுமகளிர் என்ற பெயர்களைக் கொண்ட பெண்களுடன் கூடியும் வாழலாம். பெண்கள் மட்டும் ஒருவனை அகத்தில் கொண்டு வாழ வேண்டும் எனும் நியதி இருந்தது.

வள்ளுவர் இந்நிலையை சாடுகிறார். தமிழரின் பண்பாடான 'ஒருவனுக்கு ஒருத்தி' எனும் வரம்பையே அவர் பின்பற்றி பெண்ணுக்கு மட்டும் கற்பு உரியதில்லை ஆண்களுக்கும் கற்பு உண்டென்பதை 'பிறனில்

விழையாமை, வரைவின் மகளிர்' எனும் அதிகாரங்களின் வழி ஆணின் கற்பையே வலியுறுத்துகிறார் என்பதற்கு கீழ்வரும் குறட்பாக்கள் சான்றாக அமைகிறது.

"எளிதென் இல்இறப்பான் எய்தும்எஞ் ஞான்றும்
விளியாது நிற்கும் பழி" (குறள்.145)

"பிறன் பொருளாள் பெட்டொழுகும் பேதைமை" (குறள்.141)

"பிறன் இல் புகல்" (குறள்.144)

"பிறன்மனை நோக்காத பேராண்மை" (குறள்.148)

"பிறர்க்குரியாள் தோள்தோயா தார்" (குறள்.149)

"பெண்மை நயவாமை" (குறள்.150)

பிறனுக்கு உரியவளை அடைய விரும்புவது அறியாமையாகிய செயல், பிறன் மனைவியுடன் சேருதல் கூடாது. பெருந்தகுதியுடைய ஆண்மை பிறன் மனைவியை உள்ளத்தாலும் நினைக்காதிருப்பது. பிறனுக்குரியாளது தோளை அனுபவிக்க எண்ணுதல் கூடாது. பிறனுக்குரிய மனைவியை விரும்புதல் கூடாது. அவ்வாறு விரும்புபவன் செத்த வாழ்க்கையை உடையவன் (குறள்.143) என்று சாடுகிறார்.

கணவன் பிறபெண்களோடு தொடர்பு வைத்துக்கொள்வது மனைவிக்குச் செய்யும் துரோகமாகும். இது மனைவிக்கும் பொருந்தும். இந்திய நாட்டின் நீதித்துறையின் உயர்ந்த அமைப்பான உச்ச நீதிமன்றம் 'கணவன் பிற பெண்களோடு தொடர்பு வைத்துக்கொள்ளுவது மனைவிக்குச் செய்யப்படும் வன்கொடுமையல்ல' என்ற தீர்ப்புக்கு இத்தீர்ப்பு ஒட்டுமொத்த சமுதாயத்திற்கு அதிர்ச்சியை அளிக்கிறது. அதை விரிவுபடுத்தி ஒரு மனைவி பிற ஆண்களோடும்

தொடர்பு வைத்து கொள்ளலாமல்லவா? ஆனால் அது ஏற்புடையதல்லவே. பல சமயங்களில் உச்சநீதிமன்றம் தம் தீர்ப்பைத் தாமாகவே திரும்பப் பெற்று வரலாறு படைத்திருக்கிறது. அவ்வண்ணமே தற்போதைய தீர்ப்பையும் திரும்பப் பெறுதல் ஆணாதிக்கச் சமுதாயத்தில் பெண்களுக்கு இழைத்து வரும் அநீதிகளுக்கு முற்றுப்புள்ளி வைக்க முடியும்”[77] என உங்கள் குரல் பகுதியில் சென்னையிலிருந்து ச.சீ. இராசகோபாலன் தன்னுடைய கருத்தினை பதிவுச் செய்கிறார்.

சில திருமணமான ஆண்கள் திருமணமான பெண்களிடம் முறையற்றத் தொடர்பு வைத்திருப்பதையும், சில திருமணமான பெண்கள் பிற ஆண்களோடு முறையற்றத் தொடர்பு வைத்திருப்பதற்கு ஊடகங்களில் வரும் செய்திகள் சான்று பகருகின்றன. இது இன்றைய வளர்ந்து வரும் சமுதாயத்தில் பண்பாடு மற்றும் வாழ்வியல் சீரழிவாகவே காணப்படுகிறது. இச்சீரழிவுகள் கொலைகள் மற்றும் தற்கொலைகள் போன்ற நிகழ்வுகள் நடைபெறுவதற்கும் காரணமாக அமைகிறது.

வரைவின் மகளிர்

பாலியல் தொழில் செய்யும் பெண்களை சமுதாயம் பல பெயர்களால் அழைக்கிறது. வள்ளுவர் இப்பெண்களை ‘வரைவின் மகளிர்’ என்கிறார். ‘வரைவு’ என்பது திருமணத்தை குறிக்கும் சொல் ஆகும். வரைவு என்ற ஒன்று இல்லாது பிற ஆடவரோடு இணைந்து வாழும் மகளிரை ‘வரைவில் மகளிர் (வரைவு + இல் + மகளிர்) எனலாம். வரைவில் மகளிர் பரத்தை என்றும் அழைக்கப்படுவர். இன்றைய காலத்தில் ‘விலைமாது, விபச்சாரம் செய்பவள், பாலியல் தொழிலாளி’ என பலப் பெயர்களில் அழைக்கின்றனர்.

முற்காலத்தில் இம்மகளிர் ஆடல், பாடல் கலைகளில் வல்லவராய் வாழ்ந்துள்ளனர். "தங்களுடைய இளமை நலம் குன்றாமல் அழகுப்பதுமை-களாகவே எப்பொழுதும் காணப்பட்டனர். இவர்கள் தம்மிடம் இன்பம் பெற ஆடவரிடமிருந்த பொருளைப் பெற்று வாழ்ந்தனர்"[78] என மதுரைக்காஞ்சி கூறுகிறது.

வரைவில் மகளிர் என்ற பிரிவு உண்டாகக் காரணம், அந்நாளைய அரசியற் சூழ்நிலை, அடிக்கடி நிகழும் போர் ஆகியவற்றால் ஆடவர் தொகையினின்று மகளிர் தொகை மிகுவதற்கு வாய்ப்பிருந்தது. ஆடவர் தொகை குன்றியமையால் மிகுதியாக மகளிரை மணக்கும் ஆடவரின்மையால் 'வரைவின் மகளிர் என்ற பிரிவு உண்டாயிற்று"[79] என்று க. திலகவதி குறிப்பிடுகின்றார். இவர்கள் வள்ளுவர்,

"அன்பின்விழையார் பொருள்விழையும் ஆய்தொடியார்" (குறள்.911)

"பயன்தூக்கிப் பண்புரைக்கும் பண்பில் மகளிர்" (குறள். 912)

"பொருட்பெண்டிர் பொய்ம்மை முயக்கம்" (குறள். 913)

"பொதுநலத்தார் புல்நலம் தேயார்" (குறள். 915)

"புன்நலம் பாரிப்பார் தோள்" (குறள். 916)

". . . பிறநெஞ்சில்
பேணிப் புணர்பவர் தோள்" (குறள். 917)

"மாய மகளிர் முயக்கு" (குறள். 918)

"வரைவிலா மாண்இழையார் மென்தோள்" (குறள். 919)

"இருமனப் பெண்டிர்" (குறள். 920)

என்கிறார்.

ஒருவனை அன்பிற்காக விரும்பாமல் பொருளுக்காக விரும்பும் பொதுமகளிர், பொருளாகிய பயனையே பெரிதென மதித்து அதை பெறுவதற்குரிய நல்ல சொற்களைப் பேசுபவள், பொருளினை விரும்பி ஆணினை பொய்யாக தழுவுபவள். பொருளையே இலட்சியமாகக் கருதும் இழிகுணத்தவள், பொருளுக்காகப் பலரோடு கூடி வாழ்பவள், ஆடல், பாடல், அழகினால் பிறரை மயக்கி அற்ப இன்பத்தை பலருக்கும் கொடுப்பவள். மனதிலே விரும்புவதை அடைவதற்காக பொருள் கொடுப்பவரைக் கூடுகின்ற பெண், ஆடல் பாடல் முதலியவற்றால் மாயம் செய்பவள், உயர்ந்தோர் தாழ்ந்தோர் என்ற வரைமுறை இல்லாமல் யாவரோடும் விலைமகளது தோள் சேரும். பொருளின் மேல் ஆசையும் மனிதன் மேல் ஆசையின்மையாகிய இருமனநிலையைக் கொண்டவள் எனப் பழிக்கிறார்.

இப்பெண்களைச் சேரும் ஆணின் நிலையை,

"இன்சொல் இழுக்குத் தரும்" (குறள். 911)

"ஆயும் அறிவினர் அல்லார்க்கு அணங்கென்ப" (குறள். 918)

"திருநீக்கப் பட்டார் தொடர்பு" (குறள். 920)

". . . புரைஇலாப்

பூரியர்கள் ஆழும் அளறு" (குறள். 919)

என்கிறார். விலைமகளிரின் இனிமையானப் பேச்சைக் கேட்டு மயங்குவது பல குற்றங்களை உண்டாக்கும், விலைமகளது சேர்க்கை அழிவைக் கொடுக்கும். விலைமகளிடம் நட்பு கொண்டவனைத் திருமகள் விரும்பமாட்டாள். விலைமகளைத் தழுவுபவன் அறிவில்லாத கீழ்மக்கள் அழுந்தும் நரகத்தைப் போன்று துன்பத்தை அடைவான் என கடிந்துரைக்கிறார். தன் மனைவியைத்

தவிர வேறு பெண்ணை விரும்பாத ஆண்மகனே கற்புள்ளவனாவான் என்கிறார். வள்ளுவர் பொருளாதாரக் கண்ணோட்டத்தில் வரைவின் மகளிரைக் காண்கிறார். அவளது விருப்பம், சூழல், மனநிலை ஆகியவற்றை வள்ளுவர் எவ்விடத்திலும் குறிப்பிடவில்லை.

இக்காலத்தில் விபச்சாரம், பாலியல் தொழில் (Prostitution) என்ற பெயரில் அழைக்கப்படுகிறது. சமுதாயத்தில் இழிவானச் செயலாக காணப்படுகிறது என்றாலும் எல்லா நிலையிலும் இதன் வேர் பரந்து விரிந்தே கிடக்கிறது எனலாம். பரத்தமை என்பதற்கு "வணிக நோக்கத்திற்காக நபர் ஒருவரை பாலியல் சுரண்டல் அல்லது பயன்படுத்துதல் எனப் பொருள்படும்"[80] என வழக்கறிஞர் குறள். சாமிதுரை குறிப்பிடுகிறார்.

பாலியல் தொழிலில் ஈடுபடுகின்ற பெண்களின் மனநிலை பெரும்பாலும் விருப்பமுற்று இத்தொழிலை செய்வது இல்லை. சிலர் வறுமையினாலும், சிலர் பிறரால் ஏமாற்றப்பட்டுமே இத்தொழிலைப் புரிகின்றனர். இக்காலச் சூழலில் திருமணமான பெண்கள் பலர் நெருங்கிய உறவினர்களின் கட்டாயத்தின் பேரிலும், ஆடம்பரமான வாழ்க்கைக்கு ஆசைப்பட்டும் கல்லூரிகள் மற்றும் பணிபுரிகின்ற பெண்களும் இத்தொழிலில் ஈடுபடுகின்றனர். கீழ்வரும் செய்திகள் இதற்கு சான்றாக அமைகின்றது.

"மகள்களை விபச்சாரத்தில் ஈடுபடுத்திய
தாய் உட்பட இரண்டுபேர் கைது"[81]

"அனாதை இல்ல சிறுமிகள் விபச்சாரத்திற்கு விற்கப்பட்டார்களா போலீசார் விசாரணை."[82]

“கோவை நட்சத்திர ஓட்டலில் விபச்சாரத்தில் பிடிபட்ட பெண்கள் காவல்துறைக்கு அளித்த வாக்குமூலத்தில் ஊட்டியை சேர்ந்த பெண் என்ஜினீயர் உல்லாச வாழ்க்கைக்கு ஆசைப்பட்டு விபச்சாரத்தில் ஈடுபட்டுள்ளதாக தெரிவித்துள்ளனர். மற்றொரு பெண் கடன் மற்றும் குடும்பசூழல் காரணமாக விபச்சாரத்தில் ஈடுபட்டதாகவும் தெரிவித்துள்ளார்”[83] இதன்வழி இன்றைய சமுதாய நிலையை அறியமுடிகிறது.

மேலும் இத்தொழில் செய்யும் பெண்கள் உடலளவிலும் மனதளவிலும் பெரும்பிரச்சனைகளை எதிர்கொள்கின்றனர். உயிர்க்கொல்லி நோயான ‘எய்ட்ஸ்’ (AIDS) மற்றும் பால்வினை நோய்களுக்கு ஆளாகி உயிரை விடும் அவலமும் காணப்படுகிறது.

இந்நிலையை ஒழிக்க உலக நாடுகளும் இத்தொழிலைக் கட்டுப்படுத்த “1950ஆம் ஆண்டு மேமாதம் 9ஆம் நாளன்று நீயூயார்க்கில் கையொப்பமிட்ட சர்வதேச உடன்படிக்கையை ஒட்டி நபர்களின் பாலியல் தொழிலை ஒடுக்குவதற்கு 1956 ஆம் ஆண்டு விபச்சாரத் தொழில் ஒடுக்குச் சட்டத்தினை உருவாக்கியது.”[84]

அரசும் பல்வேறு சட்டங்களை இயற்றி அதன்மூலம் இத்தொழிலை தடுக்க முயற்சிகளை மேற்கொள்கிறது. சட்ட எண் (104/1956) இன் மூலம் இத்தொழில் தடுக்கப்படுகிறது. மேலும் பெண்களை வைத்து பாலியல் தொழில் செய்பவருக்கு அதிகபட்சம் மூன்றாண்டுகளுக்கு மேற்படாமலும், ஓராண்டுக்கு குறையாமல் கடுங்காவல் சிறைத்தண்டனையும் மேலும் ரூபாய் இரண்டாயிரம் (2000/-) வரை அபராதம் விதிக்கப்படுகிறது.

பிரிவு 10(அ) வின் படி பாலியல் தொழில் செய்யும் பெண் குற்றவாளி என கண்டுபிடிக்கப்பட்டபின் அவளது குணநலன், மனநலன், உடல்நலன் மற்றும் வழக்கின் சூழ்நிலைகளுக்கேற்ப திருத்த மையத்தில் வைத்து ஒழுக்கத்தினை ஏற்படுத்த அறிவுரைகள் வழங்கப்படுகின்றன.

பெண்களுக்கெதிரான குற்றங்கள்

இன்றைய சமுதாயத்தில் 'பிறந்த பச்சிளம் குழந்தை முதல் பல்விழுந்த பாட்டிவரை' இருக்கின்ற பெண்கள் அனைவருக்கும் பாதுகாப்பற்ற சூழ்நிலை பெரும்பாலும் காணப்படுகிறது.

வள்ளுவர் பெண்ணின் பாதுகாவலைப் பற்றி கூறுகையில்,

"சிறைகாக்கும் காப்புஎவன் செய்யும்? மகளிர்

நிறைகாக்கும் காப்பே தலை" (குறள். 57)

என்கிறார். பாதுகாவலில் பெண்ணை காப்பதால் பயனில்லை. அவளை அவளே பாதுகாப்பதே தலைசிறந்த பாதுகாவல் என்கிறார். பெண்களுக்கு எதிரான குற்றங்கள் அதிகரித்துக்கொண்டே இருக்கிறது. பெண்சிசுக்கொலை, வரதட்சணைக் கொடுமை, பால்ய திருமணங்கள், ஊதியத்தில் ஆண் - பெண் பாகுபாடு பள்ளி, கல்லூரி மற்றும் உயர்க்கல்வி நிறுவனங்களில் படிக்கும் மாணவர்கள் மற்றும் பணிபுரியும் பெண்கள் போன்றவர்களிடம் பாலியல் குற்றங்கள் காணப்படுகிறது.

பச்சிளம் குழந்தைகள் மற்றும் குழந்தைகளுக்கு எதிராக கூட்டு பாலியல் வன்புணர்வுகள் அதிக அளவில் நடைபெறுகிறது. இந்தியாவை உலுக்கிய நிகழ்வு "ஜம்மு காஷ்மீரிலுள்ள கதுவாவில் தங்கள் குதிரைகளை

தேடிக்கொண்டு சென்ற எட்டுவயது சிறுமி எட்டுபேரால் எட்டுநாள் கூட்டு பலாத்காரம் செய்யப்பட்டும் சித்திரவதைக்குள்ளாக்கப்பட்டும் படுகொலை."[85]

இத்தகைய நிகழ்வுகள் அதிகஅளவு நடந்துகொண்டே இருக்கிறது. குறிப்பிட்ட சில நிகழ்வுகளே ஊடகங்களால் வெளிக்கொணரப்படுகிறது. இத்தகையச் செயல்களைத் தடுக்க அரசு போச்சோ சட்டத்தில் (பாலியல் குற்றங்களுக்கு எதிராக குழந்தைகளை காக்கும் சட்டம்) திருத்தம் கொண்டு வந்துள்ளது. பன்னிரெண்டு வயதுக்குட்பட்ட சிறுமிகளைப் பலாத்காரம் செய்தால் தூக்கு தண்டனை எனும் அவசரசட்டத்தை அமல்படுத்தி உள்ளது. புதிய அவசர சட்டத்தின் படி 12 வயதுக்குட்பட்ட சிறுமிகளைப் பலாத்காரம் செய்தால் குறைந்தபட்சம் இருபது ஆண்டுகள் சிறைத்தண்டனை அல்லது ஆயுள் தண்டனை விதிக்கப்படும். குற்றத்தின் தன்மையைப் பொறுத்து அதிகபட்சமாக தூக்குத்தண்டனை விதிக்கப்படும். பனிரெண்டு வயதுக்கு மேற்பட்ட சிறுமிகளை பலாத்காரம் செய்பவர்களுக்கு சிறைத்தண்டனை பத்து ஆண்டுகளிலிருந்து இருபது ஆண்டுகளாக அதிகரிக்கப்பட்டுள்ளது. பெண்களுக்கான பாலியல் குற்றங்களுக்கு ஏழு ஆண்டு சிறைதண்டனை பத்து ஆண்டுகளாக மாற்றப்பட்டுள்ளது."[86]

அரசு பெண்களுக்கு எதிராக சட்டங்களை இயற்றினாலும் வள்ளுவர் கூறுவது போன்று தன்னைக் காத்துக் கொள்வதற்கு தற்காப்பு கலைகளைக் கற்றுக் கொடுப்பதும் பெண்களின் உணர்வுகளைக் குறித்து ஆண்களிடமும், ஆண் குழந்தைகளிடமும் விழிப்புணர்வு ஏற்படுத்துவது இந்த சமுதாயத்தின் கடமையாக உள்ளது. பெண்ணின் உடலுக்கும் அவளது உணர்வுகளுக்கும் மதிப்பளிப்பது ஒவ்வொரு ஆண்மகனின் தலையாய கடமை என்பதை அறிய முடிகிறது.

ஆடை அணிகலன்கள் ஒப்பனை

மனிதனின் நாகரீகத்தை வெளிப்படுத்துவதில் ஆடை, அணிகலன்கள் மற்றும் ஒப்பனை முக்கிய பங்காற்றுகிறது. முற்காலத்தில் மனிதன் இலைத்தழைகளையும் மரவுரிகளையும் அணிந்தான். படிப்படியாக தோலாடைகளை அணிய ஆரம்பித்து ஆடைகளை அணிய முற்பட்டான்.

ஆடை

தமிழர்கள் சங்ககாலத்திலே வெளிநாடுகளுக்குத் துணிகளை ஏற்றுமதி செய்து வந்துள்ள செய்திகளை இலக்கியங்கள் வழி அறிய முடிகிறது.

"பாம்புரியன்ன வடிவின காம்பின்
கழைபடு சொலியி னிழையணி வாரா
ஒண்பூங் கலிங்க மூடிஇ"[87]

"பருத்திப் பெண்டின் பனுவலன்ன"[88]

"பருத்தி வேலி சீறூர்"[89]

"நீலக கச்சை பூவாராடை"[90]

மேற்கூறப்பட்ட பாடலடிகள் மூலம் தமிழர்கள் மெல்லிய ஆடைகளையும், பருத்தி ஆடையையும் பல்வேறு வேலைப்பாடுகள் செய்து அணிந்ததையும் அறிய முடிகிறது.

வள்ளுவர் ஆடையினைக் குறித்து,

"கொடுப்பதும் அழுக்கறுப்பான் சுற்றம் உடுப்பதூம்" (குறள்.166)

"உடுக்கை இழந்தவன் கைபோல்" (குறள்.788)

"ஊணுடை எச்சம் உயிர்க்கெல்லாம்" (குறள்.1012)

"உடுப்பதூஉம்" (குறள்.1079)

"கடாஅக் களிற்றின்மேல் கட்படாம் மாதர்

படாஅ முலைமேல் துகில்" (குறள்.1087)

என கூறுகிறார். உடுப்பதூம் என ஆடை அணிதலையும் உடுக்கை என ஆடையையும் 'ஊணுடை' என உணவு உடையையும், மாதர் தம் மார்பில் ஆடையைக் கொண்டு மூடி மறைந்த செய்தியையும் கூறுகிறார். ஆடையினை வரிந்து கட்டிய செய்தியை,

"குடிசெய்வல் என்னும் ஒருவற்குத் தெய்வம்

மடித்தற்றுத் தானமுந் துறும்" (குறள்.1023)

என குறள் குறிப்பிடுகிறது. 'மடித்தற்று' எனக் கூறப்படுவது உடையை இறுக அணிந்ததைக் குறிக்கிறது. மேலும்,

"வலியின் நிலைமையான் வல்லுருவம் பெற்றம்

புலியின் தோல் போர்த்துமேய்ந் தற்று" (குறள்.273)

எனும் குறளின் மூலம் புலியின் தோலை மக்கள் அணிந்திருக்க கூடும் எனும் செய்தியை அறிய முடிகிறது.

அணிகலன்கள்

அணி என்பதற்கு அணிதல் என பொருள் கொள்ளப்படுகிறது. அணிகளை அணிந்து ஆண்களும் பெண்களும் தங்களை அழகுபடுத்தி கொண்டனர். அணிகள் பவளத்தாலும் முத்தாலும் பொன்னாலும் செய்த வேலைப்பாடமைந்ததாக காணப்பட்டன என்பதை,

"பவளமும் முத்தும் பசும்பொன் மாலையும்

திகமொளித் தோன்ற சித்தரித் தியற்றிய

அணிகலன் அணிவோர்"[91]

எனும் பாடலடிகள் சுட்டி நிற்கின்றன. வள்ளுவர் பெண்கள் வளையல் அணிந்த செய்தியை,

செறிதொடி (குறள்.1275), ஒண்டொடி (குறள்.1101), குறுந்தொடி (குறள்.1135), பைந்தொடி (குறள்.1234, 1238), தொடியோடு (குறள்.1235, குறள்.1236), ஒளியிழை (குறள்.1329), கலங்கழியும் (குறள்.1262) எனும் குறள்களில் பதிவாக்கியுள்ளார். நெருங்கிய வளையல்களையும், குறுகிய வளையல்களையும், தோள்களில் வளையல் அணிந்த செய்தியினையும், ஒளியையுடைய வளையல்களைப் பெண்கள் அணிந்து தங்களை அழகுப்படுத்திக் கொண்டதையும், இதன் மூலம் அறிய முடிகிறது.

அணி என பொதுவாக "அணி (குறள்.95), அணி (குறள்.701), அணியிழை (குறள்.1102), ஆயிழை (குறள்,1124), அணி" (குறள்.115) எனும் குறள்களில் குறிப்பிட்டுள்ளார்.

சான்றோர்க்கு அணியென நடுநிலை தவறாமை (குறள்.115) என சான்றோரை அழகுபடுத்தி காண்கிற செய்தியை அறிந்து கொள்ள முடிகிறது.

குழை என்பது பெண்கள் காதுகளில் அணியும் அணிகலனாகும். இதனைப் பெண்கள் பல்வேறு வடிவங்களில் பயன்படுத்தியுள்ளனர். 'கனங்குழை' (1081) என்று 'கனமான காதணி' என்று காதில் அணியும் அணிகலனை கூறுகிறார்.

வீரக்கழல் ஆண்கள் காலில் அணியும் அணிகலன் ஆகும். வீரத்தின் அடையாளமாக வீரர்கள் வீரக்கழலை அணிந்திருந்தனர். இதனை,

"கழல் யாப்புக்" (குறள்.777)

என்கிறார்.

வீரருக்கு வீரத்திற்கு அறிகுறியாகக் காலில் அணிந்திருக்கும் வீரக்கழலே அவருக்கு அழகு செய்யும் தன்மை உடையது என்று குறள் கூறுகிறது. அணியினைக் குறித்து “அணிகள் சமுதாயத்தில் அவரவர் நிலைமையை அறிவதற்கும் ஓர் அளவுகோலாக இருந்தன”[92] என்று வேலம்மாள் அவர்கள் கூறுகின்றார். இன்றைய நிலையிலும் மக்களின் நிலையை அவர் அணியும் அணிகலன் மூலமாக அறிந்து கொள்ள முடியும்.

ஒப்பனை

மகளிர் எப்பொழுதும் பிறருடைய கண்ணிற்கு அழகாக தெரியவே ஆசைப்படுவர். ஒவ்வொரு இளம் ஆணும் பெண்ணும் நிலைக் கண்ணாடியின் முன் ஒரு பெண்ணை அல்லது ஆடவனை எண்ணியே ஒப்பனைச் செய்கிறாள் என்று கூறுவர். பழங்காலத் தமிழ்ப் பெண்களும் ஒப்பனைச் செய்து பேரெழிலுடன் விளங்கினர். ஒப்பனைச் செய்யும் மகளிரை ‘வண்ண மகளிர்’ என்று அழைத்தனர். அவர் தம் தலைவியரை அடிமுதல் முடி வரை அனைவரும் வியக்கும் வண்ணம் ஒப்பனைச் செய்தனர். ஒப்பனைச் செய்து கொண்ட அறை தட்ப வெப்ப கட்டுப்பாடு கொண்டதாக இருந்தது. அழகிய வேலைப்பாடுகள் கொண்ட அவ்வறையில் ஞாயிற்றின் ஒளியும் வெளிக்காற்றும் உள்ளே புகாதவாறு தடுப்புகள் அமைக்கப்பெற்றிருந்தன. ஒப்பனைச் செய்ய வேண்டிய பெண்ணை அத்தனியறைக்கு அழைத்து சென்று இருக்கையில் இருத்தி அழகு செய்தனர். ஒப்பனை அறை ‘மல்லல் வினையிடம்’ என்று அழைக்கப்பட்டது.

மைதீட்டுதல்

மையிடுவதைக் குறித்து,

“மையால் தளிர்க்கும் மலர்க்கண்கள்”[93] (நான்மணி.35:1)

என நான்மணிக்கடிகை குறிப்பிடுகிறது. கண்கள் மேலும் அழகு பெற்று காணப்படும் என்று கூறுகிறது. வள்ளுவர்,

"கண்ணுள்ளர் காத லவராகக் கண்ணும்

எழுதேம் கரப்பார்க்கு அறிந்து" (குறள்.1127)

"எழுதுங்கால் கோல்காணாக் கண்ணேபோல்" (குறள்.1285)

என்கிறார். கண்ணுக்கு மை எழுதும் போது எழுதுங்கோலை கண்பார்க்காதது போல என்று கூறுவதிலிருந்து பெண்கள் கண்ணிற்கு மைதீட்டி ஒப்பனைச் செய்த நிகழ்ச்சியை உணர முடிகிறது.

மலரணிதல்

அனைத்து விதமான மங்கல மற்றும் அமங்கல நிகழ்வுகளிலும் மலர் முன்னிலை வகிக்கிறது. பெண் மலரைப் போன்று மென்மையானவள். மலரைப் பிடிக்காத பெண்களும் சூடாத பெண்களும் இல்லை. நறுமணம் மிக்க மலர்களையே பெண்கள் விரும்பி சூடுகின்றனர். கணவனை இழந்தால் பெண்ணானவள் தலையில் மலரினை சூடக் கூடாது என்பது இன்றும் இயற்றப்படாத சட்டமாகவே காணப்படுகிறது.

திருவிளையாடற் புராணத்தில் பெண்கள் தலையில் அணியும் பூவினால் தான் பெண்களின் கூந்தல் வாசம் பெறுகின்றனவா அல்லது நறுமணப் புகைகளைக் காட்டுவதால் பெண்களின் கூந்தல் மணம் பெறுகிறதா என்ற வாக்குவாதம் இறைவன் சிவபெருமானுக்கும் புலவர் நக்கீரருக்கும் நிகழ்ந்த நிகழ்விலிருந்து பெண்கள் மலரணிவதின் முக்கியத்துவத்தை அறிந்து கொள்ள இயலும்.

"தோட்டார் கதுப்பினாள் தோள்" (குறள்.1105)

"அனிச்சப்பூக் காலகளையாள் பெய்தாள்" (குறள்.1115)

"கோட்டுப்பூச் சூடினும்" (குறள்.1313)

இக்குறள்களின் மூலம் மலரணிந்த அடர்த்தியான கூந்தலையுடைய தோள் என்றும், அனிச்சப்பூவை காம்பை களையாது தலையில் அணிந்த செய்தியையும் கூறுகிறார். மேலும் ஊடலின் போது தலைவிக்குத் தலைவன் வளைந்த மாலையைச் சூடியச் செய்தியைக் கூறுகிறார். பெண்கள் காம்போடு கூடிய மலரை அணிந்தச் செய்தியையும் மாலை போன்று தொடுக்கப்பட்ட பூவினைச் சூடியதையும் வள்ளுவர் இக்குறள்கள் வழி தெளிவுபடுத்துகிறார்.

இக்காலச்சூழலில் உடைகள் என்பது 'ஆள்பாதி ஆடைபாதி' எனக் கூறும் அளவிற்கு முக்கியத்துவம் பெறுகிறது. முதியவர்கள், நடுத்தரவயது ஆண்கள், பெண்கள், இளைஞர்கள், குழந்தைகள் அனைவரும் விதவிதமான ஆடைகளை அணிகின்றனர். பெண்களிடம் காஞ்சிபுரம், ஆரணிப்பட்டு, தர்மாவரம் பட்டு, சின்னாளம் பட்டி பட்டு, கொள்ளேகாலம் பட்டு, பனராஸ் பட்டு என ஊர்களின் பெயர் தாங்கிய பட்டாடைகள் பிரபலமாக காணப்படுகிறது. இளம் பெண்களுக்கான அடையாளம் பாவடை - தாவணி ஆகும். இவை அதிகமாக சுப நிகழ்ச்சிகள், கோவில் விழாக்களிலே அணியப்படுகிறது. இன்றைய இளம் பெண்களை கவர்வதாக மிடி, சுடிதார், அனார்கலி, மஸ்தானி, இரவு உடைகள் போன்ற பலதரப்பட்ட ஆடைகளும், ஆண்களும் வேட்டி-சட்டை, லுங்கி, ஜீன்ஸ் துணியால் ஆன காலாடை, கோட் சூட் எனப்பெறும் மேற்கத்திய ஆடைகளையும் அணிகின்றனர். உடற்பயிற்சி செய்வதற்கென தனிப்பட்ட ஆடைகளும் அணியப்படுகின்றன.

ஆண்களும், பெண்களும் அணிகலன்களை அணிகின்றனர். உயர்தர வர்க்கத்தினர் வைரம், வைடூரியம், பவளம், பிளாட்டினம் போன்றவைகளாலான அணிகளை அணிகின்றனர். நடுத்தர மற்றும் கீழ்மட்ட பொருளாதார நிலையில் காணப்படுவர்கள் தங்கள், வெள்ளி, போன்ற உலோகங்களாலான நகைகளை அணிகின்றனர். இன்றைய இளையத் தலைமுறையினர், காகிதம், நெகிழியிலான அணிகலன்களையும் ஆடைக்கேற்ற நிறத்தில் தேர்வு செய்து அணிகின்றனர்.

ஒப்பனைச் செய்யும் இடங்கள் 'அழகு நிலையம்' (Beauty parlor) என்று அழைக்கப்படுகிறது. இங்கு அழகுக்கலை பயின்றவர்களும், பயிற்சி பெற்றவர்களுமே வேலைச் செய்கின்றனர். ஆண்களுக்கும், பெண்களுக்கும் தனித்தனி அழகுநிலையங்கள் காணப்படுகின்றன. இங்கு கூந்தல், புருவம், நகம், மற்றும் தோல் தொடர்பாக அனைத்தும் அழகு செய்யப்படுகின்றன. பெருநகரம் முதல் குக்கிராமம் வரை வீதிக்கு வீதி அழகு நிலையங்கள் செயல்படுகின்றன.

பழக்கவழக்கங்கள்

பழக்கவழக்கங்கள் என்பது சமுதாயத்தில் எழுதாச்சட்டமாகவே காணப்படுகிறது. பழக்கம் என்பது தனிமனிதனைச் சார்ந்த தொடக்க நிலை என்றும், வழக்கம் என்பது சமுதாயம் சார்ந்த தொடக்கநிலை என்றும் கூறலாம். சமுதாயத்தில் பழக்கவழக்கத்தின் பங்கினைக் குறித்து இரத்தின வெங்கடேசன் அவர்கள் "தனிமனிதனின் வாழ்வு சிறக்க, தான் சார்ந்த மக்கள் சிறப்படைய, தன்நம்பிக்கைக்குரியவர்கள் நலமடைய அவனால் உருவாக்கப்பட்டதும், எழுதாத சட்டமுமாக இருப்பதே பழக்கவழக்கங்கள். ஒரு சமுதாயத்தின் நாகரிகம்

மற்றும் பண்பாடு மரபினைக் காட்ட வல்லவை அச்சமுதாயத்தின் பழக்க வழக்கங்களே ஆகும் என்கிறார்”[94] குறள் கூறும் பழக்கவழக்கங்களை கீழ்வருமாறு தொகுத்துப் பார்க்க முடிகிறது.

“பொன்-போல் பொதிந்து” (குறள்.155)

“புறந்தூய்மை நீரான் அமையும்” (குறள்.298)

“துச்சில் இருந்த உயிர்க்கு” (குறள்.340)

“யானையால் யானையாத் தற்று” (குறள்.678)

“தீக்காய்வார் போல்க” (குறள்.691)

“அரம்பொருத பொன்போலத் தேயும்” (குறள்.888)

“தூண்டல்பொன் மீன்விழுங்கி யற்று” (குறள்.931)

“உருளாயம் ஒவாது” (குறள்.933)

“கடாஅக் களிற்றின்மேல் கட்படாம்” (குறள்.1087)

“நெய்யால் எரிநுதப்பேம்” (குறள்.1148)

“நாளொற்றித் தேய்ந்த விரல்” (குறள்.1261)

“நிணந்தீயி லிட்டன்ன” (குறள்.1260)

“மணியில் திகழ்தரு நூல்போல் (குறள்.1273)

“. . . . . தும்மினார் யார்தம்மை
நீடு வாழ்க என்பாக் கறிந்கு‘‘ (குறள்.1312)

“ . . . . முதுவருள்
முந்து கிளவாச் செறிவு‘‘ (குறள்.715)

“ . . . . கை கூப்பி
எல்லா உயிரும் தொழும்” (குறள்.200)

"அறைபறை அன்னர் கயவா" (குறள்.1076)

"அறைபறை கண்ணார்" (குறள்.1180)

"நல்ல படாஅ பறை" (குறள்.1115)

பொன்னைப் பொதிந்து பாதுகாப்பாக வைத்தல், நீரினால் உடலை தூய்மை செய்தல், துச்சில் வாடகை வீட்டினைக் குறிக்கிறது. வாடகை வீட்டில் வசித்தல், பழகிய யானையைக் கொண்டு காட்டானைகளைப் பிடித்தல், நெருப்பை மூட்டி குளிர்காய்தல், இரும்பை அரத்தினால் அறுத்தல், தூண்டில் மூலம் மீன்பிடித்தல், சூதாடும் பழக்கம், அரசயானைக்கு முகப்படாம் அணிவித்தல், எரியும் நெருப்பில் நெய்யை ஊற்றி தீ வளர்த்தல், நாள்கணக்கை சுவரில் விரலால் கோடு போட்டு எழுதி வைத்தல், நூலினால் முத்தைக் கோர்த்தல், இறந்த உடலைத் தீயிலிட்டு எரித்தல், தும்மினால் அவரை வாழ்க என வாழ்த்துதல், பெரியோர் முன் பணிவுடன் இருத்தல், கைகூப்பி தொழுதல், ஒரு செய்தியை பறையறிந்து அறிவித்தல், இறந்தோர்க்கு பறையடித்தல் போன்ற பழக்கவழக்கங்களைக் கூறுகிறது. குறள் கூறுகின்ற பழக்கவழக்கங்கள் அனைத்தும் இன்றைய சமுதாயத்தில் கடைபிடிக்கப்படுகிறது.

உணவு

மனிதனின் அடிப்படைத்தேவைகளில் உணவு முதன்மையானது. மனிதன் உணவின்றி இவ்வுலகில் உயிர்வாழ முடியாது. இவ்வுலகில் மனிதன் பரப்பரப்போடு சுழன்று கொண்டிருப்பதன் முதல் நோக்கம் தனக்கும் தன்னைச் சார்ந்தவர்களுக்கும் உணவளிப்பதற்காகத்தான் என்பதில் ஐயமில்லை.

பழங்காலத் தமிழன் இயற்கையோடு ஒன்றிய வாழ்வு வாழ்ந்ததால் இயற்கையாக கிடைக்கின்ற தாவர மாமிச வகை உணவுகளை உண்டு வந்தான்.

அது ஆரோக்கியமானதாகவும், மருத்துவக் குணங்களைக் கொண்டதாகவும் காணப்பட்டது. பிங்கல நிகண்டு உணவை,

"உணாவே வல்சி யுண்டி யோதன
மசனம் பதமே யிரையா கார
முறையே யூட்ட வெனலாகும்"[95]

என பல்வேறு பெயர்களில் வழங்கியுள்ளதைச் சுட்டுகிறது.

நீர்

வள்ளுவர் நீரையும் ஓர் உணவாகவே கருதினார். மனிதன் உணவின்றி சிறிது காலம் உயிர் வாழ முடிந்தாலும் குடிதண்ணீர் இன்றி உயிர்வாழ இயலாது.

மழையே நீர் வளத்திற்கு முதல் ஆதாரமாக நிகழ்கிறது. மழைநீரின் முக்கியத்தை,

"வான்நின் றுலகம் வழங்கி வருதலால்
தான் அமிழ்தம் என்றுணரற் பாற்று" (குறள்.11)
"துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத்
துப்பாய தூஉம் மழை" (குறள்.12)

எனும் குறள்கள் சுட்டுகிறது. மழையை அமிழ்தம் என்று கூறுவதிலிருந்து இனிமையான நீரைக் கொண்டது மழை எனப்பொருள் கொள்ள முடிகிறது. மழை பெய்வதால் தான் உணவுப் பொருட்கள் விளைகின்றன. அம்மழைநீரே மக்கட்கு உணவாகவும் அமைகிறது என்பதை வள்ளுவர் இங்கு உணர்த்துகிறார்.

குளம் என்பது சிறிய நீர்நிலை ஆகும். குளம் ஆழமானதாகவும் தாமரை, அல்லி, ஆகாயத்தாமரை மற்றும் பாசிவகைகளைக் கொண்டதாகவும்

இருக்கும். சில குளங்கள் எவ்வித தாவரங்களும் இன்றி குடிநீருக்காகவே மழைநீரால் நிரப்பப்பெற்று, நீராடுவதற்கும், துணிதுவைப்பதற்கும், ஆடு மாடுகளை நீராட்டாமலும் பாதுகாக்கப்பட்ட குளங்கள் குடிநீருக்காக பயன்படுத்தபடுவது இன்றைய காலத்திலும் சில ஊர்களில் காண முடிகிறது.

"ஊருணி நீர்நிறைந் தற்றே" (குறள்.215)

ஊருணி என்பதற்கு பரிமேலழகர் 'ஊரின் வாழ்வார் தண்ணீருண்ணும் குளம்' என்று கூறுவதிலிருந்து ஊருணியின் நீரை மக்கள் பருகிய செய்தியை அறிய முடிகிறது.

கிணறுகள் வெட்டி தண்ணீர் எடுக்கும் பழக்கம் பழந்தமிழர்களிடம் காணப்பட்டுள்ளதை,

"கல்லா கோவலர் கோலிற் றோண்டிய
வானீர்ப்பந்தல்"[96]

எனும் இப்பாடல் வரிகள் உணர்த்துகின்றன.

"தொட்டனைத் தூறும் மணற்கேணி'' (குறள்.396)

"இறைப்பவர்க்கு ஊற்றுநீர் போல மிகும்" (குறள்.1161)

எனும் வரிகள் ஊற்று நீரையுடையதாயும், அகழப்பட்டனவுமாகிய கிணறுகள் அல்லது கேணிகள் மூலம் நீரெடுக்க மக்கள் பயன்படுத்தினர் என்பதைக் காட்டுகிறார்.

கனிகள்

பழங்கள் அனைவராலும் விரும்பி உண்ணப்படும் உணவு வகையாகும். பழங்களில் அதிகமான ஊட்டச்சத்துக்கள் காணப்படுகின்றன. சில

வகைப்பழங்கள் மருத்துவ குணமிக்கதாக காணப்படுவதால் மருந்திற்காகவும் பயன்படுத்தப்படுகிறன. வள்ளுவர் பழங்களின் பெயர்களை எங்கும் குறிப்பிட்டுக்கூறவில்லை. ஆனால் நெருஞ்சி பழத்தினை (குறள்.1120) கூறுகிறார். ஆனால் அவை உண்பதற்கன்றி அதன் மேல் காணப்படுகிற முள்ளிற்காக என கூறுகிறார்.

"கனி இருப்பக் காய்கவர்ந் தற்று" (குறள்.100)

"பயன்மரம் உள்ளூர்ப் பழுத்தற்றால்" (குறள்.216)

"காழில் கனி" (குறள்.1191)

"கனியும் கருக்காயும்" (குறள்.1306)

கனி என்ற பொதுவான சொல்லையே வள்ளுவர் பயன்படுத்துகிறார். 'காழில்கனி' என விதையில்லா கனியினைக் குறிப்பிடுகிறார்.

தானியங்கள்

உணவில் தானியங்களாக "தினைத்துணை (குறள்.104), எள்பகவு (குறள்.889), அலகுடை (குறள்.1034) தெண்ணீர் அடுபுற்கை (குறள்.1065), தினைத்துணை (குறள்.1082) போன்றவற்றைக் குறிப்பிடுகிறார்.

தினை, எள் போன்ற தானியங்களை கூறினாலும் அவற்றின் அளவிற்காகவே குறிப்பிடுகிறார். புல்லரிசி வள்ளுவர் காலத்தில் பயன்பாட்டில் இருந்துள்ளது. 'அலகு' என்பது நெல்லைக் குறிக்கிறது. இதன் வழி வள்ளுவர் கால மக்கள் புல்லரிசியையும், அரிசியையும் பயன்படுத்தியதை அறிய முடிகிறது.

பால், தேன்

பசுவின் பாலினை உண்ட செய்தியை "ஆபயன் குன்றும்" (குறள்.560), "நன்பால்" (குறள்.1000), "பாலொடு தேன்கலந் தற்றே" (குறள்.1121)

எனும் வரிகள் மூலம் அறிய முடிகிறது. மேலும் தேனோடு பாலினை உண்ட செய்தியையும் காண முடிகிறது. தேன் இளமையை நீட்டித்து ஆயுளை அதிகரிக்கும். தேன், மலைத்தேன் என பலவகைகளில் தேன்கள் காணப்படுகிறது. தேன் கெட்டுப்போகும் தன்மையற்றது. தொல்காப்பியம்,

"பனையென்னளவு"[97]

என குறிப்பிடுகிறது. பனை என்ற சொல்லும் குறளில் கூறப்படுகிறது. ஆனால் அவை பெரிதான அளவை கூறுவதற்காகவே இச்சொல்லை "பனைத்துணையாக (குறள்.104) பனைத்துணையும் (குறள்.1232) என பயன்படுத்தியுள்ளார். பனையின் பழத்தையோ, அதன் இளம் காயாகிய நுங்கைப் பற்றியோ எவ்விடத்திலும் குறிப்பிடவில்லை.

பிற உணவுகள்

சிறுகுழந்தைகள் கூழ் உண்ட செய்தியினை "சிறுகை அளாவிய கூழ் (குறள்.64) என்பதிலிருந்து அறிய முடிகிறது. "உப்பிற்கும் காடிக்கும் கூற்று" (குறள்.1050) என்ற வரிகள் மக்கள் உப்பிட்டு கூழுடன் காடியை சேர்த்து உண்ட செய்தியை அறியலாம். 'காடி' என்பது ஊறுகாயை குறிக்கலாம். ஏனெனில் பெருபாணாற்றுப்படை,

"காடி வைத்த கலன்"[98]

என்கிறது. நச்சினார்க்கினியர் 'புளியங்காய் நெல்லிக்காய் முதலியன ஊறவிட்டு வைத்ததை காடி என்று' கூறுகிறார். இதன் மூலம் உணவுடன் ஊறுகாய் சேர்த்து உண்டிருக்கலாம் என்பதை அறிய முடிகிறது.

கரும்புச்சாறினை உண்ட செய்தியை,

"கொல்லப் பயன்படும் கரும்பு" (குறள்.1078)

எனும் குறளடி மெய்ப்பிக்கிறது.

வள்ளுவர் புலால் மறுத்தலைப் பற்றி கூறினாலும் “ஒன்றன் உடல் சுவை உண்டார் மனம்” (குறள்.253) என்கிறார். ஊன் தின்றவனுடைய மனம் எப்பொழுதும் புதிய புதிய ஊனைச் சுவைக்கலாம் என எதிர்பார்க்கும் என்பது மக்கள் ஊன் உண்ட செய்தியினையே வெளிப்படுத்துகிறது.

மக்கள் சூடாக உணவுண்ட செய்தியை “வெய்துண்டல் அஞ்சுவதும் வேபாக்கு அறிந்து” (குறள்.1128) எனும் தலைவி கூற்றின் வழி அறிய முடிகிறது.

மேலும் ‘மருந்து’ எனும் அதிகாரத்தில் மக்கள் அதிகமான உணவு உண்டு நோய் ஏற்படும் செய்தியை,

“கழிபேர் இரையாண் கண் நோய்” (குறள்.946)

“பெரிதுண்ணில் நோயள வின்றிப் படும்” (குறள்.947)

எனும் வரிகள் எடுத்துரைக்கின்றன.

மனிதர்கள் உயிரை மாய்த்துக் கொள்ள உண்ணுகின்ற நஞ்சினைப் பற்றி,

“நஞ்சுண் டமைவர்” (குறள்.580)

“நச்சு மரம்பழுத் தற்று” (குறள்.1008)

எனும் குறள்கள் கூறுகின்றன.

இன்றைய காலச் சூழலில் குடிநீர் என்பது பெருநகரங்களிலும் தட்டுப்பாடானதாகவே காணப்படுகிறது. கோடைக்காலங்களில் மக்கள் வேதிப்பொருட்கள் கலந்த நீரினையும், சுத்திகரிக்கப்பட்ட நீரினையும் புட்டிகளில் விலை கொடுத்து வாங்கி குடிக்கின்றனர். திருமணம் விழாக்கள் போன்ற நிகழ்வுகளிலும் இந்நீரே வழங்கப்படுகிறது.

பெரும்பாலும் மழைநீர் அப்படியே பயன்படுத்தப்படுவதில்லை. சுற்றுப்புற மாசுபாட்டின் காரணமாக மழைநீரை சுத்திகரித்தோ, வடிகட்டியோ குடிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. குளத்து நீரினை பெரும்பாலும் பயன்படுத்து-வதில்லை. பெருநகர, நகர குளங்களில் சாக்கடைக் கழிவுகளே பெரும்பாலும் கலந்துள்ளன. குளத்து நீர் சில கிராமங்களிலேயே பயன்படுத்தப்படுகிறது.

பழங்கள் இன்றும் மக்களால் பெருமளவு பயன்படுத்தப்படுகிறது. ஆனால் இயற்கையாக பழுக்கவைக்கப்படாமல் வேதிக் கற்களால் செயற்கையாக பழுக்கவைக்கப்படுகிறது. இதனால் உடல் உபாதைகள் ஏற்படுகிறது. இதனைத் தடுக்க அரசு பல்வேறு சோதனைகள் மூலம் நடவடிக்கைகளை மேற்கொள்கிறது.

எள், தினை போன்ற தானியங்கள் நேரடியாக மக்கள் அதிகளவு பயன்படுத்துவதில்லை. எள்ளினை அரைத்து நல்லெண்ணையாக பயன்படுத்துகின்றனர். தினை பறவைகளுக்கு உணவாக கொடுக்கப்படுகிறது.

சிறுகுழந்தைகளுக்கு மருந்தாக தேன் அதிகளவு கொடுக்கப்-படுகிறது. தேனோடு பால் கலந்து மக்களால் பயன்படுத்தப்படுகிறது.

கூழ், கஞ்சி போன்ற உணவுகள் பெருமளவு பயன்படுத்தப்-படவில்லை. பாமர மக்களால் இவ்வுணவு ஊறுகாயோடு உண்ணப் பெறுகிறது. அரிசி பெருமளவு பயன்படுத்தப்படுகிறது.

கோடைக் காலத்தில் கரும்புச்சாறினை இஞ்சி எலுமிச்சைச் சாறுடன் கலந்து உண்கின்றனர்.

வள்ளுவர் சுட்டுகின்ற உணவு வகைகள் பெரும்பாலும் இன்றைய சமுதாய மக்களாலும் பயன்படுத்தப்படுகிறது. ஆயினும் இளையத் தலைமுறையினரால் அதிகமாக விரும்பப்படுவதில்லை. இவர்கள் “பீட்ஸா,

பர்கர், ஐஸ்கீரீம், பாஸ்தா (Pasta), நூடுல்ஸ், அசைவ உணவு வகைகள், புரோட்டா முதலியவற்றை அதிக அளவு உண்கின்றனர்”[99] என்பதை அறிய முடிகிறது.

“ஏழைகளின் உணவு பெரும்பாலும் கம்மஞ்சோறு, சோளச்சோறாக இடைக்காலம் வரையும் காணப்பட்டுள்ளது” என்பதை இச்செய்தி வழி உணர முடிகிறது.

இன்றைய இளைய சமுதாயத்தினர் மேற்கத்திய துரித உணவான ‘பீட்ஸா, பர்கர், நூடுல்ஸ் மற்றும் வேதிப்பொருட்கள் சேர்ந்த பழச்சாறுகள், நெகிழி புட்டிகளில் அடைக்கப்பட்ட ஆயத்த உணவுகளையே விரும்பி உண்கின்றனர். இதனால் அதிகமான நோய் உபாதைகளான உடல் பருமன், இரத்த அழுத்தம், இரத்தத்தில் சர்க்கரை அளவு கூடுதல், புற்றுநோய் போன்றவைகளால் பாதிக்கப்படும் சூழ்நிலைக்கு தள்ளப்பட்டிருக்கின்றனர்.

உறைவிடம்

மக்களின் அடிப்படைத் தேவைகளில் முக்கியமானது உறைவிடமாகும். உறைவிடத்தை “துச்சில்” (குறள்.340) எனும் சொல்லால் வள்ளுவர் குறிப்பிடுகிறார். மேலும் கட்டிடத்தின் பாரத்தை சுமக்கும் தூண்களைக் குறித்து,

“துன்பம் துடைத்தூன்றும் தூண்” (குறள்.615)

“ஐந்துசால்பு ஊன்றிய தூண்” (குறள்.983)

என கூறுகிறார். வீட்டிற்கு சுவர்களுக்கு மேற்பூச்சாக அடிக்கப்படும் சுண்ணாம்பினைக் குறித்து,

"வான்சுதை வண்ணம் கொளல்" (குறள்.714)

வெண்மை நிறத்தைக் கொண்ட சுண்ணாம்பு என்கிறார்.

இன்றைய சூழலில் கட்டிடத்துறை அதிகமான முன்னேற்றத்தைப் பெற்றுள்ளது. குடிசை மற்றும் ஓடு வீடுகள் காங்கீரீட் வீடுகளாகவும் அடுக்குமாடி குடியிருப்புகளாகவும் மாற்றம் பெற்றுள்ளன. வீட்டின் சுவர்களுக்கு அடிக்கப்படும் மேற்பூச்சுகள் சுண்ணாம்புகளின்றி வண்ண சுவரோவியங்களாக (wall paint) வளர்ச்சி பெற்றுள்ளன.

புழங்குப் பொருட்கள்

"புழங்கு பொருள் என்பது மக்கள் அன்றாடம் பயன்படுத்தி வந்த வருகின்ற பொருட்களைச் சுட்டுவதாக கொள்ளலாம். புழங்கு என்பதற்குத் தமிழ் மொழியகராதி 'வழங்குதல்' என்று குறிப்பிடுகிறது."[100] மேலும் "தமிழ்லெக்சிகன் 'புழங்கு' என்பதற்கு கையாளுதல், புழங்குதல் என்று குறிப்பிடுகிறது"[101] எனவே புழங்கு என்பது மக்கள் பயன்படுத்திய அல்லது வழங்கி வந்தவற்றை குறிக்கிறது.

போர்க்கருவிகள்

வேல்

வேல் ஈட்டி என்ற பெயரோடும் அழைப்பது உண்டு. வேலின் வடிவம் சுடரோடுக்கூடிய இலை போன்ற அமைப்புடையது. வேலினை பயன்படுத்தியதற்கு,

"வேலேநீ வாழி பொழுது" (குறள்.1221)

"வேலாள் முகத்த கருவி" (குறள்.500)

“வேல் அன்று வேலொடு” (குறள்.546)

“வெல்படை வேந்தன்” (குறள்.761)

“கைவேல்” (குறள்.774)

எனும் குறளடிகள் சான்று பகர்கின்றன.

வாள்

முற்கால வீரத்தமிழர்களின் பயன்பாட்டில் வாள் மிகவும் குறிப்பிடத்தக்க கருவியாகும். வாள் பெரும்பாலும் இரும்பினால் செய்யப்பட்டு கூர்மையாக சாணை பிடிக்கப்பட்டிருக்கும். கையிலிருந்து வாள் தவறிச் செல்லாமல் இருக்கும் விதத்தில் அதன் கைப்பிடிகள் கலைநயத்துடன் காணப்பட்டிருக்கும். அக்கால மக்கள் வாள் பயன்படுத்தியமையை,

“வாளது (குறள்.334), வாளாண்மை (குறள்.614), வாளொடு என் (குறள்.726), வாள்போல் (குறள்.882)” எனும் குறளின் சொற்கள் உணர்த்தி நிற்கின்றன.

கணை - வில்

வில்லும் கணையும் ஒன்றோடு ஒன்று நெருங்கிய தொடர்புடையது. ஒன்றையொன்று பிரிந்தால் அதனால் பயன் இல்லை.

“கணை கொடிது” (குறள். 279), “வில் வணக்கம்” (குறள்.827)

கணை நேரிதாயினும் கொடியது. வில்லானது வளைந்து காணப்படும். வில்லும் கணையும் வள்ளுவர் காலத்தில் பயன்படுத்தப்பட்டதை இக்குறள்களின் சொற்கள் உணர்த்துகின்றன.

இசைக்கருவிகள்

யாழ்

யாழ் எனும் சொல் இசைக் கருவியையும் அதிலிருந்து ஏழக்கூடிய இசையையும் குறிப்பதாகும். யாழ்கள் ஒற்றை நரம்புடையன. வில்யாழ், பேரியாழ், சீறியாழ் ஆகிய மூன்று யாழ் வழக்கத்திலிருந்ததாக குறிப்புகள் காணப்படுகிறது.

"வணர்ந்தேந்து மருப்பின் வள்ளுயிர்ப் பேரியாழ்"[102]

என்று மலைபடுகடாம் குறிப்பிடுகிறது. பேரியாழ் சிறியதும் நெடியதுமான ஒன்பது வார்க்கட்டுகளைக் கொண்டது. வடித்து முறுக்கிக் கட்டின இனிய ஓசையைத் தரும் நரம்புகளைக் கொண்டது. வரகின் கதிர்கள் இரண்டு வரிசையாக அமைந்திருப்பதைப் போல நீளத்தில் வரிசையாகவும் நெருக்கமாகவும் அமைந்து சிறிய துளைகளில் சுள்ளாணிகள் தைக்கப் பெற்றது. யானைக் கொம்பினால் புதிதாகச் செய்யப் பெற்ற அழகிய ஆப்பு அந்த யாழின் பந்தலில் குறுக்கே கட்டடப்பட்டிருக்கும்.

சீரியாழ் பழமை வாய்ந்த யாழ்க்கருவி என இசைத்தமிழ் அறிஞர்கள் கூறுகின்றனர்.

"மருதம் பண்ணிய கருங்கோட்டுச் சீறியாழ்"[103]

என்று மலைபடுகடாம் குறிப்பிடுகிறது. வள்ளுவர்,

யாழினிது (குறள்.66), யாழ்கோடு (குறள்.279)

என எவ்வகை யாழ் எனக் கூறாது பொதுவாக யாழின் ஓசையினை மட்டும் கூறுகிறார்.

குழல்

இஃது மூங்கிலால் செய்யப்பட்ட இசைக்கருவியாகும். இசைக்கருவிகளில் நரம்பிசைக் கருவிகள் யாழுக்கு அடுத்த நிலையிலிருப்பது குழல் ஆகும். இதனை,

"விளிப்பது கவரும் தீம்குழல் துணைஇ"[104]

"குழலினிய மரத் தோசை நன் கின்னா"[105]

என மலைப்படுகடாமும், இன்னாநாற்பதும் கூறுகிறது. வள்ளுவர் குழலினைக் குறித்து,

குழலினிது (குறள்.66), ஆயன்குழல் போலும் (குறள்.1228)

என்கிறார். குழலின் ஓசை இனிமையானது. ஆனால் அவ்வோசையை விட புல்லாங்குழலினை ஆயன் பயன்படுத்திய செய்தியினையும் கூறுகிறார்.

பிற பொருட்கள்

மேலும் வள்ளுவர், பிற பொருட்களை பயன்படுத்தியமையை,

கட்டளைக்கல் (குறள்.505) என உரைக்கல், குளித்தானைத் தீத்துரீஇ யற்று (குறள்.629) என தீப்பந்தனையும், தூண்டில் பொன் (குறள்.931) மீனினைப்பிடிக்க தூண்டில் பயன்படுத்தியதையும், காட்டும் பளிங்கு போல் (குறள்.706) என கண்ணாடியையும், ஊற்றாம் துணை (குறள்.414) என ஊன்று கோலினைப் பயன்படுத்தியதையும், செப்பின் புணர்ச்சி போல (887) என மூடி வைத்த செம்பினையும், அடைக்குந்தாழ் (குறள்.71) வீழ்த்த கதவு (குறள்.1251) விடுகளுக்கு தாழ்பாழ் மற்றும் கதவுகளை பயன்படுத்தியதையும் வணிகர்களை தராசு பயன்படுத்தியதை "சீர்தூக்கும் கோல்" (குறள்.118) "ஏர்ப் பின்னது உலகம்" (குறள்.103) விவசாயத்திற்கு ஏரினைப் பயன்படுத்தியதையும், கலன் (குறள்.605)

புணை மன்னும் (குறள்.1164) நீர் நிலைகளில் ஒரு கரையிலிருந்து மறுகரையை கடக்க தோணி கலன்களை பயன்படுத்தியதையும்,

"கலத்துள் நீர்" (குறள்.660)

கலம் (குறள்.1000) சமையல் பாத்திரங்களை பயன்படுத்தியதையும் இக்குறள்களின் வழி குறிப்பிடுகின்றார்.

இன்றைய கால சமுதாயத்தில் வள்ளுவர் கூறுகின்ற புழங்கு பொருட்களில் போர்க்கருவிகளான வாள், வேல், அம்பு - கணை போன்றவை அதிகமாக பயன்படுத்தப்படவில்லை. இவை விளையாட்டுத்துறையில் விளையாட்டுக் கருவிகளாக பயன்படுத்தப்படுகிறது. இசைக்கருவிகளில் யாழ் பயன்படுத்தப்படவில்லையாயினும் யாழினைப் போன்ற கம்பிகளான வீணை, கிதார் போன்றவை பயன்படுத்தப்படுகிறது. புல்லாங்குழலும் பயன்படுத்தப்படுகிறது. மேலும் வள்ளுவர் காட்டுகின்ற புழங்குப் பொருட்களும் தற்காலத்தில் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

நம்பிக்கைகள்

பழைமையான எல்லா இனங்களிடத்தும் பல நம்பிக்கைகள் நிலவி வருகின்றன. நம்பிக்கையின் பால் உள்ள ஆர்வமும் தீமையின் பால் உள்ள அச்சமும் பெரும்பான்மையான நம்பிக்கைகட்கு அடிப்படை எனலாம். நம்பிக்கையைக் குறித்து "இயற்கையின் புதிரான செயல்களை உணர முடியாத போதும் மனித வாழ்வில் நிகழும் கூறுகளுக்கு காரணம் கற்பிக்க இயலாத போதும் மனிதமனம் சிலவற்றைப் படைத்து காரணம் கற்பித்துக் கொள்கிறது. அவை நம்பிக்கையாக உரு பெறுகின்றன"[106] என்று க. காந்தி அவர்கள் தன்

கருத்தினைப் பதிவு செய்கிறார். வள்ளுவர் மக்களின் இறைநம்பிக்கையை குறித்து,

"மலர்மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடுவாழ் வார்" (குறள்.3)

"தனக்குவமை இல்லாதான் தாள் சேர்ந்தார்க்கு
மனக்கவலை மாற்றல் அரிது" (குறள்.7)

என்கிறார். இறைவனது திருவடியை இடைவிடாது நினைப்பவர்களுக்கு எக்காலத்தும், எவ்விதத் துன்பங்களும் இல்லை. இறைவனை இடைவிடாது நினைத்தவர்களுக்கு மனதினால் வருகின்ற கவலைகளைப் போக்கி கொள்ள முடியும் என்ற நம்பிக்கை காணப்பட்டது.

தும்மலை பற்றிய நம்பிக்கையாக,

"நினைப்பவர் போன்று நினையார்சொல் தும்மல்
சினைப்பது போன்று கெடும்" (குறள்.1203)

"வழுத்தினாள் தும்மினேன் ஆக அழித்தழுதாள்
யாருள்ளித் தும்மினீர் என்று" (குறள்.1317)

"தும்முச் செறுப்ப அழுதாள் நுமர்உள்ளல்
எம்மை மறைத்தீரோ என்று" (குறள்.1318)

என குறிப்பிடுகிறார். தலைவிக்கு தும்மல் உண்டாவது போன்று இல்லாது போய் விட்டது. அதனால் தலைவன் நினைத்து மறந்து விட்டாரோ என எண்ணுதல், தும்மினால் நெருங்கிய தொடர்புடையவர்கள் நினைப்பார்கள் என்ற நம்பிக்கையில் தலைவி தலைவனிடம் ஊடல் கொண்டு அழுகிறாள்.

இன்றைய நவீன காலத்திலும் மிகநெருங்கியவர்கள் நினைத்தால் தும்மல் வருமென்ற நம்பிக்கை காணப்படுகிறது.

தொழில்கள்

தொழில்களே நாட்டிற்கு வளத்தைத் தருகின்றன. பலவகைத் தொழில் நிறைந்திருக்கும் சமுதாயத்தைச் சிறந்த சமுதாயம் எனலாம். தொழில்களைச் செய்கின்ற தொழிலாளர்கள் சமுதாயத்திற்கு முதன்மையானவர்கள், சமுதாயம் தொழிலாளரை விடாமல் பற்றி நிற்பதற்குக் காரணம் அவர்கள் குறையின்றி செய்யும் தொழில்களே ஆகும்.

வள்ளுவர் சில தொழில்களைக் குறித்து நேரடியாகவும், பல தொழில்களை பிற கருத்துக்களை விளக்கும் போது வருகின்ற குறிப்புகளாலும் உவமைகளாலும், தொழிற்கருவிகளாலும் மக்கள் பயன்படுத்திய பொருட்களாலும் குறிப்பிடுகிறார்.

அரசியல் தொழில்

வள்ளுவர் காலத்தில் அரசியல் தொழிலில் ஈடுபட்டோர் அனைவரும் அரசனின் கீழ் பணி செய்பவர்களாகவே இருந்தனர். அமைச்சர், தூதுவர், ஒற்றர்கள் போன்ற பணியினைச் செய்தனர். அமைச்சரல்லாத பிற பணிகள் என்னவென்று கூறப்படவில்லை ஆயினும் அரசன் அலுவலர்களை எவ்வாறு தெரிந்தெடுக்க வேண்டுமென்பதை,

“குணம்நாடிக் குற்றமும் நாடி அவற்றுள்
மிகைநாடி மிக்க கொளல்” (குறள்.504)

எனும் குறளடி குறிப்பிடுகிறது. ஒருவனைத் தேடிக்கொள்ளும் முன்னர் அவனது குணநலன்களையும், குற்றங்களையும் ஆராய்ந்து குணநலன்கள் குற்றங்களை விட மிகுமாயின் அவனை செயல் மேற்கொள்பவனாக கொள்ள வேண்டும் என்று கூறுகிறார்.

படைத்தொழில்

போரையும் படைக்கலப் பயிற்சியையுமே தொழிலாகச் கொண்ட வீரர்களும் படைகளும் வள்ளுவர் காலத்தில் இருந்தனர் என்பதை,

"வில்லேர் உழவர்" (குறள்.872)

"உரன்நசைஇ யுள்ளந் துணையாகச் சென்றார்" (குறள்.1263)

எனும் குறள்கள் வழி அறிய முடிகிறது. வில்லேந்தி போர் செய்பவர்களை 'வில்லேர் உழவர்' என்கிறார். மேலும் தலைவன் போருக்குச் சென்ற செய்தியை தலைவி, வீரத்தை விரும்பி, ஊக்கத்தைத் துணைகொண்டு சென்றதாக கூறுகிறாள்.

வாணிபம்

பொருட்களை விற்பதும் வாங்குவதும் வாணிபம் ஆகும். பிறர் பொருளையும் தம்முடைய பொருள் போலப் போற்றி வாணிகம் செய்தால் வியாபாரம் மேலும் பெருகும் என்று வணிகருக்கு கீழ் வரும் குறளில் வழிகாட்டுகிறார்.

"வாணிகம் செய்வார்க்கு வாணிகம் பேணிப்
பிறவும் தமபோல் செயின்'' (குறள்.120)

வேளாண்மை

வேளாண்மைத் தொழிலை முதன்மையாகக் கொண்டதாகவே வள்ளுவர்கால சமுதாயம் காணப்பட்டது. சமுதாயத்தாலும் அரசர்களாலும் உழவர்கள் நன்கு மதிக்கப் பெற்றனர் என்பதை கீழ்வரும் குறள்கள் உறுதிப்படுத்துகின்றன.

"உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற் றெல்லாம்

தொழுதுண்டு பின்செல் பவர்" (குறள். 1033)

"பலகுடை நீழலும் தம்குடைக்கீழ்க் காண்பர்

அலகுடை நீழ லவர்" (குறள்.1034)

அக்கால விவசாயிகள் வேளாண்மை செய்த முறையினை,

"தொடிப்புழுதி க∴சா உணக்கில் பிடித்தெருவும்

வேண்டாது சாலப் படும்" (குறள்.1037)

"பாத்தியுள் நீர்சொரிந்து அற்று" (குறள்.718)

"நிலத்தில் கிடந்தமை கால்காட்டும்" (குறள்.959)

"ஏரினும் நன்றால் எருஇடுதல்; கட்டபின்

நீரினும் நன்றதன் காப்பு" (குறள்.1038)

"ஊரவர் கௌவை எருவாக" (குறள்.1147)

"இல்லாளின் ஊடி விடும்" (குறள்.1039)

"இடுக்கண்கால் கொன்றிட" (குறள்.1030)

"வள்ளி முதல்அரிந் தற்று" (குறள்.1304)

என்னும் குறள்கள் சுட்டுகின்றன. சாகுபடி செய்யும் முன்னர் மூன்று பலம் எடையுள்ள புழுதியை ஒருபலம் எடையுள்ள புழுதியாக மாறும் படியாக உழுது உலர்த்தினால் ஒரு படி எருவும் போடாமல் அந்நிலம் நன்றாக விளையும். பயிர் வளர்கின்ற நன்செய் நிலங்களில் நீரைப் பாய்ச்ச வேண்டும். நிலத்தின் தன்மையைப் பாத்தியில் உற்பத்தியாகும் சிறிய முளை காட்டும். நிலத்திற்கு எருபோடுதல் உழுவதை விட நல்லதுகளை பறித்த பின் நீர்பாய்ச்சிக்காப்பது நீர் பாய்ச்சுதலை விட நல்லது. பயிருக்கு எருவும் நீரும் தேவையென்றும், பயிரினை

காக்கவில்லையென்றால் நிலமானது உழவனிடம் கோபம் கொள்ளும், பயிரை பேணாவிடில் பயிரின் காலில் பூச்சி அரிக்கும். வாடிய பயிருக்கு நீரினை விட்டு வளர்க்க வேண்டும். இல்லையெனில் பயிரின் வேரினை அறுத்து விடுவது போன்றதாகும் என்று இன்றைய விவசாயிகளுக்கும் பயனுள்ள வகையில் வள்ளுவர் குறள்களின் வழி விளக்கமளிக்கிறார். மேலும் கரும்பினை விவசாயம் செய்ததை,

"........... கரும்புபோல்" (குறள்.1078)

எனும் வரிகள் நமக்கு காட்டுகின்றன.

தற்கால சமுதாய நிலையில் வேளாண்மைத் தொழில் செய்வோரின் எண்ணிக்கை குறைந்து கொண்டே வருகிறதெனலாம். இதற்கு முக்கிய காரணம் நகரமயமாதல். இதனால் வேளாண்மை இடங்களின் அளவு குறைந்து வீட்டுமனைகளாக மாற்றம் பெற்று கொண்டே இருப்பதாகும். மேலும் விவசாயத்திற்கு ஏற்ற பொருளாதார நிலையில் விவசாயிகளுக்கு உதவி கிடைக்காமை, மழையில்லாமையால் ஏற்படும் வறட்சி, விளைபொருட்களுக்கு ஏற்ற கொள்முதல் விலை கிடைக்காமை மற்றும் இளைய தலைமுறையினருக்கு விவசாயத்தின் மீது ஏற்பட்ட ஆர்வமின்மையேயாகும்.

விவசாயிகள் பயிர்க்கடன்களைப் பெற்று விவசாயம் செய்கின்றனர். விவசாயம் செய்கின்ற போது ஏற்படுகின்ற இயற்கையின் சீற்றம், வறட்சி, கொள்முதல் விலையின்மை காரணமாக பயிர்க்கடன்களைச் செலுத்த முடியாதல் தற்கொலை செய்யும் நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கின்றனர். விவசாயத்தைக் குறித்து, "இந்தியாவில் விவசாயிகள் ஏழ்மை, வறுமை, கடன் காரணமாகத் தற்கொலை செய்து கொள்ளலாம். விளைநிலங்களின் பரப்பு

குறைந்து கொண்டே போகலாம். ஆனால் உலகில் உணவு தானிய உற்பத்தியில் முதல் வரிசையில் இந்தியா காணப்படுகிறது. உலகில் பால், பருப்பு வாசனாதிகள், காய்கறிகள், பழங்கள் உற்பத்தியில் முதலிடத்தில் இருக்கிறது. கோதுமை, நெல், பருத்தி, கரும்பு, தேங்காய், தேயிலை, முட்டை உற்பத்தியில் இரண்டாவது இடத்தில் இருக்கிறது. விவசாயம் ஒரு தொழில் மட்டுமல்ல, அது ஒரு வாழ்க்கை முறை, கிராமப்புற இந்தியாவின் வாழ்வியல்”[107] என்று கூறுகிறது.

வளர்ந்து வரும் அறிவியல் வளர்ச்சிக்கேற்ப வேளாண்மைத் துறையில் வேகமான வளர்ச்சி ஏற்பட்டுள்ளது. நிலத்தைப் பண்படுத்தவும், நாற்றங்கால்களை நடவும், அறுவடைச் செய்ய என அனைத்து பணிகளுக்கும், இயந்திரங்கள் உதவி புரிகின்றன. இதனைக் குறித்து, “இந்தியா ஒரு விவசாய நாடு. 70% மக்கள் விவசாயத் தொழிலில் ஈடுபட்டுள்ளனர். அதிகரித்து வரும் மக்கள்தொகை பெருக்கம், குறைந்து வரும் விவசாய நிலப்பரப்பு உள்ளிட்ட சூழலில் உணவு உற்பத்தியை அதிகரிப்பதில் நவீனத் தொழில்நுட்பங்கள் மிகவும் உதவியாக இருக்கின்றன. கால்நடைகளின் எண்ணிக்கை அருகிவரும் நிலையில் அதிக நிலப்பரப்பில் சாகுபடி செய்ய வேண்டிய கட்டாயமும் பாரம்பரிய முறைகளிலிருந்து நவீனத் தொழில் நுட்பத்துக்கு விவசாயத்தை மாறச் செய்துள்ளன. அவ்வகையில் பன்முக பயன்பாட்டு கருவியாக டிராக்டர்கள் உள்ளன”[108] என்று வேளாண்மை கருவிகளின் பயனினை அறிய முடிகிறது.

அரசும் வேளாண்மைக்கான மின்சாரத்தினை இலவசமாகவும் சலுகை விலைகளில் அளிக்கிறது. மேலும் விதைகள், உரங்கள் முதலியவைகளை சலுகை விலையில் அளிப்பதுடன் பயிர்களுக்கு கடனுதவிகளையும் வழங்கி விவசாயிகளை ஊக்கப்படுத்துகிறது. ‘உழவன்

சேற்றில் கைவைத்தால் மட்டுமே நாம் சோற்றில் கை வைக்க முடியும்' என்பதே உண்மையாகும்.

மருத்துவம்

மருத்துவம் ஆங்கிலத்தில் (Medicine) என்று அழைக்கப்படுகிறது. மருத்துவம் என்பது மருந்துகள் நோய்தடுக்கும் முறைகள் (Preventive Medicine) உடற்பயிற்சி மூலம் வலுவூட்டல் முதலிய பிற மருத்துவ முறைகள் (Physical Medicine) என்றும், அறுவை சிகிட்சைகள் (Surgery) என இவைகளை உள்ளடக்கியதாக காணப்படுகிறது. மருந்து என்பதற்கு,

புல், பூடு, செடி, புதல், மரம், கொடி என்ற வகையில் காணப்படுகின்ற தாவரங்கள் மருந்து என்னும் பெயரிலேயே அழைக்கப்பட்டுள்ளது. என்பதற்கு கீழ்வரும் பாடலடிகள் சான்றாக அமைகின்றது.

"புல்லும் மரனும் புதலும் பூடும்
வல்லியும் பெயர்பெறு மருத்துவச் சஞ்சீவி"[109]

பிங்கல நிகண்டும், சேந்தன் திவாகரம்

"புல்லும் மரனும் புதலும் பூடும்
வல்லியும் பெயர்க்கொடை மருந்தெனப் படுமே"[110]

நோய்களுக்குக் கொடுக்கின்ற மருந்துகள் எல்லாவற்றிற்கும் 'மருந்து' என்ற பொதுப்பெயரே அமைந்துள்ளது. மக்களிடமுள்ள பிணிகளை ஒழித்து அவர்களை நெடிது வாழ வைப்பதும், பிணியை ஒழிப்பதன் மூலம் இறப்பைத் தவிர்த்து நெடுநாள் வாழ வைப்பதும் மருந்தின் பணியாகும். "மருந்து

என்பதற்கு ‘வாழ வைப்பது என்று பொருள்’”[111] என செந்துறை முத்து அவர்கள் கூறுகிறார். வள்ளுவர்,

நோயினை மருந்தினால் மட்டுமே தீர்த்து விட முடியாது என்பதை,

“உற்றவன் தீர்ப்பான் மருந்து உழைச் செல்வான் என்று
அப்பால்நால் கூற்றே மருந்து” (குறள்.950)

எனும் குறள் வழி எடுத்துரைக்கிறார். நோயாளியும், மருத்துவனும், மருத்தும், துணை செய்பவனுடைய நான்கு கூறுகளால் தான் நோயை சரிசெய்ய முடியுமென்கிறார். நோயாளியின் நான்கு இயல்புகளாக பொருளுடைய-வனாகவும், நோயின் உண்மைத்தன்மையை கூறுவனாகவும், மருத்துவர் கூறுகிறபடி நடப்பவனாயும், துன்பத்தினைப் பொறுத்துக் கொள்பவனாகவும் காணப்பட வேண்டும். மருத்துவருக்குரிய நான்கு இயல்புகளாக நோய் கண்டு அஞ்சாமை, நூலறிவு மற்றும் நுண்ணறிவு உடையவனாதல், அனுபவம் மற்றும் அருள் உடையவனாகவும் இருக்க வேண்டும். மருந்தின் இயல்பாக, நோய்களை நீக்கும் தன்மை, பயனுடையதாக இருப்பது, நோயை எளிதில் தீர்ப்பது, எளிமையாக கிடைக்கக் கூடியதாக காணப்பட வேண்டும். நோயாளிக்குத் துணை புரிபவன் குணங்களாக, நோயாளியுடன் அன்புடன் இருத்தல், இயல்பாக இரக்கமுடன் இருத்தல், அறிவுடையவனாதல், மருத்துவன் சொற்படி நடத்தல் ஆகிய பதினாறு கூறுகளும் இணைந்துழைத்தால் தான் மருந்து பயன்பட்டு நோய் குணமடையும் என்கிறார்.

“நோய்க்கான காரணமாக, உடலில் வாதம் ஏற நாவில் புளிப்பு ஏறும், பித்தம் ஏற கசப்பு ஏறும், கபம் ஏற்பட்டால் நாக்கில் இனிப்பு ஏறும் முறையே உடல் குளிரும் சுடும். உடலில் வாதம், பித்தம், கபம் என்பன

குறிப்பிட்ட அளவு இருந்தால் அளவு இருந்தால் நோய் இல்லை என்று காவிய நாடி மருத்துவச்சுவடி கூறுகிறது."[112] இதனை

"மிகினும் குறையினும் நோய் செய்யும் நூலோர்
வளிமுதலா எண்ணிய மூன்று" (குறள்.941)

என குறள் கூறுகிறது. உடலில் வாதம், பித்தம், சிலேத்துமம் அமைய வேண்டிய அளவை விட அதிமானாலும் குறைந்தாலும் நோய் உண்டாகும். சிலேத்துமம் என்பது கபத்தினைக் குறிக்கும்.

கட்டுப்பாடின்றி உணவினை உண்பவனுக்கு நோய்கள் பீடிக்கும் என்பதை,

". . . . . நிற்கும்
கழிபேர் இரையான்கண் நோய்" (குறள்.946)

"தீயள வன்றித் தெரியான் பெரிதுண்ணில்
நோயள வின்றிப் படும்" (குறள்.947)

எனும் குறளடிகள் குறிப்பிடுகிறது. அளவுக்கு அதிகமாக உணவினை உண்பவனிடத்தில் நோயானது நிலைத்திருக்கும். பசியின் அளவையும், உணவின் அளவையும் தீமை அளவையும் அறியாது, உண்ண வேண்டிய கால அளவையும் வகுத்துக் கொள்ளாது, உணவை அதிகமாக உண்டால் நோய்கள் பலவாக வந்து வருத்தும் என்கிறார்.

மருத்துவர் சிகிட்சை செய்யும் முன்னர் நோயாளியின் நாடியினை பரிசோதனைச் செய்வர். மனித உடலில் எழுபத்தி இரண்டாயிரம் நாடி வகைகள் உள்ளது. இத்தனை நாடிகளையும் கண்டறிந்து மருந்து செய்வது இயலாததாகும். எனவே எழுபத்தி இரண்டாயிரம் நாடிகளிலிருந்து பத்து முக்கியமான நாடிகளைக் கூறியும் மூன்று முக்கிய நாடிகளைக் கூறியும் நோயை கண்டறிவர் என்பதை,

"பொருந்தி கேள் புந்தி கீழே புகழ்தேத்தும் சுழியைப் பற்றி
எழுந்தவோர் நாடிதானும் எழுபத்தீராயிரம் தான
தெரிந்தோனிவற்றில் பத்துதச நாடி இவற்றின் மூன்று
அறிந்தோர் வாத பித்தம் அய்யம் அறிந்து பாரே"[113]

என காவியநாடி மருத்துவச்சுவடி கூறுகிறது.

உடலில் வாதம், பித்தம், கபம் ஆகியவை அதிகமாக இருப்பின் உடலில் நிற வேறுபாடுகள் என்பதற்கும் கீழ்வரும் சுவடியில் அடிகள் சான்றாக அமைகின்றது.

"மூன்றுபேர் நிறமும் சொல்வேன
முதல் வாதம் கறுப்பு செம்மை
மான்றிய பசுமை பச்சை
மஞ்சளாய் இருக்கும் பித்தம்
தோன்றிய வெண்மையப்பா
சோர்விலா அய்யமாகும்
ஊன்றி நிறங்கள் சொன்னோம்
உத்தகம் அறிவாதாமே!"[114]

உடம்பில் வாதம் இருந்தால் கருப்பு, சிவப்பு நிறமும் பித்தம் காப்படின் பச்சை, மஞ்சள் நிறமும் கபம் இருப்பின் வெண்மை நிறமும் உண்டாகும் என்று இப்பாடலடிகள் குறிப்பிடுகிறது. வள்ளுவர் நோய்க்கு மருந்தளிப்பதைப் பற்றி,

"நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல்" (குறள்.948)

"உற்றான் அளவும் பிணியளவும் காலமும்

கற்றான் கருதிச் செயல்" (குறள்.946)

எனும் குறள் வழி ஆலோசனைத் தருகிறார். வாதம், பித்தம், கபமாகிய மூவகை நோய்களையும் அறிந்து அவற்றுள் வந்த நோய்க்கு காரணம் அறிந்து அதன்பின் நோயைக் குறைப்பதற்கு உரிய வழிகளையறிந்து நோய்க்கு பொருந்தும் முறையால் மருத்துவன் மருந்து கொடுக்க வேண்டும். நோயுற்றவனது அளவையும், பிணியினது அளவையும், நோயின் காலம் கோடைக்காலமா, மழைக்காலமா, பனிக்காலமா என்பதை அறிந்து மருத்துவ நூலினைக் கற்ற மருத்துவன் தன் அனுபவங்களையொட்டி மருந்து கொடுக்க வேண்டும் என்று கூறுகிறார்.

'வரும் முன் காப்போம்' என்பது நாமறிந்த தொடரேயாகும். இதனை நோயைத் தடுக்கும் முறைகளில் கூறியுள்ளதை,

". . . . . சிறிது

வயிற்றுக்குள் ஈயப் படும்" (குறள்.412)

"மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு அருந்தியது

அற்றது போற்றி உணின்" (குறள்.942)

"அற்றால் அளவறிந்து உண்க அஃதுடம்பு

பெற்றான் நெடிதுய்க்கும் ஆறு" (குறள்.943)

"அற்றது அறிந்து கடைபிடித்து மாறல்ல

துய்க்க துவரப் பசித்து" (குறள்.944)

"மாறுபாடு இல்லாத உண்டி மறுத்துண்ணின்

ஊறுபாடு இல்லை உயிர்க்கு" (குறள்.945)

"இழிவறிது உண்பான் கண் இன்பம் போல்" (குறள்.946)

எனும் குறள்கள் வழி அறியலாம். உடலின் தேவைக்கு ஏற்ப சிறிது உணவை உண்ண வேண்டும். உண்ட உணவை அறிந்து அது முற்றும் ஜீரணமாகி விட்டது என்பதை அறிந்து, வேண்டிய உணவை உண்பவனுக்கு நோய் வராது. மருந்தும் வேண்டியதில்லை. முன்னுண்ட உணவானது முற்றும் உடல் உறுப்புகளுக்குப் பயன்பட்ட முறையை அறிந்து, அதற்குப் பிறகு கொடுக்க வேண்டிய அளவினையும் அறிந்து உண்ண வேண்டும். அவ்வாறு உண்பது பெறுதற்குரிய மனித உடம்பைப் பெற்றவன் நீண்டகாலம் இன்பமாக வாழ்வதற்குரிய வழியாகும். உண்ட உணவானது உடலோடு சேர்ந்த தன்மையை அறிந்து உண்ண வேண்டிய உணவின் அளவு முதலானவற்றை உறுதியாகக் கடைபிடித்து, உடலுக்கு நோய் உண்டாகாத நல்ல உணவை நன்றாகப் பசித்த பிறகு சுவைத்து உண்ண வேண்டும். ஒருவன் காலநிலை, உடம்பிற்கு ஒவ்வாத உணவுகளை விலக்கி உண்டால், அவன் உயிர்க்கு நோயால் வரும் துன்பம் இல்லை. அளவிற்குங்குறைவாக உண்பவனிடத்தில் இன்பம் நிலைத்திருக்கும் என இக்குறள்கள் அழகுற எடுத்தியம்புகின்றன.

உண்ட உணவு ஜீரணமாகி விட்டதை அறிந்தும், உடலுக்கும் காலநிலைகளுக்கும் ஏற்ற உணவினை அறிந்து அளவோடு உண்டு வாழ்ந்தால் நோயின்றி வாழலாம் என நோயினைத் தடுக்கும் முறையாகக் கூறுகிறார்.

இன்றைய மருத்துவம் அபரிவிதமான வளர்ச்சியைப் பெற்றுள்ளது. இதற்கு முக்கிய காரணம் இன்றைய அறிவியலும் தொழில்நுட்பமும் ஆகும். மருத்துவ முறைகளில் உடல் உறுப்புகளை மாற்றி அறுவை சிகிட்சை செய்தல், இதய வால்வு மற்றும் நரம்புகளில் காணப்படும் கொழுப்பு மற்றும் போன்ற

அடைப்புகளை நுண்கருவிகள் மூலமாக சிகிட்சை போன்றவைகளில் மருத்துவத்துறை முன்னேறியுள்ளது. குணப்படுத்த முடியாத எய்ட்ஸ், புற்றுநோய் போன்ற நோய்களின் தீவிரத்தைக் கட்டுபடுத்த நல்ல மருந்துகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. கணினி வழி உடலுறுப்பு ஊடுகதிர்ப்படம் (X ray), காந்த அதிர்வு பிம்பங்கள் (MRI, C.T Scan) மூலம் பாதிப்படைந்த உறுப்புகளின் நிலையை அறிந்து மருந்தளிக்க வாய்ப்புகள் இருக்கின்றன. நோய்களுக்கு ஏற்ற உணவுகளை எடுத்துக் கொள்வதற்கும் தவிர்ப்பதற்கும் மருத்துவர்கள் ஆலோசனைகளை வழங்குகின்றனர். இயற்கையாக குழந்தைகளை பெற்றெடுக்க இயலாத பெண்களுக்கு செயற்கைக் கருத்தரித்தல் (IVF) மூலம் குழந்தைகளைப் பெற்றெடுக்க முடியும். மேலும்,

மருத்துவத்துறையில் காசநோயினை ஆரம்ப நிலையிலே கண்டுபிடிக்க புதிய கருவி “ஜீன் எக்ஸ்பர்ட்”[115] கருவி பயன்படுத்தப்படுகிறது. மேலும், அவசர சிகிட்சைத் தேவைப்படுவோருக்கு இலவச ஊர்தி சேவைக்கு 108 என்ற எண்ணை தொடர்பு கொண்டு உதவியைப் பெற அரசு வழிவகை செய்துள்ளது. தற்போதைய நடைமுறையில் சாலைவிபத்துக்களிலும், பெரும் தீ விபத்துக்களிலும் கடுமையாக பாதிக்கப்பட்டவர்கள், மாரடைப்பு, பக்கவாதம், மூளைத்தண்டு வட நரம்பு தொடர்பான ஆபத்தான நோய்களால் பாதிக்கப்படுபவர்கள், எதிர்பாராத விதத்தில் சிக்கல் ஏற்படும் பிரசவம் கடுமையாகும் கர்ப்பிணிகள் மூச்சுத்திணறல் போன்ற பிரச்சனைகளால் உயிர்க்குப் போராடும் பச்சிளம் குழந்தைகள் எனப் பல தரப்பட்ட நோயாளிகளை உரிய நேரத்தில் மருத்துவமனைக்குக் கொண்டு செல்ல முடியாத காரணத்தால் உயிரிழப்புகள் ஏற்படுகின்றன. இந்தக் குறையை நீக்க ஆகாய ஆம்புலன்ஸ்

சேவை பயன்படுகிறது. "ஆகாய ஆம்புலன்ஸ் ஒரு ஹெலிகாப்டர் தான், ஆனால் இதில் அவசர சேவை சிகிட்சைக்கு பயிற்சி பெற்ற ஒரு மருத்துவர், ஒரு செவிலியர் ஓர் உதவியாளர் ஆகியோருடன் பயனாளியும் பயணம் செய்வார். இதில் உயிர்காக்கும் மருந்துகள் இருக்கும், இரத்த அழுத்தத்தை சீராக்க உதவும் 'சலைன் பாட்டில்கள்', இதய துடிப்பை கண்காணிக்க உதவும் இசிஜி கருவி, இதய துடிப்பைச் சரிப்படுத்தும் டீ∴பிபிலேட்டர், சுவாசத்துக்கு துணைபுரியும் ஆக்ஸிஜன் சிலிண்டர் மற்றும் வெண்டிலேட்டர் போன்ற மருத்துவ வசதிகள் காணப்படும்."[116] ஆகாய ஆம்புலன்ஸ் சேவை மலைப்பகுதிகளிலும் பாதைகளற்ற அடர்ந்த காடுகளிலும் விபத்துகள் ஏற்படும் போது மக்களுக்கு அதிக அளவில் பயனளிக்கிறது.

துரித உணவுகளைக் கட்டுப்பாடின்றி அதிக அளவு உண்பதாலும், உடல் உழைப்பின்றி காணப்படுவதாலும், இன்று உடல் எடை அதிகரிப்பு, இரத்தத்தில் உப்பு, சர்க்கரை அளவு கூடுதல், இரத்த அழுத்தம், குழந்தையின்மைக்குரிய மலட்டுத்தன்மை போன்றவை ஏற்படுகின்றன. மேலும் தரமற்ற எண்ணெய்களைச் சூடாக்கி மீண்டும் மீண்டும் உணவுப் பொருட்களை பொரித்து உண்பதால் புற்றுநோய் போன்றவைகளும் ஏற்படுகின்றன. மனிதன் ஆரோக்கியமான இயற்கை உணவுகளை உணவு கட்டுப்பாட்டோடு உண்டு வாழ்ந்தால் உலகில் நீண்டநாள் ஆரோக்கியமாகவும் நோயின்றியும் வாழலாம் என வள்ளுவர் வழிகாட்டுகிறார்.

தச்சுத் தொழில்

ஆதிகால மனிதர்கள் இரும்பின் பயன்பாட்டை அறிந்தது போன்று மரத்தின் பயன்பாட்டையும் அறிந்திருந்தனர். மரவேலை செய்பவர்களை 'தச்சர்'

என்றழைத்தனர். "தச்சு என்பது ஒன்றையும் மற்றொன்றையும் பொருந்தி இணைப்பதாகும். இத்தச்சுத் தொழிலை செய்வோர் தச்சர் எனப்பட்டனர். கல்தச்சுத் தொழில் செய்வோர் 'கல்தச்சர்' எனவும் வழங்கப்பட்டனர்"[117] என வி.சி. சசிவல்லி அவர்கள் குறிப்பிடுகின்றார்.

மரத்தச்சர்கள் கதவு, சன்னல், நாற்காலி, மேசை போன்ற பொருட்களோடு வண்டி, தேர் போன்றவற்றையும் செய்தனர்.

"காமக் கணச்சி யுடைக்கும் நிறையென்னும்
நாணுத்தாழ் வீழ்ந்த கதவு" (குறள்.1251)

எனும் இக்குறளில் கூறப்பட்டிருக்கும் கணிச்சியுடைக்கும்எனும் சொல் மூலம் மரத்தினை உடைப்பதற்கும் பிளப்பதற்கும் கோடரி பயன்படுத்திய செய்தியை அறிய முடிகிறது. மேலும் தச்சனால் செய்யப்பட்ட பொருட்களுக்கு கீழ்வரும் குறளடிகள் சான்றாக அமைகின்றது.

"கடலோட கால்வல் நெடுந்தேர்" (குறள்.496)

"உருள் பெருந்தேர்க்கு" (குறள்.667)

உருள் பெருந்தேர்க்கு" (குறள்.846)

மேலும் குறட்பாக்கள் மூலம் தேரினையும்,

"வேண்டா சிவிகை" (குறள்.37)

"பீலிபெய் சாகாடும்" (குறள்.475)

எனும் குறளடிகள் மூலம் பல்லக்கு வண்டினையும்,

"நெடுநீர் மறவி மடிதுயில் நான்கும்
நெடுநீரார் காமக் கலன்" (குறள்.605)

புணைமன்னும்" (குறள்.1164)

எனும் குறட்பாக்கள் வழி கலன் மற்றும் தோணியாகிய நீர்வழிப்போக்குவரத்து சாதனைகளையும், வள்ளுவர் குறிப்பிடுகிறார்.

வேளாண்மைக் கருவியாக,

"ஏர்பின்னது உலகம்" (குறள்.1031)

எனும் குறள் வழி ஏரினையும்,

"அடைக்குந்தாழ்" (குறள்.671)

"நாணுத்தாழ் வீழ்த்த கதவு" (குறள்.1251)

என்பதன் மூலம் வீட்டு மரச்சாமான்களையும்,

"ஒற்கத்தின் ஊற்றாம் துணை" (குறள்.414)

என ஊன்றுகோலையும்,

"மரப்பாவை சென்றுவந் தற்று" (குறள்.1058)

என மரப்பாவையையும் வள்ளுவர் குறிப்பிடுகிறார்.

மரத்தால் செய்யப்பட்ட பொம்மைகள் மரப்பாச்சி பொம்மைகள் எனவும் மரப்பாவை எனவும் வழங்கப்படுகிறது. இப்பொம்மைகள் ஆணும் பெண்ணுமாக ஜோடியாக கிடைக்கின்றன. முற்காலத்தில் திருமணமான புதுமணத் தம்பதிகளுக்கு மரப்பொம்மைகள் பெற்றோரால் கொடுக்கப்பட்டன. மரப்பாச்சி பொம்மைகள் திருமண உடையில் காணப்படும், இப்பொம்மைகள் தம்பதிக்குப் பிறக்கும் குழந்தைகளுக்கு விளையாடுவதற்காகத் தரப்பட்டது.

"மரப்பாச்சி பொம்மைகள் ஊசியிலை, முள்ளிலவு, தேக்கு, செம்மரம், செஞ்சந்தனம் போன்ற மரங்களில் செய்யப்படுகின்றன."[118]

இருபதாம் நூற்றாண்டில் செலுலாய்ட், துணி, இரப்பர், நெகிழிப்பொம்மைகள் குழந்தைகளிடையே விளையாட்டுப் பொருளாகக் காணப்படுகிறது.

இன்றைய சூழலில் மரங்களை அறுப்பதிலிருந்து அனைத்துப் பொருட்களையும் உருவாக்குவதில் நவீன உபகரணங்கள் பெருமளவு பயன்படுத்தப்படுகிறது.

கொல்லர் தொழில்

இரும்புக் கொல்லரையும், பொற்கொல்லரையும் அவர்கள் பயன்படுத்திய கருவிகளையும் குறித்து குறளில் குறிப்புகள் காணப்படுகின்றன.

“எறிதற்குப் பட்டடை (குறள்.821)

அடுமுரண் தேய்க்கும் அரம் (குறள்.567)

அரம்பெதருத பொன்போலத் தேயும்” (குறள்.888)

பட்டடை என்பது கொல்லன் சம்மட்டி கொண்டு இரும்பைக் காய்ச்சி அடிக்கும் அடிகல் ஆகும். பிறபொருட்களைத் தேய்க்கும் கருவியாக அரத்தைப் பயன்படுத்தினர் என இக்குறள் கூறுகிறது. புறநானூறு,

“கருங்கைக் கொல்லன் அரஞ்செய் அவ்வாய்

நெடுங்கை நவியம்”[119]

என்கிறது. கொல்லன் அழகிய வாயையும் நீண்ட பிடியையும் உடைய அரத்தினால் தேய்த்து கூராக்கிய செய்தியினை கூறுகிறது. போர்க்கருவிகள் வில், வேல், வாள் போன்ற போர்க்கருவிகளையும் வள்ளுவர் கால கொல்லர்கள் செய்திருக்கின்றனர். பொற்கொல்லர் அக்காலத்தில் இருந்ததை,

"சுடச்சுடரும் பொன்போல் ஒளிவிடும் துன்பம்

சுடச்சுட நோற்கிய பவர்க்கு" (குறள்.267)

"கட்டளைக் கல்" (குறள்.505)

எனும் குறள்கள் விளக்குகிறது. பொன்னை நெருப்பிலிட்டு அழுக்கை நீக்கி ஒளிபெறச் செய்த செய்தியையும், பொன்னின் தரத்தை கொல்லன் உரைக்கல்லில் உரைத்து பார்த்த நிகழ்வையும் இதன் மூலம் அறிய முடிகிறது.

பிற தொழில்கள்

குயவர் தொழிலினை,

" சலத்தால் பொருள்செய்வதே மார்த்தல் பசுமண்

கலத்துள்நீர் பெயர்திரீஇ யற்று" (குறள்.660)

"மட்பகையின் மாணத் தெறும்" (குறள்.883)

எனும் குறளடிகள் எடுத்தியம்புகிறது. பசுமண்ணினால் கலத்தில் நீரை ஊற்றி பயன்படுத்தியதையும், குயவர்கள் மட்கலங்களை அறுப்பதற்கு 'மட்பகை' எனும் சிறுகருவியை பயன்படுத்தியதையும் அறிய முடிகிறது.

சவரன் செய்யும் தொழிலை,

"மழித்தலும் நீட்டலும்" (குறள்.280)

எனும் வரிகள் எடுத்துரைக்கின்றன. வள்ளுவர் காலத்தில் ஏற்றுமதி இறக்குமதி தொழில் நடந்திருக்கிறது என்பதற்கு,

"பெரும்பொருளால் பெட்டக்க தாகி அருங்கேட்டால்

ஆற்ற விளைவது நாடு" (குறள்.732)

எனும் குறளே சான்று. ஏராளமான உற்பத்திப் பொருளோடும் அதன் காரணமாகப் பிறநாட்டார் விரும்பும் படியான தன்மை என்று கூறுவதிலிருந்து

நம்நாட்டு பொருட்கள் பிறநாடுகளுக்கு ஏற்றுமதியானதை அறிய முடிகிறது. அரங்கு செய்யும் தொழிலைக் குறித்து,

"அரங்கின்றி வட்டாடி" (குறள்.401)

எனும் குறளடி கூறுகின்றது. வள்ளுவர் காலமக்கள் வேட்டையாடுதலையும் ஒரு தொழிலாகக் கொண்டிருந்ததை,

"படை கொண்டார் நெஞ்சம் போல் நன்னூக்காது ஒன்றன்
உடல்சுவை உண்டார் மனம்" (குறள்.253)

"வேட்டுவன் புள்சிமித் தற்று" (குறள்.274)

"கான முயல்எய்த அம்பினில் யானை
பிழைத்தவேல் ஏந்தல் இனிது" (குறள்.772)

எனும் குறள்வழி உரைக்கிறார். பிற உயிரைக் கொன்று உண்ணும் மனம், வேடன் புதரில் மறைந்திருந்து பறவைகளைக் கொல்லுதல், காட்டில் சிறு முயலைக் கொல்லும் வேடன் என விலங்குகளை வேட்டையாடும் நிலையினை கொண்டிருந்தனர் என்பதை வள்ளுவர் தெளிவுப்படுத்துகிறார்.

மருத்துவம், ஆசிரியத்தொழில், வாணிபம், உழவு போன்ற தொழில்கள் எக்கால சமுதாயத்திற்கும் அவசியமானதாகும். இவற்றின் தொழில் முறைகளும், தொழிலுக்குரிய கல்வி, கருவிகள் ஆகியவை காலந்தோறும் மாறுதலடைந்து கொண்டே இருக்கின்றன. இன்றைய மக்கள்தொகை, சமுதாய தேவைகளின் அதிகரிப்பு ஆகியவற்றின் காரணமாக இன்றைய சமுதாயம் தொழில்நுட்பத்தையும், அறிவியல் முன்னேற்றத்தையும் துணையாகக் கொண்டு தங்களுடைய வாழ்வியலை முன்னேற்றப்பாதையில் எடுத்துச் செல்கிறது.

வள்ளுவர் கால பெரும்பாலான தொழில்களும், கருவிகளும் மக்களின் வாழ்வியலோடு சார்ந்து காணப்பட்டு வருகிறது.

துறவற வாழ்வு முறைகள்

குடும்பமாதல் உயிரின் இயல்பு. உலக நிலையில் துறவறம் சிலரால் மேற்கொள்ளப்படுகிறது. துறவறம் என்பது தன் விருப்பு வெறுப்புகளை துறந்து வாழ்வதைக் குறிக்கும். துறவினை இருவகையாகக் கொள்ளலாம். ஒன்று பிறவித்துறவி என்னும் மணமின்றி இருப்பது. மற்றொன்று இல்லற வாழ்க்கை நடத்திப் பின்னர் துறவற வாழ்க்கையை மேற்கொள்வது ஆகும்.

செந்துறை முத்து அவர்கள் “இல்லற வாழ்க்கை நடத்திப் பின்னர் துறவறவாழ்க்கையை மேற்கொள்ள வேண்டுமென்பதே வள்ளுவரின் உள்ளக் கருத்து”[120] என்கிறார். இக்காலத்தில் ஆணும் பெண்ணும் துறவற வாழ்வினை மேற்கொள்கின்றனர்.

துறவறம்

துறவறம் என்பதற்கு “துறவும், அடக்கமும், தூய்மையும், தவமும் அறவினையோம்பலும், மறவினை மறுத்தலும் பிறவுமாம்”[121] என்று அபிதான சிந்தாமணி கூறுகிறது.

க்ரியாவின் தற்காலத் தமிழகராதி “உலகப்பற்றை விடுத்த தவவாழ்வு, சன்னியாசம் என்றும், துறவி என்பவர் பதவி, பாசம் முதலியவற்றை வேண்டாம் என்று நீங்குபவர்”[122] என்று கூறுகிறது.

ஞா. தேவநேயப்பாவணர் அவர்கள் “இல்லற இன்பத்தை துய்த்தறியாதும், துய்த்தும், உலகவாழ்க்கையில் அல்லது பிறவித் துன்பத்தில்

வெறுப்பும் அல்லது பேரின்பத்துய்ப்பில் வேட்கையுங் கொண்டு மாணியப் (பிரமசரிய) பருவத்திலேனும், மனையறநிலையிலேனும், முறியன் (தபுதாரன்) நிலையிலேனும், மூப்பிலேனும், துறவு பூண்டு அதற்குரிய அறங்களைக் கடைபிடித்து நான், எனது என்னும் இருவகைப்பற்றையும் விட்டு பிறவியினின்று விடுதலைப் பெறுவது துறவு ஆகும்”[123] என்கிறார்.

இதன்வழி துறவறம் என்பது ஆசை, பற்று, பதவி, பாசம் போன்றவைகளை விடுத்து வாழ்வது என்பதை அறிய முடிகிறது.

இயல்புகளும் குணங்களும்

துறவறம் குறித்து பலதரப்பட்டக் கருத்துக்களை தமிழ் இலக்கியங்கள் வெளிப்படுத்துகின்றன. புறப்பொருள் வெண்பாமாலை துறவியரின் பண்புகளாக,

“நீர்பலகால் மூழ்கி நிலத்தசைஇத் தோலுடையாச
சோர்சடை தாழச் சுடரோம்பி - ஊரடையார்
கானகத்த கொண்டு கடவுள் விருந்தோம்பல்
வானகத்து உய்க்கும் வழி”[124]

என்கிறது.

நீரில் பலமுறை மூழ்கல், நிலத்தில் துயிலுதல், தோலுடுத்தல், சடை வளர்த்தல், சுடரோம்புதல், ஊருள் செல்லாதிருத்தல், காட்டில் உள்ள கனி முதலியவற்றையே உண்ணல், கடவுளை வழிபட்டு விருந்தோம்புதல் ஆகியவற்றைக் கூறுகிறது. அகநானூறு,

‘உண்ணா மையின் உயங்கிய மருங்கின்
ஆடாப் படிவத்து ஆன்றோர் போல”[125]

என்று கூறுகிறது. இப்பாடலடிகள் உண்ணாநோன்பு மேற்கொள்வதனால் மெலிந்த தோற்றத்தை உடையவரும் நீராடதவருமாகிய துறவிகள் இருந்தனர் என்பதனைக் கூறுகிறது. வள்ளுவர்.

"மனத்தது மாசாக மாண்டார்நீ ராடி

மறைந்தொழுகு மாந்தர் பலர்" (குறள்.278)

எனும் இக்குறளில் நீராடுதல் துறவியருக்குரிய செயலாக இக்குறளில் குறிப்பிடுகிறார்.

சடை வளர்த்தலைக் குறித்து,

"மழித்தலும் நீட்டலும் வேண்டா" (குறள்.280)

என்கிறார். மொட்டையடித்தலையும், சடைவளர்த்தலையும் துறவியருக்குரிய தோற்றமாக கூறுகிறார்.

துறவியரின் நோன்பின் நிலையை,

"உண்ணாது நோற்பார் பெரியர்" (குறள்.160)

என்கிறார். உடலை வாட்டும் பசியை பொறுத்து மனவலிமையோடு காணப்படுவர். துறவியர் என்பதை இதன் வழி அறியமுடிகிறது.

"உற்றநோய் நோன்றல் உயிர்க்கு உறுகண் செய்யாமை

அற்றே தவத்திற்கு உரு" (குறள்.261)

"கொல்லா நலத்தது நோன்மை" (குறள்.984)

ஒருவன் தனக்குற்ற துன்பத்தைத் தானே அடைதலும், பிற உயிர்கட்குத் துன்பம் உண்டாகாதபடி நடத்தலே என் தவத்தின் இலக்கணமாக கூறுகிறார். மேலும் பிறருக்குத் தீமை செய்யாதிருக்கும் மனவலிமை தான் தவம் என்கிறார். தவம் செய்பவரின் தோற்றமாக,

"துறந்தார் படிவத்தர் ஆகி" (குறள்.586)

என்கிறார். துறவியர் பரதேசியைப் போன்ற கோலத்துடன் காணப்பட்டதைக் கூறுகிறார். மேலும் தவவலிமையை குறித்து, பின்வரும் குறள்களில் சுட்டிக் காட்டுகிறார்.

"ஒன்னார்த் தெறலும் உவந்தாரை ஆக்கலும்
எண்ணின் தவத்தான் வரும்" (குறள்.264)

". . . . . துன்பம்
சுடச்சுட நோற்கிற் பவர்க்கு (குறள்.267)

"தன்உயிர் தானறப் பெற்றானை ஏனைய
மன்னுயிர் எல்லாம் தொழும்" (குறள்.268)

"கூற்றம் குதித்தலும் கை கூடும் நோற்றலின்
ஆற்றல் தலைப்பட் டவர்க்கு" (குறள்.269)

தவம் மேற்கொண்டு ஒழுகும் நல்லாற்றலுடையார்க்கு துன்பத்தினால் வருத்த வருத்த தவஒளி அவர் ஆன்மாவில் ஒளிவீசிக் கொண்டிருக்கும் தவவலிமையால் தன் உயிர் என்றும், தான் என்றும் கருதும் பற்றினை முற்றும் அறம் பெற்ற தவம் மேற்கொள்பவனை தவத்தினை மேற்கொள்ளாத மற்ற உயிர்கள் வணங்கும். தவ ஆற்றலைப் பெற்றவர்கள் காலம் வரையறுத்தக் காலஅளவைக் கடந்து வெல்லக்கூடும் என்கிறார்.

மேலும் துறவிகள் பின்பற்ற வேண்டிய பல குணங்களை குறள்களின் வழி துறவறஇயலில் எடுத்தியம்புகிறார்.

அருளுடைமை

அனைத்து உயிரையும் ஒன்று எனக் கருதும் நிலையையும், பிற உயிர்கட்கு உண்டாகும் துன்பத்தைக் தனக்குற்ற துன்பமாகக் கருதும் நிலையினை அருளுடைமை என்பர். வள்ளுவர்,

"நல்ஆற்றான் நாடி அருள் ஆள்க; பல் ஆற்றான்

தேரினும் அஃதே துணை" (குறள்.242)

என்கிறார். நல்வழிகளில் நின்று, அருளையே விரும்பி எவ்வுயிர்க்கும் அருளை செய்தே பழக வேண்டும். ஏனெனில் பல சமய வழிகளின் உண்மைகளை ஆராய்ந்து பார்த்தாலும் அருள் ஒன்று தான் துறவிக்குத் துணையாக நிற்பது என்று கூறுகிறார். இதனை "துறவுக்கு அடிப்படை அருளுடைமை என்பது வள்ளுவரின் கருத்து"[126] என ஜி. வரதராஜன் அவர்கள் கூறுகிறார்.

ஊன் உண்ணாமையைக் குறித்து,

"தன் ஊன் பெருக்கற்குத் தான்பிறி தூன் உண்பான்

எங்஽னம் ஆளும் அருள்" (குறள்.251)

செயிரின் தலைப்பிரிந்த காட்சியார் உண்ணார்

உயிரின் தலைப்பிரிந்த ஊன்" (குறள்.258)

என எடுத்தியம்புகிறார். தன்னுடம்பு கொழுத்து பெருகுவதற்கு ஒருவன் பிறிதோருயிரைக்கொன்று அதன் ஊனைத்தின்பவன் எப்படி அருளுடையவனாக இருக்க முடியும். அறியாமை குற்றத்தினின்றும் நீங்கிய நல்லறிவுடைய சான்றோர் ஒரு உயிர் பிரிந்த பிணமாகிய ஊனை உண்ண மாட்டார்கள் என்று இக்குறள் வழி உணர்த்துகிறார்.

துறவியானவன் பிறர் பொருளை அபகரிக்க எண்ண கூடாதென்பதற்கு அறிவுரைத் தருகிறார்.

"எள்ளாமை வேண்டுவான் என்பான் எனைத்தொன்றும்

கள்ளாமை காக்கதன் நெஞ்சு" (குறள்.281)

"அளவல்ல செய்தாங்கே வீவர் களவல்ல

மற்றைய தேற்றா தவர்" (குறள்.289)

பிறரால் இகழப்படாமல் வாழ வேண்டிய துறவியானவன், எந்த வகையான சிறிய பொருளையும் களவினால் அனுபவிக்கலாம் என்ற தீய எண்ணம் புகாதபடித் தன்நெஞ்சைப் பாதுகாக்க வேண்டும். பிறர் பொருளை வஞ்சித்து ஒழுகும் வாழ்க்கையுடையவர் உடனே அழிவார்கள் என்று இக்குறள்கள் வழி உரைக்கிறார். வாய்மை பேசுவதைக் குறித்து,

"மனத்தொடு வாய்மை மொழியின் தவத்தொடு
தானம் செய் வாரின் தலை" (குறள்.295)

. . . . சான்றோர்க்கு
பொய்யா விளக்கே விளக்கு" (குறள்.299)

என்கிறார். நெஞ்சத்தால் பொய் பேசாது, வாய்மை வழி நிற்பவனால் அத்தவத்தோடு தானங்களைச் செய்கின்ற துறவற இல்லத்தாரினும் பெரியோனாவான். துறவறம் பூண்டு பெரியோர்களாய் காணப்படுகிறவர்களுக்கு வாய்மையாகிய உள்ளொளி விளக்கே உண்மையான விளக்கு ஆகும் என்று கூறுகின்றார்.

பிற உயிர்களுக்கு தீங்கு செய்யாது இருக்க வேண்டிய துறவிகள் கோபம் கொள்ளுதல் கூடாது. கோபத்தால் அறிவிழந்து இரக்கங்கெட்டு தீமை செய்துவிடுவார்களானால் அவர்களே குற்றம் செய்தவர்களாகி விடுவார்கள். ஆகவே கோபம் கொள்ளுதல் கூடாதென்பதை,

". . . . . சினத்தைத்
துறந்தார் துறந்தார் துணை" (குறள்.310)

எனும் குறளில் விளக்குகிறார். சினத்தை முற்றும் துறந்தவர்கள் முற்றுந் துறந்த முனிவர்களுக்கு ஒப்பாவர் என்று வள்ளுவர் கூறுகிறார்.

பிற உயிர்களைக் கொல்லாமை என்பது இல்லற துறவறவாழ்வியலில் தலைசிறந்ததாகக் கருதப்படுகிறது.

"நன்றாகும் ஆக்கம் பெரிதெனினும் சான்றோர்க்குக்

கொன்றாகும் ஆக்கம் கடை" (குறள்.323)

யாகம் முதலியவற்றில் உயிர்ப் பலி கொடுத்து அதனால் பெறுகின்ற இன்பங்கள் செல்வங்கள் பலவாயினும் துறவினை மேற்கொண்ட பெரியோர்க்குகு உயிர்ப்பலியினால் பெறக்கூடிய நன்மைகள் கீழ்த்தரமாய் விலக்கப்-பட்டனவையே என்று துறவிகளின் வாழ்வியலை அழகுற எடுத்தியம்புகிறார்.

ஆசையை துறத்தலைக் குறித்து கீழ்வரும் குறளடிகள் ஆலோசனை தருகின்றது.

"அற்றவர் என்பார் அவர் அற்றார் (குறள்.305)

"அஞ்சுவ தோரும் அறனே ஒருவனை

வஞ்சிப்ப தோரும் அவா" (குறள்.366)

"அவாவினை ஆற்ற அறுப்பின் தவாவினை

தான் வேண்டும் ஆற்றான் வரும்" (குறள்.367)

உலகத்தாரால் துறவி என்று கூறப்படுபவர் ஆசையை விட்டு விட்டவராவார்கள். துறவு மேற்கொண்ட ஒருவனை வஞ்சித்து பிறவியில் தள்ளி விடுவது ஆசை ஆகும். எனவே ஆசைகளுக்கு அஞ்சி அது தன்னை தாக்காதவாறு பாதுகாத்தலே துறவறமாகும் என்று வள்ளுவர் கூறுகிறார்.

துறவறத்தில் ஆசையின் நிலைப்பாட்டை சக்கரவர்த்தி ராஜ கோபாலாச்சாரியார், "கோபத்தினால் செய்யும் அக்கிரமங்களை விட ஆசையினால் செய்யும் அக்கிரமங்களில் பாவம் அதிகம். கோபத்துக்கு

இரையானவன் அதனால் ஒரளவே துன்பப்படுகிறான். அறிவினை இழக்கும் போது அவன் உள்ளமும் நோவு அனுபவிக்கிறது. காமவேகத்துக்கு ஆளாகியோ, வேறு ஆசைகளால் தூண்டப்பெற்று ஒருவன் செய்யும் குற்றத்தில் உள்ள நோவின்றி பாவகாரியம் செய்கிறான். ஆகவே அதுவே பெருங்குற்றம்”[127] என்று தனது கருத்தினைப் பதிவு செய்கிறார்.

துறவிகள் கோபத்தினால் செய்யும் தீமைகளைவிட ஆசையினால் செய்யும் செயலினால் பாவம் அதிகம் என்பது இதன் வழி புலனாகிறது.

வள்ளுவர் அருளையே துறவின் உயிர்நாடியாகக் கொண்டார். மேலும் ஊன் உண்ணாமை, பிறர் பொருளை அபகரிக்க எண்ணாமை, உண்மை பேசுதல், கோபம் கொள்ளாமை, பிற உயிர்களைக் கொல்லாமை போன்ற பற்றுகளைத் துறத்தலுக்கு முக்கியத்துவம் கொடுத்தார்.

இக்காலத்துறவில் வள்ளுவர் கூறுகின்ற பற்றுகளைத் துறவிகள் துறந்துள்ளனரா என்பது கேள்விக்குறியாகவே உள்ளது. சமண சமயத்தின் துறவினைக் குறித்து சமணக்குழுத்தலைவர் கியான் சந்தத் போரா அவர்கள் “துறவறம் மேற்கொண்ட பிறகு மின்சாரம் செல்போன் உள்ளிட்ட எந்த வசதியையும் பயன்படுத்த மாட்டார். காசு, பணம் எதையும் வைத்துக் கொள்ள மாட்டார். காலில் செருப்பு இல்லாமல் நடக்க வேண்டும். வாகனங்களில் செல்ல மாட்டார். பிச்சை எடுத்து தான் உண்ண வேண்டும். வெள்ளை உடை மட்டுமே அணிவார்கள். நவதானியங்களை மட்டுமே உண்ணுவார்கள். துறவறம் மேற்கொள்வோர் குளிக்க மாட்டார்கள். ஆனால் அவர்களிடமிருந்து எவ்வித துர்நாற்றம் வராது. துறவறம் மேற்கொள்வோர் எவ்வித மத வேறுபாடு இல்லாமல், அனைத்து உயிர்களும் ஒன்றே என்ற எண்ணத்தை மற்றவர்களுக்கு விதைப்பார்கள்”[128] என்று கூறுகிறார்.

பெரும்பாலும் இந்நூற்றாண்டில் வாழுகின்ற துறவியர் பொதுவாக நம்நாட்டின் மத்திய தர வகுப்பினர் கொண்டுள்ள வாழ்க்கை வசதிகளைக் கொண்டுள்ளனர். உணவில் சில கட்டுப்பாடுகளை மேற்கொள்ளினும், பண்டையத் துறவிகளைப் போன்று உணவில் கட்டுப்பாடுகள் இல்லை. போதிய உணவு, ஏற்ற உடை, உறைவிடம் முதலிய வாய்ப்புகளோடு சமயம் சார்ந்த பணியோடு சேவையும் புரிகின்றனர்.

போலித் துறவிகள்

வள்ளுவர் காலத்திலும் போலித்துறவிகள் இருந்தமையால் அவர்களின் வாழ்வியலையும் தம் குறள்களின் வழி எள்ளி நகையாடுகிறார். போலியான தவவாழ்வு மேற்கொள்பவர்களைக் குறித்து கீழ்வரும் குறள்கள் வழி எடுத்தியம்புகிறார்.

"தவமும் தவமுடையார்க்கு ஆகும் அவம்அதனை
அஃதில்லார் மேற்கொள் வது" (குறள்.262)

". . . . . பூதங்கள்
ஐந்தும் அகத்தே நகும்" (குறள்.271)

"தவம்மறைந்து அல்லவை செய்தல்" (குறள்.274)

"பற்றற்றேம் என்பார் பாடிற்றொழுக்கம் என்றெற்றென்று
எதம் பலவும் தரும்" (குறள்.275)

"நெஞ்சில் துறவார் துறந்தார் போல் வஞ்சித்து
வாழ்வாரின் வன்கணார் இல்" (குறள்.270)

"புறம்குன்றி கண்டனையர் எனும் அகம்குன்றி
மூக்கிற் கரியாற் உடைத்து" (குறள்.2177)

"மனத்தது மாசாக மாண்டார்நீர் ஆடி

மறைந்தொழுகும் மாந்தர் பலர்" (குறள்.278)

தவஒழுக்கத்தினை கடைபிடிக்க முடியாதவர் தவவேடம் தாங்குவது வீண்முயற்சியாகும். தவமேயம் பூண்டு தீயஒழுக்கங்கள் உடையவனைக் கண்டு நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் எனும் ஐந்து பூதங்களும் அவன் உடம்புக்குள்ளே அவனை இகழ்ந்து சிரிக்கும். ஒருவன் தவவேடத்தில் மறைந்து கொண்டு வேடத்திற்கு ஒவ்வாதச் செயல்களை செய்வது வேடன் பறவையை உணவை வைத்து ஏமாற்றி கண்ணியினால் பிடிப்பதைப் போன்றது. பொய் வேடமிட்டு 'ஆசைகளை விட்டு விட்டேன்' என்று சொல்லும் போலித் துறவிகளின் தீயவொழுக்கம் வெளிப்படும் போது பிறரால் இகழப்பட்டு பல துன்பங்களுக்கு ஆளாகும் நிலை உருவாகும். உள்ளத்தால் துறவு பெறாது துறவியின் வேடம் கொண்டு உலகத்தின் மக்களை வஞ்சிப்பவர்கள் போன்று கொடியவர் யாரும் இல்லை. வெளியில் தவவேடமும், நல்லச் சொல்லும் இருந்தாலும் நெஞ்சில் தீய உணர்வு உடையவர்களும் இவ்வுலகில் இருக்கின்றனர் என்கிறார்.

இக்காலத் துறவிகள் சிலர் வள்ளுவர் கூறுகின்ற வாழ்வியலைக் கடைபிடிக்காது மண், பொன், மது, மாது போன்ற அனைத்தின் மீது பற்று கொண்டவர்களாக காணப்படுகின்றனர். மக்களின் வாழ்வியலில் கலந்துள்ள சில சமயங்களின் கொள்கைகளைக் கடைபிடிக்கின்ற துறவிகள் பெண்களை வன்புணர்வு செய்தல், கொலை போன்ற கொடிய குற்றங்களில் ஈடுபட்டு நீதிமன்ற வழக்குகளில் சிக்கியுள்ளதையும், தண்டனை பெறுவதையும் "நித்யானந்தா மீது அவரது முன்னாள் பக்தை ஆர்த்திராவ் கடந்த 2011-ஆம் ஆண்டு பாலியல் பலாக்கார வழக்கு தொடர்ந்தார். இவ்வழக்கில்

நித்யானந்தாவிற்கு ஆண்மை பரிசோதனை நடத்துமாறு உச்சநீதிமன்றம் உத்திரவிட்டுள்ளது."[129]

"ஆசிரமத்தில் தங்கி படித்து வந்த சிறுமி பலாத்கார வழக்கில் தீர்ப்பு 70 வயதான சாமியார் ஆசாராம் பாபுவுக்கு வாழ்நாள் ஆயுள் தண்டனை இரவது மொத்த சொத்து மதிப்பு 10,000 கோடி என மதிப்பிடப்பட்டுள்ளது."[130] இந்நிகழ்வுகள் பற்றுகளை விடாத துறவிகளின் வாழ்வியலை நமக்கு எடுத்துக் காட்டுகின்றன.

இக்காலத் துறவறம்

இக்காலத் துறவறம் என்பது ஒரு குறிப்பிட்ட சமயம் சார்ந்தும், சமயத்தின் கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டும் மேற்கொள்ளப்-படுகிறது. இக்காலத் துறவில் சேவைக்கே முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது. தற்காலத்தில் பற்றற்றவராய்த் தனித்து வாழும் அல்லது பற்றற்று ஊரூராகத் திரியும் துறவியர் காணப்படினும், அருள்நிறைந்தவராய் பொதுநலப்பணியில் ஈடுபடும் துறவியரையே இன்றைய சமுதாய மக்கள் போற்றுகின்றனர்.

தற்காலத்தில் துறவினைக் குறித்து பலதரப்பட்ட கருத்துக்கள் காணப்படுகிறது. இரவீந்திரநாத தாகூர், "துறவின் மூலம் வீட்டை அடைய வேண்டும் என்பது எனக்கில்லை. மகிழ்ச்சியைத் தரும் பல பாசப் பிணிப்புகளிடையே நான் விடுதலையை உணர்கிறேன்"[131] என்று கூறுகிறார்.

சென்ற நூற்றாண்டின் இறுதியில் இந்தியத் துறவியரைக் குறித்து ஜான் காம்பல் ஓமன் "அக்காலத் துறவியரில் பெரும்பாலானோர் கல்வியறிவு அற்றவர்களாயும், வீணே பொழுதைக் கழிப்பவருமாயுமே இருந்தனர். ஒரு சில துறவியர் பொதுமக்களுக்கு சமயப் போதனையை தவிர பொதுவாக அவர்கள்

சமயப் பணி ஒன்றையும் செய்யவில்லை. சமுதாயத்திற்கு பயன்தரத்தக்க பணிகளைச் செய்யாமல் பலர் இவ்வாறு துறவில் ஈடுபடுவது சமூகத்திற்கு இழப்பேயாகும்”[132] என்று குறிப்பிடுகிறார்.

இந்நிலையிலிருந்து சமூகத்திற்கு பலனளிப்பவராக மாறிய பெருமை சுவாமி விவேகானந்தரை சாரும். மேலும் கிறிஸ்தவ மதம் இந்தியாவில் பரவத் தொடங்கிய காலத்திலிருந்து கத்தோலிக்கத் துறவிகளும் சமூக, கல்வி மருத்துவப் பணிகளிலும் ஈடுபட்டு வந்துள்ளனர்.

இக்காலச் சூழலிலும் ஒரு சில துறவிகளைத் தவிர ஏனைய துறவற வாழ்வினை மேற்கொள்வோர் சேவை உள்ளத்தோடும் பிற உயிர்களிடத்தில் பற்றுள்ளத்தோடும் சேவை புரிகின்றனர். இவர்களின் பங்களிப்பு இன்றைய சமுதாயச் சூழலுக்கு தேவையாகவே உள்ளது.

முடிவுரை

இல்லறம் என்பது தற்காலத்தில் குடும்பம் என்பது அழைக்கப்படுகிறது. தலைவன் தலைவிக்குள் இருக்கின்ற காதலை நோயாக வள்ளுவர் குறிப்பிடுகிறார். காதலின் இயல்பு பிறர் அறியாது பழகும் தன்மை உடையது. இன்றைய காதலர்களும் பிறர் அறியாவண்ணம் வெளியே செல்லுதல், மறைந்து பேசுதல் போன்ற செயல்களில் ஈடுபடுகின்றனர். காதலில் மாலைப்பொழுது அதிக துன்பத்தைக் கொடுக்கிறது. காதலர்கள் அலரினால் துன்பப்படுதல் ஊராரின் நகைப்புக்கு உள்ளாகும் நிலை காதலுற்ற மகளுக்கு தாயின் அறிவுரை போன்றன இன்றைய காதலர்களுக்கும் பொருந்துகிறது. வள்ளுவர் கூறுகின்ற தனிமனித ஒழுக்கம் இன்றைய இளம் தலைமுறையினருக்கு

மிக அவசியமானதாகக் காணப்படுகிறது. குழந்தை கூழ் உண்ணுதல், குழந்தையின் மெய்தொட்டு விளையாடுதல், மழலைப் பேச்சினை ரசித்தல் பற்றி கூறுகிறார். இன்றைய சூழலில் இவ்வாழ்வியல் கூறுகள் தவறான கண்ணோட்டத்தோடு பார்க்கப்படுவதுடன் குழந்தைகள் தவறான வழிகளில் சில பெற்றோரால் நடத்தப்படுவதையும் அறியமுடிகிறது. பெண்ணின் கற்பைக் குறித்து கூறுகின்ற வேளையில் பிறனுக்கு உரியவளை விரும்புவது தவறு எனக் கூறி ஆணிற்கும் கற்பு உண்டு என்பதை எடுத்துரைக்கிறார். ஆடை, அணிகலன்கள், ஒப்பனை, பழக்கவழக்கங்கள், உணவுமுறைகள், உறைவிடம், புழங்குப் பொருட்கள், தொழில்கள் போன்றவற்றில் நவீன அறிவியல் முறைகள் மற்றும் மேற்கத்திய தாக்கத்தால் அதிக வளர்ச்சி ஏற்பட்டுள்ளது.

துறவறம் என்பது தன் விருப்பு வெறுப்புகளை துறந்து வாழ்வதைக் குறிக்கும். துறவினை பிறவித்துறவு என்றும், இல்லறவாழ்க்கை நடத்தி பின்னர் துறவற வாழ்வை மேற்கொள்வது என இருவகையாக கொள்ளப்படுகிறது. துறவிகளின் தோற்றமாக மொட்டையடித்தல் சடைவளர்த்தலைக் கூறுகிறார். துறவறத்தில் ஊண் உண்ணாமை, பிற உயிர்களைக் கொல்லாமை, ஆசையைத் துறத்தல் போன்றவைகளைக் குறிப்பிடுகிறார். இன்றைய துறவிகள், பொதுவாக மத்திய தர வகுப்பினர் கொண்டுள்ள வசதிகளைக் கொண்டுள்ளனர் மற்றும் சமயம் சார்ந்த பணிகளையும் பொதுச் சேவையும் புரிகின்றனர். போலித் துறவிகளைக் குறித்து தவஒழுக்கத்தினை கடைப்பிடிக்க முடியாதவர்கள் தவவேடம் தாங்குவது வீண்முயற்சி என்கிறார். இன்று தவஒழுக்கத்தினைக் கடைபிடிக்க முடியாத போலித்துறவிகள் பலவித குற்றச் செயல்களில் ஈடுபடுவதையும் பரவலாக காணமுடிகிறது.

இயல் குறிப்புகள்

1. துறைவன், ‘திருக்குறள் ஓர் அறிமுகம்’, ப.15.
2. Pascual Gisbert, S.J., 'Fundamental of Sociology', p.64.
3. வாழ்வியல் களஞ்சியம், தொகுதி ஏழு, ப.592.
4. பெர்ட்ராண்ட்டு ரஸ்ஸல், ‘திருமணமுறைகள்’, ப.143.
5. சசிவல்லி, வி., ‘தமிழர் திருமணம்’, ப.10.
6. தொல்.பொருள்.143.
7. நாலடி.82:1,2.
8. ஆ.கோ.85:1.
9. ஆ.கோ.48:1.
10. தொல்.பொருள்.89.
11. அகம்.86:4-7.
12. சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியர், ‘அறநூல்கள்’, ப.24.
13. சிதம்பரனார், சாமி., ‘எட்டுத் தொகையும் தமிழர் பண்பாடும்’, ப.86.
14. தொல்.பொருள். இளம்.53.
15. கம்ப.7777.
16. பாரதியார் கவிதைகள், ப.508.
17. குறுந். 70.
18. பாலு, ‘இந்தக் கணத்தில்’, ப.30.
19. மேலது, ப.30.
20. மீரா, ‘கனவுகள் + கற்பனைகள் = காகிதங்கள்’, ப.8.

21. தொல்.பொருள்.1054.
22. மேலது, 1045.
23. மேலது, 952.
24. மேலது, 49.
25. மாணிக்கம், வ.சுப., 'தமிழ்க்காதல்' ப.7.
26. நற். 149.
27. கலி.38 : 8-10.
28. தொல்.அகம். 38.
29. கிருட்டிணன், ஆ., 'தமிழர் பண்பாட்டியல்', ப.321.
30. மேலது.,
31. தி.இந்து, 12.11.14, ப.7.
32. தி.இந்து, 12.12.14, ப.7.
33. தொல்.பொருள். 1061:6.
34. மேலது, 1143.
35. மேலது, 1206:5.
36. மேலது, 1216:5.
37. இராசபாண்டியன், முகிலை., 'உன்னைத்தேடி ஓர் உலா', ப.54.
38. தொல்.பொருள். 1134.
39. மேலது, 1135.
40. மேலது, 1136.
41. புகாரி, 'அன்புடன் இதயம்', ப.84.
42. மரிய தெரசா, ரொ., 'காகித மேடை', ப.25.

43. வரதராசன், மு., ‘குறள்காட்டும் காதலர்’, ப.111.

44. கலியபெருமாள், ஆ., ‘திருக்குறள் வாழ்வியல் ப.2.

45. பதிற். 22.

46. பரமகுரு, பொன்., ‘வள்ளுவர் வழங்கிய வாழ்க்கை நெறி’, ப.20.

47. ஆத்தி.12.

48. புறம். 163:1-7.

49. புறம். 18.

50. ஆத்தி.17.

51. புறம். 34.

52. கம்ப. 6981.

53. கலி. 61: 3-4.

54. மணிமே.25:228-231.

55. தென்றல், ச.தேவா., தீண்டாத நந்தவனங்களுக்கு ப.35.

56. ஆத்தி.8.

57. ஆத்தி.48.

58. நாலடி.213.

59. திலகவதி, க., ‘சங்ககால மகளிர் வாழ்வியல்’, ப.9.

60. காமாட்சி ஸ்ரீனிவாசன், ‘குறள் கூறும் சமுதாயம்’, ப.58.

61. தினகரன், 09.08.14, ப.4.

62. தி.இந்து, 13.05.18, ப.14.

63. குமரிராஜீ, ‘சுதந்திர அடிமைகள்’, ப.64.

64. மேலது, ப.84.

65. நர்சிம், ஆர்.சி., ‘குமுதம் தீராநதி’, பக். 66-67.
66. பொருநைத்தமிழ், ப.31.
67. பாதமுத்து, மா., ‘காந்திவழி கல்வியும் சமூகமும்’, ப.95.
68. சிலம்பு.16:71-73
69. தொல்.பொருள். ப.242.
70. கலியபெருமாள், க., ‘திருக்குறள் வாழ்வியல்’, ப.153.
71. மேலது, ப.15.
72. தொல்.பொருள். 111: 1-2.
73. மணிமே.. 22: 177-178.
74. பெருங்கதை. 1 : 36 : 256-258.
75. உயிர்மை, ப.35.
76. பாரதியார் கவிதைகள், ப.88.
77. தி.இந்து, 03.03.15, ப.8.
78. மது.கா. 559-589.
79. திலகவதி, க., ‘சங்ககால மகளிர் வாழ்வியல்’, ப.107.
80. சாமிதுரை, கு., ‘பெண்கள் நலன்காக்கும் சட்டங்கள்’, ப.118.
81. தினந்தந்தி, 27.02.15, ப.5.
82. தி.இந்து., 03.03.14, ப.17.
83. தினந்தந்தி, 03.03.15, ப.10.
84. மேலது, ப.117.
85. தி.இந்து, 16.04.2018, ப.6.
86. தி.இந்து, 23.04.2018, ப.1.

87. புறம். 383:9-11.

88. புறம். 125-1.

89. புறம். 299-1.

90. புறம். 274-1.

91. பெருங்கதை, ப.4:17:75-77.

92. வேலம்மாள், ‘தமிழ் இலக்கியத்தில் அணிகலன்கள்’, ப.11.

93. நான்மணி.35:1.

94. இரத்தின வெங்கடேசன், ‘பாவேந்தரின் சமூகபுரட்சி’, ப.10.

95. பிங்கலம். 1971.

96. ஐங். 304:1-2.

97. தொல்.எழுத்து, ப.160

98. பெரும். 57,

99. தி.இந்து, 03.04.18, ப.11.

100. தமிழ் மொழியகராதி, ப.1047.

101. தமிழ்லெக்சிகன், ப.2793.

102. மலைபடு. 37.1.

103. மேலது, பா.534.

104. மேலது, பா.8.

105. இன்.35:2.

106. காந்தி, க., ‘தமிழர் பழக்கவழக்கங்களும் நம்பிக்கைகளும்’, ப.103.

107. தி.இந்து, 09.04.15, ப.7.

108. தி.இந்து, 12.02.18, ப.6.

109. பிங்கலம். 2781.

110. சேந்தன் திவாகரம், ப.8.

111. செந்துறை முத்து, ‘வள்ளுவர் கண்ட தொழில்கள்’, ப.161.

112. காசிராசன், ஆ., ‘இலக்கியமும் சமூகமும் பன்முகப் பார்வை’, ப.300.

113. காசிராசன், ஆ., ‘இலக்கியமும் சமூகமும் பன்முகப் பார்வை’, ப.299.

114. மேலது, ப.301.

115. தி.இந்து, 12.02.18, ப.6.

116. தி.இந்து, 02.04.18, ப.8.

117. சசிவல்லி, வி.சி., ‘பண்டைத் தமிழர் தொழில்கள்’, ப.82.

118. தி.இந்து, 25.04.18, ப.1.

119. புறம்.36:6-7.

120. செந்துறை முத்து, ‘வள்ளுவர் கண்ட தொழில்கள்’, ப.20.

121. சிங்காரவேலு முதலியார், ப.101.

122. க்ரியாவின் தற்காலத் தமிழகராதி, ப.569.

123. தேவநேயப் பாணவர், ஞா., ‘திருக்குறள் தமிழ் மரபுரை’, ப.156.

124. புறப்பொருள் வெண்பா மாலை, ப.168.

125. அகம். 128:1-2.

126. வரதராஜன், ஜி., ‘திருக்குறள் உரைவிளக்கம்’, ப.110.

127. ராஜகோபாலாச்சாரியார், ‘அறநூல்கள்’ ப.7.

128. தி.இந்து, 20.04.2018, ப.10.

129. தி.இந்து, 28.11.2014, ப.7.

130. தி.இந்து, 26.04.2018, ப.1.

131. கிரிபழனி கிருஷ்ணா, ‘ரபீந்தரநாத் தாகூர்’, ப.182.

132. காமாட்சி ஸ்ரீனிவாசன், ‘குறள்கூறும் சமுதாயம்’, ப.296.

இயல் ஐந்து

குறள் காட்டும் இயற்கையும் இக்காலச் சுற்றுச்சூழல் மாசுபாடுகளும்

முன்னுரை

இயற்கை மனிதனின் வாழ்வியலில் முக்கிய பங்கு வகிக்கிறது. இவ்வுலகில் மனிதன் தோன்றிய நாள் முதற்கொண்டே இயற்கையோடு வாழ்ந்து வருகிறான். இயற்கை அளித்த பயன்களால் மனிதன் தன் வாழ்வில் வேகமான முன்னேற்றத்தை அடைந்தான். அறிவியல் முன்னேற்றம் மற்றும் புதிய கண்டுபிடிப்புகள் வாயிலாக தங்களுடைய வசதி வாய்ப்புகளைப் பெருக்கிக் கொண்டான். மேலும் மேலும் வசதிவாய்ப்புகளை பெருக்கிக் கொள்வதற்காக இயற்கையைச் சீரழித்து வருகிறான். வள்ளுவர் கூறுகின்ற நிலம், நீர், காற்று, ஆகாயம், நெருப்பு எனும் ஐம்பெரும் பூதங்களைக் குறள்கள் வழியும் இன்றைய சுற்றுச்சூழலில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் மற்றும் மாசுபாடுகள், மக்களின் விழிப்புணர்வைக் குறித்தும் ஆய்வதாக இவ்வியல் அமைகிறது.

சுற்றுச்சூழல்

சுற்றுச்சூழல் என்பது நமது சுற்றுப்புறம் ஆகும். தாவரங்கள், பிராணிகள், மனிதர்கள், மற்றும் நீர், நிலம், காற்று, ஆகாயம் போன்றவை ஆகும்.

“ஒருவரது சுற்றுச்சூழல் என்பது பிறந்தது முதல் இறப்பது வரை அவர் பெறுகின்ற அனைத்து தூண்டல்களின் தொகுப்பாகும்”[1] என்று போரிங் (boring) அவர்கள் குறிப்பிடுகின்றார்.

“சுற்றுச்சூழல் என்பது மனிதனைச் சுற்றியுள்ள நிலம், நீர், காற்று அதைச் சுற்றியுள்ள அண்டம் எனப்படும். உயிர்கள் வாழ்வதற்கு உதவுகின்ற இந்தப் பகுதிதான் சுற்றுப்புறச்சூழல் எனப்படும்”[2] என்று இரா. வரலட்சுமி தன்னுடைய கருத்தினைப் பதிவு செய்கிறார்.

சுற்றுச்சூழல் உயிரற்ற சுற்றுப்புறம், உயிரியின் சுற்றுப்புறம் என இருவகையாகக் கொள்ளப்படுகிறது. உயிரற்ற சுற்றுப்புறம் பாறை, காற்று, நீர்

போன்றவைகளை உள்ளடக்கியது. உயிரியின் சுற்றுப்புறம் தாவரங்கள், விலங்குகள், நுண்உயிர்கள் மற்றும் மனிதர்களை உள்ளடக்கியது ஆகும்.

மனிதனுக்கும் இயற்கைக்கும் உள்ள உறவை வரையறுப்பது சுற்றுச்சூழல் ஆகும். இவ்வுறவு மனிதனின் அசுரத்தனமான வேகத்தாலும், விவேகமற்ற செயல்களாலும் பாதிக்கப்படும் போது ஏற்படும் விளைவே சுற்றுச்சூழல் சீர்கேடு அல்லது மாசுபாடு என்று அழைக்கப்படுகிறது.

ஐம்பெரும் பூதங்கள்

மனிதன் உயிர்வாழ நிலம், நீர், காற்று, ஆகாயம், நெருப்பு போன்றன இன்றியமையாததாக இருக்கிறது. மக்களின் வாழ்வும் தாழ்வும் பஞ்சமா பூதமாம் இயற்கையைச் சார்ந்தே அமைந்திருக்கிறது என்பதை,

"மண்டிணித்த நிலனும்
நிலனேந்திய விசும்பும்
விசும்புதைவரு வளியும்
வளித்தலை இய தீயும்
தீமுரணிய நீரு மென்றாங்கு
ஐம்பெரும் பூதத்து இயற்கை போல"[3]

எனும் பாடல் வழி அறிய முடிகிறது.

வள்ளுவர் இயற்கையாகிய பஞ்சபூதங்களை மக்களின் வாழ்வியல் குணங்களை ஒப்புநோக்க உவமைகளாக பல்வேறு இடங்களில் சுட்டுகின்றார். ஐம்பூதங்களை,

"பூதங்கள் ஐந்தும்" (குறள்.271)

என இக்குறளடி கூறுகிறது. பூதங்கள் ஐந்து என நிலம், நீர், தீ, காற்று மற்றும் ஆகாயத்தினை வள்ளுவர் குறிப்பிடுகின்றார்.

இயற்கையைக் குறித்து காரல் மார்க்ஸ் “இயற்கைக்குப் பகையான தெய்வம் மாந்தருக்கும் பகையானவையே”[4] என்று கூறுகிறார்.

பண்டைய தமிழர்கள் ஐம்பூதத்தினையும் தெய்வமாக எண்ணி வழிபட்டனர். “தமிழகத்தில் காஞ்சிபுரம் (நிலம்), திருவானைக்கா (நீர்), காளஹஸ்தி (வாயு), திருவண்ணாமலை (நெருப்பு), சிதம்பரம் (வானம்) என பஞ்சபூதத்தலங்களும் உள்ளன,”[5] மக்கள் இயற்கையை வழிபட்டதை இச்செய்தி வழி அறிய முடிகின்றது.

நிலம்

நிலம் என்பது குன்றுகள், மலைகள், மணற்பகுதிகள். மரம், செடி மற்றும் கொடிகளை உள்ளடக்கிய காடுகள், உயர்திணை மற்றும் அ∴றிணை உயிரினங்களைக் கொண்டதாக காணப்படுகிறது. பண்டைத் தமிழர்கள் நிலத்தின் அடிப்படையில் நிலத்தினை ஐவகைப் பிரிவுகளாகக் கொண்டனர்.

“மாயோன் மேய காடுறையுலகமும்
சேயோன் மேய மைவரை யுலகமும்
வருணன் மேய பெருமண லுலகமும்
முல்லை குறிஞ்சி மருதம் நெய்தலெனச்
சொல்லிய முறையான் சொல்லவும் படுமே”[6]

என்று கூறுகிறது. இதன் மூலம் ‘காடுறையுலகம் என்பது காடும் காடும் சார்ந்த முல்லை நிலத்தையும், ‘மைவரை யுலகம்’ என்பது மலையும் மலைசார்ந்த குறிஞ்சி நிலத்தையும், ‘தீம்புனலுலகம்’ என்பது வயலும் வயல் சார்ந்த இடத்தையும், ‘பெருமணல் உலகம்’ என்பது மணலும் மணல் சார்ந்த நெய்தல் நிலத்தையும்

குறிக்கிறது. இந்நூற்பாவின் மூலம் ‘உலகம்’ என்ற சொல் நிலத்தைக் குறிப்பதை அறிய முடிகிறது. மேலும் ஐந்தாவது நிலமாகிய பாலை நிலத்தை ‘நடுவணது’ என்று கீழ்வரும் பாடலடி குறிப்பிடுகிறது.

“அவற்றுள்

நடுவண் ஐந்திணை நடுவனது ஒழிய

படுதிரை வையம் பாத்திய பண்பே”[7]

பாலை நிலமானது ‘குறிஞ்சியும் முல்லையும் முறைமையில் திரிந்து பாலை ஆயிற்று என்பர். மலையும் காடும் தன்னுடைய செழுமை தன்மையின் இயல்பு மாறி பாலை என்று அழைக்கப்படுவது இதன் வழி புலனாகிறது.

நிலத்தின் தன்மை மற்றும் அவற்றின் பயன்பாட்டின் அடிப்படையில் களர்நிலம், உவர் நிலம் என வகைப்படுத்தலாம். களர்நிலமானது வளமற்றுக் காணப்படும். இதனை,

“அதள் எறிந்தன்ன நெடுவெண் களரின்”[8]

எனும் பாடலடி விளக்குகின்றது. இதனை குறள்,

“உளர்என்னும் மாத்திரையர் அல்லால் பயவாக்

களர்அனையர் கல்லா தவர்” (குறள்.406)

என்று கூறுகிறது. வள்ளுவர் களர்நிலத்திற்கு கல்லாதவரை ஒப்பிடுகிறார். உவர்நிலத்தினை புறநானூறு,

“சிறுவெள் என்பின் நெடுவெண் களரின்”[9]

என்கிறது. இவ்வடிகள் உப்பு விளையக்கூடிய பகுதியினை உவர்நிலம் எனக் கூறுகிறது. மேலும் நிலமானது நன் செய்நிலம், புன் செய் நிலம் எனவும் வகைப்படுத்தப்படுகிறது.

உயிரினங்கள்

உயிரினங்கள் உயர்திணை, அஃறிணை என இருவகையாக வகைப்படுத்தப்பட்டுள்ளன. பொதுவாக அஃறிணை உயிரினங்களை பறப்பன, நீந்துவன, ஊர்வன, மற்றும் நடப்பன என வகைப்படுத்தலாம். மேலும், விலங்குகளை வனவிலங்குகள், வீட்டுவிலங்குகள் என்றும் வகைப்படுத்தலாம்.

பறப்பன

பறவைகளைக் குறித்து, வள்ளுவர்

"வேட்டுவன் புள்சிமிழ்த் தற்று" (குறள்.274)

"குடம்பை தனித்துஒழியப் புள்பறந்" (குறள்.338)

"பீலிபெய் சாகாடும் அச்சிறும் அப்பண்டம்
சால மிகுந்துப் பெரின்" (குறள்.475)

"கொக்கொக்க கூம்பும் பருவத்து மற்றதன்
குத்தொக்க சீர்த்த இடத்து" (குறள்.490)

"அணங்குகொல் ஆய்மயில் கொல்லோ" (குறள்.1081)

"அன்னத்தின் தூவியும்" (குறள்.1120)

"காக்கை கரவா கரைந்துண்ணும்" (குறள்.527)

எனும் குறள்களின் வழி குறிப்பிடுகிறார். பறவைகளை வேடன் கொல்லுகின்ற செயல், பறவையானது பருவம் வந்ததும் முட்டையைத் தனியாக விலக்கிவிட்டு பறந்துவிடும் செயல், மயிலின் மெல்லிய தோகையை அளவுக்கு அதிகமாக வண்டியில் ஏற்றிய செய்தி, கூகைக்கு இரவு கண் தெரியும், காகத்திற்கு பகலில் கண் தெரியும் பண்பு, காகத்தின் கரைந்துண்ணும் தன்மை, கொக்கு தன் உணவான மீனுக்கு பொறுமையுடன் காத்திருக்கும் செயல், மயிலின் அழகு,

அன்னப்பறவையின் மென்மை தன்மை போன்ற பறவைகளின் செயல்களை இதன் வழி அறிய முடிகிறது.

மேலும் "மயிலின் தோகையை மயிற்பீலி என்று கூறுவது வழக்கு. பண்டையக் காலத்தில் தமிழ்நாட்டிலிருந்து எகிப்து முதலிய நாடுகட்குக் கடல் கடந்து ஏற்றுமதியான பொருட்களில் மயில்தோகையும் ஒன்று"[10] என பூ. அமிர்தலிங்கன் கூறுகிறார். இதன்வழி அதிகஅளவு மயில்கள் வாழ்ந்திருப்பதை அறிய முடிகிறது.

நீந்துவன

நீரில் வாழக்கூடிய விலங்குகள் பெரும்பாலும் இடம் பெயர்வுக்காக நீந்துகின்ற குணத்தினைக் கொண்டதாக காணப்படுகிறது. வள்ளுவர்.

"தூண்டில்பொன் மீன்விழுங்கி யற்று" (குறள்.931)

எனும் குறள் வழி மீனினைக்குறித்து கூறுகிறார்.

ஊர்வன நடப்பன

பெரும்பாலும் கால்களையுடைய பெரிய விலங்குகள் நடக்கும் பண்பினையும், கால்களற்ற விலங்குகள் ஊர்ந்து செல்கின்ற இயல்பினையும் கொண்டுள்ளன.

இடம்பெயர்தலுக்காக நடக்கும் விலங்குகளை நடப்பன எனலாம். விலங்குகளை வீட்டு விலங்குகள் என்றும், காட்டு விலங்குகள் என்றும் வேறுப்படுத்தலாம். சில வகையான விலங்குகள் வீட்டு விலங்குகளாகவும் காட்டு விலங்குகளாகவும் காணப்படுகிறது.

"ஏறுபோல் பீடு நடை" (குறள்.59)

"வலியில் நிலையமையான் வல்லுறுவம் பெற்றம்

புலியின் தோல் போர்த்துமேய்ந் தற்று" (குறள்.273)

"ஆபயன் குன்றும்" (குறள்.560)

"ஆவிற்கு நீரென்று இரப்பினும்" (குறள்.1060)

"காலாழ் களரின் நரியடும் கண்ணஞ்சா

வேலாள் முகத்த களிறு" (குறள்.500)

"பரியது கூர்ங்கோட்டது ஆயினும் யானை

வெரூஉம் புலிதாக் குறின்" (குறள்.599)

"வினையான் விளையாக்கிக் கோடல் நனைகவுள்

யானையால் யானையாத் தற்று" (குறள்.678)

"ஒலித்தக்கால் என்னாம் உவரி எலிப்பகை

நாகம் உயிர்ப்பக் கெடும்" (குறள்.762)

"கான முயல்எய்த அம்பினில் யானை

பிழைத்தவேல் ஏந்தல் இனிது" (குறள்.772)

"மயிர்நீப்பின் வாழாக் கவரிமா அன்னார்" (குறள்.969)

"கூற்றமோ? கண்ணோ? பிணையோ! மடவரல்" (குறள்.1085)

"பிணைஏர் மடநோக்கும்" (குறள்.1089)

"கடாஅக் களிற்றின்மேல்" (குறள்.1087)

இக்குறள்களின் வழி சிங்கத்தின் பெருமித நடையையும், புலியின் தோலினைக் குறித்தும் அதன் கொடிய குணத்தையும், பசுவின் மென்மைத் தன்மை, பிறருக்கு பால் கொடுத்துதவும் நிலை, பசுவிற்கு நீரளித்த செய்தி, சேற்று நிலத்தில் யானையால் வாழ முடியாத நிலை, நரியால் சேற்று நிலத்தில்

வாழக்கூடிய தன்மை, யானை உருவத்தில் பெரிய தந்தங்களைக் கொண்டதாக காணப்பட்டாலும் புலி தாக்கினால் அஞ்சுகின்ற நிலை, மதநீர் நனைந்த கன்னத்தையுடைய பழகிய யானையைக் கொண்டு வேறு பிற காட்டுயானைகளைப் பிடிக்கும் செயல், எலியின் அஞ்சும் தன்மை, நாகப்பாம்பின் நச்சுத்தன்மை, காட்டில் வாழுகின்ற முயல், யானையின் நிலை, அழகிய ரோமத்தையுடைய கவரிமான், பெண்மானின் மருண்ட பார்வை, மதங்கொண்ட ஆண்யானையின் நிலை போன்றவற்றை குறித்து கூறுவதிலிருந்து இவ்வுயிரினங்கள் பாதுகாப்புடனும் சுதந்திரமாகவும் அக்காலத்தில் வாழ்ந்துள்ளதையும், அவைகளில் இயல்புதன்மைகளையும் அழகுற எடுத்துக் காட்டுகிறார். வள்ளுவர் ஊர்ந்தும் நீந்தியும் செல்லும் விலங்குகளைக் குறித்து,

"ஆமைபோல் ஐந்தடக்கல்" (குறள்.125)

"உடம்போடு இலாதவர் வாழ்க்கை குடங்கருள்
பாம்போடு உடனுறைந் தற்று" (குறள்.890)

"நெடும்புனலுள் வெல்லும் முதலை" (குறள்.495)

இக்குறளடிகள் வழி ஆமையையும், புற்றில் பாம்புகள் வாழ்ந்ததையும் நெடும்புனலில் முதலை வாழ்ந்த செய்தியினையும் அறிந்து கொள்ள முடிகிறது.

இன்றைய கால மக்கள் வாழ்வியலில் இடநெருக்கடி, பொருளாதாரத் தேவைகள் போன்ற பல்வேறுப்பட்ட காரணங்களுக்காக இவ்விலங்குகள் பெருமளவு பாதிக்கப்பட்டுள்ளன. காட்டில் வாழும் விலங்கினங்களின் இருப்பிடங்களை மனிதன் ஆக்கிரமித்துத் தன்னுடைய தேவைக்குப் பயன்படுத்துவதால் வனவிலங்குகள் காட்டினை விட்டு மனிதன்

வாழுகின்ற பகுதிகளுக்கு வந்து நடமாடும் சூழ்நிலையை மனிதன் உருவாக்கி உள்ளான். சிங்கம், புலி, காட்டுயானைகள், சிறுத்தை, கரடி போன்ற ஆபத்தான விலங்குகள் மனித உயிர்களை சேதப்படுத்துவதும், விளை நிலங்களை சேதப்படுத்தும் நிகழ்வுகள் இன்றைய வாழ்வியலில் நடை பெற்றுக் கொண்டிருக்கிறது. மேலும் யானையின் தந்தம், மானின் கொம்பு, தோல், புலியின் தோல், நகம் போன்றவற்றிற்காக விலங்குகள் அதிகளவு வேட்டையாடப்படுகிறது.

"நம்நாட்டில் இன்று சுமார் 28 ஆயிரம் யானைகளே இருக்கின்றன. இவை சிறு சிறு தீவுகளாக உள்ள காடுகளைத் தங்கள் வாழிடமாகக் கொண்டிருக்கின்றன. தமிழ்நாட்டில் உள்ள முதுமலை, ஆனைமலை போன்ற சரணாலயங்களில் வாழ்கின்றன. இத்துடன் மனிதர்களின் வளர்ப்பு விலங்காக கோயில்களிலும் வனத்துறையிடமும் சுமார் 3,500 யானைகள் உள்ளன."[11]

வனவிலங்குகள் நடமாடும் இடத்தினை மனிதன் ஆக்கிரமித்துள்ளதைத் தடுக்கும் வகையில் "நீலகிரி மாவட்டம் மாயார் யானைகள் வழித்தடத்தில் உள்ள ரிசார்ட்களுக்கு சீல் வைக்க உச்சநீதிமன்றம் உத்தரவு."[12] அரசு இது போன்ற பல்வேறுபட்ட நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

மரஞ்செடி கொடிகள்

மரஞ்செடி கொடிகள் இன்றைய சுற்றுச்சூழலுக்கு வளம் சேர்ப்பவையாகக் காணப்படுகிறது. தொல்காப்பியர்,

"இலையே முறியே தளிரே தோடே
சினையே குழையவே பூவே அரும்பே

நனையே உள்ளுறுத் தனையவை யெல்லாம்

மரனொடு வரூஉம் கிளவி என்ப”[13]

எனும் இந்நூற்பாவழி இலை, முறி, தளிர், தோடு, சினை, குழை, பூ, அரும்பு, நனை, இவை உள்ளிட்டனவும் இவை போல்வன பிறவும் மரத்திற்குரிய உறுப்புகள் என்று குறிப்பிடுகிறார். மரங்கள் கரியமில வாயுவை எடுத்துக் கொண்டு பிராணவாயுவை வெளியிடுவதால் சுத்தமான காற்று கிடைக்கிறது. “காடுகள் தான் பூமித்தாய்க்கு சுவாசநுரையீரல்கள்”[14] என்று ஆக்னஸ் அவர்கள் கூறுகிறார்.

வளர்ந்து வரும் மரம் 50 ஆண்டுகள் உயிரோடு இருந்தால் அது சமுதாயத்திற்குச் செய்யும் சேவையின் மதிப்பு சுமார் 15.90 லட்சம் என கணக்கிட்டுள்ளனர். பத்து குளிர்சாதனக் கருவிகள் தொடர்ந்து செயல்படுவதால் கிடைக்கும், குளிர்ச்சியானது ஒரு தனிமரத்தின் நிழல்கீழ் கிடைக்கிறது. கொல்கத்தா வேளாண் பல்கலைக்கழகத்தில் பணிபுரியும் டி.எம்.தாஸ் அவர்கள் தரும் புள்ளிவிவரம்.

“1	பிராண வாயுவின் உற்பத்தியின் மதிப்பு	ரூ.2.50 இலட்சம்
2	காற்றினை சுத்தமாக்குவது	ரூ.5.00 இலட்சம்
3	பூமியின் மேலுள்ள மணிச்சத்து குறையாமல் பாதுகாப்பது	ரூ.2.50 இலட்சம்
4	காற்றில் இருக்கும் ஈரப்பசை குறையாமல் காப்பதற்கு	ரூ.3.00 இலட்சம்
5	பறவைகளுக்கு விலங்குகளுக்கும் நிழல் கொடுப்பது	ரூ.2.50 இலட்சம்
6	உணவு சத்து கொடுப்பது	ரூ.0.20 இலட்சம்
7	பூக்கள் மற்ற பயன்கள் வழங்குவது	ரூ. 00.20 லட்சம்
	மொத்த மதிப்பு	ரூ. 15.90 இலட்சம்”[15]

இவ்வட்டவணையின் படி மரத்தின் மதிப்பினை அறிய முடிகிறது.

வள்ளுவர் மரம், செடி, கொடிகளைக் குறித்து,

"அன்பகத் தில்லா உயிர்வாழ்க்கை வன்பாற்கண்
வற்றல் மரம்தளிர்த் தற்று" (குறள்.78)

"புறம்குன்றி கண்டனையர் எனும் அகம்குன்றி
மூக்கிற் கரியார் உடைத்து" (குறள்.277)

"குன்றின் அனையாரும் குன்றுவார் குன்றுவ
குன்றி யனைய செயின்" (குறள்.965)

"பயன்மரம் உள்ளூர்ப் பழுத்தற்றால்" (குறள்.216)

"நச்சப் படாதவன் செல்வம் நடுஊருள்
நச்சு மரம்பழுத் தற்று" (குறள்.1008)

"நுனிக்கொம்பர் ஏறினார்" (குறள்.476)

"மண்ணோடு இயைந்த மரத்தனையர்" (குறள்.576)

"இளைதாக முள்மரம் கொல்க" (குறள்.879)

"மருந்தாகித் தப்பா மரத்தற்றால்" (குறள்.217)

"நிழல்நீரும் இன்னாத இன்னா தமர்நீரும்
இன்னவாம் இன்னா செயின்" (குறள்.881)

மேற்கண்ட குறள்களின் வழிக் கூறுகிறார். வெயில் அதிகமான இடத்திலுள்ள மரம் வெப்பத்தின் காரணமாக பட்டுவிடும். குன்றிமணி மரம் குறித்தும், ஊரின் நடுவே பழங்களைக் கொண்ட நல்ல மரங்களும், நச்சுமரங்களும், காணப்பட்டதைக் குறித்தும், முள்மரத்தை அழித்த செய்தி, நோய்களைக் குணமாக்கும் மருந்து செடிகள் காணப்பட்டதையும், நிழலானது குளிர்ச்சியைக் கொடுக்ககூடியது என்றும் அன்றைய மரங்களின் நிலையினை உணர்த்துகிறார்.

கொடிகள்

கிளையினையோ பிறிதொரு பொருளையோ பற்றிப் படர்கின்ற செடியினைக் கொடிகள் என்பர். வள்ளுவர்,

“ஊடி யவரை உணராமை வாடிய

வள்ளி முதல்அரிந் தற்று” (குறள்.1304)

இக்குறளின் வழி வாடிய கொடியினைக் குறித்துக் கூறுகிறார்.

மலர்கள்

தமிழ் இலக்கியங்களில் புலவர்கள் வருணனைகளுக்காக அதிகளவு மலர்களை எடுத்தாண்டுள்ளனர். குறிஞ்சிப்பாட்டில் தினைப்புனம் காக்கச் சென்ற தலைவியும் தோழியும் சுனையில் நீராடி மலையில் இருந்த தொண்ணூற்றி ஒன்பது வகையான மலர்களைப் பறித்து விளையாடியதாக கூறப் பெறுகிறது. மனதை மயக்கும் தன்மை மலருக்கு உண்டு. மலர்களை விரும்பாத மானுடர்களே இருக்க இயலாது. மங்கையரின் மனதில் மாறாத முதலிடம் மலர்களுக்கு உண்டு.

ஒரு மலரின் பலபடியான வளர்ச்சி நிலைகளைக் குறிக்க முகை, மொக்கு, அரும்பு, போது, மலர், பூ எனத் தனித்தனிச் சொற்கள் தமிழ்மொழியில் உண்டு. “முகை என்பது பூவின் முதற்பருவமாகும். ஓரளவு சிறிது வெளித்தோன்றித் தெரிகின்ற பருவம் மொக்கு. நிறம் பெற்று நீண்டு நன்றாகத் தன்னைக் காட்டிக் கொண்டிருக்கும் பருவம் அரும்பு. நன்கு வளர்ந்து இன்னும் சிறிது நேரத்தில் மலரவிருக்கின்ற பேரரும்புக்கு ‘போது’ என்று பெயர். மலர்ந்தவுடனே மலரென்றும், பின் வாடும் வரைக்கும் பூ என்றும் பெயர்”[16] என பூ. அமிர்தலிங்கன் கூறுகிறார். இதனை வள்ளுவர்,

"காலை யரும்பிப் பகலெல்லாம் போதாகி" (குறள்.1227)

என இக்குறளடிகளில் மலர் மலருகின்ற நிலையினைக் கூறுகிறார். வள்ளுவர் மக்களின் வாழ்வியலுக்கு உருவகமாகவும் பெண்ணின் மென்மைத் தன்மைக்கும் சான்றாக,

"மோப்பக் குழையும் அனிச்சம்" (குறள்.90)

"நன்நீரே வாழி அனிச்சமே" (குறள்.1111)

"அனிச்சபூக் கால்களையாள் பெய்தால்" (குறள்.1175)

"அனிச்சமும்" (குறள்.1120)

"தாமரைக் கண்ணான் உலகு" (குறள்.1103)

"காணின் குவளை கவிழ்ந்து நிலன் - நோக்கும்" (குறள்.114)

"இணரூழ்த்தும் நாறா மலரனையர்" (குறள்.650)

"நறுமலர் நாணின கண்" (குறள்.1321)

"உலகம் தழீஇயது ஒட்பம் மலர்தலும்

கூம்பலும் இல்லது அறிவு" (குறள்.425)

"முகைமொக்குள் உள்ளது நாற்றம்" (குறள்.1274)

"மலர்காணின் மையாத்தி நெஞ்சே" (குறள்.1112)

"மலரினும் மெல்லிது காமம்" (குறள்.1289)

"பூஅன்ன கண்ணார் அகத்து" (குறள்.1305)

"கோட்டுப்பூச் சூடினும்" (குறள்.1313)

எனும் குறள்களைச் சுட்டிக் காட்டுகிறார். அனிச்சமலர் மிகுந்த மென்மை தன்மை உடையது. திருமாலின் கண் செந்தாமரையைப் போன்றது. குவளை மலரானது கவிழ்ந்து நிலத்தைப் பார்ப்பது போன்று காணப்படுமென்றும், கொத்தாக

மலர்ந்திருக்கும் வாசனையில்லாத மலர்களும் நறுமணமிக்க மலர்களும் காணப்பட்டதையும், மலரின் தன்மையாகிய மலர்தலையும் கூம்புதலையும் கூம்பியமொட்டினுள் காணப்படுகிற நறுமணத்தினையும், குறிப்பிட்ட மலரின் பெயரைக் கூறாமல் மலர் என்று மலரின் தன்மையினையும் அழகுற எடுத்தியம்புகிறார்.

வள்ளுவர் கூறுகின்ற பூக்களில் அனிச்சம் மற்றும் குவளை மலர்கள் இன்று அரியவகை மலராகவே காணப்படுகிறது.

தற்போதையச் சூழலில் அழிந்து வரும் பலவகை உயிரினத் தொகுப்புகளைப் பாதுகாக்க முக்கியமான இரண்டு வகை உத்திகள் கையாளப்படுகின்றன. அவை அமைவிடப் பாதுகாப்பு, மாற்றிடப் பாதுகாப்பு ஆகும். ‘அமைவிடப் பாதுகாப்பு’ என்பது பலவகைத் தாவர விலங்கினங்களை அவைகள் இருக்கும் இடத்திலே வைத்துப் பாதுகாப்பது ஆகும். ‘மாற்றிடப் பாதுகாப்பு’ என்பது அழியும் தருவாயில் உள்ள பலவகைத் தாவர விலங்கினங்களை வேறு இடங்களுக்கு முறையாக மாற்றி அவைகளைப் பாதுகாப்பதுடன் சந்ததியைப் பெருக்குதலைக் குறிக்கும். விலங்கினக் கூடங்கள், தாவரவியல் பூங்காக்கள் இப்பணியினைச் செய்கின்றன. தற்போது உயிர்நுட்பவியல் (Bio-Technology) முறையில் உயிரின் அடிப்படை மூலக்கூறுகளை (D.N.A) பிரித்தெடுத்து அவற்றை விஞ்ஞான முறைப்படி பாதுகாக்கின்றனர்.

கடந்த இரண்டாயிரம் ஆண்டுகளில் சுமார் 106 விலங்குகளும் 40 பறவையினங்களும் அழிந்துள்ளன. அண்மைக்கால கணக்கெடுப்பின் படி, “பாங்கொவின் (எறும்புத்தின்னி) கஸ்தூரிமான்கள், புள்ளி மான்கள், இந்தியக்

கெசல்லி, ஒற்றைக் கொம்பு காண்டாமிருகம், யானை, சிங்கம், புலி, கரடி, காட்டெருமை, முதலை, அரிய வகை பாம்புகள், மயில், இந்தியப்பைசன், சிங்கவால் கருங்குரங்கு, பறக்கும் அணில், ஆகியவற்றில் சில சிற்றினங்கள் அழிந்து விடும் நிலையில் உள்ளனவாக குறிப்பிடப்படுகிறது."[17]

இன்றைய சுற்றுச்சூழலின் நிலையை,

"நெடுமரங்கள் நின்ற இடமெல்லாம்
கான்கிரீட் கல்லறைகள்
அருகே நினைவுச்சின்னங்களாய்
தொட்டிச் செடிகள்
குடியிருப்பிழந்த பறவைகள் மீண்டும்
கானகம் நோக்கி பறந்தன
அங்கும் மரங்கள் வீழ்த்தப்பட
கடலுக்குள் மாய்ந்தன பறவைகள்
மனிதனைச் சபித்தபடி
ஒருநாள்
பொறுமை காத்த பூமி
புரண்டு சிலிர்த்தசைய
வெட்டுண்டு சிலிர்த்த புழுக்களாய்
வெயிலில் துடிதுடிக்கும் மனித உயிர்கள்"[18]

என்று ராஜமார்த்தாண்டன் மரங்களற்ற பூமியின் அவலநிலையைக் கூறுகிறார். மேலும் மரங்களை அழிப்பதைக் குறித்து, "எதையுமே அழிக்க ஆசைப்படும் மனிதன் இயற்கையையும் அழிக்க முற்பட்டு மரங்களை வெட்டிக் குவிக்கிறான். மழையின் அளவைக் குறைக்கிறான்"[19] என்று குருசு கார்மல் அவர்கள் குறிப்பிடுகின்றார்.

மனிதன் தன்னுடைய தேவைக்காக மரங்களை வெட்டி சாதகமான சுற்றுச்சூழலை முரண்பாடான சூழலாக மாற்றுவதை இதன் வழி அறிய முடிகிறது. இன்றைய நிலமாசுபாட்டிற்கு அதிக காரணமாகக் காணப்படுவது நெகிழிப்பைகள் ஆகும். நெகிழிப்பைகள் பயன்பாட்டினை மக்கள் நிலத்தின் மதிப்பு கருதி பயன்படுத்துவதை நிறுத்த வேண்டும். அரசு அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதை,

"1 டன் பாலீதீன் பைகள் பறிமுதல் வியாபாரிகளுக்கு அபராதம்"[20]

இச்செய்தியின் வழி அறியமுடிகிறது.

மலைகள் குன்றுகள்

ஓங்கியுயர்ந்த நிலப்பகுதியை மலை எனவும், மலையின் உயரத்தில் குறைந்ததை குன்று என்பர். மலையினை,

"மலையினும் மாணப்பெரிது" (குறள்.124)

என்று குறள் கூறுகிறது. இதிலிருந்து மலையின் உயர்ந்த தோற்றத்தை அறிய முடிகிறது. மேலும்,

"குணம் என்னும் குன்றேறி" (குறள்.29)

"குன்றன்னார் குன்ற மதிப்பின் குடியொடு
நின்றன்னார் மாய்வர் நிலத்து" (குறள். 898)

"குன்றின் அனையாரும் குன்றுவர்" (குறள்.965)

குன்றினைப் பற்றி இக்குறள்கள் கூறுகின்றன. இங்கும் குன்றினுடைய உயர்ந்த தோற்றத்தைக் கூறி குன்றின் பெருமையை இங்கு நிலைநிறுத்துகிறார்.

இன்றைய வாழ்வியல் சூழலில் மலைகளும் குன்றுகளும் கட்டிடங்களை கட்ட மற்றும் பிற பயன்பாட்டிற்காக பாறைகளாகவும்

கற்களாகவும் உடைத்து பயன்படுத்தப்படுகிறது. இதனால் மலைகளும் குன்றுகளும் தங்களுடைய அழகிய உயர்ந்த தோற்றத்தை இழந்து பொலிவிழந்து காணப்படுகிறது. மேலும் குவாரிக்காக அல்லது நீயூட்ரினோ போன்ற திட்டங்களுக்காக பாறையை உடைக்கும் போது அல்லது குடையும் போது அந்த பாறை இணைந்த உறுதியான மண்பிணைப்பு நெகிழ்ந்து விடும். இது மழைக்காலத்தில் நிலச்சரிவை ஏற்படுத்துகிறது.

"தேனி நியூட்ரினோ திட்டத்துக்கு மத்திய சுற்றுச்சூழல் அமைச்சகம் அனுமதி தேனிமாவட்டம் தேவாரம் அருகே பொட்டிபுரம் கிராமத்தில் அம்பரப்பர் மலையைக் குடைந்து ஆய்வுமையம் அமைத்தால் சுற்றுச்சூழல் பாதிக்கப்படும்"[21]

இச்செய்தி வழி மலைகளை திட்டங்களுக்காக சேதப்படுத்து-வதையும் இதனால் சுற்றுச்சூழல் பாதிப்படைக்கூடிய நிலையினையும் அறிய முடிகிறது.

இவைகளுக்கு எதிராக விழிப்புணர்வு மக்களிடையே ஏற்படுத்தியிருப்பதை "சங்கரன்கோவில் அருகே கல்குவாரிக்கு எதிர்ப்பு தெரிவித்து மலைமீது ஏறி மக்கள் தர்ணா"[22] இச்செய்தி புலப்படுத்துகிறது. மக்களிடம் விழிப்புணர்வு ஏற்பட்டால் தான் இயற்கையை பாதுகாக்க இயலும்.

நீர்

'வானம் சுருங்கில் தானம் சுருங்கும் மாரியல்லது காரியமில்லை' என்பது ஆற்றோர் வாக்காகும். உலக உயிர்களின் வாழ்க்கைக்கு நீர் இன்றியமையாதது ஆகும். உலகில் ¾ பங்கும் நீரும் ¼ நிலப்பகுதியும் அடங்கியுள்ளது. நீரின் மூலஆதாரம் மழையாகும்.

மழை

விண்ணிலிருந்து மேகம் மழையைக் கொடுக்கும். மேகம் ‘எழிலி’ என்ற பெயராலும் அழைக்கப்படுகிறது. “மேகம் நூல்மேகம் (Cirrus), அடுக்குமேகம் (Stratus), குவிந்த மேகம் (Cumulus), கார்மேகம் (Nimbus), என நான்கு வகைப்படும். நூல்மேகத்தில் நீர்த்திவலைகள் குறைவு. நீர்த்துளிகள் செறிவதனைப் பொறுத்து அடுக்குமேகம் ஆகி, குவிந்த மேகமாகிய பின்னர் அது முதிர்ந்து கார்மேகமாக உருவாகும். கார்மேகம் நீர்த்துளிகள் மிகுந்து நிலப்பரப்புக்கு அண்மையில் இயங்குவது இதில் குளிர்ந்த காற்றுப்பட்டதும் இதிலுள்ள நீர்திவலைகளின் எடை கூடுதலானதும் பெருமழை பெய்யும்”[23] என மழையின் நிலைகளை வேங்கடசாமி அவர்கள் கூறுகின்றார்.

மழையின் குணம்

வள்ளுவர் மழையின் குணமாக,

“கெடுப்பதூஉம் கெட்டார்க்குச் சார்வாய்மற் றாங்கே
எடுப்பதூஉம் எல்லாம் மழை” (குறள்.15)

இக்குறள் மழை தான் பெய்யாமையால் வறுமை, பசி, நோய் முதலிய துன்பங்களால் அழிந்து போகும். பெருமழையினால் அழிவும் உண்டு. தேவையான மழையை பெய்து மக்களை வாழ்விக்கும் குணமும், அழிக்கும் குணமும் மழைக்கு உண்டென எடுத்துரைக்கிறது.

நீர் மழையின் மூலம் பெறப்படுவது. மழையின் இன்றியமையாமையை,

“நீர்இன்று அமையாது உலகெனின் யார்யார்க்கும்
வான்இன்று அமையாது ஒழுக்கு” (குறள்.20)

எனும் இக்குறள் வழி உணர முடிகிறது.

உணவு செழிக்க மழை

உயிர்களுக்கு வேண்டிய உணவினை வழங்குவது தாவரங்களும் பயிர்களும் ஆகும். அவை செழித்து வளர மழை வேண்டும்.

"வான்நின் றுலகம் வழங்கி வருதலால்
தான் அமிழ்தம் என்றுணரற் பாற்று" (குறள்.11)

"துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத்
துப்பாய தூவும் மழை" (குறள்.12)

"ஏரின் உழாஅர் உழவர்; புய என்னும்
வாரி வளம்குன்றிக் கால்" (குறள்.14)

இக்குறள்கள் மழை நீரினை தேவர்கள் உண்ணும் அமிழ்தத்திற்கு இணையாகவும், உணவினால் வாழும் மக்கட்கு சிறந்த உணவை மழை கொடுக்கிறது. மேலும் மழைநீர் ஆறாகவும், ஊற்றாகவும், ஊருணியில் நிறைந்து உணவாக அமைகிறது. மேலும் மழைப்பெய்யாதிருந்தால் உணவிற்கு பஞ்சம் ஏற்படும் என்பதை விளக்குகின்றன.

மழையில்லாமை

மழையில்லாமல் இருந்தால் உலகத்து மக்கள் துன்பமடைவர். மழை பெய்யாமல் பொய்த்து விட்டால் இவ்வுலகத்தில் வாழும் உயிர்களனைத்தும் துன்பமடையும். மழையானது பெய்யாவிடின் இவ்வுலகில் மிகச்சிறிய புல்லின் தலையிலும் கூட பசுமையைக் காண முடியாது. உலகிலுள்ள எல்லா உயிர்களும் மழையை எதிர்பார்த்து வாழ்கின்றன. உலகத்தில் மழை இல்லையென்றால் மக்கள் துன்பப்படுவர் என்பதை வள்ளுவர் எடுத்துரைக்கிறார்.

"விண்இன்று பொய்ப்பின் விரிநீர் வியனுலகத்து

உள்நின் றுடற்றும் பசி" (குறள்.13)

"விசும்பின் துளிவீழின் அல்லால்மற் றாங்கே

பசும்புல் தலைகாண் பரிது" (குறள்.16)

"வானோக்கி வாழும் உலகெல்லாம்" (குறள்.542)

"துளியின்மை ஞாலத்திற்கு ஏற்றற்றே வேந்தன்

அளவின்மை வாழும் உயிர்க்கு" (குறள்.557)

"வாழ்வார்க்கு வானம் பயந்தற்றால்" (குறள்.1192)

எனும் இக்குறள்களின் வழி வள்ளுவர் மழையின்மையின் கொடுமைகளை எடுத்துரைக்கின்றார்.

மழையின்மையைக் குறித்து, "பூமியில் எல்லா இடத்திலும் மழை பெய்வதில்லை. கோளியல் துறையின் புள்ளி விவரங்களின் படி, இந்தியாவில் சில பகுதிகள் நான்கு ஆண்டுகளுக்கு ஒருமுறை வறட்சியினால் வாடுகிறது"[24] என இன்னாசி முத்து அவர்கள் மொழிகின்றார்.

மழைநீரின் தன்மையை,

"தேகம் சிலிர்க்கச் செய்யும்

வேகம் கொண்டு இயங்கும்

தாகம் தீர்க்க வைக்கும்

மோகம் கொள்ளச் செய்யும்

பயம் கொள்ளச் செய்யும்

மையம் கொள்ளும் புயலுக்கும்

பயம் கொள்ளாது

பாரை வலம் வந்து

அனைவர்க்கும் நலந்தரும்

சீறிவரும் சூறாவளிக்கும் அஞ்சாது

பெரும் கனநீரைச் சொரியும்

தரும் பூமிக்கு குளிர்வினை

தீரும் நிலத்தடிக்கும் தாகம்

பாரும் பசுமை அடையும்

வேரும் விருத்தி அடையும்

உன்னத வெள்ளை நெஞ்சுடைய

மழையைப் போற்றுவோம்”[25]

என இவ்வரிகள் நயம்பட எடுத்தியம்புகிறது.

கடல்

இவ்வுலகானது பெருமளவு கடலினால் சூழப்பெற்றிருக்கிறது. கடலுக்கான தமிழ்ச்சொற்களாக, “கடல், சமுத்திரம், அத்தி, அப்பு, அம்பரம், அம்பு, அரலை, அரி, அலை, அளக்கர், அளம், அன்னவம், ஆர்கலி, ஆலம், ஆழி, ஈண்டுநீர், உத்தி, உததி, உந்தி, உரவுநீர், உலக்கை, உவர், உவரி, உலா, ஓதம், ஓதவனம், ஓலம், கடும்புனல், கயம், கலி, கார்கோள், குரவை, சக்கரம், சகரநீர், சசி, சரிற்பதி, சலநிதி, சலராசி, சாகரம், சிந்து, சிந்துவாரம், சுழி, சூழி, தவிசம், தாழி, திமிகோடம், திரை, துறை, தொடரல், தொன்னீர், தவிசம், தோயம், தோழம், நதாதிபதி, நிதிபதி, நதீனம், தீரலை, நாமநீர், நீரதி, வீனறவியலகம், நெடுநீர், நெறிநீர், நேமி, பயோததி, பயோதரம், பயோதி, பயோநிதி, பரப்பு, பரவை, பரு, பாராவாரம், பாரி, பாழி, பானல், பிரம்பு, புணரி, பெருநீர்,

பெருவனம், பேரு, பௌரணை, மகரநீர், மகாராகரம், மகராங்கம், மகராலயம், மகரி, மகாகச்சம், மகான்னவம், மகீப்பிராசீரம், மாதாங்கம், மதோயம், மிருதோற்பவம், மீரம், மீனநலயம், முண்டகம், முதுகயம், முந்நீர், முன்னீர், யாதபதி, வங்கநீர், வரி, வலயம், வளைநீர், வாகினீபதி, வாங்கம், வாரணம், வாரம், வாராகரம், வாரி, வாருணம், வீசிமாலி, வீரை, வெண்டிரை, வெள்ளம், வேலாவலையம், வேலாழி, வேலை, அரச சின்னம், மரல், மாநீர், மாறாநீர், மௌளேரெனல், நித்தயம், கையம், இரைநீர், உப்பீண்டுவரி, உரவு, ஒத்தன், ஒலக்கமொழி, தோயதி, நீர்நதி, பொறி, அகூபாரம், அடாம்பதி, பௌவம், தாண்டமண்டலம், தாரதம்"[26] போன்ற பெயர்களால் அழைக்கப்படுகிறது.

கடல் நீரானது மக்களின் தாகத்தைத் தீர்க்காது அந்நீரை குடிக்கவும் முடியாது. மழையானது பெய்யாவிடில் கடலில் நிலையை,

"நெடுங்கடலும் தன்நீர்மை குன்றும் தடிந்துஎழிலி
தான்நல்கா தாகி விடின்" (குறள்.17)

என குறள் விளக்குகிறது. எவ்வளவு விரிந்த கடலும் மழைநீர் இல்லாமற் போயின் பலனற்று போகும் என்கிறார். மழை பெய்தால்தான் கடலும் தன்னுள் அடக்கி வைத்துள்ள முத்து, பவளம் போன்ற செல்வங்களை அள்ளிக்கொடுக்கும். மீன்வளமும் பெருகும்.

இன்றைய சூழலில் கடலும் மக்களால் மாசுபடுத்தப்பட்டு வருகிறது. கடல் மாசுபாட்டில் முக்கிய பங்கு வகிப்பது கடலில் போக்குவரத்துக்காக பயன்படுத்தப்படும் கப்பல்கள், அதிநவீனப் படகுகள் சாதாரணப் படகுகளில் பயன்படுத்தப்படும் மண்ணெண்ணெய், டீசல், பண்டிகைக் காலங்களில் கரைக்கப்படும் சிலைகள் போன்றவைகளால் கடல்நீர் மாசடைகிறது. மேலும்

கால்வாய்கள், ஆறுகளில் கொட்டப்படும் நெகிழிகள் (Plastic), தெர்மாகோல் போன்ற பொருட்கள் கடைசியாக கடலோடு போய் சேர்ந்து கடலினை மாசுபடுத்துகின்றன. இதனால் பவளப்பாறைகள் கடல்வாழ் உயிரினங்கள் பாதிப்படைவதோடு, இறக்கும் நிலை ஏற்படுகிறது.

சிறிய நீர்நிலைகள்

'ஆறில்லா ஊருக்கு அழகு பாழ்' என்பது முதுமொழி. மக்கள் வேளாண்மைக்காகவும், அன்றாடத் தேவைகளுக்காகவும், அணைகள், குளங்கள், ஊருணிகளில் நீரினைத் தேக்கி வைக்கின்றனர். வள்ளுவர் காலத்திலும், கரைகளோடு கூடிய நீர்நிலைகளில் நீரினைத் தேக்கி வைத்ததை,

"அளவளாவு இல்லாதான் வாழ்க்கை குளவளாக
கோடின்றி நீர்நிறைந் தற்று" (குறள்.523)

எனும் குறள் கூறுகிறது. நீரானது வெளியே செல்வதற்கான வழியையும் வந்த நீரை தேக்கி வைத்துக் கொள்வதற்கான வசதிகளைக் கொண்டு குளங்கள் காணப்பட வேண்டும் என்பதை இக்குறள்வழி உணர்த்துகிறார். மேலும்,

"ஊருணி நீர்நிறைந் தற்றே" (குறள்.215)

"நெடும் புனலுள்" (குறள்.495)

இக்குறள் வழி ஊரார் நீர் உண்ணும் குளங்களும், ஆழமான நீர்நிலைகளும் காணப்பட்டதை அறிய முடிகிறது. புனல் என்பது கேணி, ஊருணி, குளம், ஏரி, ஆறு போன்ற நீராதாரங்களைக் குறிக்கிறது.

இன்றைய நீர்நிலைகளானது சாயத்தொழிற்சாலை, உரத் தொழிற்சாலை, தோல் பதனிடும் தொழிற்சாலைகள் மற்றும் இது போன்ற

ஆலைகளின் சுத்திகரிக்கப்படாத கழிவுநீரும், நகரின் கழிவுநீர் போன்றவைகளால் மாசடைந்து வருகிறது.

"தமிழக அரசாணையின் படி மாசுபடுத்தும் எந்தவொரு தொழிற்சாலையும் முக்கிய நதிகளின் கரையிலிருந்து மூன்று கிலோமீட்டர் தூரத்திற்குள் இருக்கக்கூடாது. ஆனால் பல தொழிற்சாலைகள் இன்று நதிகளின் கரைகளில் அமைந்து நதிகளை மாசுப்படுத்துகிறது."[27] நீர்நிலைகளின் மாசுபாட்டை,

"அழுக்காக ஓடிக்கொண்டிருக்கிறது நதி
நகரின் ஒட்டுமொத்த கழிவையும்
தன்மேல் சுமந்து
பெரும் சாக்கடையாக
மாறிப் போயிருந்தது அது
தாய் முலைப்பாலின்
தூய்மையுடனிருந்தது அன்று
இன்று
உண்ணா முலையாகி விட்டது
நீர் உண்ணும் காலங்கள்
இனி சாத்தியமன்று
நம்மின் எல்லா உதடுகளும்
அதன் முகத்தில்
எச்சிலை உமிழ்ந்துள்ளன
தண்டனையற்ற குற்றம்

தவறு செய்ய ஏதுவானது
அரணாக நின்ற மரங்கள்
களவாடப்பட்டன
அதன் மணலாடைகள்
களையப்பட்டன.
ஊற்றுகளின்
உயிரிழையறுக்கப்பட்டு
இரசாயனக் கலவைகள்
அதின் வாயில் கொட்டப்பட்டன
நஞ்சை சுமந்த நதி
சாவு ஏந்திற்று
எவரும் மீட்பாரின்றி”[28]

எனும் இவ்வரிகள் உணர்த்துகின்றன.

நிலத்தடிநீர்

மழைநீரின் ஒருபகுதி நிலத்தின் ஆழ்ந்த பகுதியில் மண்ணால் சேமித்து வைக்கப்படுவதை நிலத்தடிநீர் எனலாம். “நிலத்தடிநீர் என்பது நிலக்கரி, இரும்பு போல ஆயிரக்கணக்கான ஆண்டுகளாகச் சொட்டுச் சொட்டாகப் பூமியின் அடியில் சேர்ந்த கனிமப் பொருள் கடினமான பாறைகளைத் தாண்டி கொஞ்சம் கொஞ்சமாக நிலத்தடியில் சேர்ந்திருந்த நீர்”[29] என தேன்மைந்தர் அவர்கள் விளக்கமளிக்கிறார்.

மணலில் உள்ள துகள்களின் பருமன் பெரியதாக இருப்பதனால் அவற்றின் துகள்களில் இடைவெளி அதிகமாக இருக்கும். இதனால் அதன்

இடைவெளிகளில் தங்கும் நீரின் அளவானது சிறிய துகள்களையுடைய மண்ணில் தங்கும். நீரைவிட அதிகமாக காணப்படும் மணலே சிறந்த ஊற்றுக்கண் என்பதை,

"தொட்டனைத் தூறும் மணற் கேணி" (குறள்.396)

எனும் இக்குறள் இயம்புகிறது.

ஆறுகள், குளங்கள், ஏரிகளில் மணலினை அள்ளுதல் கூடாது. நீர்நிலைகளிலிருந்து மணலெடுக்கும் போது தன்னிடம் நீரைத் தேக்கி வைக்கும் அளவில் குறைவு ஏற்படுகிறது. நிலத்தடிநீர் குறைவதற்கும் இதுவே காரணமாக அமைகிறது.

நிலத்தடி நீரைப் பெருக்குவதற்காக அரசு மழைநீர் தேக்கத்தொட்டி எனும் திட்டம், ஏரிகளைத் தூர்வாருதல் போன்ற பணிகளை முனைப்புடன் செய்து வருகிறது. "வாட்டர் ஷெட் எனப்படும் மழைநீரை நிலத்திற்குள்ளும் குளத்திற்குள்ளும் செலுத்தி நிலத்தடிநீர் மட்டத்தை உயர்த்தும் திட்டங்கள் 'நபார்ட்' மூலம் செயல்படுத்தப்படுகின்றன. பலகோடிகள் அதற்காக செலவிடப்படுகிறது. தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் மூலமாக அவை செயல்படுத்தப்படுகின்றன. ஆனால் அதில் இருக்கும் தொழில்நுட்ப, நிர்வாக மற்றும் ஊழல் குளறுபடிகள் திட்டத்தின் முழுப் பயனையும் மக்கள் அடைய முடியாமல் செய்கின்றன."[30]

நிலத்தடி நீரை சேமிக்க இயலாததால் குடிநீர் தட்டுப்பாடு பெருமளவு ஏற்படுகிறது. ஒருகாலத்தில் குடி தண்ணீர் தாரளமாகக் கிடைத்தது. பருவமழை தவறுதல், நிலத்தடிநீர் மட்டம் குறைதல், நீர்நிலைகளை அசுத்தப்படுத்தல் மற்றும் ஆக்கிரமித்தல், பராமரிக்காமை போன்றவைகளால் குடிநீர் தட்டுப்பாடு தலைவிரித்தாடுகிறது.

“உலகில் தண்ணீர் இல்லாத முதல் நகரம் தென்னாப்பிரிக்காவின் கேப்டவுனாக இருக்கலாம் என செய்திகள் வந்த வண்ணம் உள்ளன. இந்தியாவில் 21 நகரங்களில் தண்ணீர்ப் பஞ்சம் ஏற்பட வாய்ப்பிருப்பதாக நிபுணர்கள் எச்சரித்திருக்கிறார்கள்.”[31]

“ஸ்டெர்லெட் ஆலைக்கு அருகேயுள்ள குமாரரெட்டியாபுரம் கிராமத்தில் நிலத்தடிநீர் மாசுப்பட்டுள்ளது ஒரு குடம் தண்ணீர் ரூ.10-க்கு விலைக்கு வாங்குகின்றனர்.”[32]

“குடிநீர் இல்லாமல் மூன்று ஆண்டுகளாக தவிப்பு காலிகுடங்களுடன் பர்கிட்மாநகரம் பெண்கள் ஆர்பாட்டம்”[33]

“தண்ணீர் பற்றாக்குறையால் ஏற்படும் விளைவுகளை மிகச்சுருக்கமாக பிரச்சாரம் செய்தல் சில எளிய செயல்கள் மூலம் தீர்வுகள் சாத்தியம் என்பதைப் புரியவைத்தல் ஆகியவை பலன் தரலாம்”[34] என இப்படிக்கு இவர்கள் பகுதியில் என். மணி ஈரோட்டிலிருந்து கூறுகிறார்.

குடிநீர் பற்றாக்குறையை,

“தாகமாய் இருக்கு
கொஞ்சம் தண்ணீர் கொடுங்கள்
என்று வாசலில் நின்று கேட்கும்
முதியவர்க்குப் பதில்
மூடிய கதவின் சத்தம் தான்
தொடர்ந்து வரும் குரல்”

"புட்டி தண்ணிதான் இருக்கு

அது

காசு கொடுத்து வாங்கினது"[35]

இவ்வரிகள் குடிநீர் தட்டுப்பாட்டின் அவலநிலையை செம்மையுற எடுத்துரைக்கிறது.

காற்று

பூமியின் மேற்பரப்பை வளிமண்டலம் என்கிறோம். வளிமண்டலம் .என்பது பூமியைச் சுற்றி எல்லா பக்கங்களிலும் அதன் மேற்பரப்பில் காணப்படும் ஒரு வாயு உறையே, அதிலுள்ள காற்று முக்கியமாக நைட்ரஜன் (78.4%) ஆக்ஸிஜன் (20%), ஆர்கான் மற்றவாயுக்கள் (1.5%) கார்பன் டை ஆக்லைடு (0.0314%) போன்ற பல்வேறு வாயுக்களை உள்ளடக்கியது. உயிரினங்கள் சுவாசிக்க பிராணவாயு மிக முக்கியமானது. ஒரு மனிதன் உணவின்றி 20 நாட்களும், நீரின்றி 5 நாட்களும் வாழ முடியும். காற்றின்றி சில நிமிடங்கள் கூட உயிர்வாழ முடியாது. வள்ளுவர்,

"அல்லல் அருள் ஆள்வார்க்கு இல்லை வளிவழங்கும்

மல்லல்மா ஞாலம் கரி" (குறள்.245)

"முயங்கிடைத் தண்வளி" (குறள்.1239)

இக்குறள்கள் வழி காற்று இயங்குகின்ற செழிப்புடைய உலகம், சிறு இடத்தில் கூட காற்று நுழைந்து விடும் என காற்றின் பெருமையினை உரைக்கிறார்.

இக்காலத்தில் காற்றானது பல முறைகளில் மாசடைந்துள்ளது. தொழிற்சாலைகள் வாகனங்களிலிருந்து வெளியேறும் புகைகள் அணுச்சோதனைகள், அனல் மின் நிலையங்கள், குளிர்சாதனப் பெட்டி, அறை

குளிரூட்டிகள் மூலமாக வெளியேறுகின்ற கார்பன், குளோரோ ∴புளூரோ கார்பன் (CFC) போன்ற நச்சுவாயுக்கள், பண்டிகைக் காலங்களில் வெடிக்கப்படும் பட்டாசுகள், கல்குவாரிகளில் பாறைகளை உடைக்க பயன்படுத்தப்படும் வெடிமருந்துகள் மூலமாகவும் காற்றானது மாசடைந்து வருகிறது. இந்த நச்சுக்காற்றினால் ஓசோன் மண்டலத்தில் பழுது ஏற்பட்டுள்ளது. போக்குவரத்தின் போது வெளிப்படும் நச்சு வாயுக்களைக் குறித்தும் விளைவுகளைப் பற்றியும் ∴பிரான்ஸ் பெக்கட் என்பவர் "போக்குவரத்து வாகனங்களினால் கார்பன்-டை-ஆக்ஸைடு, மீத்தேன், ஹைட்ரோ கார்பன்கள், நைட்ரஸ் ஆக்ஸைடு, குளேரோ ∴புளோரோ கார்பன்கள் போன்ற வாயுக்கள் உண்டாகின்றன. டீசல் எஞ்ஜின் மூலமாக கந்தக டை ஆக்சைடு நைட்ரிக் ஆக்ஸைடு வெளி வருகிறது"[36] என கூறுகிறார்.

ஆலைகள் மூலமாக காற்று மாசுபடுவதை,

தூத்துக்குடி சிப்காட் வளாகத்தில் அமைந்துள்ள ஸ்டெர்லெட் உருக்கு ஆலை தாமிரம் இதன் இணை பொருட்களான கந்தக அமிலம், பாஸ்பரிக் அமிலம், ஜிப்சம் போன்றவையும் ஆலையின் சுற்று வட்டாரப் பகுதிகளில் காற்று, நீர், நிலத்தடி நீர், நிலத்தில் ஆபத்தான ரசாயனங்கள் கலந்துள்ளன என அரசு நிறுவனங்கள் ஆய்வறிக்கையில் தெரிவித்துள்ளன"[37] என்பதை இச்செய்தி வழி அறிய முடிகிறது.

"காவிரி டெல்டா பகுதிகளான தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம் மாவட்டங்களில் ஒ.என்.ஜிசி நிறுவனம் கிணறுகளை அமைத்து கச்சா எண்ணெய் எரிவாயு எடுத்து வருகிறது. இப்பணிகளால் விளைநிலங்கள், நிலத்தடிநீர் சுற்றுச்சூழல் பாதிக்கப்படுவதாகக் கூறி பொதுமக்கள் விவசாயிகள்

போராட்டம்"[37] இச்செய்தி வழி சுற்றுச்சூழல் மாசுபாட்டிற்கு எதிராக மக்களிடையே விழிப்புணர்வு ஏற்பட்டுள்ளதையும் அறிந்து கொள்ள முடிகிறது.

"காற்றின் மாசுவை குறைக்க மிகப்பெரிய வழிமுறை காடுகளை வளர்ப்பதே ஆகும். மரங்கள் காற்றிலுள்ள கரியமில வாயுவை உட்கொண்டு பிராணவாயுவை வெளியிட்டு காற்றைச் சுத்தப்படுத்துகிறது."[38]

"ஒரு எக்டேர் நிலத்தில் உள்ள மரங்கள் சுமார் 3டன் கரியமிலவாயுவை வெளியிடுகிறது. மணிக்கு 200 நபர்கள் வெளியிடும் 8 கிலோ கரியமிலவாயுவை உள்ளிழுத்து சுத்தப்படுத்துகிறது"[39] என இப்புள்ளி விவரம் கூறுகிறது.

எதிர்காலத்தில் பிராண வாயுவின் நிலையை,

"மரங்கள் மரிக்கும் கரியமில வாயுவால் காற்று கனக்கும்
அங்கங்கே மொத்தமாகவும் சில்லறையாகவும் ஆக்ஸிஜன் விற்கும்
மண்ணின் மனிதர்கள் மலையேறும் மனிதர்களாய்
ஆக்ஸிஜன் சுமந்து அலைந்து திரிவர்"[40]

என வரும் நாட்களில் ஏற்படக்கூடிய பிராணவாயு பற்றாக்குறையினை வைரமுத்து அவர்கள் அழகுற உணர்த்துகின்றார்.

ஆகாயம்

காற்றினால் சூழப்பட்ட அண்டவெளியையே ஆகாயம், அண்டவெளி, அல்லது விண்வெளி எனலாம். அண்டவெளியானது புதன், வெள்ளி, பூமி, செவ்வாய், வியாழன், சனி, யுரேனஸ், நெப்டியூன், புளூட்டோ எனும் கோள்களையும் நூற்றி அறுபத்து இரண்டு துணைக்கோள்களையும்,

வால்வெள்ளி, எரிகற்கள், விண்கற்கள் மற்றும் நாள்மீன்களுக்கு இடையேயுள்ள விண்துகள்களைக் கொண்டதாக காணப்படுகிறது.

"விண்வெளி என்பது ஒப்பீட்டளவில் கோள்களின் காற்று மண்டலத்துக்கு வெளியேயுள்ள, பிரபஞ்சத்தின் வெறுமையான பகுதியாகும்"[41] என்று விக்கிபீடியா கூறுகிறது.

வள்ளுவர் அண்டவெளியில் காணப்படும் கோள்களை, குறித்து,

"அகல் விசும்பு" (குறள்.25)

"வானகமும்" (குறள்.101)

"ஒல்லாது வானம் பெயல்" (குறள்.559)

"பிறைமதி" (குறள்.782)

"அறுவாய் நிறைந்த அவிர்மதிக்குப் போல" (குறள்.1117)

"மதியும் மடந்தை முகனும் அறியா
பதியில் கலங்கிய மீன்" (குறள்.1116)

"மதி" (குறள்.1118)

"மதி" (குறள்.1210)

"பலர்காணத் தோன்றல் மதி" (குறள்.1119)

"திங்களைப் பாம்புகொண் டற்று" (குறள்.1146)

எனும் குறள்களில் கூறுகிறார். அகன்ற வானம், வானின்று மழை பெய்யும் நிகழ்வு, வானில் காணப்பெறும் சந்திரனின் காணப்படுகின்ற கருமை பிம்பம், விண்ணில் காணப்பெறும் நட்சத்திரங்கள், பிறைமதி, சந்திரனின் வளர்பிறை மற்றும் தேய்பிறை தோற்றம் மற்றும் சந்திர கிரகணம் போன்றவைகளைக் கூறுகிறார் ஆனால் சூரியனைச் சுற்றும் பூமியின் உடன் கோள்களைக் குறித்து வள்ளுவர் கூறவில்லை.

இன்றைய வாழ்வியல் நிலையில் விஞ்ஞான ரீதியாக பலதரப்பட்ட கண்டுபிடிப்புகளை அறிவியலாளர்கள் கண்டுபிடித்துள்ளனர். நிலவில் கால் வைத்த முதல் மனிதன் நீல் ஆம்ஸ்ராங் ஆவார். சந்திரனில் பலதரப்பட்ட ஆராய்ச்சிகளை விஞ்ஞானிகள் செய்கின்றனர். மேலும் இயற்கைக் கோள்களைப் போன்றே செயற்கையான கோள்களை விண்வெளிக்கு அனுப்பி இயற்கையில் ஏற்படுகின்ற, மாறுபாடுகளைக் கணித்தல், மழை மற்றும் இயற்கைச் சீற்றங்களை கண்காணித்தல், தகவல் தொடர்பு சாதனங்களை துல்லியமாக இயக்குதல், நாட்டின் பாதுகாப்பு போன்ற பணிகளை விண்வெளி ஆராய்ச்சி விஞ்ஞானிகள் செயல்படுத்துகின்றனர்.

இவ்வாறு அனுப்பப்பெறும் செயற்கைகோள்களின் உதிரிபாகங்கள் மற்றும் கழிவுகள் விண்வெளியை மாசுப்படுத்துகின்றன. விண்வெளி மாசுபாடு குறித்த போதிய அளவு விழிப்புணர்வு பெரும்பாலும் மக்கள் மத்தியில் ஏற்படவில்லை.

நெருப்பு

நெருப்பானது எல்லாவற்றையும் தன்னுள் அடக்கும் சக்தி கொண்டது ஆகும். நெருப்பிற்கு ஆக்கும் சக்தியும் அழிக்கும் சக்தியும் உண்டு. நெருப்பினை அன்றாட வாழ்வில் 'தீ, அனல்' என்ற சொற்களால் குறிப்பர். நெருப்பினைக் குறித்து,

"தீயினால் சுட்டபுண் உள்ளாறும்" (குறள். 129)

"இணர்எரி தோய்வு அன்னா இன்னா செயினும்" (குறள்.308)

"நெருப்பினுள் துஞ்சலும் ஆகும்" (குறள்.1049)

"விடிற்சுடல் ஆற்றுமோ தீ" (குறள்.1159)

எனும் இக்குறள்கள் குறிப்பிடுகிறது. தீயானது உடம்பில் பட்டால் அதனால் புண் உண்டாகும். நெருப்பினுள் விழுந்தவன் உடலானது துன்பமடையும், தீயானது தன்னைத் தொட்டவர்களை சுடும் என நெருப்பின் கொடிய தன்மையினை இங்கு கூறுகிறார்.

இன்றைய இயற்கைச் சூழலில் இயற்கைக்கு இடர்பாடுகளை அளிப்பதில் நெருப்பிற்கும் பங்குண்டு 'சிறுபொறி பெருங்காட்டினை அழிக்கும்' எனும் சொல்லிற்கிணங்க மனிதர்கள் தங்களின் பொழுதுபோக்கிற்காக மலைகள், காடுகள் போன்ற இடங்களுக்குச் செல்லும் போது புகைப்பிடித்தல் மற்றும் சமையல் செய்தல் போன்றவைகளின் நெருப்பினை பற்ற வைத்த பின் அதனை சரிவர அணைக்காமல் சென்று விடுவதாலும், அதிக வெப்பத்தின் காரணமாக ஏற்படுகின்ற உராய்வின் போது தீப்பொறி தோன்றுவதாலும் காடுகள் மற்றும் மலைகளில் காட்டுத்தீ ஏற்படுகிறது. இதனால் அங்கு காணப்படும் விலங்குகள், பறவையினங்கள், விலை உயர்ந்த மரங்கள், மூலிகைச் செடிகள் போன்றன எரிந்து சாம்பலாகி காடுகள் அழியும் நிலையை நெருப்பு உருவாக்குகிறது. இத்தகைய செயல்களில் மக்கள் முன்னெச்சரிக்கையோடும் விழிப்புணர்வோடும் காணப்பட்டால் நெருப்பினால் இயற்கை சந்திக்கின்ற பேரழிவினைத் தடுக்க இயலும்.

மனிதன் எல்லையற்று சுரண்டுவதற்கு இயற்கை யாரையும் அனுமதிப்பதில்லை. மனிதன் இயற்கையின் ஒரு கூறுதான். மனிதன் தன் எல்லையினை மீறும் போது இயற்கையானது நிலநடுக்கம், நிலஅதிர்வு, பூகம்பம், நிலச்சரிவு, வெள்ளப்பெருக்கு, மழையில்லாமை சூறாவளி, புயல், இடி மின்னல்,

கடுமையான சூரிய வெப்பம், ஆழிப் பேரலை போன்றவைகளின் மூலமாக மனிதனுக்கு எச்சரிக்கையை விடுக்கிறது என்பதை அறிய முடிகிறது.

முடிவுரை

மனிதனுக்கும் இயற்கைக்கும் உள்ள உறவை வரையறுப்பது சுற்றுச்சூழல். இவ்வுறவு மனிதனின் அசுரத்தனமான வேகத்தாலும் விவேகத்தாலும் சுற்றுச்சூழல் மாசுபாடு அடைந்துள்ளது. நிலமும் அதில் வாழும் அ∴றிணை உயிரினங்களும் இட நெருக்கம், பொருளாதாரத் தேவைகள் போன்ற காரணங்களுக்காக பெருமளவு பாதிக்கப்பட்டுள்ளது. கடல்நீர் நெகிழிகள், தெர்மாகோல் போன்ற பொருட்களால் கடல் வாழ் உயிரினங்கள் பாதிக்கப்படுகிறது. நீர்நிலைகளில் மணலெடுப்பதால் நிலத்தடிநீர் பாதிக்கப்படுகிறது. காற்றானது தொழிற்சாலைகள் போக்குவரத்துப் புகையினால் ஏற்படுகிற நச்சு வாயுக்களால் பாதிக்கப்படுகிறது. மக்களிடையே சுற்றுச்சூழல் மாசுபாட்டிற்கு எதிராக விழிப்புணர்வு ஏற்பட்டிருப்பதன் விளைவாக பொதுமக்கள், பல்வேறு அமைப்புகள் போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர். மக்கள் விழிப்புணர்வோடு செயல்பட்டு இயற்கையை வருங்கால சந்ததியினருக்கு கொடுப்பது உலகில் வாழும் ஒவ்வொரு மனிதனின் கடமையும் காலத்தின் கட்டாயமாகவும் உள்ளது.

இயல் குறிப்புக்கள்

1. நாகராஜன், கி., 'சுற்றுச்சூழல் கல்வி', ப.4.
2. வரலட்சுமி, இரா., 'திருவள்ளுவரும் சுற்றுச்சூழல் விழிப்புணர்வு', ப.21.
3. புறம். 2:1-6.
4. தேன் மைந்தன், 'உயிர்களை அழிக்கும் உலகமயம்', ப.78.
5. நீலகண்டபிள்ளை, தா., 'தமிழர் வாழ்வியல்', ப.31.
6. தொல்.பொருள்.அகத்.5.
7. தொல்.பொருள்.அகத்.2.
8. புறம். 193:1.
9. புறம். 362:16.
10. அமிர்தலிங்கன், பூ., 'வள்ளுவர் கண்ட உயிரினங்கள்', ப.86.
11. தி.இந்து, உயிர்மூச்சு, 15.08.18.
12. தி.இந்து, 14.08.18, ப.10.
13. தொல்.மரபியல் நூற்பா., 633.
14. மோகனராசு, கு., 'திருக்குறளில் மழைதரும் சிந்தனைகள்', ப.78.
15. மேலது, ப.77.
16. அமிர்தலிங்கன், பூ., 'வள்ளுவர் கண்ட உயிரினங்கள்', பக்.18,19.
17. சுந்தரம், இராம., 'சுற்றுச்சூழல் பாதுகாப்பு', ப.224.
18. ராஜமார்த்தாண்டன், 'ராஜமார்த்தாண்டன் கவிதைகள்', ப.124.
19. குருசுகார்மல், 'மனிதனைத் தேடி', ப.117.
20. தி.இந்து, 28.03.18, ப.4.
21. தி.இந்து, 23.03.18, ப.2.

22. தி.இந்து, 30.08.18, ப.4.
23. வேங்கடசாமி, ‘வள்ளுவத்தில் காணப்படும் நீர் நிலவளம்’, ப.5.
24. இன்னாசி முத்து, ச., ‘சுற்றுசூழல் விழிப்புணர்வும் மாசுபாடும்’, ப.54.
25. திருவரணர், ‘முகவரி இல்லாத பூக்கள்’, ப.106.
26. காமதேனு, மார்ச் 2018, ப.31.
27. தேன்மைந்தன், ‘உயிர்களை அழிக்கும் உலகமயம்’, ப.35.
28. குமுதம், தீராந்தி பிப்ரவரி 18, ப.28.
29. தேன்மைந்தன், ‘உயிர்களை அழிக்கும் உலகமயம்’, ப.32.
30. உயிர்எழுத்து, ஆகஸ்ட் 2018, ப.6.
31. தி.இந்து, மாஜபஜார் 21.03.2018, ப.2.
32. தி.இந்து, 18.09.18, ப.1.
33. தி.இந்து, 18.09.18, ப.3.
34. தி.இந்து, 26.03.18, ப.6.
35. தேன்மைந்தன், ‘உயிர்களை அழிக்கும் உலகமயம்’, ப.166.
36. சுந்தரம், இராம., ‘சுற்றுச்சூழல் பாதுகாப்பு’, ப.262.
37. தி.இந்து, 28.03.18, ப.6.
38. தி.இந்து, 28.03.18, ப.7.
39. சுந்தரம், இராம., ‘சுற்றுச்சூழல் பாதுகாப்பு’, ப.265.
40. வைரமுத்து, ‘இந்த பூக்கள் விற்பனைக்கல்ல’, ப.103.
41. விண்வெளி அறிவியல் தமிழ், https//ta.mawikipedia.com

ஆய்வு நிறைவுரை

துணைநூற்பட்டியல்

துணைநூற்பட்டியல்

முதன்மை ஆதாரம்

வரதராஜன், ஜி., 1958 **திருக்குறள் உரை விளக்கம்,** பழனியப்பா பிரதர்ஸ், சென்னை -5.

துணைமை ஆதாரங்கள்

அகத்தியலிங்கம், (தொ.ஆ.) 1973 **ஐந்தாவது கருத்தரங்குக் கோவை,** சென்னை மாநிலக் கல்லூரி, தமிழ்த்துறைச் சார்பு வெளியீடு சென்னை.

அமிர்தலிங்கன், 1963 **வள்ளுவர் கண்ட உயிரினங்கள்,** பறம்பு நிலையம், 131, பிராட்வே, சென்னை.

இராசகோபாலன், 2009 **குறளில் அரசியல்,** மீரா புத்தகாலயம், 24/21, பிள்ளையார் கோவில், மேட்டுப்பாளையம்.

இராசபாண்டியன், முகிலை., 1991 **உன்னைத்தேடி ஓர் உலா,** சூரியன் பதிப்பகம், சென்னை.

இலட்சுமிரதன் பாரதி, 1961 **இறைமாட்சி அல்லது அரசியல்,** திருநெல்வேலித் தென்னிந்திய சைவ சிந்தாந்த நூற்பதிப்புக் கழகம், திருநெல்வேலி -16.

இன்னாசிமுத்து, ச., 2005 **சுற்றுச்சூழல் விழிப்புணர்வும் மாசுக்கட்டுபாடும்,** வானதி பதிப்பகம், 23, தீனதயாளு தெரு, தி.நகர், சென்னை -17.

ஊற்றுக்கண், ஏ., 2009 **திட்ட செயல்பாடுகள் வழிகாட்டுதல் கையேடு,**
மாநில கல்வியியல் ஆராய்ச்சி மையம்,
கல்லூரி சாலை,
சென்னை - 8.

ஐசக் சாமுவேல் நாயகம், (ப.ஆ.) 2010 **ஒப்பியல் நோக்கில் உலகப் பொதுமறை,**
57, சிதம்பர நகர்,
கோட்டார்,
நாகர்கோவில் -2.

கல்பகம், இரா., 1973 **சமூகவியல்,**
தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்,
சென்னை.

கலியபெருமாள், க., 2004 **திருக்குறள் வாழ்வியல்,**
ஜெயம் பதிப்பகம்,
அன்பகம்,
12/19, வெண்ணிலா தெரு,
தங்கம் நகர்,
தஞ்சாவூர்.

கஸ்தூரி ஜாண்சன், 2003 **குமரி மாவட்டப் புதினங்களில் சமூக நிறுவனங்கள்,**
கிரேஸ் பதிப்பகம்,
நாகப்பட்டினம் -1.

காசிராசன், (ப.ஆ.) 2007 **இலக்கியமும் சமூகமும் பன்முகப்பார்வை,**
ஞாலத் தமிழ் பண்பாட்டு
ஆய்வுமன்றம்,
பல்கலை நகர்,
மதுரை -21.

காந்தி, க., 1980 **தமிழர் பழக்கவழக்கங்களும் நம்பிக்கைகளும்,**
உலக தமிழராய்ச்சி நிறுவனம்,
சென்னை -113.

காமாட்சி ஸ்ரீனிவாசன்,	1975	**குறள் கூறும் சமுதாயம்,** மதுரைப் பல்கலைக்கழகம், மதுரை.
கிரிபழனி கிருஷ்ணா,	1962	**ரபீந்திரநாத் தாகூர்,** **(A Biography)** ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழக அச்சகம், இலண்டன்.
கிருட்டினன், ஆ.,	1994	**தமிழர் பண்பாட்டியல்,** மணிவாசகர் பதிப்பகம், 8/7, சிங்கர் தெரு, பாரிமுனை, சென்னை.
குமரி ராஜீ,	2002	**சுதந்திர அடிமைகள்,** ராஜீ பதிப்பகம், சரோஜா விலாசம், படந்தாலுமூடு அஞ்சல், குமரி மாவட்டம்.
குருசுகார்மல்,	2009	**மனிதனைத் தேடி,** நாஞ்சில் ஆப்செட் பிரிண்டர்ஸ், 67/1, கோர்ட் ரோடு, நாகர்கோவில்.
கோகிலா கந்தசாமி, ஆர்.,	2004	**நவீன இந்தியாவில் கல்வி,** காவ்யமாலா பப்ளிஷர்ஸ், 18, எஸ்.எஸ்.நகர், சின்னாளப்பட்டி, திண்டுக்கல்.
சக்கரவர்த்தி ராஜகோபாலாச் சாரியார்,	1952	**அறநூல்கள்,** பாரதி பதிப்பகம், தியாகராய நகர், சென்னை -17.
சசிவல்லி, வி.சி.,	1989	**பண்டையத் தமிழர் தொழில்கள்,** உலகத் தமிழராய்ச்சி நிறுவனம், சென்னை.

சாதிக் பாட்ஷா, மு., 2009 **பன்முகத் தமிழ் பார்வையும் பதிவும்,**
ஸ்ரீபாரதி புத்தகாலயம்,
7/40, கிழக்குச் செட்டித் தெரு,
பரங்கிமலை,
சென்னை -16.

சாமிதுரை, கு., (தொ.ஆ.) 2011 **பெண்கள் நலன் காக்கும் சட்டங்கள்,**
10, கிழக்கு விசாலம்,
எ.எ.சாலை,
சேர்மென் முத்துராமையர் தெரு,
மதுரை - 625 009.

சிதம்பரனார், சாமி., 1957 **எட்டுத்தொகையும் தமிழர் பண்பாடும்,**
ஸ்டார் பிரசுரம்,
திருவல்லிக்கேணி,
சென்னை.

சிதம்பரனார், சாமி., 1956 **வள்ளுவர் வாழ்ந்த தமிழகம்,**
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்,
199, மவுணட் ரோடு,
சென்னை -2.

சுந்தரம், இராம., (ப.ஆ.) 1995 **சுற்றுச் சூழல் பாதுகாப்பு,**
அனைந்திந்திய அறிவியல் தமிழ்க்கழகம்,
தஞ்சாவூர்.

செந்துறைமுத்து, 1966 **வள்ளுவர் கண்ட தொழில்கள்,**
வாசு பிரசுரம்,
38, லாயிட்ஸ் ரோடு,
சென்னை -14.

தட்சிணாமூர்த்தி, அ., 2011 **தமிழர் நாகரிகமும் பண்பாடும்,**
யாழ்வெளியீடு,
ஏ.பி.1108, தென்றல் குடியிருப்பு,
3-வது தெரு,
மேற்கு அண்ணா நகர்,
சென்னை -40.

திருவரணர்,	2010	**முகவரி இல்லாத பூக்கள்,** கவிமேகலா பதிப்பகம், தட்டாண்விளை சாலை, நாகர்கோவில்.
திலகவதி, க.,	2001	**சங்ககால மகளிர் வாழ்வியல்,** இறையருள் பதிப்பகம், 4/371, முதல் தெரு, சக்தி நகர், காட்டூர், திருச்சி -1.
துறைவன்,		**திருக்குறள் ஓர் அறிமுகம்,** பப்ளிக்கேஷன் டிவிஷன், தகவல் ஒலிபரப்பு அமைச்சகம், இந்திய சர்க்கார்.
தேவநேயப்பாவணர்,	1967	**திருக்குறள் தமிழ் மரபுரை,** தமிழ்மண் பதிப்பகம், இராயப்பேட்டை, சென்னை.
தேவா, ச.,	2001	**தென்றல் தீண்டாத நந்தவனங்களுக்கு,** லியோ புக் டிஸ்ட்ரிபூட்டர், 3-வது மெயின் ரோடு, சி.ஐ.டி. நகர் கிழக்கு, சென்னை - 35.
தேன்மைந்தன், (ப.ஆ.,)	2004	**உயிர்களை அழிக்கும் உலகமயம்,** டெல்ட்டா அச்சகம், வெள்ளிகோடு.
நீலகண்டபிள்ளை, தா.,	2012	**தமிழர் வாழ்வியல்,** செம்மூதாய் பதிப்பகம், 17, தாகூர் தெரு, எம்.எம்.டி.ஏ.நகர், சிட்லபாக்கம், சென்னை -64.

பரமகுரு, பொன்.,	2000	**வள்ளுவர் வழங்கிய வாழ்க்கைநெறி,** திருவரசு புத்தக நிலையம், 13, தீனதயாளு தெரு, சென்னை -17.
பாதமுத்து, மா.,	1998	**காந்திவழி கல்வியும் சமூகமும்,** காந்தி இலக்கியச் சங்கம், மதுரை - 20.
பாலசுப்பிரமணியன்,	1989	**இலக்கிய நெஞ்சம்,** முத்து நிலையம், 124/3 பாரதி குடியிருப்பு, அண்ணாநகர், சென்னை -40.
பாலு,	1997	**இந்தக் கணத்தில்,** மணிமேகலைப் பிரசுரம், 4, தணிகாசலம் ரோடு, தியாகராய நகர், சென்னை -17.
பிரகாஷ், எஸ்.,	2014	**குடிநோய் ஒரு மூளை நோய்,** இயேசுசபை போதை, நோய் பணிக்குழு, கார்மல் பள்ளி, நாகர்கோவில்.
புகாரி,	2003	**அன்புடன் இதயம்,** சபரி பப்ளிகேஷன்ஸ், சென்னை.
பெர்ட்ராண்டு ரஸ்ஸல், (மாதவன், கோ., தமிழாக்கம்)	1965	**திருமண முறைகள்,** பழனியப்பா பிரதர்ஸ், சென்னை.
பெருமாள், அ.கா., (தொ.ஆ.)	2008	**போதை - புனைவுகள் தெளிவுகள்,** 67, பீட்டர்ஸ் சாலை, ராயப்பேட்டை, சென்னை -14.

பெருமாள், என்.எம்.,	2014	**இந்திய அரசியலமைப்புச் சட்டம்,** வர்த்தமானன் பதிப்பகம், 21, இராமகிருஷ்ணா தெரு, தியாகராய நகர், சென்னை - 17.
மரிய தெரசா, ரொ.,	2003	**காகித மேடை,** ஐயப்பன் கணபதி அடுக்ககம், சென்னை.
மாணிக்கம், வ.சுப.,	1962	**தமிழ்க் காதல்,** பாரி நிலையம், சென்னை.
மீனாட்சி சுந்தரம்,	2009	**கல்வி உளவியல்,** காவ்ய மாலா பப்ளிஷர்ஸ், 18, எஸ்.எஸ்.நகர், சின்னாளப்பட்டி, திண்டுக்கல்.
மோகனராசு, கு.,	2008	**திருவள்ளுவர் கண்ட புதுமைப்பெண்,** மணிவாசகர் பதிப்பகம், 31, சிங்கர் தெரு, பாரிமுனை, சென்னை -108.
மோகனராசு, கு.,	1981	**தொல்காப்பியமும் திருக்குறளும் - ஓர் ஒப்பாய்வு,** சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை.
மோகனராசு, கு.,	2005	**திருக்குறளில் மழை தரும் சிந்தனைகள்,** மணிவாசகர் பதிப்பகம், 31, சிங்கர் தெரு, பாரிமுனை, சென்னை -108.

ராஜமார்த்தாண்டன்	2002	**ராஜமார்த்தாண்டன் கவிதைகள்,** யுனைடெட் டைட்டர்ஸ், சென்னை.
வானமாமலை,	2000	**தமிழர் நாட்டுப்பாடல்கள்,** நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், 41-பி, சிட்கோ இன்டஸ்டிரியஸ் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை - 98.
வரதராசன், மு.,	1980	**குறள்காட்டும் காதலர்,** பாரி நிலையம், 184, பிராட்வே, சென்னை -108.
வீரமணி, பா.,	2000	**வள்ளுவரும் வரைவின் மகளிரும்,** சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை -18.
வெங்கடேசன், க.,	2015	**இந்திய அரசியலமைப்பு,** வர்த்தமானன் பதிப்பகம், 21, இராம கிருஷ்ணா தெரு, தியாகராய நகர், சென்னை - 17.
வேங்கடசாமி, கே.ஆர்.,	2006	**வள்ளுவத்தில் காணப்படும் நீர்-நிலவளம்,** நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், 41-பி, சிட்கோ இன்டஸ்டிரியஸ் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை - 98.
ஷாஜி முகஃத்சான்,	-	லிட்ரசி & சார்ட்பிள் டிரஸ்ட், சென்னை-1.
ஹ்யூஸ், ஏ.ஜி., (கி.ர. அப்ளாச்சாரியார் மொழிபெயர்ப்பு)	1957	**கற்றலும் கற்பித்தலும்,** ஒரியன்ட் லாங்மன்ஸ், 36ஏ-ஏ மௌன்ட் ரோடு, மதராஸ்.

ஆங்கில நூற்கள்

Basham, A.L., 1970 **Aspects of Ancient Indian Culture,** Asia Publishing House.

Pascual Gisbert, S.J., 1982 **Fundamental of Sociology,** Orient Longman Limited, Bombay.

Sarma, D.S. 1966 **Renascent Hinduism,** Bharathiya Vidya Bhavan, Bombay - 7.

அகராதிகள்

பிங்கல முனிவர் 1968 **பிங்கல நிகண்டு,** சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை.

வையாப்புரி பிள்ளை, 1934 **தமிழ் லெக்சிகன், தொகுதி 6,** சென்னை பல்கலைக்கழகம், சென்னை.

- - - - - - -, 1967 **வாழ்வியற் களஞ்சியம், தொகுதி 8,** தஞ்சைப் பல்கலைக்கழக வெளியீடு, தஞ்சாவூர்.

- - - - - - -, 1991 **வாழ்வியற் களஞ்சியம், தொகுதி ஏழு, எட்டு, பதினொன்று,** தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

- - - - - - -, 1992 **க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி,** 121, 2-வது குறுக்குத் தெரு, காந்தி நகர், அடையார், சென்னை - 2.

இதழ்கள்

அசோகன், கே., 2018 **காமதேனு,**
கஸ்தூரி மையம்,
124, வாலாஜா சாலை,
சென்னை - 2.

சுதீர் செந்தில், 2017 **உயிர் எழுத்து,**
9, முதல் மாடி, தீபம் காம்ளக்ஸ்,
கரும் மண்டபம்,
திருச்சிராப்பள்ளி.

பாபு, டி., 2018 **வாசகன்,**
G-1, ஆக்மிடெக் ரெசிடென்சி,
7, சக்தி நகர், மெயின் ரோடு,
அருகம்பாக்கம்,
சென்னை.

ராமச் சந்திரன், க., 2018 **குமதம் தீராநதி,**
குமுதம் பப்ளிகேஷன்ஸ் (பி) லிமிட்,
306, புரசைவாக்கம்,
நெடுஞ்சாலை,
சென்னை -10.

- - - - - - -, 2018 **விகடன் தடம்,**
757, அண்ணாசாலை,
சென்னை-2.

- - - - - - -, 2018 **உயிர்மை,**
11/29, சுப்பிரமணியன் தெரு,
அபிராமபுரம்,
சென்னை -18.

வார இதழ், 27.11.2013 குமுதம்.

இந்து தமிழ் திசை

தினகரன்

தினத்தந்தி

தினமணி

ஆய்வு நிறைவுரை

ஆய்வாளர் ஆராய்ந்து கண்ட உண்மைகளும் முடிவுகளும் ஆய்வு நிறைவுரையில் தொகுத்துத் தரப்பட்டுள்ளன.

முற்காலத்தில் கல்வி என்பது வேதங்களை மையமாக கொண்டிருந்தன. உயர்க்கல்வி நிலையங்கள் ‘சாலை’, ‘கடிகை’ என்ற பெயர்களில் அழைக்கப்பட்டது. இன்று ‘பள்ளி, கல்லூரி’ என்ற பெயர்களில் அழைக்கப்படுகிறது. நுண்ணறிவு அரத்தினைப் போன்று கூர்மைத் தன்மை கொண்டது. நுண்ணறிவினை வளர்த்துக் கொள்ள நூலறிவு தேவை என்பதை குறள் கூறுகிறது. இன்றைய அரசு அனைவருக்கும் கல்வி மூலம் கல்வியினை அளிக்கிறது. மாணவர்கள் மன உளைச்சல், மன இறுக்கம், பதற்றம், கற்றல் குறைபாடு, தேர்வு பயம் போன்ற பிரச்சினைகளை எதிர்கொள்கின்றனர். இதிலிருந்து விடுபட அரசும், ஆசிரியர்களும் பெற்றோர்களும் வழிகாட்டுதல், அறிவுரை பகர்தல் போன்ற முயற்சிகளை மேற்கொண்டுள்ளனர். நல்லொழுக்கம் மாணவர்கள் மத்தியில் குறைந்து வருகிறது. நல்லொழுக்கத்தை மாணவர்களிடம் உருவாக்க நல்லொழுக்கக் கல்வி மிக அவசியம். எனவே ஒழுக்கம் சார்ந்த பாடத்திட்டத்தினை உருவாக்கி கற்பித்தால் சிறிதேனும் வள்ளுவர் கால கல்வியினை மீட்டுருவாக்கம் செய்ய இயலும் என்பதில் ஐயமில்லை.

கள்ளு என்பது நீரிடாத பனைநீர் ஆகும். கள்ளும் ஒரு மதுபான வகையாகும். கள்ளுண்ணாமையைப் பின்பற்ற வேண்டும் என்று மதங்களும் இலக்கியங்களும் வலியுறுத்துகின்றன. மதுபானம் அருந்தினால் இயல்பான குணங்கள் மாறுபாடு அடையும், மது மூளையை சோர்வடைய செய்வதால் நரம்பு மண்டலம் சரிவர செயல்படாமையால் தான் இயல்பான குணம் மாறுபாடு

அடைகிறது. மதுவுண்பவனால் குடும்ப உறுப்பினர்கள் துன்பமடைவதுடன் பொருளாதார ரீதியிலும் பின் தங்கிய நிலையில் காணப்படுகின்றனர். மதுவுண்போருக்கு ‘ஆல்கஹாலிக்ஸ் அனானிமஸ்’ குடும்ப உறுப்பினர்களுக்கு ‘அல் அனான்’ மதுவுணர்பவரின் குழந்தைகளுக்கு ‘அல்லட்டீன்’ போன்ற அமைப்புகள் உதவி புரிகின்றன. குறள் கூறுகின்ற கள்ளுண்பவரின் குணங்கள் இன்றைய மதுவுண்பவரின் குணங்களோடு முற்றிலும் ஒத்து போகின்றது. மதுவுண்பவர்கள் பலவித குற்றச் செயல்களில் ஈடுபடுகின்றனர். கள்ளும் மதுவும் மனிதனை குற்றவாளியாக, சமுதாய பொறுப்பற்றவனாக மாற்றியிருக்கிறது. மதுவுக்கு எதிராக பலவித இயக்கங்களும், அரசியற்கட்சிகளும் பல போராட்டங்களை நடத்தி விழிப்புணர்வை ஏற்படுத்தியிருக்கின்றன. மதுவின் அவலநிலையை சமுதாயத்திலிருந்து அகற்றுவதற்கான சிறந்த ஆயுதம் விழிப்புணர்வு ஆகும். விழிப்புணர்வின் மூலம் மதுவினால் சீர்கெட்டிருக்கும் இச்சமுதாயத்தை ஓரளவேனும் மீட்டுருவாக்கம் செய்ய முடியும்.

ஒரு குறிப்பிட்ட எல்லைக்குள் வாழும் மக்கள் அமைதியையும் அறத்தையும் நிலைநிறுத்திக் கொள்ளவதற்காக தமக்குள் தோற்றுவித்துக் கொள்ளும் அமைப்பு அரசு ஆகும். இவ்வமைப்பு அரசன் எனும் தனிநபராலும், அமைச்சர்கள் கொண்ட குழுவாலும் நிர்வகிக்கப்படுகிறது. அரசன் மக்கள் எளிதில் கண்டு தங்கள் குறைகளைக் கூறி பயன்பெறுகிற நிலையில் எளிமைத் தன்மை கொண்டவனாக காணப்பட வேண்டும். இச்சூழ்நிலைப் பெரும்பாலும் இன்றைய மக்களாட்சி முறையில் இல்லை. வள்ளுவர் காலநாட்டின் அரண்கள் இயற்கை மற்றும் செயற்கையாகக் காணப்பட்டன. இன்று இராணுவம், கடற்படை, விமானப்படை போன்றவை செயல்பட்டு நாட்டைக் காக்கின்றன.

வள்ளுவர் கால அரசியலமைப்பு முடியாட்சி முறையில் செயல்பட்டது. இன்றைய ஆட்சியில் மக்களே தங்களது தலைவர்களைத் தேர்ந்தெடுக்கின்றனர். அரசானது நடுவண் அரசு, மாநில அரசின் ஆட்சி அடிப்படையில் செயல்படுகிறது என்பது புலனாகிறது.

மனித வாழ்வானது குடும்பம் எனும் அமைப்பு, துறவறம் எனும் அமைப்பு என்பதற்குள்ளாக அமைகிறது. வள்ளுவர் கூறும் அறம் எனும் சொல் பொதுவாக 'நற்பண்பு ஒழுக்கம்' எனும் பொருளில் பயன்படுத்தப்படுகிறது. மனித வாழ்வில் தனிமனித ஒழுக்கம் இன்றியமையாதது. வள்ளுவர் காட்டுகின்ற பெண் சமுதாயத்தில் நன்மதிப்பு உடையவளாகவே காணப்படுகிறாள். குழந்தையைப் பேணல், சான்றோனாக்குதல் பெற்றோரின் கடமையென வலியுறுத்துகிறார். இக்கூறுகள் இன்றைய சமுதாயத்திலும் கடமையாக கடைபிடிக்கப்படுகிறது. பெண்கள் வளையல் மற்றும் குழை எனும் கம்மல்களை அணிந்த செய்தி, மை தீட்டுதல், மலரணிதல் போன்ற செயல்களைச் செய்து தங்களை அழகுப்படுத்திக் கொண்டனர். இன்றும் இவைகளை அணிந்து பெரும்பாலான பெண்கள் தங்களை அழகுப்படுத்துகின்றனர். மேலும், நவநாகரீகமான ஆடைகளையும், ஆடைகளின் வண்ணங்களுக்கேற்ற நிறத்தில் காகிதம், நெகிழியிலான அணிகலன்களையும் அணிகின்றனர். பொன்னைப் பாதுகாப்பாக வைத்தல், தூண்டில் மூலம் மீன் பிடித்தல் போன்ற பழக்கங்கள் இன்றும் பரவலாக காணப்படுகிறது. வள்ளுவர் காலத்தில் எள், தினை, புல்லரிசி, பால், தேன் பயன்படுத்தியதைப் போன்று மக்கள் இன்றும் பயன்படுத்துகின்றனர். இவற்றைவிட இன்றைய இளைய சமுதாயத்தினர் மேற்கத்திய துரித உணவுகளான 'பீட்ஸா, பர்கர், நூடுல்ஸ் மற்றும்

வேதிப்பொருட்கள் சேர்த்த பழச்சாறுகள், ஆயத்த உணவுகளை விரும்பி உண்கின்றனர் வீட்டிற்கு சுண்ணாம்பு அடிக்கப்பெற்ற நிலைமாறி பெரும்பாலும் வண்ண சுவரோவியங்களாக வளர்ச்சி பெற்றுள்ளது. இன்றைய சமுதாயத்தினர் துரித உணவுகளை உண்ணாது வள்ளுவர் கூறுகின்ற இயற்கை உணவுமுறையினை உண்டு வாழ்ந்தால் நீண்ட காலம் ஆரோக்கியத்துடன் வாழமுடியும்.

நாகரீகம், மேற்கத்தியக் கலாச்சாரத்தின் தாக்கம் போன்றவற்றால் பல்வேறுபட்ட மாற்றங்களும் வளர்ச்சியும் ஏற்பட்டுள்ளது. துறவறமானது 'உலகப்பற்றை விடுதல், பதவி, பாசம் முதலியவற்றை நீக்குபவர்' என்று கூறுகிறது. இன்றைய சமுதாயத்தில் பெரும்பாலும் சமயங்களின் அடிப்படையில் துறவு மேற்கொள்ளப்படுகிறது. இன்றைய பெரும்பாலான துறவிகள் நடுத்தர மக்கள் பெற்றிருக்கின்ற அடிப்படைத் தேவைகளோடும், வசதிகளோடும் வாழ்கின்றனர். துறவிகளாக வாழ்ந்தாலும் மருத்துவம் கல்வி போன்ற சமூக சேவைகளையும் புரிகின்றனர். சில துறவிகள் வள்ளுவர் கூறுகின்ற போலித் துறவிகளின் குணங்களைக் கொண்டு குற்றச் செயல்களில் ஈடுபடுகின்றனர். துறவிகள் வள்ளுவர் கூறுகின்ற போலித் துறவிகளின் குணத்தை விடுத்து, சமுதாயத்திற்கு தொண்டு செய்ய முன்வருதல் வேண்டும்.

மனிதன் உயிர் வாழ நிலம், நீர், காற்று, ஆகாயம், நெருப்பு என்கிற பஞ்சபூதங்களும் இன்றியமையாததாக காணப்படுகிறது. குறள் காட்டுகிற உயிரினங்கள் பாதுகாப்புடனும் சுதந்திரமாகவும் வாழ்ந்துள்ளதை அறியமுடிகிறது. நெகிழியின் மூலம் நிலத்தை மாசுப்படுத்துதல் கூடாது. இன்றைய கால இடநெருக்கடி, பொருளாதாரத் தேவைகளுக்காக மனிதன்

விலங்கினங்களின் இருப்பிடங்களை ஆக்கிரமிப்பதால் அவைகள் மனித வாழ்விடங்களில் நடமாடும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. மனிதத் தேவைகளுக்காக காடுகளும், செடி, கொடிகளும் அழிக்கப்பட்டு வருகிறது. பூக்களில் அனிச்சம் மற்றும் குவளை மலர்கள் அரியவகை மலராக காணப்படுகிறது. கடல் மற்றும் அமிழ்துக்கு ஒப்பான மழைநீரும், நீர் நிலைகளும் பெருமளவு மாசுபாடு அடைந்துள்ளது. மேலும் மணலினை நீர்நிலைகளிலிருந்து எடுப்பதனால் நிலத்தடி நீரின் அளவு குறைந்து குடிநீர் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. மேலும் நிலத்தடி நீரை பெருகச் செய்ய நீர்நிலைகளில் மணல் எடுப்பதை தடைசெய்ய வேண்டும். அரசு மேற்கொள்ளும் சுற்றுச்சூழல் சார்ந்த ஆணைகளை பின்பற்றுவதன் மூலம் இயற்கையை மீட்டுருவாக்கம் செய்யலாம்.

ஆய்வுக்குரிய சில பரிந்துரைகள்

1. குறளில் மனநலம் சார்ந்த வாழ்வியல் விழுமியங்கள்
2. வள்ளுவம் காட்டும் அரசியல் கோட்பாடுகள்
3. குறள் கூறும் தலைவன் தலைவி உறவு நிலையும் அதன் இன்றைய நிலைப்பாடும்
4. குறளில் துறவறமும் இன்றைய நடைமுறைச் சிக்கல்களும்
5. வள்ளுவர் கூறும் தொழில்களும் அவற்றின் நவீன வளர்ச்சி முறைகளும்
6. குறள் காட்டும் இயற்கையும் இக்கால இயற்கைச் சீரழிவுகளும்